மகிழ்ச்சியின் பாதைகள்

சாம்சன் பால்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

10/-

மகிழ்ச்சியின் பாதைகள்

✍ சாம்சன் பால்

SAMSON PAUL
126, Muthaya Mudaliar Street,
PONDICHERRY - 605 003.
INDIA
Ph : 236042

மகிழ்ச்சியின் பாதைகள்
வரிசை எண் : 20
முதல் பதிப்பு :
அக்டோபர் – 2000

சகோ. சாம்சன்பால் வெளியிடும்
"எழுச்சி மலர்" என்ற மாத இதழையும்,
"ஜீவ நீரோடை தியான நூல்" மாதிரிப் பிரதியையும்
உங்கள் தெளிவான முகவரியுடன் கடிதம்
எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Type Settings By : MERCURY GRAPHICS, Muthialpet, Pondicherry - 3. Phone : 239705

Printed By : UNITED BIND GRAPHICS, Chennai - 4. Phone : 4984693

மகிழ்ச்சியின் பாதைகள்

மகிழ்ச்சியைத் தேடி மனிதன் செல்லும் பாதை வேறு. மகிழ்ச்சிக்காக தேவன் காண்பிக்கும் பாதை வேறு. மகிழ்ச்சியை தேடியும் பெற முடியாமல் சோர்ந்து போன இதயங்களுக்கு உண்மையான மகிழ்ச்சியின் பாதையை இந்தப் புத்தகம் தெளிவாகக் காண்பிக்கின்றது.

உள்ளே ...

1. யார் பாக்கியவான்கள் ... 7

2. எளிய மனமே மகிழ்ச்சியின் பாதை ... 17

3. துயரத்தின் வழியே சந்தோஷம் ... 38

4. சாந்த குணமுள்ளவர்கள் மகிழ்ச்சியானவர்கள் ... 63

5. இதய திருப்தி எதனால் வரும்? ... 80

6. இரக்கமுள்ள இதயம் மகிழ்ச்சியின் உறைவிடம் ... 101

7. நோக்கங்களில் தூய்மையுடையோர் இறைவனைக் காண்பார்கள் ... 133

8. சமாதானத்தின் இருப்பிடமே சந்தோஷத்தின் பிறப்பிடம் ... 156

9. உண்மையின் பாதையில் துன்பமும் சந்தோஷத்தைத் தரும் ... 172

யார் பாக்கியவான்கள்

1

மத்தேயு எழுதிய சுவிசேஷத்தின் 5,6,7 அத்தியாயங்களில் வரும் வேதபகுதி இயேசு கிறிஸ்துவின் மலைப்பிரசங்கம் என்று அழைக்கப்படுகிறது. தம்மைப் பின் தொடர்ந்து வந்த ஒரு கூட்டம் சீடர்களுக்கு இயேசு போதித்த தெய்வீக கோட்பாடுகளையே மலைப்பிரசங்கம் என்ற பகுதியில் காண்கின்றோம். கிறிஸ்தவத்தின் இதயம் போன்ற பகுதி இது.

மலைப்பிரசங்கத்தில் வருகின்ற முதல் பகுதி (மத் – 5:3 – 11) பாக்கிய வசனங்கள் என்று அழைக்கப்படுகின்றது. இந்த உலகத்தில் யார் உண்மையில் பாக்கியவான்கள்? என்ற கேள்விக்கு இயேசு பதிலளிப்பது போல இந்த பகுதி அமைந்துள்ளது.

முதலாவது நாம் *பாக்கியவான்கள்* என்ற வார்த்தையின் பொருளை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். சிலருக்கு செல்வமும், போதிய வசதிகளும் இருக்கையில் பலர் அவர்களை பாக்கியம் செய்தவர்கள் என்று சொல்வதுண்டு. ஒரு பெண்ணிற்கு நல்ல ஒரு கணவன் கிடைத்து, மகிழ்ச்சியான ஒரு வாழ்க்கை அமைந்தால் அவளை பாக்கியவதி என்று பலர் சொல்வதுண்டு. ஒரு குடும்பத்தில் ஒழுங்கு மிகுந்த பிள்ளைகள் இருந்தால், அந்த பிள்ளைகளின் பெற்றோரை பாக்கியம் செய்தவர்கள் என்று பலர் சொல்வார்கள். இவ்விதமாக அனேகருக்கு கிடைக்காத சில மகிழ்ச்சிக்குரிய அம்சங்கள் சிலரிடம்

காணப்படும் போது அவர்கள் மற்றவர்கள் பார்வையில் பாக்கியம் செய்தவர்கள் என்ற நிலையில் தென்படுவதுண்டு.

ஆனால் உலகம் பணம், பொருள், வசதி, புகழ், பதவி, பிரச்சனைகளற்ற நிலை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட அளவு கோல்களை வைத்துதான் மற்றவர்களை பாக்கியவான்களா? இல்லையா? என்பதைக் கணக்கிடுகிறது. ஆனால் இயேசு பாக்கியவான்களைப் பற்றிக் கூறும் போது, அவர்களில் எந்த ஒருவரும் பணம், பொருள், புகழ், பதவி அடிப்படையில் பாக்கியவான்களாகக் கருதப்படவில்லை.

இங்கே இயேசுவின் பார்வையும், உலகத்தின் பார்வையும் முற்றிலும், முழுமையுமாய் ஒன்றுக்கொன்று வேறுபட்டு நிற்பதைப் பார்க்க முடிகின்றது. ஆம். கிறிஸ்து பார்க்கின்ற விதம் வேறு. உலகம் பார்க்கின்ற விதம் வேறு. உலகத்தின் சிந்தனை வேறு. கிறிஸ்துவின் சிந்தனை வேறு. உலகம் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதுகின்ற விஷயங்களை, கிறிஸ்து முக்கியமானதாக எண்ணவில்லை. உலகம் முக்கியத்துவம் கொடுக்கத் தவறிய விஷயங்களுக்கு, கிறிஸ்து முக்கியத்துவம் கொடுக்க தவறவில்லை.

செல்வ நிலை, புகழின் நிலை, அதிகார நிலை ஆகியவற்றின் அடிப்படையில் உலகம் ஒருவரை பாக்கியவான் என்று சொல்லுகிறது. ஆனால் இயேசு சில உயர்ந்த பண்புகள், தெய்வீகத் தன்மைகள், மேன்மையான குணாதிசயங்கள், மெச்சத்தக்க சுபாவங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே பாக்கியவான்கள் யார் என்பதைச் சுட்டிக் காட்டினார்.

ஒரு மனிதனிடம் உள்ள பண்புகள், குண இயல்புகள், மனநிலைகள், சுபாவங்கள் ஆகியவைதான், உண்மையிலேயே அவன் பாக்கியவானா அல்லது ஆசீர்வதிக்கப்பட்டவனா என்பதை நிர்ணயிக்கின்றன. இது இயேசுவின் பார்வை.

ஆவிக்குரிய கிறிஸ்தவர்களில் பலர்கூட இந்த உண்மையை இன்னும் உரிய முறையில் உணரவில்லை. இன்று ஒரு கிறிஸ்தவர் எல்லா நிலைகளிலும் குறைவற்ற செழிப்பான நிலையில் காணப்பட்டால், மற்றவர்கள் அவரை அஹா... தேவன் எவ்வளவாய் இவரை ஆசீர்வதித்திருக்கிறார் என்று சொல்வார்கள். அது போல ஒரு ஊழியர்

பிரயத்துடனும், பணவலிமையோடும் காணப்பட்டால், அவரை எல்லோரும் "தேவன் இவரை வல்லமையாக உபயோகப்படுத்துகிறார். தேவன் இவரை அபரிமிதமாக ஆசீர்வதித்திருக்கிறார்" என்று சொல்வார்கள்.

அதே வேளையில் அவர்களிடம் தேவன் விரும்புகின்ற உயர்ந்த சுபாவங்களும், உன்னதமான குணாதிசயங்களும் இல்லாமலிருக்கும். ஆனால் மக்கள் உலகத்திற்கேற்ற பார்வையில் ஆசீர்வாதத்தையும், பாக்கியத்தையும் நிர்ணயிப்பதால், அவைகளைக் குறித்து கவலைப்படுவதில்லை. ஆனால் தேவன் விரும்பத்தக்க பண்புகளையும், இயல்புகளையும் கொண்டிராத எவரும் (எவ்வளவு பெரிய செழிப்பான விசுவாசியாகவோ, ஊழியராகவோ இருக்கலாம்.) கிறிஸ்துவின் பார்வையில் பாக்கியவான்களாக தோன்றுவதில்லை.

இயேசு யாரை பாக்கியவான்கள் அல்லது ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று சொன்னார் என்பதை நன்கு கவனிப்போம்.

1. *ஆவியில் எளிமையுள்ளவர்கள்*
2. *துயரப்படுகின்றவர்கள்*
3. *சாந்த குணமுள்ளவர்கள்*
4. *நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள்*
5. *இரக்கமுள்ளவர்கள்*
6. *இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள்*
7. *சமாதானம் பண்ணுகின்றவர்கள்*
8. *நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள்*

மேற்கண்ட ஒன்பது கூட்டத்தினரும் அவர்களில் உள்ள மேன்மையான தெய்வீக பண்புகளுக்காகவும், உயர்ந்த குணங்களுக்காகவுமே *"பாக்கியவான்கள்"* என்ற பட்டியலில் இடம் பெறுகின்றனர். ஒருவரிடம் உலகத்தின் பார்வையில் மேன்மையாக எண்ணப்படும் செல்வம், பணம், வசதி போன்றவை இல்லை. ஆனால் அவரிடம் தேவனுடைய பார்வையில் மேன்மையாக எண்ணப்படும்

உயர்ந்த குணாதிசயங்கள் உள்ளன. அங்கே உலகம் அவரது வறிய நிலையை கண்டு "ஐயோ பாவம் – பரிதாபமானவர்" என்று சொல்லலாம். ஆனால் தேவனோ அவரை பாக்கியவான் என்று சொல்வார்.

அதுபோலவே ஒருவரிடம் செல்வ செழிப்பும், படிப்பின் உயர்வும், பிரச்சனைகளற்ற நிலையும் உள்ளது. அனேகருடையப் பார்வையில் அவர் மிகவும் வளமாகக் காணப்படுகின்றார். ஆனால் அவரிடம் போதிய மனத்தாழ்மை இல்லை. இரங்குகின்ற இதயம் இல்லை. உண்மையின் மேல் தாகம் இல்லை. உள் தோற்றத்திற்கும், வெளித்தோற்றத்திற்கும் ஒற்றுமையில்லை. இந்த நிலையில் அந்த மனிதரை எல்லோரும் "ஆஹா இந்த மனிதர் எவ்வளவு கொடுத்து வைத்தவர்" என்றும், "எவ்வளவு பெரிய பாக்கியசாலி" என்றும் சொல்லி ஆச்சர்யப்படலாம். ஆனால் கிறிஸ்துவின் பார்வையிலோ அந்த மனிதர் பரிதவிக்கத்தக்க வறியவராகவும், ஆசீர்வாதத்திற்கு வெகுதூரமானவராகவுமே காணப்படுவார்.

மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது. (லூக் – 16:15)

மேலும் இந்த *"பாக்கியவான்"* என்ற பதத்திற்கு நாம் கொள்ளுகின்ற அர்த்தம், முழுமையானதல்ல. இயேசு கிறிஸ்து அக்காலத்தில் யூதர்கள் மத்தியில் பேசப்பட்ட *அராமிக்* மொழியில்தான், மலைப்பிரசங்கச் செய்திகளைப் பேசினார். அவர் *ஆராமிக்* மொழியில் பேசிய போதனைகள் பின்னாட்களில், கிரேக்க மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. அதன் பின்னர் பல்வேறு மொழிகளில் மொழிப்பெயர்ப்பு செய்யப்பட்டது.

இவ்விதம் மொழி பெயர்ப்பு செய்கின்ற வேளையில், சில நேரங்களில் மூல பாஷையில் உபயோகிக்கப்பட்ட சில வார்த்தைகளுக்கு, பிற மொழிகளில் அதற்கொத்த சரியான அர்த்தத்தை வெளிப்படுத்தும் வார்த்தைகள் கிடைப்பதில்லை. அந்த நிலையில் ஓரளவிற்கு அதிகமாக பொருந்துகின்ற வார்த்தைகளை தேர்வு செய்து உபயோகிப்பார்கள். அது போன்ற காரணங்களால், சில வேளைகளில் நாம் அந்த வார்த்தையின் மூலம் புரிந்து கொள்கின்ற அர்த்தம், மூல பாஷையின் வார்த்தைக்கேற்ற படி முழுமையாக அமைவதில்லை.

"பாக்கியவான்" என்ற பதத்தினை நாம் படிக்கும்போது, இக்காலத்தில் அதற்கு எந்த அர்த்தம் கூறப்படுகிறதோ, அதற்கேற்றபடியே நாம் புரிந்து கொள்வோம். ஆனால் இயேசு கொண்டிருந்த அர்த்தத்திற்கு அது ஒப்பாவதில்லை. "பாக்கியவான்" என்ற பதத்திற்கு நாம் கொள்ளுகின்ற, அர்த்தத்தை விட, இயேசு கொண்டிருந்த அர்த்தம் பல மடங்கு அதிக மேன்மையானதாகும்.

இயேசு சொன்னதை கிரேக்க மொழிகளில் மொழி பெயர்க்கும் போது, பாக்கியவான் என்ற வார்த்தைக்கு மக்கேரியோஸ் (Makarios) என்ற பதம் உபயோகிக்கப்படுகிறது. இந்த மக்காரியோஸ் என்ற வார்த்தை சிறப்பு வாய்ந்த விசேஷ வார்த்தையாகும்.

மக்காரியோஸ் ரக சந்தோஷம்

இந்த மக்காரியோஸ் என்ற வார்த்தை நிறைவான ஒரு மகிழ்ச்சி நிலையை வெளிப்படுத்துகின்ற ஒரு வார்த்தையாகும். உயர்ந்த விதமான ஒரு சந்தோஷ நிலையை அர்த்தப்படுத்துகின்ற ஒரு பதமே மக்கேரியோஸ், அதாவது இந்த சந்தோஷநிலை தன்னில் தானே குறைவற்ற சந்தோஷத்தைக் கொண்ட ஒரு நிலையாகும். இந்த சந்தோஷம், சூழ்நிலைகளாலோ, பிற மனிதர்களாலோ, கரைந்து போகாத மனிதர்களாலோ, கரைந்து போகாத, குறைந்து போகாத ஒரு சந்தோஷம் ஆகும்.

உதாரணமாக ஒரு மெழுகுவர்த்தி நன்கு எரிந்துக் கொண்டிருக்கிறது. அதன் விளைவாக அந்தப் பகுதி பிரகாசமாக உள்ளது. ஆனால் காற்று வேகமாக வீசினால் அந்த மெழுகுவர்த்தி அணைந்து போகும். அதன் பிரகாசமும் அகன்று போகும். இங்கே மெழுகுவர்த்தியின் வெளிச்சம் சூழ்நிலையை சார்ந்துள்ளது. காற்று இல்லாவிட்டால் எரியும். காற்று வீசினால் அணைந்து ஒளியை இழக்கும்.

அதே வேளையில் ஒரு மின்சார பல்பு எரிந்துக் கொண்டிருக்கிறது. அதன் வெளிச்சம் காற்று வீசினாலும் அகல்வதில்லை. காற்றினால் அணைந்து போகாமல் எரிகின்ற ஒரு தன்மை அதற்கு உள்ளது. எனவே காற்று வீசினாலும் அதன் ஒளி அகலாமல் தொடர்ந்து பிரகாசிக்கும்.

அதுபோலவே இந்த உலகத்தில் பலவித மகிழ்ச்சிகள் உண்டு. அவைகள் சூழ்நிலைகளால் கரைந்து போகின்றதும், காணாமல் போகின்றதுமான தன்மை உடையவை. உதாரணமாக ஒருவருக்கு கோடிக்கணக்கான பணம் தொழிலில் லாபமாக கிடைத்துள்ளது. இதனால் ஒரு சந்தோஷம் வருவது உண்மை. ஆனால் அவருடைய குடும்பத்தில் ஒரு சிறு பிரச்சனை குறுக்கிட்டால் இந்த திரண்ட லாபத்தால் வந்த சந்தோஷம் அகன்று போகும். ஒரு சிறு வியாதி வந்து வாட்டினால், எத்தனை கோடியிருந்தாலும் அதனால் வந்த சந்தோஷம் அங்கே நில்லாமல் ஓடிவிடும்.

ஆம். உலகப் பிரகாரமாக பலநிலைகளில் நாம் சந்தோஷ உணர்வுகளை பெற முடியும். ஆனால் அவைகள் மாறுகின்ற சூழ்நிலைகளின் மத்தியில் அகலாமல் நம்முடன் நிற்கத்தக்க வலிமையுடையவைகள் அல்ல. பணத்தாலோ, செல்வத்தாலோ, புகழாலோ, வருகின்ற சந்தோஷத்தை வேறு ஏதாவது சிறு வேதனைக்குரிய விஷயங்கள் கூட விலக்கி விரட்டி விட முடியும்.

சந்தோஷம் இரண்டு வகைப்படும். ஒன்று உலகத்தை சார்ந்தது. இன்னொன்று, விண்ணுலகைச் சேர்ந்தது. உலகத்திலிருந்து நாம் பெறுகின்ற சந்தோஷம் ஒன்று. தேவனிடத்திலிருந்து நாம் பெறுகின்ற சந்தோஷம் இன்னொன்று. உலகத்திலிருந்து நாம் அடையும் சந்தோஷங்கள் நிலையற்றவை. அது எந்த நேரம் நம்மை விட்டு விலகும் என்று கூற முடியாது. எந்த சூழ்நிலை மாற்றம் அந்த சந்தோஷத்தை பறக்கடிக்கும் என்று சொல்ல முடியாது.

ஆனால் தேவன் தருகின்ற சந்தோஷம் பூரணமானது. முழுமை வாய்ந்தது. தன்னில்தானே நிறைந்த சந்தோஷத்தைக் கொண்டது. எந்த சூழ்நிலை மாற்றங்களாலும் மறைந்து போகாதது. வாழ்க்கையில் எதிர்மாறான நிலைகளும், போராட்டங்களும் ஏற்பட்டால் கூட அந்த சந்தோஷம் நீங்கிப் போகாமல் நிலைத்திருக்கும். அது *மக்கேரியோஸ்* வித சந்தோஷமாகும்.

இந்த சந்தோஷந்தான் இயேசுவோடு எல்லா பாடுகளின் நடுவிலும் நிலைத்திருந்த சந்தோஷம். இந்த சந்தோஷம்தான் துன்பங்களின் நடுவிலும் தாவீது அனுபவித்த சந்தோஷம். இந்த சந்தோஷம்தான் பலவித நெருக்கங்களுக்கு நடுவிலே பவுல்

அப்போஸ்தலனின் இதயத்தை விட்டு பிரியாமல் நின்ற தெய்வீக சந்தோஷம். இது மக்கேரியோஸ் ரக சந்தோஷம். சூழ்நிலைகளால் இந்த சந்தோஷம் நிர்ணயிக்கப்படுவதில்லை. ஏனென்றால் இது தேவனிடமிருந்து வருகின்ற பூரண சந்தோஷம். எனவே தான் இயேசு தம்முடைய சீடர்களிடம் "உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்து போட மாட்டான் என்றார்.

இப்பொழுது *பாக்கியவான்* என்று நாம் சொல்லும் பதத்திற்கு இயேசு கொண்டிருந்த உண்மையான அர்த்தம் என்னவென்பதை நாம் புரிந்துக் கொள்ள இயலும்.

- *நிறைவான சந்தோஷமுடையவர்கள்*
- *நீங்காத சந்தோஷமுடையவர்கள்*
- *மிகுந்த மகிழ்ச்சிக்குரியவர்கள்*
- *சூழ்நிலைகளால் பாதிக்கப்படாத மகிழ்ச்சியை உடையவர்கள்*
- *என்றும் மறைந்து போகாத மகிழ்ச்சியை அனுபவிப்பவர்கள்.*

இவைகளே "பாக்கியவான்" என்ற பதத்திற்கு பின்னால் உள்ள உண்மையான அர்த்தங்களாகும். அப்படியானால், யார் பாக்கியவான்கள்? என்று இயேசு பட்டியலிட்டார் என்று சொல்வதை விட, யார் மிகுந்த, நிறைவான மகிழ்ச்சியானவர்கள் என்று சுட்டிக்காட்டினார் என்று சொல்வதே சிறப்பாகும். பாக்கிய வசனங்கள் என்று சொல்வதை விட, மிகுந்த மகிழ்ச்சியின் வசனங்கள் என்று சொல்வதே மிகவும் பொருத்தமானது. ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று சொல்வதை விட, ஆவியில் எளிமையுள்ளவர்களே. இந்த உலகத்தில் மிகுந்த, நிறைவான மகிழ்ச்சியானவர்கள் என்று சொல்வதிலே ஒரு இனிமையின் நிறைவு இருப்பதை உணர முடிகின்றது.

இன்னும் ஒரு உண்மையை இங்கு நாம் தெரிந்துக் கொண்டால் பாக்கிய வசனங்கள் எப்படி புரிந்து கொள்ளப்பட வேண்டுமோ, அப்படி புரிந்துக் கொள்ளப்பட வசதியாயிருக்கும். பாக்கியவான்களைக் குறித்து அல்லது மிகுந்த மகிழ்ச்சியானவர்களைக் குறித்து இயேசு பேசும் போது, அதனை சாதாரண நிலையில் சில உண்மைகளைப் பேசுவதைப் போன்று பேசவில்லை. நம்முடைய சொந்த பாஷையில் அதனை நாம் படிக்கும் போது, அவைகள் இயேசு வெளிப்படுத்திய சில சத்தியங்கள் என்று மட்டும் தான் நம்மால் உணர முடிகின்றது.

ஆனால் எபிரேய மொழி, மற்றும் கிரேக்க மொழியை நன்கு அறிந்த வேதப் பண்டிதர்கள் பாக்கிய வசனங்களின் பகுதியை, நாம் பார்ப்பதை விட, மிகுந்த அழகு மிக்கதாகப் பார்த்து விளக்கியுள்ளனர். தமிழ், ஆங்கிலம் போன்ற பாஷைகளில் அதனை நாம் படிக்கும் போது சில கூற்றுகளாக (Statements) மட்டுமே அவை நமக்கு தெரிகின்றது. ஆனால் இயேசு அந்த வசனங்களை வெறும் கூற்றுகளாகக் கூறவில்லை. அவைகளை மிகுந்த ஆச்சர்யம் கலந்த குரலிலேயே கூறியிருக்கிறார். அதாவது சாதாரணமாக அவைகளைக் கூறாமல், மிகுந்த வியப்புடன் பரவசத்துடனே அவைகளைக் கூறியிருக்கின்றார்.

உலகப்பிரசித்திப் பெற்ற தலைச்சிறந்த வேதப்பண்டிதராகிய வில்லியம் பர்க்ளே பாக்கிய வசனங்கள் வெறும் கூற்றுகள் அல்ல. அவை மிகுந்த வியப்பொலியுடன் கூறப்பட்ட ஆச்சர்ய வெளிப்பாடுகளே என்று தம்முடைய நூலில் கூறியுள்ளார். The beatitudes are not simple statements; they are exclamations.

ஒரு அழகான ஓவியத்தைப் பார்த்து ஒருவர் இது ஒரு சிறந்த ஓவியம் என்று கூறுகின்றார். இது அந்த ஓவியத்தைக் குறித்த ஒருவரின் கூற்று. ஆனால் இன்னொருவரோ ஒரு ஓவியத்தைப் பார்த்து பரவசமடைந்து "ஆஹா இந்த ஓவியம் எவ்வளவு சிறப்பாக உள்ளது. என்ன அருமையான ஓவியம்" என்று வியந்து கூறுகின்றார். இரண்டு வாக்கியங்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை உங்களால் புரிந்து கொள்ள முடியும்.

முதல் நபர் சொன்னது ஓவியத்தைக் குறித்த ஒரு நல்ல கருத்து. அவ்வளவுதான். ஆனால் இரண்டாவது நபர் சொன்னது வெறும் கருத்து அல்ல. அவர் உள்ளத்தில் ஒரு சுவையை உணர்ந்து பரவசமடைந்து, ஆச்சர்யமானக் குரலில் தன்னுடைய வியப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

இயேசு கிறிஸ்து பாக்கிய வசனங்களை வெறும் கருத்துகளாகச் சொல்லாமல், மேற்கண்ட இரண்டாவது நபரைப்போல இதயத்தில் அனுபவித்து, அதனை உணர்ந்த உற்சாகத்தின் ஆச்சர்யமான வெளிப்பாடுகளாகவே அவைகளை சொல்லியிருக்கின்றார்.

மிகவும் நேர்த்தியான ஒருவகைத் தேனைக் குடித்த ஒருவர், அதனைக் குடித்திராத ஒருவரிடம் அதனைக் குறித்து பேசுகின்றார். அப்போது அவர் ருசித்த தேனின் சுவையின் மிகுதியை தனக்குள் உணர்கின்றார். எனவே உணர்ச்சிப்பூர்வமாக .... ஆஹா ... அந்த தேன் எவ்வளவு சுவையானது தெரியுமா ! அடடா அது போன்ற ஒரு தேன் எங்காவது கிடைக்குமா ! என்று மிகுந்த பரவச நிறைவுடன் வியந்து கூறுகின்றார். அவர் அதனைச் சொன்ன விதத்தைப் பார்த்தால் அந்த தேனின் உயர்ந்த சுவையினை அதிகமாக புரிந்துக் கொள்ள முடியும்.

அது போலவே பாக்கிய வசனங்களை இயேசு வியந்து கூறினார். உதாரணமாக முதலாவது பாக்கிய வசனத்தினை இயேசு தமிழ் மொழியில் கூற நேர்ந்திருந்தால் எவ்விதம் கூறியிருப்பார் என்பதை கற்பனை செய்து பார்ப்போம்.

- *ஆஹா ஆவியில் எளிமையானவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியானவர்கள் தெரியுமா?*
- *ஆஹா .... ஆவியில் எளிமையான்வர்களைப் போல மிகுந்த மகிழ்ச்சியானவர்கள் யாராவது உண்டோ இந்த உலகில் !*

இதே விதமாக பாக்கிய வசனங்கள் ஒவ்வொன்றையும் நாம் பார்ப்போமென்றால், இயேசு எவ்வளவு வியப்புடனும், பரவச மிகுதியுடனும் மகிழ்ச்சியின் உச்ச நிலை வெளிப்பாடாகவும் அவைகளைக் கூறியிருப்பார் என்பதை நம்மால் உணரமுடியும். ஒவ்வொரு பாக்கிய வசனத்தையும், நாம் இதே விதமாகப் புரிந்து கொண்டால் அது நமக்கு மிகுந்த நிறைவான உண்மைளை வெளிப்படுத்தும்.

ஏற்கெனவே நாம் பார்த்தபடி "பாக்கிய வசனங்கள்" என்ற பகுதியில் இந்த உலகத்தில் மிகுந்த மகிழ்ச்சியானவர்கள் யார் என்பதை இயேசு சுட்டிக் காட்டினார் என்பதே உண்மையாகும். அப்படியானால் இந்த உலகத்தில் உண்மையில் யார் மிகுந்த மகிழ்ச்சியானவர்கள்? மிகுந்த மகிழ்ச்சியை எந்த நிலையில் பெற முடியும்? மகிழ்ச்சியின் நிறைவினைப் பெறும் வழிகள் யாவை? என்பது போன்ற கேள்விகளுக்கு உரிய பதிலைத் தருவதே பாக்கிய வசனங்களின் நோக்கமாகும்.

இந்த புத்தகத்தின் முக்கிய நோக்கமும் மகிழ்ச்சியின் நிறைவினைப் பெறும் வழிகளை தேவனுக்கேற்றபடி ஆராய்வதாகும். யார், எப்படி, எப்போது மகிழ்ச்சியினை நிறைவாக அனுபவிக்க முடியும்? என்ற கேள்விகளுக்கு விடைகளைக் காண தேவ ஆவியின் துணையுடன் வேதத்தை தியானிப்போம். மனிதனுக்கேற்ற பார்வையை ஒதுக்கிவிட்டு, தேவனுடையப் பார்வையில் விஷயங்கள் எப்படியிருக்கிறது என்பது தொடர்ந்து ஆராய்வோம்.

இனிவரும் ஒவ்வொரு அத்தியாயத்திலும், *பாக்கியவான்கள்* என்று வரும் இடங்களில் மிகுந்த *மகிழ்ச்சியானவர்கள்* என்ற அர்த்தத்தில் அதனைப் புரிந்து கொள்வதே நல்லது.

*****

எளிய மனமே மகிழ்ச்சியின் பாதை

2

> ஆவியில் எளிமை யுள்ளவர்கள் பாக்கியவான்கள் பரலோக ராஜ்யம் அவர்களுடையது. மத்தேயு 5:3

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்றால் ஆவியில் எளிமையுள்ளவர்கள் மிகுந்த மகிழ்ச்சியானவர்கள் என்று பொருள் ஆகும். கத்தோலிக்க திருமறையில் *"எளிய மனதுடையோர், பேறு பெற்றோர் விண்ணரசு அவர்களுடையதே"* என்று கூறப்பட்டுள்ளது. இந்த உலகத்தில் யார் மிகுந்த மகிழ்ச்சியை உடையவர்களாக இருப்பார்கள்? மிகுந்த மகிழ்ச்சியை பெறுகின்ற வழி என்ன? மகிழ்ச்சியின் இரகசியம் எதில் உள்ளது? என்பது போன்ற கேள்விகளுக்கு இயேசு தரும் பதில் ஆவியில் எளிமையுள்ளவர்கள் மிகுந்த மகிழ்ச்சியை உடையவர்கள் என்பதாகும்.

நிறைய செல்வம் உடையவர்கள், ஏராளமான பணம் உடையவர்கள், சுகமான சூழ்நிலையை உடையவர்கள், வசதி, வாய்ப்புகள் மிகுந்தவர்கள், பேர், புகழ், பிரபலம் உடையவர்கள், இவர்கள் தான் பாக்கியம் செய்தவர்கள் என்றும், இவர்கள்தான் மிகுந்த மகிழ்ச்சியாயிருப்பார்கள் என்றும் பெரும்பாலும் நாம் எண்ணுவதுண்டு.

நம்முடைய நிலமைகள் உயர்ந்து விட்டால், நாம் எண்ணியதெல்லாம் ஈடேறி விட்டால், நம்முடைய பிரச்சனைகள் யாவும் நீங்கிவிட்டால், நம்முடைய கையில் பெரும் பணம் வந்து விட்டால், பலர் நடுவில் பேர், புகழ் பெற்றுவிட்டால், நாம் மிகுந்த சந்தோஷமுடையவர்களாக மாறிவிடுவோம் என்று நாம் பலவேளைகளில் எண்ணுவதுண்டு.

அதாவது இந்த உலகத்தில் நம்முடன் போதுமான பொருள் பலமும், பணபலமும் இணைந்து விடுவதால் மகிழ்ச்சி வந்து விடும் என்று எண்ணுகின்றோம். நம்மை தொந்தரவு செய்கின்ற பலவித பிரச்சனைகளும், சோதனைகளும் போய்விட்டால் மகிழ்ச்சி மலர்ந்து விடும் என்று நினைக்கின்றோம். அதாவது பிரச்சனைகளற்ற நிலைகளும், அனுபவிக்க பலவித வசதிகளும்தான் நம்முடைய மகிழ்ச்சியின் காரணிகள் என்று நாம் கணக்கிடுகின்றோம்.

ஆனால் இயேசு கிறிஸ்துவோ *ஒரு மனிதன் மகிழ்ச்சி, அவன் தன்னுடைய இருதயத்தை எவ்விதம் வைத்திருக்கின்றானோ* அதைப் பொறுத்தே அமையும் என்று கூறுகின்றார். ஒரு மனிதனுக்கு திரண்ட செல்வமும், நிறைந்த கல்வியும், சிறந்த செல்வாக்குகளும் இருந்தாலும், அவன் ஆவியில் எளிமையின்றியிருந்தால், அவன் உண்மையான மகிழ்ச்சியை பெற முடியாது என்பதே இயேசுவின் கருத்து. அதாவது ஒரு மனிதன் இருதயப்பிரகாரமாக (ஆவியில்) எளிய நிலையில் விளங்கினால் தான் அவன் நிறைவான மகிழ்ச்சியை அனுபவிக்க முடியும் என்பதே இயேசு வெளிப்படுத்தும் உண்மை.

இந்த உலகத்தில் ஏராளமான மக்களிடம் அளவுக்கதிகமான செல்வங்களும், உலகம் மதிக்கத்தக்க உயர் நிலைகளும் உள்ளன. ஆனால் அனுபவரீதியாக பலருடைய வாழ்க்கையைப் பார்க்கும் போது அவர்களுக்கு உண்மையான மகிழ்ச்சியோ, மனநிறைவோ, சமாதானமோ இல்லை. சாலொமோனைப் போல அவர்கள் மகிழ்ச்சியை மேலும், மேலும் போய்த் தேடிக் கொண்டிருக்கிறார்களேயன்றி, அதனை நிகழ்காலத்தில் நிஜமான நிலையில் அனுபவிக்கின்றவர்களாக இல்லை.

ஒரு மனிதன் "என்னிடம் நிறைவாக உள்ள செல்வம், பணம், புகழ், உயர்ந்து நிலைகள் ஆகியவற்றால் உண்மையில் நான் மகிழ்ச்சியை அனுபவிக்கின்றானோ "என்று தனக்குள் கேட்டு ஆராய்ந்து பார்த்தால், அங்கே "இல்லை" என்ற பதிலைத்தான் அவன் பெறுவான். ஏனென்றால் *மகிழ்ச்சி என்பது நம்மிடம் என்ன இருக்கிறது என்பதைப் பொறுத்ததல்ல. நாம் எப்படியிருக்கிறோம் என்பதை பொறுத்ததே அது.*

நாம் எவ்விதம் இருக்க வேண்டுமோ அவ்விதம் இருந்தாலன்றி, நம்மிடம் எவ்வளவு இருந்தாலும் அதனால் நாம் மகிழ்ந்துவிட முடியாது. சாலொமோனிடம் திரண்ட ஆஸ்தியும், நிறைந்த ஞானமும் இருந்தது.

ஆனாலும் அவன் மகிழ்ச்சியின் நிறைவைக் காணாமல், மனசஞ்சலம் உடையவனாகவேயிருந்தான் ஏனென்றால் அவனிடம் வெளிப்பிரகாரமாக ஏராளம் இருந்தும் அவனுடைய உள்பிரகார நிலையில் (இதய நிலையில்) உரிய முறையில் அவன் இருக்கவில்லை.

ஆவியில் எளிமையாயிருத்தல் அல்லது எளிய மனதினைக் கொண்டிருத்தல் என்ற சுபாவநிலைதான் நம்மை மகிழ்ச்சிக்கு தகுதியாக்குகின்றது. இங்கே மனிதனின் உண்மையான மகிழ்ச்சி செல்வ நிலையைச் சாராமல், சுபாவ நிலையை சார்ந்திருப்பதை புரிந்துக் கொள்ள முடியும். பரிதாபகரமாக ஆவிக்குரியவர்கள் என்று தங்களை எண்ணுகின்ற பலருக்குக் கூட உண்மையான சந்தோஷம் இல்லை. சந்தோஷம் என்பது அவர்களின் சிந்தனையாயிருக்கிறதேயன்றி அனுபவத்தில் அது உணரப்படவில்லை. ஏனென்றால் மகிழ்ச்சியை அவர்கள் தேவன் தரும் செல்வங்களில் எதிர்பார்க்கிறார்களேயன்றி, தேவனுக்கேற்றபடியான சுபாவங்களில் அதை எதிர்பார்க்கவில்லை. சுபாவ மாற்றங்களுக்கு போதிய முக்கியத்துவம் கொடுக்காததால்தான் மகிழ்ச்சியை அவர்களால் அனுபவத்தில் ருசிக்க முடியவில்லை.

ஆவியில் எளிமை என்றால் என்ன?

"ஆவியில் எளிமை" என்ற வார்த்தை ஆங்கில வேதாகமத்தில் "Poor in Sprit" என்று தரப்பட்டுள்ளது. அதன் பொருள் ஆவியில் ஏழ்மையாயிருத்தல், அல்லது இதயநிலையில் ஏழையாயிருத்தல் என்பதாகும். உள்ளான நிலையில் அல்லது இதயப்பிரகாரமான நிலையில் ஒரு மனிதன் ஏழ்மை உடையவனாய் அல்லது ஏழையாயிருந்தால் அவன்தான் மிகுந்த மகிழ்ச்சியாயிருப்பான் என்பதே இயேசு சொன்னதின் பொருளாகும்.

பல நேரங்களில் நம்முடைய உள்ளான ஆவியின் நிலை அல்லது இதயநிலை எளிமையான ஒன்றாக இராமல் போவதால்தான் மகிழ்ச்சியை அவ்வப்போது இழக்க நேரிடுகின்றது. ஆவியில் ஏழ்மையாயிருத்தலின் எதிர் பதம் ஆவியில் கடினமாயிருத்தல் என்பதாகும். அதாவது நான் சாதாரணமானவன் என்ற உணர்விற்குப் பதிலாக நான் பெரியவன், விசேஷமானவன் என்ற உணர்வுகள்

மேலோங்கி விடுவதால் மகிழ்ச்சியை காணமுடியாமல், மனது வீணான சஞ்சலங்களால் பாதிக்கப்படுகிறது.

மற்றவர்கள் நமக்கு விசேஷமான ஒரு மதிப்பைத் தர மறுக்கும் போது, நாம் மனநிலையில் கலவரமடைந்து வேதனை அடைகின்றோம். ஏனென்றால் நம்முடைய மனம் யாருடைய விசேஷ மரியாதையையும் எதிர்பாராத ஒரு எளிய நிலையில் இல்லை. நாம் உள்ளார்ந்த நிலையில் பெரியவர்கள் என எண்ணுவதால், அந்த எண்ணத்திற்கேற்ற கவுரவம் பிறரால் தரப்படாத போது மனக் கஷ்டமடைகின்றோம். இந்தக் கஷ்டம் எதனால் வந்தது? நாம் எளிய மனிதனைக் கொண்டிராததால்தான் நான் ஒன்றும் பெரியவனல்ல என்று எண்ணத்தக்க பக்குவம் இல்லாமையினால்தான்.

சில நேரங்களில், சிலர் நம்மை கொஞ்சம் கவுரவக்குறைவாக நடத்திவிடுகிறார்கள். நம்மை அற்பமாக எண்ணி விடுகிறார்கள் அப்பொழுது நமக்குள் பெரிய மனவேதனை வந்து விடுகிறது. மனதை புண்படுத்திவிட்ட உணர்வு ஏற்பட்டு அல்லல் அடைகின்றோம். எதையோ இழந்து விட்டது போல் மனம் நொந்து போகின்றோம். இதற்கெல்லாம் காரணம் என்ன? நம்முடைய மனதில் எளிமை இல்லை. நாம் யாராலும், எதனாலும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்ற உணர்வுகளால் நிறைந்துள்ளோம். கொஞ்சம் தாழ்வாக நடத்தினால் கூட அதனைத் தாங்கிக் கொள்ள முடியாது என்று ஏற்கெனவே முடிவு செய்து விடுகின்றோம். எனவேதான் பல நேரமும் அமைதி அகன்று போகிறது.

கொஞ்சம் வசதியும், வாய்ப்பும் உள்ளவன் தன்னை கொஞ்சம் குறைவாக பிறர் நடத்திவிட்டால் கூட அதனை தாங்க இயலாதவனாக இருக்கின்றான். ஆனால் ஒரு சாதாரண ஏழை பிறருடைய கவுரவத்தையோ, மரியாதையையே எதிர்பார்ப்பதில்லை. மற்றவர்கள் மட்டமாக நினைத்தால் கூட மனம் நோவதில்லை. ஏனென்றால் ஏழ்மையாயிருக்கின்ற அவனுக்கு பெரிய எதிர்பார்ப்புகள் இல்லை. அதுபோலவே இதயநிலையில் நாம் ஏழ்மையாயிருந்தால், நமக்கும் பிறருடைய மரியாதை தேவைப்படாது. பிறர் சாதாரணமாக நினைத்தாலும் சஞ்சலம் வராது. மனம் விடுதலையாக இருக்கும்.

இயேசு கிறிஸ்து எல்லா நிலைகளிலும் சகல கனத்திற்கும், மரியாதைக்கும் தகுதியுடையவராயிருந்தார். ஆனாலும் அவர் யாருடைய

கனத்தையும், மரியாதையையும் எதிர்பார்க்கவில்லை. அவர் சமாரியன், மக்களை வஞ்சிக்கின்றவன், மரியாளின் மகன், பெயல்சேபூலினால் பிசாசுகளை துரத்துகிறவன் பாவிகளின் தோழன் என்றெல்லாம் மட்டமாக பேசப்பட்டபோது மனம் வருந்தவில்லை. அவைகளை சாதாரணமாக எடுத்துக் கொள்கின்ற மனப்பக்குவம் இருந்தது. ஏனென்றால் அவர் ஆவியில் எளிமையானவராயிருந்தார். மேட்டிமையான் சிந்தை துளியேனும் அவரிடம் இல்லாத காரணத்தினால் பிறர் அவரை அற்பமாக எண்ணி பேசிய போதும், செயல்பட்ட போதும் அவர் மனதில் எந்த பாதிப்பையும் அடையவில்லை.

பலருடைய வாழ்க்கையில் வீணான சில வருத்தங்கள் அவர்களை சூழ்ந்திருக்கும். அதற்கு காரணம் என்னவென்றால் பிறரைப் போன்று பிரமாண்டமாக வாழ இயலவில்லையே என்ற ஏக்கம் தான். பெரிய வீடு வேண்டும். விலை உயர்ந்த நவ நாகரீக பொருட்கள் வேண்டும். ஏராளமாக தங்க நகைகள் வேண்டும். பிறர் தங்களை பெரிதாக எண்ணத் தகுந்த நிலையில் பணமும் வசதிகளும் வேண்டும். இது போன்ற ஆசைகளினால் அவர்கள் அனுதினமும் அல்லல் அடைந்து கொண்டிருப்பார்கள். இது அவர்களின் இதயம் எளிமையற்ற நிலையில் இருப்பதின் அடையாளமாகும். தங்கள் இதயத்தை பெரிய, பெரிய நிலமைகளின் மேல் பதிய வைத்து அவைகளுக்காக அதிக பசியோடு வாழ்வது மேட்டிமையான இதயத்தின் பிரதிபலிப்பாகும். எனவே அவர்கள் மகிழ்ச்சியைக் காண்பதில்லை.

ஆம். நம்முடைய இதயம் எளிமையானதாக, மேட்டிமை உணர்விலிருந்து விடுபட்டதாக, தாழ்மையானதாக, சாதாரண நிலைகளிலே திருப்தியடைகின்றதாக இருந்தால், அங்கே தெய்வீகமான மகிழ்ச்சி குறைவின்றியிருக்கும்.

இரண்டு வகை ஏழைகள்

ஆவியில் எளிமையுள்ளவன் அல்லது ஆவியில் ஏழையாயிருக்கின்றவன் பாக்கியவான் என்ற இந்த முதலாம் பாக்கிய வசனத்தில் வரும் ஏழ்மை அல்லது ஏழை என்ற வார்த்தையின் சரியான அர்த்தத்தை நாம் புரிந்து கொள்ளுதல் நல்லது. மலைப்பிரசங்கத்தை முதலாவது கேட்டவர்கள் யூதர்கள் என்பதை நாம் அறிவோம். ஆவியில் ஏழை (ஆவியில் எளிமையுள்ளவன்) என்ற வார்த்தையை அந்த நாளில்

அந்த யூதர்கள் எந்த விதமான அர்த்தத்தில் புரிந்திருப்பார்கள் என்பதை நாம் ஆராய்வது நல்லது. அதாவது ஆவியில் ஏழை என்று இயேசு சொல்லும் போது, அதற்கு எந்தவிதமான அர்த்தத்தை மனதில் கொண்டிருப்பார்கள் என்பதை அறிதல் அவசியம்.

ஏழை என்றால் குறைந்த பட்சம் அந்த நாட்களில் இரண்டு பிரிவினரைக் குறிக்கும். முதல் பிரிவினர் மிகவும் சாதாரணமானவர்கள். அவர்களுக்கு மிகவும் குறைந்த வருமானமே உண்டு. அதனைக் கொண்டு மிகவும் சிரமத்துடன் வாழ்க்கையை ஓட்டுவார்கள். உணவிற்கும், உடைக்கும் அவர்களுக்கு மிகுந்த போராட்டம் உண்டு. சமுதாயத்தில் அவர்களுக்கு எந்த அந்தஸ்தும், மரியாதையும் கிடையாது.

இரண்டாவது பிரிவினர் மிக, மிக பலவீனமான ஏழைகள். அவர்களுக்கு சொந்த காலில் நிற்கும் பலம் கிடையாது. தங்களுக்கு தேவன் எதையாவது செய்தாலன்றி வாழ்வதற்கு வழியே இல்லை என்ற நிர்பந்த நிலை உடையவர்கள். அதாவது தேவனுடைய இரக்கத்தை பரிபூரணமாக சார்ந்து நிற்கத்தக்க நிர்பந்த நிலையில் உள்ள ஏழைகள் இவர்கள்.

முதல் பிரிவினர் சாதாரண ஏழைகளாயினும் தங்கள் ஏழ்மையின் கஷ்டங்களை தங்களுக்குள் அனுபவித்துக் கொண்டு, பிறரின் கருணையை நாடாதவர்கள். இரண்டாவது பிரிவினர் யாரையாவது சார்ந்து நிற்காவிட்டால் வாழவே முடியாது என்ற மிகவும் பரிதபிக்கத்தக்க நிலையில் உள்ளவர்கள்.

ஆவியில் ஏழ்மையானவர்கள் என்ற வார்த்தையில் இயேசு குறிப்பிட்ட ஏழ்மை நிலை இந்த இரண்டாவது பிரிவினரிடம் காணப்படும் விதமான ஏழ்மை நிலையாகும். ஏனென்றால் இயேசு குறிப்பிட்ட *ஏழ்மை* என்ற வார்த்தை, கிரேக்க மொழியில் *ப்டோகஸ்* (Ptochos) என்ற வார்த்தையால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மிகவும் நிர்பந்தமான ஏழ்மை நிலையைக் குறிக்கின்ற ஒரு வார்த்தை இந்த ப்டோகஸ் என்ற வார்த்தை ஆகும். அதாவது இன்னொருவரைப் பற்றிக் கொண்டிருந்தாக வேண்டிய ஏழ்மை நிலையை அது குறிக்கின்றது.

இவ்விதமான நிர்பந்தமான ஏழ்மையை குறித்த வசனங்கள் பழைய ஏற்பாட்டில் பல உண்டு.

இந்த *ஏழை* கூப்பிட்டான். கர்த்தர் கேட்டு அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார் (சங் – 334:6)

தேவனே உம்முடைய தயவினாலே *ஏழைகளை* பராமரிக்கின்றீர்.

எளியவனையோ சிறுமையினின்று எடுத்து உயர்ந்த அடைக்கலத்திலே வைத்து அவன் வம்சங்ளை மந்தையைப் போலாக்குகிறார். (சங் – 108:41)

அதின் ஏழைகளை நான் அப்பத்தினால் திருப்தியாக்குவேன் (சங் – 132 : 15)

மேற்கண்ட வசனங்களிலெல்லாம் வரும் ஏழை, எளியவன் என்ற வார்த்தைகள் தேவனை பூரணமாக சார்ந்து நம்பியிருக்க வேண்டிய நிர்பந்தமான ஏழ்மையையே குறிக்கின்றது.

நாம் வாழ்கின்ற சமுதாயத்தில் கூட ஏழைகள் என்ற நிலையில் இரண்டு பிரிவினரைக் காண்கின்றோம். பொருளாதார அடிப்படையில் மிகவும் பலவீனமான பல கோடி மக்கள் உண்டு. வறுமைக் கோட்டிற்கு கீழான நிலையில் உள்ள இவர்களில் பலருக்கு இரண்டு நாட்களுக்கு ஒரு முறை உணவு கிடைப்பதே அரிது. ஆனாலும் அவர்கள் தங்கள் பசி, பட்டினி, பிணிகளை தாங்கிக் கொண்டு, பிறரிடம் கையேந்தாமல் வாழ்வார்கள். (வித விதமான உணவுகளை அதிகமாக புசித்து நிரம்பி, ஏராளமாக சேர்த்து வைக்கின்ற கிறிஸ்தவ மக்கள் இப்படிப்பட்ட ஏழைகளையும் கொஞ்சம் நினைத்துப் பார்க்கட்டும்.)

ஆனால் இவர்களை விட பரிதாபமான பிரிவினரும் உண்டு. அவர்களுக்கு யாரிடமாவது கையேந்தி, பிச்சை வாங்கி வாழ வேண்டிய நிலை. மிகவும் பலவீனமானவர்கள், நோயுற்றவர்கள், வேலை செய்ய இயலாதவர்கள், உடல் ஊனமானவர்கள் ஆகியோர் இதில் அடங்குவர். இவர்கள் பிறரை நம்பி வாழ வேண்டிய நிர்பந்த நிலையை உடையவர்கள். கவுரவம், மானம் மரியாதை எதையும் பார்க்காமல் வீதியில் நின்று "ஐயா... அம்மா" என்று கூப்பிட்டு பிழைக்கும் நிலையில் உள்ளவர்கள்.

இந்த இரண்டாவது ரக ஏழ்மை அல்லது எளிமையைத்தான் முதலாம் பாக்கிய வசனம் குறிப்பிடுகின்றது. இப்போது முதலாவது பாக்கிய வசனத்தின் உண்மையான பொருள் என்னவென்பதை விளங்கிக் கொள்வோம்.

உள்ளான நிலையில் (ஆவியில்) தங்கள் முழுமையான பலவீன நிலையை உணர்ந்து கொண்டவர்கள் பாக்கியவான்கள்.

தங்கள் சொந்த பலத்தில் நிற்க இயலாத ஏழ்மைத்தனத்தை உணர்ந்து, தேவனைப் பற்றிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலையில் உள்ளவர்கள் பாக்கியவான்கள்.

தங்கள் பரிதவிக்கத்தக்க உதவியற்ற சுய நிலையை நன்கு அறிந்து, தேவ இரக்கத்தை சார்ந்து நிற்க தங்களை தயார் செய்து கொண்டவர்கள் இந்த உலகத்தில் பிகுந்த மகிழ்ச்சியானவர்கள்.

ஆம். தேவனை நூற்றுக்கு நூறு சதவீதம் நாம் சார்ந்து, அவரையேப் பற்றி கொண்டிருக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தமான பலவீன நிலை நமக்கிருக்குமானால் அது வருத்தத்திற்குரியதல்ல. இயேசுவின் வசனத்தின்படி அந்த நிர்பந்த நிலை இந்த உலகத்திலேயே பிகுந்த மகிழ்ச்சிக்குரிய நிலையாகும். அதுதான் வாழ்க்கையில் உண்மையான டாக்கியங்களை நமக்கு கொண்டு வருகின்றது.

இதுவரை நாம் தியானித்த உண்மைகளின்படி, தேவனைச் சார்ந்திருக்க வேண்டிய ஒரு நிர்பந்தமான உள்ளான ஏழ்மையின் நிலை தான் நமக்கு பிகுந்த மகிழ்ச்சியைக் கொண்டு வருகின்றது என்பதை அறியலாம். அப்படியானால் இந்த உலகத்தில் பாக்கியவானாய் விளங்க அல்லது பிகுந்த மகிழ்ச்சியைப் பெற என்ன செய்ய வேண்டும் என்று இயேசுவைக் கேட்டால் என்ன பதில் தருவார்?

முதலாவது உன்னுடைய பலவீன நிலையை உணர்ந்து கொள்.

உன்னுடைய சுய பலத்தில் நிற்க இயலாத நிர்பந்த நிலையில் இருப்பதை முதலில் கண்டுபிடி.

நீ தேவனை பூரணமாகப்பற்றிக் கொண்டிருக்க வேண்டிய நிர்பந்தமான ஏழ்மை நிலையில் இருப்பதை முதலில் அறிந்து கொள்.

இவைகளைத்தான் அவர் பதில்களாகத் தருவார் என்பது நிச்சயம். அவருடைய வசனம் அதற்கு சாட்சியாயிருக்கிறது.

பலமும்? பலவீனமும்

உன்னை நம்பி உன் பலத்தை நம்பி உன் திறமையை நம்பி உன் அறிவை நம்பி உன் முயற்சிகளை நம்பி இவைகள் தான் உலகம் தரும்

போதனைகளாக இருக்கின்றன. "தன்னம்பிக்கை" என்ற நிலையைத் தான் பல போதைகள் வற்புறுத்துகின்றனர். தன்னம்பிக்கை மனிதனுக்கு அவசியம் என்பது மறுக்கக் கூடாத உண்மை. அதே வேளையில் தன்னம்பிக்கை என்பது பலவீனமான தவறான அஸ்திபாரங்களின் எழும்பக் கூடாது. மனிதன் தன்னை நம்பாமல் போவதாலும் தோல்வியுறுகின்றான். தன்னை அதிகமாக நம்பிவிடுவதாலும் தோல்வியடைகின்றான்.

ஜெர்மனியின் ஹிட்லருக்கு தன்னம்பிக்கை அதிகம். அதற்கு வெற்றிகள் பல கிடைத்தது. ஆனால் அந்த தன்னம்பிக்கை தான் அவனை இரஷ்யாவின் மேல் படையெடுக்கத் தூண்டியது. அதன் விளைவாக அவனுடைய சகல வெற்றிகளும் ஒன்றாக சாய்ந்தது.

வேதாகமத்தில் கூட அசீரியாராஜா சனகெரிப் தன்னம்பிக்கை மிகுந்தவன். அந்த நம்பிக்கைக்கு பல வெற்றிகள் கிடைத்தது. அந்த தன்னம்பிக்கைதான் யூதாவுக்குள் அவனை போக வைத்து, தேவனுக்கு மேலாக தன்னை பெருமை பாராட்ட தூண்டியது. அதன் விளைவாக கணப்பொழுதில் அவன் அழிந்தான்.

உலகம் தன்னம்பிக்கையையே பலம் என்று பாராட்டுகிறது. ஆனால் தன் மேல் முழு நம்பிக்கை வைத்து விடுகிற மனிதனை வேதம் சபிக்கின்றது (எரே – 17:5) ஆனால் கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து வாழ்கின்றவனை பாக்கியவான் என்று சொல்லுகின்றது. (எரே – 17:7)

தேவன் மேல் வைக்கும் பூரண நம்பிக்கை என்னும் உறுதியான அஸ்திபாரத்தின் மேல் நம்முடைய தன்னம்பிக்கை நிற்குமானால் ஒரு போதும் அது தோல்வியடைவதில்லை. தாவீது தன்னம்பிக்கை மிகுந்தவன். எந்த சூழ்நிலையிலும் *நான் அசைக்கப்படுவதில்லை* என்று சவால் விட்டான். ஆனால் அந்த தன்னம்பிக்கை, தேவனைச் சார்ந்த நம்பிக்கையின் மேல் எழுந்த தன்னம்பிக்கையாகும்.

கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கின்றேன் அவர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை. (சங் – 16:8)

பல மதத்தத்துவங்களும், பல மதக் குருக்களின் சித்தாங்களும் வித்தியாசமான ஒரு கருத்தைக் கூறுகின்றது. உன் பலத்தை நீ

உணர்ந்து கொள் உன்னையே நீ நன்கு உணர்ந்தால் நீ இறைவனின் ஒரு பகுதியாக இருப்பதை அறிவாய் என்று அவை போதிக்கின்றன. அதாவது உன்னை நீ உணர்ந்து கொண்டால் நீயே இறைவனாயிருப்பதை அறிந்து கொள்வாய் என்று அவை சொல்லுகின்றது. இந்த தன்னிலை உணர்கின்ற ஞானத்தால் (Self realisation) நாம் ஒரு மாபெரும் சக்தி அல்லது பிரமாண்ட ஆற்றல் உடையவர்கள் என்பதை அறிந்து கொள்ளலாம் என்று அவை கூறுகின்றன.

ஆனால் வேதமோ அதற்கு முற்றிலும் எதிரானக் கொள்கையை கூறுகின்றது. ஒரு மனிதன் தன்னை நன்கு உணர்ந்து கொண்டால் அவன் தான் எவ்வளவு பலவீனமானவன் என்பதையும், தேவனுக்கு முன்பாக எவ்வளவு அற்ப நிலையானவன் என்பதை அறிந்து கொள்ளலாம். இது வேதம் கூறும் உண்மை. தன்னிலை உணர்தல் உண்மையில் ஒருவன் தெய்வமாக இருப்பதை காண்பிக்காமல், அவன் தேவநிலைக்கு எவ்வளவு குறைவுபட்ட தாழ்நிலையில் இருக்கின்றான் என்பதையே காட்டுகின்றது. ஆம். நம்மை நாம் நேர்மையான நிலையில் ஆராயும் போதும், உணரும் போதும் நம்முடைய நிர்ப்பந்தமான தகுதியற்ற நிலையைத்தான் காண்கின்றோம்.

தன்னை தேவ வெளிச்சத்தில் நன்கு ஆராய்ந்து உணர்ந்த பவுல் அப்போஸ்தலன் *என் மாம்சத்தில் நன்மை வாசமாயிருப்பதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன் என்று அறிக்கையிட்டான்.* (ரோமர் – 7:81)

அதாவது மாம்சப்பிரகாரமான அல்லது மனிதப்பிரகாரமான நிலையில் தேவன் விரும்புகின்ற நன்மையானதை செய்கின்ற பலமோ, தேவன் வெறுக்கின்ற தீங்கானவைகளை விட்டு விலகுகின்ற ஆற்றலோ அடிப்படையில் மனிதனிடம் இல்லை. அவன் நல்லதையே சிந்தித்து, நல்லதையே நோக்கமாகக் கொண்டு நல்லதையே செய்ய விரும்புகின்ற போதெல்லாம் அதனை நிறைவேற்ற தன்னிடம் போதிய சக்தி இல்லை என்பதை அறிய முடியும். அது போலவே தீயதை சிந்திக்காமல், தீயநோக்கத்தைக் கொண்டிராமல், தீய காரியங்களைச் செய்யாமலிருக்க விரும்புகின்ற போதும், அவ்வித விருப்பத்தை நிறைவேற்ற இயலாத பலவீனம் தன்னிடம் இருப்பதை கண்டு கொள்ள முடியும். எனவே

தன்னிலை உணர்கின்ற ஞானத்தினால் அவன் தன்க்குள் காணப்படும் பலவீனத்தையும் ஏழ்மைத்தனத்தையுமே அறிந்து கொள்ள முடியும்.

ஆனால் உள்ளான நிலையிலுள்ள பலவீனத்தையும், ஏழ்மை நிலையையும் அறிய முடியாமல் மனித மனம் மாயையினால் மூடப்பட்டுள்ளது. தேவனைச் சார்ந்திருக்க வேண்டிய கட்டாய நிலையை உணர விடாமல் அது அவனை தடை செய்கின்றது. தேவனுடைய கிருபை தனக்கு அவசியம் என்பதை அவன் அறியாமலே போகின்றான்.

பெரும்பாலும் உலக சம்பந்தமான செல்வம், பணம், வசதி, பலவித உயர்நிலைகள் ஆகியவை மனிதனுக்கு இருக்கும் போது அவன் சுயத்தை அதிகமாக நம்பி விடுகின்றான். தன்னால் எதையும் சாதிக்க இயலும் என்று எண்ணி விடுகின்றான். தன்னுடைய பலம் அபரிதமானது என்று அவன் தப்புக்கணக்குப் போடுகிறான். அவனுடைய செழிப்பான சூழ்நிலையினால் தனக்கு தேவன் தேவையென்றோ, தேவ துணை தனக்கு அவசியம் என்றோ, அவன் எண்ண முடியாதவனாக போகின்றான். தனக்குத் தேவையானவை யாவும் தன்னிடம் உள்ளதே என்ற சுயதிருப்தி, தேவனோடு உறவு கொள்ள வேண்டிய அவசியத்தை அவன் உணராமல் போகச் செய்து விடுகின்றது.

ஆனால் மனித வாழ்க்கை இரண்டு பிரிவுகளையுடையது. ஒன்று. உட்பிரகாரமான வாழ்க்கை. இரண்டு வெளிப்பிரகாரமான வாழ்க்கை. ஒன்று இதயப்பிரகாரமான அகநிலை வாழ்க்கை. இன்னொன்று சரீரப்பிரகாரமான புறநிலை வாழ்க்கை. நாம் நன்கு சாப்பிடுகிறோம். நன்றாக உடுக்கின்றோம். நல்ல வசதியான வீட்டில் வாழ்கின்றோம். வாழ்க்கை தேவைகளுக்கு போதுமான அளவு செல்வங்களை வைத்திருக்கின்றோம். பலரோடு நல்ல பழக்கங்களையும், உறவுகளையும் கொண்டுள்ளோம். இவை யாவும் புறநிலை வாழ்க்கை ஆகும்.

இந்த புறநிலை வாழ்க்கையில் நமக்கு எல்லாம் நிறைவாக இருக்கலாம். நம்மைப் பார்க்கிறவர்களுக்கு நாம் எல்லாம் பெற்ற நிறைவுடையவர்கள் போன்றக் காட்சியைக் கொடுக்கலாம். நமக்கு எதுவுமே குறையில்லை என்று பிறர் நினைக்கலாம். ஒரு வேளை வெளிப்பிரகார இந்த நிறைவான நிலையின் காரணமாக தேவனைத் தேட வேண்டிய தேவை இல்லாமல் இருக்கலாம்.

ஆனால் அகநிலை வாழ்க்கையையும் நாம் வாழ்ந்தாக வேண்டும். அங்கே நமக்கு சமாதானம் வேண்டும். சந்தோஷம் வேண்டும்.

மனநிறைவு வேண்டும். திருப்தி வேண்டும். நம்பிக்கை வேண்டும். புற நிலை வாழ்க்கையில் நாம் பெற்றுள்ள நிறைவான செல்வங்களினால் அகநிலையில் அவசியமாக உள்ள மேற்கண்ட காரியங்களை நாம் பெற்று விட முடியாது. இன்று மக்களிடம் புறம்பான நிலையில் அபரிதமான செல்வங்கள் இருந்த போதிலும் அகநிலையிலோ வெறுமை நிரம்பியிருக்கின்றது. திரண்ட செல்வங்களின் நடுவில் அவர்கள் குறைவற்ற நிலையில் வாழ்ந்தாலும், அகத்திலோ ஏதோ ஒரு குறைவு அவர்களை அமைதியற்றவர்களாக்கிக் கொண்டிருக்கின்றது.

செல்வவளம் மிகுந்த அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் பாருங்கள். சுக போகமான வாழ்க்கையும், ஆடம்பர ஆர்ப்பாட்டங்களும் அங்கே வரம்பை மீறிப் போய் கொண்டிருக்கின்றன. அந்த நாட்டில்தான் தற்கொலைகள் அதிகம். உடைந்த குடும்பங்கள் ஏராளம். மனநோய் பிடித்தவர்கள் ஏராளம். மன அமைதியின்றி போதை பொருட்களை புகலிடமாகக் கொண்டவர்கள் அதிகம்.

காரணம் என்ன? புற நிலை வாழ்க்கையில் ஆயிரம் நிறைவிருந்தாலும், அகநிலையில் நிறைவில்லையேல் பிரயோஜனமில்லை. இந்த அகநிலை வாழ்க்கை நிறைவடைய வேண்டுமானால் அவன் தேவனைத் தேடி அவருடைய கிருபையை சார்ந்து நின்றாக வேண்டும். ஏனென்றால் அவர் மட்டுமே ஒரு மனிதனின் அகநிலைத் தேவைகளை நிறைவு செய்ய முடியும்.

நிர்பந்த நிலை உணர்தல்

உண்மையான சமாதானம், சந்தோஷம், மனநிறைவு, திருப்தி, நம்பிக்கை இவை யாவும் தேவன் தருகின்ற செல்வங்கள். இந்த செல்வங்களைப் பெற வேண்டுமானால் மனிதன் தேவனுக்கு முன்பாக தன்னுடைய நிர்ப்பந்த நிலையை உணர வேண்டும். தேவனுக்கு முன்பாக தன்னுடைய உதவியற்ற உள்நிலையை அனுபவப் பூர்வமாக அறிந்துக் கொள்ள வேண்டும். உலக நிலையில் ஏராளமான ஆஸ்திகள் தனக்கிருந்தாலும், உள்ளான நிலையில் தேவனுடைய உதவியும், இரக்கமும் தனக்கு மிகவும் அவசியமானவை என்பதை அவன் உணர்ந்து கொள்ளும் போதுதான் அவன் உள்ளிலும் வெளியிலும் நிறைவாக வாழும் வழியைக் காண்கின்றான்.

பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன். (3 யோவான் – 1:2)

உண்மை இவ்விதம் இருந்தாலும், எண்ணிலடங்கா மக்கள் கூட்டம் தங்கள் அகநிலையின் ஏழ்மை நிலையை உணர்ந்து தேவ கிருபையை நாடவில்லை. தேவனைத் தேட வேண்டிய அவசியத்தை அறிந்து செயல்படவில்லை. சற்று முன்பாக நாம் ஏழைகளில் முதல் பிரிவினரைக் குறித்துப் பார்த்தோம். அவர்கள் மிகுந்த ஏழைகளாயிருந்தாலும், தங்கள் தேவைகளுக்காக பிறரின் உதவியை நாடுவதில்லை. எல்லா கஷ்டங்களையும் தங்களுக்குள்ளேத் தாங்கிக் கொள்வார்கள்.

அது போலவே பெரும்பாலான மக்கள் உள்ளனர். ஏராளமான கிறிஸ்தவ மக்களும் அதில் அடங்குவர். தங்கள் உள்ளான வறுமை நிலையை அவர்கள் ஆக்கப்பூர்வமாக உணர்வதில்லை. தங்களின் உள்ளான ஏழ்மை நிலையை அறிந்து அதற்கேற்ற விதமாக தேவனைப் பற்றிக் கொள்வதில்லை. அவர்களுக்கு உண்மையான சமாதானமோ, சந்தோஷமோ, மனநிறைவோ இல்லை. ஆனாலும் தங்கள் வெறுமை நிலையை உணர்ந்து, தேவனைப் பற்றிக் கொள்வதில்லை. அவர்கள் அகநிலையில் வாழ்க்கையில்லாதவர்கள். ஆனாலும் புறநிலையில் பணம் சேர்ப்பதிலும், பொருள் சேர்ப்பதிலும் முழுக்கவத்தையும் செலுத்தி, தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டிருப்பார்கள். இது பரிதவிக்கத்தக்க நிலையாகும்.

எனவே இதுகாறும் பார்த்த உண்மைகளின் மூலம் ஒரு மனிதன் எவ்வளவு பெரிய வசதி மிக்கவனாயிருந்தாலும் அவனுக்கு தேவனுடைய உதவியை தேட வேண்டிய கட்டாயம் அல்லது நிர்ப்பந்தம் உண்டு என்பதனை அறிந்துக் கொள்ளலாம்.

நாம் ஏராளமாக சம்பாதித்துக் காட்டுகின்றேன் என்று சவால்விட்டு சாதித்துக் காட்ட முடியும். ஆனால் நான் இதயத்தில் நிறைவான சந்தோஷத்துடன் வாழ்ந்து காட்டுகின்றேன் என்று சவால் விட்டு சாதிக்க முடியாது. நாம் குறிப்பிட்ட ஒரு சமுதாய அந்தஸ்தை சிரமப்பட்டு பெற முடியும். ஆனால் இதய திருப்தியான ஒரு நிலையை. பெற முடியாது. ஏனென்றால் நம்முடைய உட்பிரகாரமான தேவைகளை நம்முடைய சுய பலத்தினால் நாம் சாதிக்க இயலாது. அதற்காக நாம் தேவனைச் சார்ந்து நின்றால்தான் முடியும்.

சந்தோஷமாயிருக்கவும்,
சமாதானமாயிருக்கவும்,
மனநிறைவுடன் வாழவும்,
நல்ல சுபாவங்களை வெளிப்படுத்தவும்,
நன்மையான காரியங்களைச் செய்யவும்,
நீதியை நிறைவேற்றவும்,
அநீதியை சகிக்கவும்,
கோபத்தை விலக்கவும்,
பொறுமையை பற்றிக் கொள்ளவும் ....

நமக்கு உள்ளான நிலையில் விசேஷமான ஒரு உதவி தேவைப்படுகிறது. அந்த உதவியை தேவன் மட்டுமே செய்ய முடியும். நம்மால் இவைஇயலாதவை என்பதை மனப்பூர்வமாக உணர்ந்து, தேவ துணையை நாடினாலன்றி தேவன் நமக்கு உதவி செய்ய முடியாது.

நம்முடைய உள்ளான நிலையின் பலவீனத்தினை உணருகின்ற பகுதிக்கு வந்துவிட்டால், நாம் வெற்றி வாழ்க்கையின் முக்கிய பகுதிக்கு வந்து விடுவோம்: ஏனென்றால் நம்முடைய பலவீனத்தை உணருவதின் வாயிலாகத்தான், தேவனுடைய பலத்தைத் தேட வேண்டிய தேவையை நாம் உணர முடியும். நம்முடைய உள்ளான ஏழ்மை நிலையை உள்ளபடி உணர்ந்தால் தான், தேவனைப்பற்றிக் கொண்டிருக்கும் பக்குவத்தை நாம் பெற முடியும். அவ்விதமான ஒரு பக்குவ நிலையை, அதாவது ஆவிக்குரிய ஏழ்மை நிலையை நாம் மனதார அறிந்து உணர்ந்து கொண்டு, தேவனை இறுகப் பிடித்துக் கொண்டால் இந்த உலகத்தில் நாம் மிகுந்த பாக்கியவான்களாக விளங்குவோம். ஏனென்றால் தேவனைப் பற்றிக் கொள்கின்ற பக்குவத்தை பெற்று விட்ட ஒருவனை தேவன் தம்முடைய நிறைவான மகிழ்ச்சியினால் நிரப்புகின்றார். எனவே அவன் மிகுந்த மகிழ்ச்சியுடையவனாக மாறிவிடுகின்றான்.

நாம் ஆவிக்குரிய உள்ளான நிலையில் சுய பலத்தில் நிற்க இயலாதவர்கள் என்றும், தேவனுடைய கிருபையை அல்லது இரக்கத்தை சார்ந்து நிற்க வேண்டிய நிர்ப்பந்தமானவர்கள் என்றும் வேதம் விளக்குகின்றது. இந்த நிர்ப்பந்தநிலையை உணர்ந்து கொண்டு தேவனைப் பற்றிக்கொண்டவர்களே மிகுந்த ஆசீர்வாதமானவர்கள் என்றும் வேதம் தெளிவுபடுத்துகின்றது. ஆனால் இந்த பலவீனநிலையை

அல்லது நிர்ப்பந்த நிலையை வெறுமனே ஒத்துக் கொள்வதற்கும் அதனை உண்மையாய் உணர்ந்து கொள்வதற்கும் வேறுபாடு உண்டு.

பலர் தங்களை அற்பமானவர்கள் என்றும் புழு பூச்சிகள் என்றும், எதையும் செய்ய இயலாதவர்கள் என்றும், ஆவிக்குரிய பாஷையில் அடிக்கடி அறிக்கையிடுவார்கள். ஆனால் அனுபவரீதியில் அவர்கள் நடந்து கொள்ளும் விதங்களும், அவர்களுடைய செயல்களும் அவர்கள் தங்களை உண்மையான நிலையில் அற்பமானவர்கள் என்று எண்ணவில்லை என்பதை வெளிப்படுத்தும்.

உதாரணமாக ஆவிக்குரிய வாழ்க்கை அல்லது தேவன் விரும்புகின்றப் பிரகாரமான வாழ்க்கை என்பது ஒரு விதத்தில் பார்த்தால் அது எளிதான ஒன்றல்ல. அது மிகவும் கடினமானது. தேவனுடைய விருப்பங்களுக்கு இசைந்து, அவர் கூறியபடியெல்லாம் வாழ்வது மனிதனால் கூடாதது என்றே சொல்லலாம். ஏனென்றால் தேவனுடைய விருப்பங்களுக்கேற்றபடியான பரிசுத்த வாழ்க்கையை வாழ்வதற்கான ஆற்றல் மனிதனுக்கு இல்லை. பாவத்தினால் பழுதுபட்டு போன மாம்சீகமான மனிதன் சுய பலத்தினால் தேவனுடைய உயர்ந்த வழிகளை கடைபிடிக்க முடியாது.

ஆனால் தேவனுக்கேற்றபடி இசைந்து வாழத் தேவையான ஆற்றலினை பெறுவதற்காக தேவன் நமக்கு பரிசுத்த ஆவியைத் தருகின்றார். இந்த பரிசுத்த ஆவியின் ஆற்றல் எப்போது நம்மில் செயல்படும்? நாம் எப்போதும் தேவனை அண்டிக் கொண்டிருக்கும் போது. எப்போது நாம் அவரை அண்டிக் கொண்டிருப்போம்? நம்முடைய உள்ளான ஆவிக்குரிய ஏழ்மை நிலையை அல்லது பலவீனத்தை அனுபவ ரீதியில் உணரும் போதுதான்.

தேவனை சார்ந்திருப்பதின் அடையாளம் என்ன?

நாம் தேவனை அண்டிக்கொண்டிருக்கிறோம் என்பதற்கான அடையாளங்கள் என்ன? இடைவிடாத ஜெபங்கள், ஒழுங்கான வேத தியானம், தேவனுடைய சமுகத்தில் நேரங்கசை் செலவழித்தல், பேச்சு, செயல் போன்றவற்றில் ஆவிக்குரிய விழிப்புணர்வை வெளிப்படுத்துதல் ஆகியவைதான் நாம் தேவனைச் சார்ந்து நிற்கின்றோம் என்பதற்கு அடையாளங்கள்.

ஒவ்வொரு நாளும் தேவன் தன்னை ஆவியினால் பலப்படுத்தினாலன்றி, தன்னால் தேவன் விரும்புகின்றப் பிரகாரமான தூய்மையான வாழ்க்கையை வாழ இயலாது என்பதை உண்மையான ஆவிக்குரியவன் அறிந்திருக்கிறான். எனவே அவன் மாறுபடுகின்ற சூழ்நிலைகளில் கூட ஜெபம், தியானம் போன்றவற்றிற்கு முதல் முக்கியத்துவம் கொடுத்து செயல்படுகின்றான்.

அவ்விதம் முதல் முக்கியத்துவம் கொடுப்பது அவன் தன்னுடைய ஆவிக்குரிய பலவீன நிலையை அறிந்து, தேவனைப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலையை உணர்ந்திருப்பதின் அடையாளமாக உள்ளது. ஏனென்றால் தேவனோடு தினமும் ஜெபம், தியானம் மூலமாக ஐக்கியம் கொள்வதின் மூலமாக மட்டுமே தன்னால் சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும் வாழ இயலும் என்பதை அவன் உணர்ந்திருக்கின்றான். அவ்வித ஐக்கியத்தை அனுதினமும் போராடிப் பெறாவிட்டால் பரிசுத்த பாதையில் தான் தோல்வி அடைவது நிச்சயம் என்ற தன் பலவீன நிலையை அவன் நன்கு அறிந்திருக்கின்றான்.

இன்று ஏராளமான விசுவாசிகளிடமும், ஊழியர்களிடமும் போதிய ஜெப வாழ்க்கை இல்லை. அவர்கள் போதிய நேரங்களை தேவ சமுகத்தில் செலவழிப்பதிலை. அவர்கள் ஆவிக்குரியவர்கள் என்றுத் தங்களை அழைத்துக் கொண்ட போதிலும், தினசரி வாழ்க்கையில் ஆவியின் பலத்தைப் பெற்றிட எந்த சிரமும் எடுப்பதில்லை. எனவே அவர்களிடம் பரிசுத்தம் பிரகாசிக்கவில்லை. அவர்களிடம் சாட்சி வாழ்க்கை இல்லை.

ஏனென்றால் அவர்கள் இன்னும் தங்களுடைய ஆவிக்குரிய பலவீன நிலையை அறிந்து, தேவனைப் பற்றிக் கொள்ளவேண்டியதின் நிர்ப்பந்த நிலையை உணரவில்லை. அவர்களுடைய அசட்டையான வாழ்க்கை அவர்கள் தங்களின் ஏழ்மை நிலையை உணர்ந்து தேவனைச் சார்ந்திருக்கவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றது. ஆகையால் அவர்களிடம் கிறிஸ்துவினால் வரும் மிகுந்த மகிழ்ச்சியின் நிலை இருப்பதுமில்லை.

தேவனுடைய பிரியங்களை நிறைவேற்ற இயலாத – தேவனுடைய வார்த்தைகளின் படி வாழ இயலாத – உண்மையான சமாதானத்தையும், சந்தோஷத்தையும் பெற இயலாத – உயர்ந்த சுபாவங்களை

வெளிப்படுத்த இயலாத, நம்முடைய வறிய நிலையை நாம் உள்ளபடியே உணர்ந்துக் கொள்வது ஆசீர்வாதத்தின் வாசலாகும். உணர்ந்தப் பிரகாரம், தேவனுடைய பாதங்களை இடைவிடாமல் அண்டிக் கொள்வது ஆசீர்வாதத்தின் நிறைவு ஆகும்.

யாக்கோபு தன்னுடைய சுய வழிகளிலும், திறமைகளிலும் மிகுந்த நம்பிக்கை உடையவன், அந்த திறமைக்கு ஏற்ற உயர்வுகள் அவனுக்கு நிறைவாக வரவும் செய்தது. ஆனாலும் ஒரு நாள் அவன் தன்னை நிர்ப்பந்தமான ஒரு நிலையில் கண்டு வேதனையுற்றான். தன்னுடைய சுய பலத்தில் நிற்க இயலாத ஒரு இக்கட்டான நிலையை தன்னிடம் உணர்ந்தான்.

அப்போது அவனிடம் வெளிப்பிரகாரமாக எல்லாம் இருந்தது. ஏராளம் மாடுகள், ஆடுகள், ஒட்டகங்கள், கழுதைகள், வேலைக்காரர்கள் அவனுக்கு இருந்தது. அவன் மிகுந்த செல்வ நிலையில்தான் இருந்தான். ஆனாலும் அவன் தனக்குள் ஒரு பலவீனம் தன்னை வாட்டி வதைப்பதை உணர்ந்தான்.

தேவன் வந்து தனக்கு உதவி செய்தாலொழிய, தன்னால் முன்னேறிச் செல்ல இயலாது என்பதை உணர்ந்தான். தன்னுடைய இயலாமையை உள்ளபடியே உணர்ந்து, இரவெல்லாம் தேவனை நோக்கிக் கெஞ்சினான். தன்னுடைய நிர்ப்பந்தமான ஏழ்மை நிலையை அறிந்து தேவனே ! நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய நான் உம்மைப் போகவிடேன் என்று பலவந்தமாக வேண்டினான். அவனுடைய கஷ்டநிலை அவ்வளவாக இருந்தது.

அவ்விதமாக தன்னுடைய பரிதாபமான ஏழ்மை நிலையை உணர்ந்து தேவனுடைய பாதத்தை விடாமல் பற்றிக் கொண்ட அவனை தேவன் அங்கே ஆசீர்வதித்தார். (ஆதி – 32:29) உலகப்பிரகாரமாக அவனுக்கு ஏராளம் செல்வம் இருந்த போதிலும் தன்னுடைய பலவீனத்தை உணர்ந்து கெஞ்சிய இடத்தில் பெற்ற தேவ ஆசீர்வாதம் தான் அவனை திடப்படுத்தியது. அங்கே அவன் பெற்ற ஆசீர்வாதம் தான் அனேக ஆண்டுகளாக அவனை ஆட்டிப் படைத்த பயத்திலிருந்து அவனை நிரந்தரமாக விடுதலை ஆக்கியது.

சோதனைகளின் வழியாக

வேதாகமத்தில் தேவனால் வல்லமையாக உபயோகப்படுத்தப்பட்டு, மாபெரும் சாதனைகளை நிகழ்த்திய தேவ மனிதர்களை கவனித்துப் பாருங்கள். அவர்கள் யாவரும் தனித்து நிற்க இயலாத தங்கள் ஏழ்மை நிலையை, அனுபவரீதியாக உணர்ந்தறியத்தக்கவிதமாக நடத்தப்பட்டவர்களே.

தேவன் அவர்களை தம்முடைய வல்லமையான திட்டங்களுக்காக ஒரு கால கட்டத்தில் அழைத்த போதிலும், அவர்கள் தங்கள் நிர்ப்பந்தமான பலவீன நிலையை உணர்ந்து உறுதிபடுத்திய கால கட்டம் வந்த பின்னர்தான் அவர்களை வல்லமையாக உபயோகித்தார்.

தாவீதை தேவன் இராஜாவாக்கும்படி அழைத்த காலத்தில் அவன் மாபெரும் பலசாலியாகத்தான் இருந்தான். சிங்கத்தையும், கரடியையும் கொன்று, கோலியாத்தை வீழ்த்தி வெற்றி வீரனாகவே நின்றான். ஆனால் அந்த பலத்தின் அடிப்படையில் தேவன் அவனை உடனேயே இராஜாவாக்கி விடவில்லை.

அவன் தன்னுடைய பலவீனமான ஏழ்மை நிலையை முழுமையாக உணர்ந்து, தேவன் எதையாவது செய்தாலொழிய, தனக்கு வாழ்வே இல்லை என்று எண்ணத்தக்க நிலை வரும் வரை தேவன் காத்திருந்தார்.

அதற்கிடையில் அவன் பலவித பாடுகள் நிறைந்த சோதனையின் காலங்கள் வழியாக கடந்து வர நேரிட்டது. அந்த சோதனையின் பாதைகள்தான் தனித்து நிற்க இயலாத அவனுடைய பரிதாபமான பலவீன நிலையை வெளிப்படுத்தியது. எனவேதான் தன்னுடைய எளிய நிலையை அறிக்கை செய்து சங்கீதம் பாடினான்.

நான் சிறுமையும் எளிமையுமானவன். கர்த்தரோ என் மேல் நினைவாயிருக்கிறார். தேவரீர் என் துணையும், என்னை விடுவிக்கிற வருமாயிருக்கிறீர். (சங் – 40:17)

தாவீதுக்கு கடைசி நிலையில் பக்க பலமாக இருந்த நானூறு பேர் கூட அவனுக்கெதிராக திரும்பிய போதுதான், தாவீது முற்றிலும், முழுமையாக தேவனுக்குள் தன்னை திடப்படுத்த வேண்டிய கட்டாய நிலை நேரிட்டது. மிகுதியாக நெருக்கப்பட்ட அந்த நிலையில் தான் தேவனைத் தவிர தனக்கு எந்த வழியிலும் உதவியில்லை என்பதை உணர்ந்து, தேவனை தீவிரமாகப் பற்றிக் கொண்டான். (1 சாமு – 30:6)

அதன் பின்னர்தான் தாவீதின் வாழ்க்கையில் வெற்றி மிகுந்த திருப்பங்கள் தொடர்ந்து ஏற்பட்டது.

ஆம். சில நேரங்களில் தேவன் நம் வாழ்க்கையில் சோதனைகளை அனுமதிக்கின்றார். கரடு முரடான பாடுகளின் பாதை வழியாக நடத்துகின்றார். நம்முடைய கடைசி நம்பிக்கையாக இருக்கும் சில நபர்களையும், சில சார்பு நிலைகளையும் நம்மை விட்டு விலகச் செய்கின்றார். தனித்து நின்று தத்தளிக்கும் நிலை அங்கு வந்து சேருகின்றது.

எதற்காக? நம்முடைய பலத்தின் அளவை நாம் புரிந்து கொள்வதற்காக. நம்முடைய இயலாமையை நாம் அனுபவரீதியாக அறிந்து கொள்வதற்காக. நம்முடைய ஏழ்மையான பலவீன நிலையை உணர்ந்து தேவனே தஞ்சம் என்று விழுந்து விடுவதற்காக அதன் விளைவாக தேவ பலம் நம்மில் பூரணமாக செயல்படுவதற்காக.

ஆம். நம்முடைய சோதனைகள், கஷ்டங்கள், பாடுகள் ஆகியவை நம்முடைய உண்மையான பலவீன நிலையை உணரவும், தேவனே தஞ்சம் என்று விழுந்து விடுவதற்கும் நம்மை தூண்டுமென்றால் அது உண்மையிலேயே எவ்வளவோ பாக்கியமானது... ஏனென்றால் நம்முடைய பலவீனத்தில்தான் தேவனுடைய பலம் பூரணமாக செயல்படுகின்ற வாய்ப்பு ஏற்படுகின்றது. (11 கொரி – 12:9)

தன்னிடத்தில் மிகப்பெரிய ஒரு பலவீனம் இருப்பதை உணர்ந்து கொண்ட பவுல் அப்போஸ்தலன் அதற்காக வருத்தப்படவில்லை. ஏனென்றால் தன்னுடைய பலவீனம் தேவனுடைய பலத்தை முற்றிலும் சார்ந்திருக்க வேண்டிய தேவையை அவனுக்கு உருவாக்கியது. அதன் விளைவாக அவனிடம் தேவ வல்லமை அதிகமாக செயல்படுகின்ற நிலை ஏற்பட்டது. எனவேதான் அவன் *நான் பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்* என்றான். (11 கொரி – 12:10) அது மட்டுமன்றி கிறிஸ்துவின் வல்லமை என் மேல் தங்கும்படி *என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்* என்றும் கூறினான். (11 கொரி – 12:9)

மோசேயின் வாழ்க்கையில் கூட இதுபோன்ற ஒரு அனுபவத்தைத் தான் காண்கின்றோம். அவன் வீர தீர செயல்களை நிகழ்த்துகின்ற அவிற்கு பலவானாக இருந்தபோதுதான் அவனுக்கு தேவ அழைப்பு

வந்தது. அங்கே அவன் தன்னுடைய சொந்த பலத்தில் தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்றி விடலாம் என எண்ணினான். ஆனால் தோல்வியை சந்திக்க நேர்ந்தது. அவன் சோதனையான ஒரு வாழ்க்கைப் பகுதிக்குள் தள்ளப்பட்டான். தன்னிலே விசேஷமாக எதையும் செய்யும் பலம் இல்லையென்று உணரும் காலம் வரை அது நீடித்தது.

அனேக ஆண்டுகளுக்கு பின்பு மீண்டும் தேவன் அவனிடம் வந்தார். தம்முடைய மாபெரும் வல்லமையின் திட்டத்தை நிறைவேற்ற அவனை அழைத்தார். அவனோ அவ்விதமான வல்லமையின் பணிக்கு தான் முற்றிலும் தகுதியற்றவன் என்பதை அனுபவத்தின் அடிப்படையில் உணர்ந்து, *நான் எம்மாத்திரம்* என்றான். (யாத் – 3:11) ஆனால் தேவனோ அவனை விடவில்லை. தன்னுடைய உதவியற்ற ஏழ்மை நிலையை சரியாக உணர்ந்து நிச்சயித்துக் கொண்ட அவனையே தம்முடைய வல்லமையான பணிக்கு தகுதியானவனாக தேவன் கண்டார்.

ஏனென்றால் தன்னிடம் உள்ள பலவீனமான நிலையை உணர்ந்திருக்கின்ற ஒருவனிடம்தான் தம்முடைய வல்லமையை முழுமையாக வெளிப்படுத்த முடியும் என்பதை தேவன் அறிவார். அப்படிப்பட்ட தன்னிலை உணர்ந்த மனிதன்தான் ஒவ்வொரு காரியத்திலும் தேவ பலத்தை அதிகமாக சார்ந்திருந்து செயல்படுவான் என்பதையும் தேவன் அறிவார்.

தன்னுடைய இயலாமையையும், தகுதியற்ற நிலையையும் உணர்ந்து அறிக்கையிட்ட மோசேயின் வாழ்க்கையில் நடந்த தேவ வல்லமையின் செயல்கள் கொஞ்சமல்ல. ஆம். நம்முடைய பலவீனத்தையும், தகுதியற்ற நிலமையையும் எந்த அளவிற்கு நம்மால் உணர்ந்து, தேவனை முற்றிலும் சார்ந்திருக்க முடிகின்றதோ அந்த அளவிற்கு நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகவும், மகிழ்ச்சி நிறைந்தவர்களாகவும், பாக்கியவான்களாகவும் விளங்க முடியும்.

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று இயேசு சொன்னதோடு, பரலோக இராஜ்யம் அவர்களுடையது என்றும் சொன்னார். பரலோக இராஜ்யம் சமாதானம், சந்தோஷ, தூய்மை, தேவனுடைய ஆளுகை, தேவனுடைய ஆசீர்வாதம் இவைகளைக் குறிக்கின்றது. சுருங்கச் சொல்வதாயின் பரலோக இராஜ்யம் என்பது தேவனால் வருகின்ற சகலவிதமான நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் குறிக்கின்றன.

யார் தேவனுடைய நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் அனுபவிக்கத் தகுதியானவர்கள்? தங்கள் தகுதியின்மையை தகுந்த

விதமாக அறிந்து கொண்டவர்கள் தங்கள் ஏழ்மை நிலையை ஏற்ற விதமாக புரிந்து கொண்டவர்கள். தங்கள் தகுதியின்மையையும், ஏழ்மைத் தனத்தையும் உரிய முறையில் உணர்ந்து, தேவனுடைய கிருபையை விடாப்பிடியாக பற்றிக் கொண்டவர்கள். இவர்கள்தான் தேவனுடைய நன்மைகளை நிறைவாகப் பெறுகின்ற தகுதியைப் பெற்றவர்கள். உலக மனிதர்களிடமிருந்து சில நன்மைகளைப் பெற வேண்டுமானால், அவர்கள் நிர்ணயிக்கின்ற தகுதியை நாம் முதலாவது பெற்றிருக்க வேண்டும். ஆனால் தேவனின் நன்மைகளைப் பெறவோ, நம்முடைய தகுதியின்மையை நன்கு உணர்ந்திருக்க வேண்டும்.

இவ்விதமாக தங்களின் ஏழ்மை நிலையை உணர்ந்து, தேவனைப் பற்றிக் கொண்டவர்கள் உண்மையில் கிறிஸ்துவுக்குள் மிகப் பெரிய ஐசுவரியவான்களாக மாறிவிடுகின்றார்கள். ஏனென்றால் தன்னுடைய வெறுமையை உணர்ந்த மனிதன் கிறிஸ்துவின் நிறைவிற்கு உரிமையாளன் ஆகிவிடுகின்றான்.

அவனிடம் சமாதானம் என்னும் செல்வம் இருக்கும். சந்தோஷம் என்னும் செல்வம் இருக்கும். திருப்தி என்ற செல்வம் இருக்கும். விசுவாசம், பரிசுத்தம், அன்பு, நம்பிக்கை, உண்மை ஆகிய செல்வங்கள் நிறைவாயிருக்கும். ஏனென்றால் அவர்கள் பரலோக இராஜ்யத்தின் பங்காளிகள்.

மேலும் அவர்கள், தேவனைப் பற்றிக் கொள்ளுகின்ற அனுபவத்தின் விளைவாக, உலகப் பொருட்களின் மேலுள்ள பற்றிலிருந்து விடுதலை அடைகின்றார்கள். ஏனென்றால் அவர்கள் தேவனுடைய செல்வங்கள் மட்டுமே தங்களுக்கு உண்மையான திருப்தியையும், சந்தோஷத்தையும் தரும் என்பதை அறிந்திருக்கிறார்கள். உலகப் பொருட்களால் தங்கள் வாழ்வு சுகித்து விடாது என்றும், அதனால் தாங்கள் திருப்தி அடைய இயலாது என்றும் உணர்ந்திருக்கின்றபடியால் உலகப் பொருட்களின் இழுவை சக்தியிலிருந்து விடுதலையாகி, சுதந்தர உணர்வுடன் வாழ்கின்றார்கள்.

தங்களின் உள்ளான ஏழ்மை நிலையை உணர்ந்து தேவனை உறுதியாகப் பற்றிக் கொண்டவர்கள் மிகுந்த மகிழ்ச்சியானவர்கள். ஏனென்றால் தேவனுடைய எல்லா ஐசுவரியங்களும் அவர்களுக்கு சொந்தமானதே.

******

துயரத்தின் வழியே சந்தோஷம்

3

> துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் ஆறுதலடைவார்கள் (மத் – 5:4)

இயேசு கிறிஸ்துவின் மலைப்பிரசங்கம் என்ற பகுதியில் யார் உண்மையான பாக்கியவான்கள் என்பதை இயேசு சுட்டிக்காட்டினார். அந்த வரிசையில் இரண்டாவதாக, *"துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் ஆறுதல் அடைவார்கள்"* என்றார் (மத் – 5:4)

இந்த வசனத்தை கொஞ்சம் கவனித்துப் பார்ப்போமென்றால் அது அதிர்ச்சியூட்டுகின்ற ஒரு வசனம் என்பது விளங்கும். துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்களா? துயரப்படுகின்றவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களா? என்ற கேள்விகள் அங்கே எழும்பும். ஏனென்றால் துயரத்தை இந்த உலகத்தில் யாராவது விரும்புகின்றார்களா? துயரமே வாழ்க்கையில் வரக்கூடாது என்று தானே எல்லோரும் எதிர்பார்ப்பார்கள். அப்படியானால் துயரப்படுகின்றவர்களை பாக்கியம் செய்தவர்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்?

இந்த உலகத்தில் எல்லோருமே சந்தோஷமான ஒரு நிலையிலேயே எப்போதும் இருக்க வேண்டும் என்றே ஆசைப்படுகின்றார்கள். துன்பங்களோ, கஷ்டங்களோ, மனநோவுகளோ, பிரச்சனைகளோ, வியாதிகளோ, நஷ்டங்களோ, பாடுகளோ வருவதை யாரும் விரும்பமாட்டார்கள். அவைகளை பாக்கியமானவையென்றோ, மகிழ்ச்சிக்குரியவையென்றோ யாரும் சொல்ல மாட்டார்கள்.

யாராவது ஒருவர் பிரச்சனைகளற்ற சொகுசான, சுகபோகமான வாழ்க்கை வாழ்வதைக் கண்டால் அந்த மனிதனைப் பிறர் "அவன் கொடுத்து வைத்தவன், பாக்கியம் செய்தவன், அதிருஷ்டசாலி என்றெல்லாம் கூறுவார்கள். பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த இஸ்ரவேல் மக்கள் யாராவது ஒருவர் செழிப்பாக, கஷ்டங்களற்ற வாழ்க்கை வாழ்வதைக் கண்டால் அந்த மனிதனை "தேவனால் ஆசீர்வதிப்பட்டவன்" என்று சொல்வார்கள். துன்பங்களற்ற வளமான வாழ்வுதான் தேவனுடைய ஆசீர்வாதம் என்பது யூதர்களிடம் ஊறிப்போன ஒரு சிந்தனை ஆகும்.

அவ்விதமான சிந்தனையுடைய யூதர்களின் மத்தியில்தான் "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்" என்று இயேசு சொன்னார். அவர்களை ஒரு கணம் அது ஆச்சர்யப்படுத்தியிருக்கும். ஆனால் இயேசுவின் பார்வை மனிதர்களின் உலகப்பிரகாரப் பார்வையிலிருந்து வேறுபட்டது. அவர் சொன்னதை உற்றுக் கவனித்து ஆராயும் போதுதான் அது எவ்வளவு பெரிய உன்னதமான உண்மை என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

மேலும் இந்த வசனத்தை மிகுந்த கவனத்துடனும், நிதானத்துடனும்தான் அர்த்தம் கொள்ள வேண்டும். "துயரப்படுகிறவர்கள்" என்ற வார்த்தையை மட்டும் பார்த்து, இந்த உலகத்தில் துயரப்படுகிறவர்கள் யாவருமே பாக்கியவான்கள் அல்லது மகிழ்ச்சிக்குரியவர்கள் என்று அர்த்தம் கொண்டு விடக் கூடாது. அதுபோலவே அனைத்து விதமான துயரங்களும் பாக்கியமானவைகளே என்றும் புரிந்து கொள்ளக்கூடாது.

இயேசு கிறிஸ்து சொன்ன அந்த வசனத்தின் பின்னால் உள்ள அவருடைய உண்மையான உணர்வினையும், சிந்தனையையும் புரிந்து கொள்ள வேண்டும். துன்பத்தையும், துயரத்தையும் வெறுக்கவும், அதனை சாபமாகவும் எண்ணுகின்ற மனிதர்கள் நடுவில், *"உண்மையில் நீங்கள் எண்ணுகின்ற பிரகாரம் துயரங்கள் யாவும் சாபம் அல்ல. அவை மிகுந்த பாக்கியமானவையாகவும் ஆசீர்வாதமானவையாகவும் இருக்க முடியும்* என்ற கருத்தைத்தான் இயேசு அங்கே கூறியிருக்க முடியும்.

இளம் வயதில் விபத்தில் இரண்டு கால்களையும் இழந்து விட்டவரின் துயரத்தை பாக்கியம் என்று சொல்ல முடியாது. தீராத

நோயினால் தினமும் அவதியுறும் ஒருவரை பாக்கியமானவர் என்று சொல்ல முடியாது. திருமணமான சிறிது காலத்திற்குள்ளாகவே தன் அருமைக் கணவனை இழந்து துயருறும் பெண்ணை பாக்கியவதி என்று சொல்ல முடியாது. வாழ்நாள் முழுவதும் வறுமையில் உழலுகின்ற மக்களை மிகுந்த ஆசீர்வாதமானவர்கள் என்று கூற முடியாது.

ஆனால் இந்த உலகத்தில் பலவித துன்பங்களும், துக்கங்களும், துயரங்களும், மிகுந்த மகிழ்ச்சிக்கும், பாக்கியமான வாழ்க்கைக்கும் துணை புரிகின்றன என்ற உண்மையும் மறுக்க முடியாததாகும். பலருடைய வாழ்க்கையில் அவர்கள் கண்ட அனேகம் துயரங்கள்தான் அவர்களை மிகுந்த மகிழ்ச்சிக்குரிய மக்களாக மாற்றியிருக்கிறது. எனவே அவ்விதம் துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் என்பதிலேயே ஆழ்ந்த அர்த்தம் உள்ளது.

கொஞ்சம் உப்பை அள்ளி வாயில் போட்டால், வாய் கசக்கின்றது. மிகுந்த வெறுப்புணர்வை அது உருவாக்குகின்றது. உப்பை மிகவும் மோசமானப் பொருள் என்று எண்ணத் தூண்டுகின்றது; ஆனாலும் உப்பை மோசமான பொருள் என்று கூறி விட முடியாது.

அதே உப்புதான் பலவித உணவுகளுக்கு உரிய சுவையைக் கொடுக்கின்றது. அது சேராவிட்டால், அந்த உணவு சுவையின்றிப் போகிறது. அங்கே "உப்பு எவ்வளவு சிறந்த ஒரு பொருள்" என்று சொல்வதில் அர்த்தம் உள்ளது. "உப்பு சேர்வதால் ஒரு பொருள் எவ்வளவு நல்ல சுவையை பெறுகின்றது" என்று சொல்வது மிகவும் உண்மையாகும்.

அது போலவே துயரங்கள் ஒரு புறம் வெறுப்புக்குரியதாக இருந்த போதிலும் வாழ்க்கையில் அது மிகுந்த சுவையூட்டுகின்ற ஒன்று என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். தனித்த நிலையில் துயரங்கள் என்பது மிகுந்த மனவேதனைக்குரியதாக இருந்த போதிலும், வாழ்க்கையில் துயரமான நிலைகள் மிகுந்த மனமகிழ்ச்சிக்கு வழிவகுக்கின்றது என்பதும் உண்மையாகும்.

இப்பொழுது *துயரப்படுகின்ற நிலை* வாழ்க்கையில் எப்படி பாக்கியமானவையாகவும், மிகுந்த சந்தோஷமானவையாகவும் மாறுகின்றன என்பதை கவனிப்போம்.

1

துயரங்கள்தான் சந்தோஷத்தின் நிறைவினை அனுபவிக்க உதவுகின்றது.

துயரங்களற்ற வாழ்க்கை என்றால் என்ன? அங்கே பிரச்சனைகள் இல்லை. துன்பங்கள் இல்லை. வாழ்க்கை கஷ்டங்கள் இல்லை. இதயம் விரும்பியது எல்லாம் கிடைக்கின்றது. எதற்கும் குறைவில்லை. எல்லாமே சுகமாகவும், சுமுகமாகவும் இருக்கின்றன.

இப்படிப்பட்ட வசதிமிக்க, தொந்தரவற்ற வாழ்க்கை நமக்கிருந்தால் அது எவ்வளவு நன்றாகயிருக்கும் என்று நாம் எண்ணுவோம். ஆனால் எல்லா நிலையிலும் பிரச்சனைகளற்ற சுகமான ஒரு நிலை உண்மையில் மகிழ்ச்சி நிறைந்ததா என்று பார்ப்போமானால், அது அவ்விதம் இருப்பதில்லை. பிரச்சனைகளற்ற நிலையில் எல்லா வசதிகளையும் கொண்டிருக்கின்ற மக்கள் உண்மையிலேயே மகிழ்ச்சியின் உச்சத்தில் இருக்கின்றார்களா என்று பார்ப்போமாயின் அவர்கள் அவ்விதம் இருப்பதில்லை.

All Sun Shine makes a Desert என்று ஒரு அரேபிய பழமொழி உண்டு. சூரிய ஒளி எப்போதும் பிரகாசிக்கும் இடம் ஒரு பாலைவனமாக மாறிவிடுகிறது. செடி, கொடிகள் நன்கு வளர்ந்து கனி கொடுக்க சூரிய ஒளி அவசியம். ஆனால் சூரியனின் ஒளிக்கதிர்கள் தொடர்ந்து விழுகின்ற பகுதியில் எந்த செடி கொடியும் முளைத்து வளர்ந்து கனி கொடுக்காது.

வாழ்க்கையிலும் இதுவே உண்மை. அமைதியான, பிரச்சனைகளற்ற, சுமுகமான ஒரு வளமான நிலை மனிதனுக்கு மகிழ்ச்சியை கொடுப்பது உண்மை. ஆனால் அதே சுகமான நிலை தொடர் கதையாகும் போது அங்கே மனிதன் மகிழ்ச்சியினை அனுபவிக்க இயலாதவனாகப் போகின்றான்.

சாலொமோன் இராஜாவின் வாழ்க்கையை கவனித்துப் பார்க்கையில் இந்த உண்மையை நன்கு வெளிப்படுத்துகின்றது. தேவன்

அவனுக்கு யுத்தமில்லாத அமைதியின் காலத்தைக் கொடுத்தார். அவனுக்கு நிறைந்த செல்வங்களையும், ஞானத்தின் திரட்சியையும் கொடுத்தார். அவனுக்கு பிரச்சனைகள் எதுவுமில்லாத, சுகமான ஒரு சூழ்நிலை இருந்தது. எதையும் விரும்பியபடி அனுபவிக்கும் வாய்ப்புகள் அவனுக்கிருந்தது.

இவ்வளவு சுகமான சூழ்நிலைகள் இருந்த போதிலும், அவன் மகிழ்ச்சியின் நிறைவினைக் கண்ட ஒரு மனிதனாக இருக்கவில்லை என்பதை அவனுடைய வரலாறு தெளிவுப்படுத்துகின்றது.

ஏனென்றால் எந்த ஒரு சுகமான நிலையிலும், தான் அனுபவிக்கும் சந்தோஷம் போதுமென்று அவனால் திருப்தியுடன் இருக்க இயலவில்லை. அவன் சந்தோஷங்களை அனுபவித்த போதிலும், அதில் திருப்தியடையாமல், இதற்கு அடுத்தகட்ட சுகத்தையும் சந்தோஷத்தையும் பற்றியே தாகங்கொண்டிருந்தான்.

தன்னுடைய சந்தோஷத்தையும், சுக வாழ்வையும் பெருக்க வேண்டும் என்பதற்காக அவன் மிகவும் பிரயாசப்பட்டான். மாட மாளிகைகளை கட்டினான். அலங்கார அரண்மனையை அமைத்தான். எழில் மிகு தோட்டங்களையும், சிறப்பு மிகு சிங்கார வனங்களையும் உண்டாக்கினான். வெள்ளியையும், பொன்னையும் விலையேறப் பெற்ற பொருட்களையும் ஏராளமாக குவித்தான். எல்லா தேசத்து பெண்களையும் ஏராளமாக தன் பள்ளியறைக்கு வரவழைத்தான்.

இத்தகைய வசதிமிக்க, செழிப்பான சூழ்நிலையில் சாலொமோன் எவ்வளவாக சந்தோஷத்தில் மிதந்திருப்பான் என்று நாம் எண்ணுவோம். ஆனால் அவனே எழுதி வைத்த பிரசங்கி என்ற புத்தகம் அவனுடைய ஏமாற்றங்களையும், சலிப்புகளையும் விபரமாக வெளிப்படுத்துகின்றன. பிரசங்கி 2–ம் அத்தியாயத்தில் இதனை நாம் தெளிவாகக் காணலாம்.

ஆம். ஒரு மனிதனுக்கு சுகமான ஒரு வாழ்க்கை தொடரும் போது, அவனுக்கு அது நிறைவான மகிழ்ச்சியை அளிக்காமல், ஒரு வித திருப்தியற்ற, நிறைவற்ற நிலையையே அவனுக்கு கொடுக்கின்றது. சுகங்களுக்கு மத்தியில் அவன் சலிப்படைந்த மனிதனாக மாறிவிடுகின்றான். அவன் தனக்கு முன்பாக தற்போதுள்ள மகிழ்ச்சியை அனுபவிக்காமல், அதற்கு அடுத்த கட்ட மகிழ்ச்சிக்காக அலைமோதுகின்றவனாக மாறிவிடுகின்றான்.

எதை வேண்டுமானாலும், எந்த நேரத்தில் வேண்டுமானாலும் சுவையாக சாப்பிடும் வசதியுள்ள மனிதன் ஒருவன். தினமும் ஒரு வேளை சாதாரண உணவிற்குக்கூட தவியாய் தவிக்கும் மனிதன் ஒருவன். இந்த இருவருக்கும் மிக சுவையான உணவு கொடுக்கப்பட்டால் எந்த மனிதன் அதனை அதிகமாக அனுபவித்து, ருசித்து சாப்பிடுவான்?

அந்த ஏழை மனிதன்தான் அதனை நன்கு ருசித்து, சுவைத்து சாப்பிடுவான் என்பதில் சந்தேகமில்லை. வசதிமிக்க மனிதனுக்கு அந்த சுவை மிக்க உணவு ஒரு பெரிய திருப்தியையோ, சந்தோஷத்தையோ கொடுக்காது. ஏழை மனிதன் அதிகமாக ருசித்து சாப்பிடுவதற்கு காரணம் என்ன? அவனுடைய வறுமை, அவனுடைய பசி, எப்போதும் அதுபோன்ற சுவையான உணவு கிடைக்காத நிலமை. இவைகள் தான் ருசித்து, அனுபவிக்கக் காரணமாக இருந்தன.

இது போலவே, வாழ்க்கையில் நாம் சந்திக்கும் சில துயரங்கள், கஷ்டங்கள், அதன் பின்னர் வரும் நல்ல நிலமைகளை அதிகமாக நாம் அனுபவித்து மகிழ நமக்கு உதவி செய்கின்றது. ஆம். வாழ்க்கையில் சந்தோஷங்களை நிறைவாக உணர்ந்து அனுபவிக்க வேண்டுமானால் அங்கே சில துயரங்களை, துக்கங்களைக் கண்ட அனுபவங்களும் மிகவும் அவசியமாகின்றது.

ஒரு வசதிமிக்க மனிதனிடம் ஏராளமான பணம் உள்ளது. அவன் புதிதாக வந்த கலர் டி.வி.யை நினைத்த உடனே வாங்கி விட முடியும். ஆனால் ஒரு பொருளை வாங்கி விட்டோம் என்ற நிலை அவனை அதிக மகிழ்ச்சியடையவனாக மாற்றிவிடாது. ஏனென்றால் அவன் அந்த பொருளை வாங்க எந்தப் பிரயாசமும்படவில்லை. அது அவனுடைய ஒரு நீண்டநாள் கனவாக இருக்கவில்லை. எனவே அதனை வாங்கி விட்ட உடன் ஏதோ ஒன்றை பெரிதாக சாதித்து விட்டோம் என்று மகிழ வாய்ப்பில்லை.

அதே வேளையில் ஒரு ஏழை மனிதன். அவனுக்கு ஒரு டி.வி. வாங்க வேண்டும் என்பது நீண்ட நாள் ஆசை. பல ஆண்டுகளாக சிரமப்பட்டு சேர்ந்த பணத்தைக் கொண்டு, ஒரு நாள் தான் விரும்பிய படி டி.வி.ஐ வாங்குகின்றான். இந்தப் பொருளினால் அந்த ஏழை மனிதன் அடையும் மகிழ்ச்சி கொஞ்சமாக இருக்க முடியாது. வசதிமிக்க மனிதனை விட அந்த மனிதன் பல மடங்கு அதிகமாக சந்தோஷமடைவான்.

காரணம் என்ன? அவனுடைய இயலாத நிலைமை. அவனுடைய நீண்ட நாள் பிரயாசம். தன்னுடைய நிலைமைக்கு அப்பாற்பட்ட ஒரு பொருளை வாங்கி விட்ட திருப்தி. இவைகள் அவனுடைய மகிழ்ச்சியை பல மடங்காக மாற்றுகின்றது. பல நாட்களுக்கு அது நீடிக்கின்றது. ஆம். சுகமான வாழ்க்கைப் பகுதிகளில் நாம் பெறுகின்ற எதுவும் நமக்கு அதிக அளவு சந்தோஷத்தைத் தராது. அதற்கு பின்னணியில் சில சிரமங்கள் இருந்தால்தான் சந்தோஷம் பல மடங்காகும்.

ஆம். குளிர்ந்த தண்ணீரின் சுவையை உணரத் தாகம் அவசியம். நல்ல உணவின் சுவையை அனுபவிக்க போதிய பசி தேவை. அதுபோல வாழ்க்கையின் சந்தோஷங்களை உரிய முறையில் உணர்ந்து அனுபவிக்க துயரங்களும் அவசியமே.

தேவனும் தம்முடைய பிள்ளைகளுக்கு நிறைந்த நன்மைகளையும் உயர்வுகளையும் கொடுத்து ஆசீர்வதிக்கின்றார். ஆனாலும் அந்த ஆசீர்வாதப் பகுதிகளின் சந்தோஷங்களை நிறைவாக அனுபவிக்கத்தக்கதாக, முதலில் பல சிரமங்கள் வழியாகவும், சோதனைகள் வழியாகவும் நடத்துகின்றார். அங்கே அவர்கள் துயரங்களையும், துக்கங்களையும் அனுபவிக்க நேரிடுகிறது. ஆனால் அந்த வேதனையின் அனுபவங்கள், பின்னாளில் வரும் நன்மைகளையும், சந்தோஷங்களையும் அதிகமாக அனுபவித்து மகிழ வழிவகுக்கின்றது. அவர்கள் அடைந்த பலவித துயரத்தின் அனுபவங்கள்தான் தேவன் தரும் சிறு, சிறு உயர்வுகளில் கூட அவர்களை அதிகமாக பரவசப்பட்டு களிகூரச் செய்கின்றது.

யோசேப்பு, தாவீது போன்ற வேதாகம காலத்து தேவனுடைய மனிதர்கள் வாழ்க்கையில் தேவன் அவ்விதமே செயல்பட்டது. அவர்களுக்கு சந்தோஷத்திற்குரிய உயர்ந்த நிலமைகளைக் கொடுப்பதற்கு முன்பாக, பலவித துயரங்களின் பாதையில் அவர்களை நடந்து வரச் செய்தார். அங்கே அவர்கள் அனுபவித்த துயரங்களும், துக்கங்களும் கொஞ்சமல்ல. ஆனால் பிற்காலத்தில் அவர்கள் அதிகமாக மகிழுவதற்கு அவைகளே காரணமாக அமைந்தது. எனவேதான் அவர்கள் நன்றியுணர்வோடு கடைசி வரை கர்த்தருக்குப் பிரியமாக வாழ்ந்தார்கள்.

ஆம். இக்காலத்து துயரங்கள், பின்னாளின் சந்தோஷங்களை நிறைவாக அனுபவிக்க காரணமாக அமையுமென்றால், அந்த துயரங்களையுடைய மனிதன் உண்மையிலேயே பாக்கியவான் அல்லது மிகுந்த மகிழ்ச்சிக்குரியவன் என்பதில் சந்தேகமில்லை.

2

துயரங்கள் தேவன் அருளும் சந்தோஷத்தை அனுபவிக்க வழிவகுக்கின்றது

நாம் முதல் அத்தியாயத்தில் சந்தோஷங்கள் இரண்டு வகைப்படும் என்று பார்த்தோம். *ஒன்று* உலகப்பிரகாரமான நிலையில் நாம் அடையும் சந்தோஷம். *இரண்டு.* தேவன் அருளுகின்ற சந்தோஷம் உலகப்பிரகாரமான சந்தோஷம் என்பது நாம் வைக்கப்பட்டுள்ள நலமான சூழ்நிலைகளின் விளைவாகவும், உலக நிலையில் நம்மிடம் உள்ள பணம், செல்வம், உயர்நிலைகள், போன்றவற்றினாலும் நாம் அடைகின்ற சந்தோஷம் ஆகும். தேவன் அருளும் சந்தோஷம் என்பது தேவன் நேரடியாக, எந்தவித மாறுபட்ட சூழ்நிலையின் நடுவிலும், ஒரு மனிதனுடைய இதயத்தில் வைக்கின்ற சந்தோஷமாகும்.

மேற்கண்ட இந்த இறை சந்தோஷம், நிலையானதும், நிறைவானதும், மிகுந்த மேன்மையானதுமாகும். ஆனால் மனிதன் பலவித உலக சந்தோஷங்களின் நடுவில் வாழ்கின்ற போது, இந்த மேலான சந்தோஷத்தை அனுபவிக்க வாய்ப்பின்றிப் போகிறது. ஏனென்றால் இறை சந்தோஷத்தைத் தேட வேண்டிய ஒரு தேவை இல்லாதது போன்ற ஒரு மாயையான நிலை அவனை மூடிக் கொள்கின்றது. எனவே அவன் தேவன் தரும் சந்தோஷத்தை தேடாதவனாகப் போய் விடுகின்றான்.

இந்த நிலையில் பெரும்பாலும் ஒரு மனிதன் சந்திக்கும் துயரங்கள் தான், அவன் தேவன் தரும் சந்தோஷத்தைத் தேட வேண்டியதின் கட்டாயத்தை அவனுக்கு உருவாக்குகின்றது. உலகப் பிரகாரமான சந்தோஷங்களின் வாசல்கள் அவனுக்கு அடைக்கும் போதுதான் தேவன் அருளும் சந்தோஷத்தின் திசை நோக்கி அவனுடைய பார்வை திரும்புகின்றது. சுருங்கக்கூறின் துயரங்களின் பாதையில் அவன் அனுபவிக்கும் வேதனைகள், தேவன் அருளும் உயர்ந்த வித சந்தோஷத்தை அனுபவிக்கும் வாய்ப்பை அவனுக்கு உருவாக்கிக் கொடுக்கின்றது.

தேவன் அருளும் சந்தோஷம் என்பது தேவனிடத்திலிருந்து வருகின்ற சந்தோஷம் ஆகும். தேவன் விரும்பினால் அதை எந்த மனிதனுக்கும் கொடுக்க முடியும். எதுவுமே இல்லாத நிலையிலும் பலவித தோல்விகளின் நடுவிலும் – பலவித நெருக்கங்களின் நடுவிலும் – மகிழ்வதற்கு வாய்ப்பே இல்லாத வெறுமை நிலையிலும் – தேவன் அருளும் சந்தோஷத்தை ஒரு மனிதன் அனுபவித்து உற்சாகமடைய முடியும்.

அந்தவித சந்தோஷத்தைப் பெறுவதற்கு ஒரே ஒரு காரியம் மிக முக்கியம். அந்த மனிதனுக்கு தேவனோடு ஒரு நெருங்கிய ஐக்கியம் மிகவும் அவசியம். தேவனை முற்றிலும் சார்ந்து கொள்ளுகின்ற ஒரு நிலை தேவை. தேவனை விடாதுப்பற்றிக் கொள்கின்ற ஒரு நிலை தேவை. தேவன் தன்னை திடப்படுத்தினாலன்றி வேறு வழியில் தான் திடப்பட வழியே இல்லை என்ற நிர்ப்பந்த நிலை அவசியம். ஏனென்றால் இவ்வித நிலைகள்தான் ஒரு மனிதனை தேவனுக்கு அருகில் மிகவும் நெருக்கமாக போகச்செய்கின்றது. அந்த நெருக்கம்தான் தேவனிடமுள்ள சந்தோஷத்தை அவனுடைய வறண்ட இதயத்தில் பாய வைக்கின்றது.

ஆனால் மேற்கண்ட நிலைகளை எப்பொழுது ஒரு மனிதன் அடைகின்றான்? அவன் சோதனைகளால் நெருக்கப்படும் போதுதான். துன்பங்களால் அவன் துக்கப்படும்போதுதான். மனவேதனைகளால் அவன் தவிக்க நேரிடும் போதுதான். ஆறுதலைத் தேட வேண்டியதின் அவசியம் அவனுக்கு வற்புறுத்தப்படும் போதுதான். சாதாரண சூழ்நிலையில் அவன் தேவனைப் பற்றிக்கொள்ள வேண்டியதின் கட்டாயத்தை உணர்வதில்லை. தேவ சந்தோஷத்தைப் பெறுவதற்காக அவன் தேவ ஐக்கியத்தை அதிகமாக தேடுவதில்லை. அவன் பார்வை உலகத்தின் மேலும், உலகப்பிரகாரமான சந்தோஷங்களின் மேலுமே இருக்கும்.

ஆனால் துயரங்களின் அனுபவங்கள் அவன் பார்வையை தேவனை நோக்கித் திரும்பச் செய்கின்றது. தேவனை நோக்கித் தாவீதைப் போல கதற வைக்கின்றது. தேவ ஐக்கியத்தின் தேவையை உணர வைக்கின்றது. அவ்விதம் அவன் தேவனைத் தேட நேரிடும் போது,

தேவ சந்தோஷம் அவனுக்குள் ஓடுகின்றது. மகிழ்வதற்கு வாய்ப்பே இல்லாத நிலையிலும், அவன் மனம் இனம் புரியாத ஒரு சந்தோஷத்தினால் நிறையும் போது அங்கே அவன் மிகவும் பரவசமடைகின்றான். கர்த்தரின் பாதத்தில் ஆனந்தக் கண்ணீர் சிந்தி இதயத்தில் எல்லையற்ற மகிழ்ச்சியை அடைந்து களிகூருகின்றான்.

ஒரு மனிதன் இவ்விதமான தெய்வீக சந்தோஷங்களை அனுபவிக்க நேருகின்ற போதுதான், தேவனோடுள்ள ஐக்கியத்தினால் வருகின்ற நிறைவான சந்தோஷம் எப்படிப்பட்டது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. அங்கேதான் உண்மையானதும், ஒப்பற்றதுமான சந்தோஷத்தை தேவன் மட்டுமே தரமுடியும் என்பதை அறிந்துக் கொள்ள முடிகின்றது. அவ்விதம் அறிந்து கொள்ளும்போதுதான் உலகப்பிரகாரமான பொருட்கள் மேலும், செல்வங்கள் மேலும், இன்பங்கள் மேலும் அவன் கொண்டிருக்கும் பற்றினையும் மோகத்தையும் விட்டு இறங்கி வர முடிகின்றது. அவ்வித மேன்மையான சந்தோஷத்தையும், சமாதானத்தையும், இதயநிறைவினையும் அனுபவித்து பழகிவிட்டால், தொடர்ந்து அவ்வித சந்தோஷத்தைப் பெறாமல் அவனால் அமைதியாக இருக்க முடியாது. எனவே அவன் தினமும் தேவ சமுகத்தை நாடி, தேவ ஐக்கியத்தைத் தேடி, அந்த சந்தோஷத்தை இதயத்தில் பெற மிகவும் வாஞ்சையோடு பிரயாசப்படுவான்.

தேவனுடைய தாசனாகிய தாவீதின் வாழ்க்கையில் இவ்வித சந்தோஷத்தைத் தேடிய அனுபவங்களை அதிகமாகக் காண முடிகின்றது. உலக நிலையில் எல்லாவற்றையும் நிறைவாகப் பெற்றிருந்த சாலொமோன் சந்தோஷத்தின் ரகசியத்தைக் காணாமல், மனக்குறைவுடனேயே வாழ்ந்தான். ஆனால் தாவீதோ அப்படியல்ல. நெருக்கங்களின் நடுவிலும் – துன்பங்களின் நடுவிலும் – பல உபத்திரவங்களின் நடுவிலும் சந்தோஷத்தின் ரகசியத்தை அறிந்தவனாக மன நிறைவுடையவனாக வாழ்ந்தான்.

சங்கீதம் – 4:7 – ல் செல்வங்கள் நிறைந்த பலரை விட தனக்கு மிகுதியான சந்தோஷம் இருப்பதாக தாவீது அறிக்கையிடுகிறான். அந்த சந்தோஷம் உலகப் பொருட்களாலோ, சூழ்நிலைகளாலோ வராமல்,

தேவனே அவனுடைய இருதயத்தில் அதனைத் தந்ததாக சாட்சியிடுகின்றான். இத்தனைக்கும் பாடுகள் நிறைந்த சூழ்நிலையில் அத்தகைய நிறைவான சந்தோஷத்தை அனுபவித்ததையே அவன் சொல்கின்றான்.

அவர்களுக்குத் தானியமும், திராட்சரசமும் பெருகியிருக்கிற காலத்தின் சந்தோஷத்தைப் பார்க்கிலும், அதிக சந்தோஷத்தை என் இருதயத்தில் தந்தீர் (சங் – 4 : 7)

இந்த மேலான தேவ சந்தோஷத்தை வாழ்க்கையில் கண்டு கொள்ள, தாவீதுக்கு அவனுடைய துயரமான நிலைகள் தான் துணை நின்றது என்பது உண்மை. அதன் விளைவாக தனக்கு முழுமையான இதய மகிழ்ச்சி எங்கிருந்து வரும் என்பதை அறிந்து, அதற்கேற்ப அதனை தேடுகின்ற மனிதனாக விளங்கினான். எனவே தான் உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு என்று மனமகிழ்ந்து தேவனை நோக்கிப் பேசினான். (சங் – 16:11)

இவ்விதமாக அப்போஸ்தலனாகியப் பவுலும் உண்மையான சந்தோஷத்தின் இரகசியத்தை நன்கு அறிந்திருந்தான். அவனுடைய ஊழியப் பாதையில் அவன் சந்தித்த ஏராளமான துயரமான சூழ்நிலைகள் கிறிஸ்துவின் சந்தோஷத்தை அதிகமாக அனுபவிக்க அவனுக்கு உதவிபுரிந்தது. எந்த சூழ்நிலையிலும் கிறிஸ்துவுக்குள் ஒரு நிலையான, நிறைவான சந்தோஷத்தை பெற முடியும் என்ற நிச்சயத்தைப் பெற்றிருந்ததால்தான், உபத்திரவங்களால் துயருற்ற பிறரையும் கிறிஸ்துவுக்குள் சந்தோஷமாயிருக்கும்படி அழைத்தான்.

கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள், சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன். (பிலி – 4:4)

மேன்மையான இந்த தெய்வீக சந்தோஷத்தை வாழ்க்கையில் அனுபவிக்க, துயரங்கள் காரணமாயிருக்கின்ற பட்சத்தில், அந்தத் துயரங்களை உடைய மனிதனை பாக்கியவான் என்றும் மிகுந்த மகிழ்ச்சிக்குரியவன் என்றும் இயேசு சொன்னது எவ்வளவு பெரிய உண்மையாயிருக்கின்றது?

3

துயரங்கள் தேவ உறவின் தேவையை உணர்ந்து தேட வைக்கின்றது

ஒரு மனிதனுக்கு இந்த உலகத்தில் எல்லாம் அவன் விரும்பியபடி. சுகமான முறையில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. அவனுக்கு தேவையான வசதிகளும், செல்வங்களும் ஏராளமாக உள்ளன. பேரும், புகழும், பிரபலமும் உடைய அவனுக்கு மனித உறவுகளும்ஏராளமாக உள்ளன. இத்தகைய ஒரு சூழ்நிலையில் அந்த மனிதன் தேவன் ஒருவர் இருக்கிறார் என்றும், அவரோடு தனக்கொரு உறவு தேவை என்றும் நினைக்க வாய்ப்பில்லை.

ஆனால் இந்த உலகத்தில் எவ்வளவுதான் செல்வங்கள் இருந்தாலும், எவ்வளவுதான் அன்பு நிறைந்த உறவுகள் இருந்தாலும், மனிதனுக்கு தேவ உறவு என்பது மிகவும் தேவையான ஒன்று ஆகும். அந்த தேவ உறவை என்றைக்கு அவன் தேடுகின்றானோ, அன்றைக்குத்தான் அவன் வாழ்வு அர்த்தமுடையதாகவும், நிறைவுடையதாகவும் மாறத்துவங்குகின்றது.

பெரும்பாலும் வாழ்க்கையில் நாம் சந்திக்கும் துன்பங்களும், துயரங்களும் தான், தேவனோடு நாம் ஒரு நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்ள வழிவகுக்கின்றது. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த காலத்தில் கூட அனேகருடைய வாழ்க்கை தேவனோடு பிணைக்கப்படுவதற்கு காரணமாயிருந்தது. துயர்மிகு சூழ்நிலைகள் தான் என்பதை அறிய முடிகின்றது.

அன்னாளுடைய வாழ்க்கையை கவனித்துப் பார்க்கையில் இந்த உண்மை அதிகமாக விளக்கப்படுகின்றது. அவள் நல்ல ஒரு சூழ்நிலையில்தான் வாழ்ந்தாள். அவளுடைய கணவனின் அன்பும் அவளுக்கு அதிகமாகக் கிடைத்தது. எல்லாம் சுகமாக இருந்த இந்த

துயர்களற்ற நிலையில் தேவ உறவிற்கான தேவையை அதிகமாக உணருவதற்கு அவளுக்கு வாய்ப்பில்லை.

அப்படிப்பட்ட நிலையில் பிள்ளையில்லாத ஒரு நிலையும், அதன் விளைவாக தன் சக்களத்தியின் நிந்தையான பேச்சுக்களும் அவளை அதிகமாகத் துயரப்படுத்தியது. அந்த துக்கத்தையும், துயரத்தையும் அவளுடைய கணவனாலும் ஆற்றமுடியவில்லை. கணவனுடைய உறவு நிறைவாக இருந்த போதிலும் அவளோ வியாகுலத்திற்குள்ளாகவே வாழ நேரிட்டது.

அந்த துயரமும், தாங்கொணா வேதனையும்தான், அவளை தேவனை நோக்கி தீவிரமாக நெருங்க வைத்தது. தேவனோடு ஒரு ஆழமான உறவை ஏற்படுத்திக்கொள்ள அது வழி அமைத்தது. தேவன் அவளுக்கு நெருங்கிய உறவாக மாறியதால்தான். தன் இதயத்தை ஊற்றி அவருடைய பாதத்தில் மன்றாடுகிறவளாக மாறினாள். அதன் விளைவாக ஒரு நாள் அவள் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு பெண்மணியாக இஸ்ரவேலில் விளங்கினாள்.

இங்கே அன்னாளின் வாழ்க்கையில் மாபெரும் ஆசீர்வாதம் வந்து சேர அவளுடைய துயரங்கள்தானே காரணமாக அமைந்தது. அவள் மிகுந்த மகிழ்ச்சியுடன் கர்த்தரை துதிக்கும் மகளாக பின்னாளில் மாறுவதற்கு துயரங்கள்தானே காரணமாக அமைந்தது.

அன்னாள் குழந்தை பாக்கியமின்றி, பிறரால் நிந்தைகள் அடைந்து வியாகுலப்பட்ட காலத்தில், அவளைப் பார்த்தவர்கள் மிகவும் பரிதாபத்திற்குரிய ஒரு பெண்ணாக அவளைப் பார்த்திருப்பார்கள். என்ன பாவம் இவள் செய்தாளோ என்று எண்ணியிருப்பார்கள்.

ஆனால் தேவனுடையப் பார்வையில் அவள் அடைய நேரிட்ட வியாகுலமும், துயரமும் மிகுந்த பாக்கியமான அல்லது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகத் தோன்றியது. அன்னாளின் துன்பநிலையைக் கண்ட தேவன்

"துயரப்படுகின்ற அன்னளாகிய இவள் எவ்வளவு பாக்கியமானவள். என்னுடைய ஆறுதலை அனுபவிக்கப் போகிறாளே. அன்னாளுக்கு வந்த துயரநிலை உண்மையில் எவ்வளவு மகிழ்ச்சிக்குரியது ! அவள் என்னுடன் ஒரு மேன்மையான உறவை ஏற்படுத்த அது காரணமாகப் போகின்றதே" என்று தமக்குள்ளே சொல்லியிருப்பார்.

நாம் அனுபவிக்க நேரிடும் துன்பங்கள், கஷ்டங்கள், பிரச்சனைகள், போன்றவை தேவனோடு ஒரு நெருக்கத்தை ஏற்படுத்துமென்றால், உண்மையிலேயே அந்த துன்பங்களை அனுமதித்த தேவனுக்கு நாம் அதிகமாக நன்றி செலுத்த கடமைப் பட்டுள்ளோம்.

யாரையும் துயரப்படுத்த வேண்டுமென்பது தேவனுடைய விருப்பமாயிருக்க முடியாது. ஆனால் பல நிலைகளில் துயரங்களின் வழியாகத்தான் தேவன் மனிதனை தம் பக்கமாக வர வைக்க முடிகின்றது. துயரங்களின் விசைகள்தான் மனிதனை பெரும்பாலும் தேவனை நோக்கி ஓடுவதற்கு அவனை வேகமாகத் தூண்டுகிறது. எனவே தேவன் துயரமான சூழ்நிலைகளை மனிதனுடைய வாழ்க்கையில் அனுமதிக்கின்றார் என்பது உண்மை.

மேலோட்டமாக பார்க்கையில் துன்பங்கள் வெறுப்பதற்கும் விசனத்திற்குமுரியவை. ஆனால் அவைகளின் வழியாக தேவ உறவை அனுபவிக்கும் வாய்ப்புகள் மனிதனுக்கு நேரிடுமாயின் உண்மையிலேயே அவைகள் மிகவும் பாக்கியமானவைகள் என்பதில் சந்தேகமில்லை. ஒருநாள் அந்த மனிதன் தன் வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்க்கையில், அவன் கண்ட துயரங்கள்தான் அவனுடைய மிகுந்த மகிழ்ச்சிக்கு காரணமாயிருந்ததைக் கண்டு மிகுந்த பரவசமடைந்து கர்த்தரை துதிப்பான்.

ஆம். துயரப்படுகின்றவர்கள் பாக்கியவான்கள். ஏனென்றால் துயரங்கள் அவர்களுடைய வாழ்க்கையில் தேவ உறவு என்னும் விலை மதிக்க முடியாத செல்வத்தை அவர்களுக்கு கொண்டு வருகின்றது.

4

துயரங்கள் தேவனுடைய திட்டங்கள் வாழ்க்கையில் நிறைவேற வழிவகுக்கின்றன

தேவனால் வல்லமையாக உபயோகப்படுத்தப்பட்ட வேதாகம காலத்து தேவனுடைய மனிதர்களைப் பார்க்கும் போது, அவர்கள் சந்திக்க நேர்ந்த துயரமான சூழ்நிலைகள்தான் தேவனுடைய திட்டங்கள் அவர்கள் மூலம் நிறைவேற வழி வகுத்திருப்பதை அறியலாம்.

யோசேப்பு தகப்பனாகிய யாக்கோபினால் அதிகமாக நேசிக்கப்பட்டான். சகோதரர்கள் நடுவிலே அவன் விசேஷமான அந்தஸ்திலே காணப்பட்டான். அவனுடைய இளவயதின் நாட்கள் சுகமாக ஓடிக்கொண்டிருந்த காலத்தில்தான், எதிர்பாராத விதமான கஷ்டங்களும், சோகங்களும் அவனை சூழ்ந்து கொண்டன.

சகோதரர்கள் அவன் மேல் கொண்ட அளவு கடந்த பொறாமையின் விளைவாக, அவன் அவர்களால் உபத்திரவப்படுத்தப்பட்டு, அன்னியர்கள் கையில் விற்கப்பட்டான். அங்கே அவன் அடைந்த வியாகுலங்கள் கொஞ்சமல்ல. அவனுடைய நிலமை "ஐயோ பாவம்" என்று பரிதவிக்கத் தக்க நிலையில் இருந்தது. ஆனாலும் அந்த துயரத்தின் வேளை மிகுந்த ஒரு ஆசீர்வாதத்திற்கு நேராக அவனை வழி நடத்தியது என்பதுதான் உண்மை.

ஏனென்றால் அவன் கண்ட துக்கத்தின் நாட்கள், தேவனுடைய அனாதி தீர்மானம் அவன் மூலம் நிறைவேறுவதற்கேதுவாகவே அமைந்தது. அவ்விதமான ஒரு உபத்திரவத்தின் கால கட்டத்தை அவன் வாழ்க்கையில் அனுமதிக்க வேண்டியது தேவனுக்கு அவசியமாயிருந்தது. ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கேதுவாக, முதலில் யோசேப்பு எகிப்து செல்ல வேண்டியதும் அங்கே அவன் உயர்ந்த நிலையில் வரவேண்டியதும் அவசியமாகயிருந்தது.

ஆனால் சாதாரண சூழ்நிலையில் இது சாத்தியமில்லை. அவன் எகிப்து போக வேண்டிய அவசியம் அவனுக்கு ஏற்பட்டிருக்காது. எனவே துயரமான சூழ்நிலைகளை தேவன் அவன் வாழ்க்கையில் கடந்து வரச் செய்தார். அவனுடைய விருப்பத்திற்கெதிராக அவன் எகிப்திற்கு செல்ல வேண்டிய நிலையை அனுமதித்தார். ஆனாலும் தேவனுடைய விருப்பத்தின் அடிப்படையிலேயே அது நிறைவேறியது. அவ்விதம் அவன் செல்ல நேரிட்டதின் விளைவாக, பிற்காலத்தில் இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் பலுகிப் பெருகி, தேவனுடைய திட்டம் வெற்றிகரமாக நிறைவேற வழி ஏற்பட்டது.

இங்கே துயரங்கள் தான் தேவனுடைய திட்டம் யோசேப்பு வழியாக நிறைவேற வழிவகுத்தது என்பதை தெளிவாகக் காண்கின்றோம். தாவீதின் வாழ்க்கையிலும் இதுவே உண்மை. கோலியாத்தை வென்று எல்லார் பார்வையிலும் மாபெரும் சாதனையாளனாக நின்ற தாவீதை துன்பப்புயல்கள் தாக்க ஆரம்பித்தது. அதன் விளைவாக அனாதை போன்று காடுகளில் பதுங்கி, வாழ வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டது. அனேகமான கஷ்டங்களும், ஆதரவற்ற நிலைகளும், தொடர்ந்து வந்த பாடுகளும் அவனை பரிதாபமான நிலமைக்கு தள்ளியது.

அன்று அவனுடைய துயர நிலைகள் சிலருடைய பார்வையில் பரிதாபத்திற்குரியதாகவும், சிலருடைய பார்வையில் பரிகாசத்திற்குரிய தாகவும் இருந்தது. கர்த்தர் மேல் மிகுந்த நம்பிக்கையாயிருந்த இவனுக்கு ஏன் இந்த நிலமை ஏற்பட்டது என்று சிலர் வேடிக்கை பேசினார்கள். (சங். 22:8) உன் தேவன் எங்கே? என்று சிலர் வசைமொழி கூறினார்கள். (சங் – 42:10) தாவீதும் தனக்குள் எனக்கு ஏன் இந்த பாடுகள் வந்தது? என்று எண்ணி மனம் நொந்து போயிருப்பான்.

ஆனால் தேவனுடையப் பார்வையில் அவ்விதமான ஒரு துயரமான் நிலை அவனுக்கு அவசியமானதே என்பதை அறிந்திருந்தார். அந்த துயர சூழ்நிலைகளுக்கு பின்னணியில் தேவ நோக்கங்கள் அவன் வழியாக நிறைவேறப் போவதை தேவன் கண்டார். அவ்விதமான சோகமான சம்பவங்கள் நிகழாத நிலையில் தாவீது தம்முடைய திட்டத்திற்குள் உரியமுறையில் வந்து சேர வாய்ப்பில்லை என்பதையும் தேவன் நன்கு அறிந்திருந்தார்.

ராஜாவாகிய சவுல் மூலம் தாவீதின் வாழ்க்கை துன்ப சூழ்நிலைகளை காணாமல் போயிருந்தால், அவன் சவுலின் அரண்மனையில் முக்கிய ஒரு நபராக இருந்திருப்பான். பலர் பார்வையில் இராஜ அரண்மனையில் முக்கிய பதவியில் அமர்த்தப்பட்டிருப்பான். ஆனால் தேவனுடைய திட்டம் அதுவல்ல. சவுலின் அரண்மனையில் முக்கிய ஆளாக மாறுவது அல்ல. சவுலுக்குப் பதிலாக ராஜாவின் அரியாசனத்தில் தாவீதை அமரவைப்பதே தேவனுடைய திட்டம்.

அந்த திட்டம் நிறைவேறவேண்டுமானால் தாவீது சவுலின் அரண்மனையை விட்டு வெளியேற வேண்டிய ஒரு சூழ்நிலை அவசியமாக இருந்தது. ராஜாவாக அவன் அமர்த்தப்பட்டு, தேவனுக்கு பிரியமாக ஆட்சி செய்வதற்கு ஏதுவாக, முதலில் பல பாடுகளின் வழியாக அவனை பக்குவப்படுத்த வேண்டியதும் தேவனுடையப் பார்வையில் தேவையாக இருந்தது. ஆக, தாவீது சந்தித்த துயரங்கள் மிகுந்த பாக்கியமான ஒரு நிலைக்கு நேராக அவன் சென்று, தேவதிட்டம் நிறைவேறவே வழிவகுத்தது.

இன்றும் இந்த உண்மை மாறாத ஒன்றாகவே விளங்கி வருகின்றது. பலவித கஷ்டமான நிலைகளும், துயரமான கால கட்டங்களும்தான் தேவனுடைய திட்டத்திற்கு நேராக மனிதனை கொண்டு செல்லும் உந்து விசைகளாக அமைகின்றன. இல்லையென்றால் மனிதன் தன்னுடைய சொந்த திட்டங்களையும், நோக்கங்களையும் மட்டுமே மையமாகக் கொண்டு செயல்பட்டு தேவ திட்டங்களைக் குறித்த சிந்தனையற்றவனாக போய் விடுவான்.

தற்காலத்தில் நாம் காண நேரிடும் பலவித துயரமான காரியங்கள், நம்மை வருத்தி வதைக்க வந்த வேதனை முட்கள் என்று நாம் மனங்கசந்து போகலாம். அனாலும் தேவனுடன் நம்முடைய தொடர்புகள் உறுதியாகக் காணப்படுமாயின், இந்த மனக்கசப்புகள் யாவும், மிகுந்த மனமகிழ்ச்சிக்கேதுவாக மாற முடியும் என்பதே உண்மை.

ஆம். துயரங்கள் தேவனுடைய திட்டங்கள் நம்முடைய வாழ்க்கையில் நிறைவேறுவதற்கு காரணமாக அமைகின்ற நிலையில் அந்தத் துயரங்கள் உண்மையில் பாக்கியமானவை என்பதும், மிகுந்த மகிழ்ச்சிக்குரியவை என்பதும் எவ்வளவு பெரிய உண்மை !

5

துயரங்கள் வாழ்க்கையையும் சுபாவங்களையும், ஒழுங்குபடுத்துகிறது

வாழ்க்கையில் மனிதன் பாடுகள் வழியாகவும், பலவித கஷ்டங்கள் வழியாகவும் கடந்து செல்ல நேரிடும் போதுதான், தன்னுடைய வாழ்க்கையில் பல ஒழுங்குகளை கற்றுக் கொள்கின்றான். அவன் பிரச்சனைகளற்ற, தொந்தரவற்ற, சுகமான நிலையில் வாழும் போது ஒழுங்கு நிலைகளைக் குறித்த கவலையற்ற மனிதனாகப் போய் விடுகின்றான். தன் மனதின் உணர்வுகளுக்கேற்றபடியும், மாம்சீக இச்சைகளுக்கேற்றபடியாகவும் வாழ்ந்து உயர்ந்த நெறிகளையும், இயல்புகளையும் உதாசீனம் செய்து விடுகின்றான். ஆம். துயரங்களற்ற சுகமான வாழ்க்கை மனிதனை ஒழுங்கற்ற மனிதனாக மாற்றி விடுகின்றது.

பெரும்பாலும் மனிதன் துயரங்களற்ற, சுமுகமான, சூழ்நிலைகளில் வாழ நேரிடும் போது, அவனுடை இதயத்தின் நினைவுகளும், அவனுடைய சுபாவ நிலைகளும், வரம்புகளுக்கு உட்படாமல், மாறுபாடுடையதாகவும், முரண்பட்டதாகவும் மாறிவிடுகின்றது. அவன் நல்ல குண இயல்புகளை உடையவனாக வாழ வேண்டிய அவசியத்தை உணராமல், தன் மனதிற்கேற்றபடி வாழ்வதிலேயே விருப்பம் கொண்டு செயல்படுகின்றான். அவன் செழிப்பான, கஷ்டமில்லா, நிலமையில் தன்னைக் காண்பதால் தேவனுக்கு பயந்து, தன்னுடைய குணங்களையும், செயல்களையும் செவ்வையானவையாக வைக்க வேண்டியதின் தேவையை உணராமல் போகின்றான்.

சுகமான நிலமைகள், அவனை அகம்பாவம் நிறைந்தவனாகவும், தற்பெருமை உடையவனாகவும், யாருக்கும் தாழ்ந்து போகாத இயல்புடையவனாகவும் மேட்டிமையான சிந்தனைகளை யுடையவனாகவும் மாற்றி விடுகிறது. அத்தகைய மனிதனிடன் அன்பு, தாழ்மை, பணிவு, பொறுமை, சாந்தம், இச்சை அடக்கம், தயவு போன்ற மேலான சுபாவங்கள் காணப்படுவதில்லை.

அவனுடைய வாழ்க்கை முறைகளும், செயல்களும் கூட ஒரு நல்ல கட்டுகோப்பான, ஒழுங்கு நிறைந்த நிலையில் இருப்பதில்லை. அவன் மனம் போனபடி வாழ்வதில் பிரியப்படுகிறான். எது சரி, எது தவறு என்பதை சிந்திக்க வேண்டியதின் தேவையை உணராமல், தன் மாம்சீக உணர்வுகளுக்கு இசைந்து போய், தன் செயல்களால் செவ்வையற்ற மனிதனாக மாறிப் போய் விடுகிறான். தான் நினைத்தவைகள் நிறைவேறி விடுவதால், தனக்குத்தானே தேவன் என்ற நிலையில் செயல்படும் மனிதனாகிவிடுகின்றான்.

இப்படிப்பட்ட ஒழுங்கு நிலை தவறிய மனிதனுடைய சுபாவ நிலைகளை செவ்வையாக்கி, அவனுடைய வாழ்க்கையை ஒழுங்குபடுத்துகின்ற கருவிகளாக துயரங்கள் விளங்குவதுண்டு. ஏனென்றால் துன்ப நிலைகளை சந்திக்கும் போதுதான், தன்னுடைய உண்மை நிலையை மனிதன் உணர ஆரம்பிக்கின்றான். உபத்திரவங்களைக் காண நேரிடும் போதுதான் தன்னுடைய பலவீன நிலைகளை புரிந்து கொள்கின்றான். பெருமையும், மேட்டிமையும், "நான் பெரியவன்" என்ற ஆகாத உணர்வுகளும் பேரளவில் துன்பங்களால் கரைந்து போய் விடுகிறது. அப்பொழுதுதான் வாழ்க்கையில் சில குறிப்பிட்ட நியதிகளின் படி வாழ்வதற்கான மனப்பக்குவத்தைப் பெறுகிறான்.

தேவன் தம்முடைய மக்களின் சுபாவ நிலைகளை சரி செய்யவும், அவர்களை ஒழுங்கு மிகுந்த மக்களாக மாற்றவும், துயரமான சூழ்நிலைகள் வழியாக அவர்களை நடத்துகின்றார் என்பது உண்மை. பலவித பாடுகளின் பாதையில் தம்முடைய மக்களை நடக்க வைத்து, தமக்கேற்ற ஒழுங்கு மிக்கவர்களாக அவர்களை மாற்றுவதை வேதத்தில் பல இடங்களில் பார்க்கிறோம். இஸ்ரவேல் மக்களை பலவித துன்பமான பாதைகள் வழியாக நடத்தியது. அவர்கள் தேவ ஒழுங்குக்கு இசைந்து போகிற மக்களாக மாற வேண்டும் என்பதற்காகத்தான்.

சாலொமோன் ராஜா மிகுந்த ஞானமுடையவன். அறிவு வளம் அதிகமாக உடையவன். ஆனாலும் அவனுடைய வாழ்க்கையின் வழிகளும், அவன் வாழ்ந்த விதங்களும், தேவனுடைய ஒழுங்குகளுக்கு உட்படாமல், தாறுமாறானதாக அமைந்தது. அவன் தேவனுடைய வேதம் கூறிய ஆலோசனைகளுக்குட்பட்டு தன் செயல் முறைகளை ஒழுங்கு படுத்தவில்லை. அதற்கு முக்கிய காரணம் துன்ப சூழ்நிலைகளைக் காணாத, சுகமான ஒரு வாழ்க்கைதான் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் உபத்திரவங்களினால் அலசடிப்பட்ட யோசேப்பு, மோசே, தாவீது போன்றோரின் வாழ்க்கையை கவனிக்கும் போது, அவர்களின் வாழ்க்கை ஒழுங்குகளை மையப்படுத்தி அமைந்திருந்ததைக் காண முடியும். ஆம். துயர் மிகுந்த பகுதிகள் மனிதன் தன்னுடைய வாழ்க்கையை சரி செய்ய வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்துகின்றன. துன்பத்தின் பகுதிகள் மனிதன் தன்னுடைய சுபாவ நிலைகளை செவ்வையாக்கிக் கொள்ள வேண்டிய கட்டாயத்தை அவனுக்கு கொடுக்கின்றது. உபத்திரவத்தின் வேளைகள் மனிதனை பற்றிக் கொள்ளும் போது தேவனுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தி, அவருக்கு பிரியமாக வாழ வேண்டியதின் தேவையை அவனுக்கு உருவாக்குகின்றன.

எனவேதான் 119–ம் சங்கீதத்தை எழுதிய தேவனுடைய மனிதன் கீழ்க்கண்டவாறு கூறுகின்றான்.

நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன். இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன்.

நான் உபத்திரவப்பட்டது நல்லது. அதனால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்ளுகிறேன். (சங் – 119 : 67,71)

மேற்கண்ட சங்கீதத்தில் வழி தப்பி நடந்த ஒரு மனிதனை, உபத்திரவங்கள் தேவனுடைய வார்த்தையைக் காத்துக் கொள்ளவும் கற்றுக் கொள்ளவும் தூண்டியதைக் காண்கிறோம்.

உபத்திரவங்கள் அல்லது துயரங்கள் ஒரு மனிதனை வேதத்தைக் கற்றுக் கொள்கிறவனாகவும் காத்துக் கொள்கிறவனாகவும் மாற்றி அவனுடைய வாழ்க்கையை ஒழுங்கு படுத்துமென்றால் அவ்விதம் துயரப்பட்ட மனிதன் உண்மையில் பாக்கியவான் என்பதும், மிகுந்து மகிழ்ச்சிக்குரியவன் என்பதும் உண்மைதானே.

ஆம். துயரப்படுகின்றவர்கள் பாக்கியவான்கள். ஏனென்றால் துயரங்கள் அவர்களை தாறுமாறான வாழ்க்கையிலிருந்து விலக்கி, தேவன் விரும்புகின்ற ஒழுங்கு மிகுந்த மேன்மையான வாழ்க்கையை அமைக்க அவர்களுக்கு உதவுகிறது.

6

துயரங்களை தேவனுடைய ஆறுதலை அனுபவிக்க உதவுகின்றது.

துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் என்று சொன்ன இயேசு. அவர்கள் ஆறுதல் அடைவார்கள் என்ற வாக்குத்தத்தத்தையும் சொன்னார். (மத் – 5:4) இங்கே ஆறுதல் அளிக்கின்றவர் தேவனே என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். தேவன் துயரப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளிக்கின்றவர் என்பதை வேதத்தில் பல இடங்களில் காண்கின்றோம். (ஏசாயா – 61:2,3)

துயரப்பட்டவர்களை அவர் ஆறுதல் செய்ய வேண்டுமானால், துயரப்பட்டவர்களுக்கு தேவனோடு ஒரு சம்பந்தம் இருக்க வேண்டியது அவசியமாகின்றது. துயரப்படுகின்றவர்கள் பாக்கியவான்களாக விளங்க முடியும். எப்போது? தங்கள் துயரங்களுக்கு நடுவில் தேவனோடு ஒரு நல்ல உறவை வைத்து கொள்ளுகின்ற போது. தேவனோடு தொடர்புடையவர்களாக துயரப்படுகின்ற வேளையில் அவர்களை தேவன் ஆறுதல் செய்கின்றார்.

இங்கே துயரப்படுகின்றவர்கள் மிகுந்த மகிழ்ச்சியானவர்கள் அல்லது பாக்கியவான்கள் என்று இயேசுவால் அழைக்கப்படுவதற்கு முக்கிய காரணம், அவர்கள் தேவனுடைய ஆறுதலை அடைகின்றார்கள் என்பதுதான். தேவனுடைய உறவினை உடையவர்கள் என்ற நிலையில், துயரங்களை சந்திக்க நேரிடுகின்ற மக்கள் மிகுந்த மகிழ்ச்சிக்கு தகுதியானவர்கள். ஏனென்றால் அந்தத் துயரங்கள் தேவனால் அவர்கள் ஆறுதலடைகின்ற பாக்கிய நிலைக்கு அவர்களை அழைத்துச் செல்கின்றது.

தேவனால் ஆறுதல் அடைதல் அல்லது தேவனால் தேற்றப்படுதல் என்பது மிகவும் பரவசமான ஒரு தெய்வீகமான அனுபவமாகும். இதனை அனுபவத்தில்தான் ருசிக்க முடியுமே ஒழிய, அதன் உண்மையான

உணர்வை வார்த்தைகளால் விளக்க முடியாது. தேவனால் துன்பங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட மனிதனைவிட, துன்பங்களின் நடுவில் தேவனால் ஆறுதல்படுத்தப்படும் மனிதன் தேவனோடு மிக ஆழமான அன்பையும், பிணைப்பையும் உடைய மனிதனாக இருப்பான். அத்தகைய மன்தன் தேவனைக் குறித்த ஆழ்ந்த நிச்சயத்தை உடையவனாகவும் தேவன் மேல் மிகுந்த விசுவாசம் உடையவனாகவும் விளங்குவான்.

தாவீதின் வாழ்க்கைப் பாதையில் மிகுந்த துயரமான காரியங்களை அவன் சந்தித்தான். தேவனோடு அவனுக்கு ஆழ்ந்த உறவும், ஐக்கியமும் இருந்த போதிலும், துன்பங்களை தேவன் ஒரேயடியாக நீக்கிவிடவில்லை. ஆனால் அந்த துன்பமான பாதையில், அவன் துவண்டு போய் செயலற்று போகாதபடி அவனோடிருந்து ஆறுதல் செய்கிற தேவனாக அவர் இருந்தார். அவரிடமிருந்து அவன் அடைந்த ஆறுதலும், தேறுதலும் அவனை ஆவியில் அதிகமாக உற்சாகப்படுத்தியது. தொய்ந்து போகும் வேளையில் அவரிடமிருந்து பெற்ற ஆறுதல் அவனை எழுந்து நிமிர்ந்து நிற்க செய்தது. அந்த பரவசமான அனுபவத்தின் பிரதிபலிப்புகளை அவனுடைய சங்கீதங்களில் அதிகமாகக் காண முடியும்.

இதே வித அனுபவத்தை பவுல் அப்போஸ்தலனுடைய ஊழியப் பாதையிலும் அதிகமாகக் காண்கின்றோம். துயரங்கள் உடனேயே நீங்காத நிலையிலும் கூட, தேவனுடைய ஆறுதல் அவனுக்கு அபரிதமாக இருந்தது. அவ்விதம் ஆறுதலை அனுபவித்து நிச்சயித்திருந்த காரணத்தினால்தான், அந்த ஆறுதலைக் குறித்து பிறருக்கும் மிகுந்த நம்பிக்கையுடன் கூற முடிந்தது.

தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற
ஆறுதலினாலே எந்த உபத்திரவத்திலாகிலும்
அகப்படுகிறவர்களுக்கு, நாங்கள் ஆறுதல்
செய்ய திராணியுள்ளவர்களாகும் படி
எங்களுக்கு, வரும் சகல உபத்திரவங்களிலேயும்,
அவரே எங்களுக்கு
ஆறுதல் செய்கிறவர்

எப்படியெனில் கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறது போல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது. (11 கொரி – 1:4,5)

தேவனுடைய ஆறுதல் எந்தவிதத் துயரமான நிலையில் இருக்கும் மனிதனையும், பலப்படுத்தி நிலை நிறுத்துகின்ற சக்தி வாய்ந்தது. தேவனுடைய ஆறுதல் ஒரு மனிதனுடைய உள்ளத்தில் பாயும் போது, அவன் மிகுந்த ஊக்க உணர்வையும் உற்சாக உணர்வையும் பெற்று, ஆவியில் மிகுந்த களிப்புடையவனாக மாறுவான். அவ்விதமான ஆறுதலை ருசிக்கும் அனுபவம், அந்த மனிதனின் எல்லா சோர்வுகளையும் கணப்பொழுதில் போக்கி, வீரனைப் போல திடன் கொண்டு நிற்க செய்யும். ஆயிரம் கஷ்டங்கள் அவனை நெருக்கிக் கொண்டிருந்தாலும், தேவனுடைய ஆறுதல் அளித்த ஆற்றலினாலே இதய நிலையில் மிகுந்த இளைப்பாறுதலை அனுபவித்து, ஆண்டவரைத் துதிப்பான்.

இவ்விதமான ஆறுதலின் அனுபவங்கள்தான் ஒரு மனிதனை ஆண்டவரின் அன்பில் அதிகமாக ஊன்றக் கட்டும். இவ்வித அனுபவங்களின் பாதையில்தான் ஒரு மனிதனுடைய ஆவிக்குரிய வாழ்க்கை மிகுந்த பரவசமும், நம்பிக்கை உணர்வும் மிகுந்ததாக மாறும். இவ்வித மேலான அனுபவங்களுக்கு துயரங்கள் காரணமாயிருக்கு மாயின், ஒரு வகையில் அந்தத் துயரங்கள் உண்மையில் பாக்கியமானவை என்பது உண்மைதானே.

ஆனால் துயரமான சூழ்நிலைகளால் மட்டும் இந்த ஆறுதல் நமக்கு கிடைத்து விடாது. துயரமான, துக்கமான நிலமைகளின் மத்தியில் தேவன் நம்மை ஆறுதல்படுத்துவதற்கான வாய்ப்பை நாம் தான் அவருக்கு கொடுக்க வேண்டும். தேவனுடைய ஆறுதலைத் தேடி அவருடைய சமுகத்தில் நம்முடைய இதயத்தை ஊற்றுவதற்கு நாம் முன் வர வேண்டும். எந்த துன்பமான நிலையிலும், எந்த துக்க நிலையிலும் தேவன் நம்முடைய இதயங்களில் ஆச்சர்யமான ஆறுதலைத் தர முடியும் என்று விசுவாசித்து ஜெபத்தில் நம்மை அவசியம் ஈடுபடுத்த வேண்டும்.

அதுபோலவே துயர்மிகு வேளைகளிலும் தேவன் அருளிய வேத வார்த்தைகளை ஆவலுடன் தியானிக்க வேண்டும். ஏனென்றால் வேத வார்த்தைகள் வழியாக நமக்கு ஆறுதலையும், மிகுந்த சமாதானத்தையும் தேவன் தருகின்றார்.

நீர் என்னை நம்பப் பண்ணின வசனத்தை
உமது அடியேனுக்காக
நினைத்தருளும். அதுவே என் சிறுமையில்
எனக்கு ஆறுதல். உம்முடைய வாக்கு
என்னை உயிர்ப்பித்தது. (சங் – 119:49,50)

தேவனுடைய வேதத்தை தியானிப்பதின் வழியாகவும், அவருடைய சமுகத்தில் அவருடைய ஐக்கியத்தை உணரும் படியாக ஜெபிப்பதினாலும், எந்த சூழ்நிலையிலும் அவருடைய தெய்வீக ஆறுதலை நாம் பெற முடியும்.

இந்த பகுதியை நான் எழுதிக் கொண்டிருக்கும் போது, என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கைப் பாதையில் தேவனுடைய ஆறுதலை, அனுபவப்பூர்வமாக உணர்ந்த அனேகம் நேரங்கள் என் நினைவிற்கு வந்து கொண்டிருக்கின்றது. பல கால கட்டங்களில் தாங்கும் சக்தியை கடந்த பல துன்பங்கள் என் உள்ளத்தை உடைத்து சுக்கு நூறாக்கியிருக்கிறது. அன்பற்ற மனிதர்களின் அந்த செயல்களின் விளைவாக பல முறை இதயத்தில் கடும் வேதனைகளை அனுபவித்திருக்கிறேன்.

இவ்வளவு நெருக்கங்களும், நம்பிக்கையற்ற வேதனையான சூழ்நிலைகளும் சூழ்ந்திருக்கையில் எப்படி இதய அமைதியுடன் இயங்க முடியும்? இவ்விதமான துன்ப நெருப்புகளுக்கு நடுவில் எப்படி நிலை குலையாமல் நிற்க முடியும்? என்று எனக்கு நானே கேள்விகளை கேட்டதுண்டு. ஆனாலும் பற்றிக் கொள்வதற்கும், சார்ந்து கொள்வதற்கும் தேவனைத் தவிர எனக்கு யாருமில்லாத அந்த நேரங்களில் தேவனுடைய பாதத்தில்தான் போய் விழுந்து கிடப்பேன். அங்கே இதயத்தில் உள்ள எல்லா வேதனையுணர்வுகளையும், அவருடைய சமுகத்தில் ஊற்றி விடத்தக்கதாக பரிசுத்த ஆவி என்னைத் தூண்டி வழிநடத்துவதை நன்கு உணர்ந்திருக்கிறேன்.

அதுபோன்ற வேளைகளில் விவரித்து கூற இயலாத ஒரு எல்லையற்ற தேவ சமாதானம் வெள்ளம் போல இதயத்தில் பாயும். ஆறாத புண்ணைப் போல நொந்து கொண்டிருக்கும் இதயத்தில் அந்த சமாதானம் பாயும் போது, இனம்புரியாத ஒரு மேலான சுகத்தை உள்ளார்ந்த நிலையில் உணர முடியும். தேவனுடைய அன்பு வெள்ளம் உள்ளத்தில் கரை புரண்டோடுவதை அப்போது மிக நிச்சயமாக உணரமுடியும்.

அந்த நிலையை உணரும் போது, அக்கினியின் நடுவிலும் எந்த பாதிப்பும் இல்லாமல், தேவனோடு விடுதலையாக உலாவிய சாத்ராக், மேஷாக் ஆபேத்நேகோ ஆகியோரின் நினைவு தான் வரும். ஏனென்றால் சுற்றிலும் துன்ப அக்கினி ஜீவாலித்து எரியும் போது, உள்ளத்திலோ ஒரு பாதிப்பும் இல்லாதது போன்ற ஒரு வித்தியாசமான தெய்வீக சுகமும், சமாதான களிப்பும், அதிகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கும்.

அங்கே துன்பநிலைகளைக் கண்டு துக்கப்படுவதற்கு பதிலாக, உள்ளார்ந்த நிலையில் உற்சாகம் அடைந்து அன்பின் நிறைவுடன் தேவனை துதிக்கும் உந்து விசை உருவாகும். கவலைகளை மறந்து கர்த்தரை மகிழ்ந்து பாடிப்பரவசமடையும்படியான தூண்டுதல்கள் உருவாகும். அப்போது உள்ளத்தின் வெறுமை கர்த்தரின் சந்தோஷத்தால் நிரப்பி வழிவதையும், சூழ்நிலைகளைக் கடந்த மாபெரும் நம்பிக்கையின் நிறைவு இதயமெங்கும் பரவுவதையும் மிக நிச்சயமாக உணர முடியும். அதுதான் தேவன் அருளும் ஆறுதல்.

இந்த ஆறுதலின் அனுபவம் ஒரு சிலருக்கு மட்டுமல்ல. தேவனை தஞ்சமாகக் கொண்டு, எந்த துக்கத்தின் நடுவிலும் அவருடைய தேற்றுதலை தேடுகின்ற ஒவ்வொருவருக்கும் சொந்தமானது. ஏனென்றால் துயரங்களை தம்முடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் அனுமதிக்கும் தேவன் அந்தத் துயரத்தின் பாதையில் அவர்கள் நிலை குலைந்து போகாவண்ணம் ஆற்றி, தேற்றி, பலப்படுத்தி நிறுத்துவதில் உண்மையுள்ளவராயிருக்கிறார்.

இந்த உலகத்தில் ஆறுதலடையவும், ஆறுதல்படுத்தவும் கூடாத பல துன்ப நிலைகள் உண்டு. ஆனாலும் தேவனோடு தொடர்புடைய மக்களுக்கு ஆறுதல்பட இயலாத துயரங்கள் என்று எதுவும் கிடையாது. எவ்வளவு கொடிய மனவேதனைக்குரிய துயரநிலைகளாக இருந்தாலும், தேவன் அவர்களை எப்படியும் ஆறுதல் படுத்த முடியும் என்பதே உண்மையாகும். எனவே எத்தகைய சோகம் நிறைந்த நிலைகளாயிருந்தாலும், தேவ சமுகத்தைத் தேட நாம் தவறக்கூடாது. ஏனென்றால் அங்கே அந்த காயங்களை ஆற்றுகின்ற அருமருந்து நமக்காக வைக்கப்பட்டுள்ளது.

* * * * *

சாந்த குணமுள்ளவர்கள் மகிழ்ச்சியானவர்கள்

4

> சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். (மத்தேயு – 5:5)

இந்த உலகத்தில் மிகுந்த மகிழ்ச்சியானவர்கள் யார் என்பதை குறிப்பிட்டு பேசும் போது, மூன்றாவது வரிசையில் *சாந்த குணமுள்ளவர்கள் மிகுந்த மகிழ்ச்சியானவர்கள்* என்று இயேசு சொன்னார். சாந்த குணமுள்ளவர்கள் இந்த பூமியைச் சுதந்தரிப்பார்கள் என்றும் கூறினார்.

சாந்தகுணம் என்றால் என்ன? கோபமடையாத, அமைதியான, பணிவுமிகுந்த, பொறுத்து போகின்ற தாழ்மையான ஒரு நல்ல சுபாவத்தைதான் நாம் சாந்த குணம் என்போம். அதே வேளையில் சாந்த குணம் என்ற வார்த்தைக்கு இயேசு எவ்விதமான அர்த்தத்தைக் கொண்டிருப்பார் என்பதை அறிவதும் நன்றாகயிருக்கும்.

சாந்த குணத்திற்கான கிரேக்க பதம் ப்ராவஸ் Praus என்பதாகும். இந்த வார்த்தை இயேசுவின் நாட்களில் பல அர்த்தங்களைக் குறிக்க உபயோகிக்கப்பட்டுள்ளது. அரிஸ்டாட்டில் என்ற கிரேக்க அறிஞர் அதற்கான அர்த்தத்தை விளக்கும் போது மிதமிஞ்சி சொல்கின்ற இரண்டு உச்ச நிலைகளுக்கு இடைப்பட்ட ஒரு மிதமான நிலையை குறிப்பிடுகின்றார். அதாவது கோபத்தின் உச்சத்திற்கு போகின்ற ஒரு நிலை. இன்னொன்று கோப உணர்வே முற்றும் இல்லாத நிலை. இந்த இரண்டு நிலைகளும் இல்லாத மத்தியமான ஒரு மிதமான நிலையே சாந்த குணம். கோபத்தின் உச்சத்திற்கும் போகக்கூடாது. முற்றிலும்

கோபமே இல்லாமலும் போகக்கூடாது. தேவையான சரியான இடத்தில் கோப்படவும் வேண்டும். தேவையில்லா இடத்தில் கோபத்தை அடக்கவும் வேண்டும். இது அரிஸ்டாட்டில் அளிக்கும் விளக்கம்

கோப உணர்வை முற்றிலும் இழந்து விட்ட ஒரு நிலைதான் சாந்த குணம் என்று சொல்ல முடியாது. மனிதனிடம் இயற்கையாகக் காணப்படும் ஒரு குணம் கோபம். இந்த கோபம் அவனை வசப்படுத்தி அடிமையாக்கும் போது அவனுக்கு அது பல தீமைகளைக் கொண்டு வருகின்றது. எனவே கோபத்தின் மேல் மனிதனுக்கு ஆளுகை தேவை.

அதே வேளையில் கோப உணர்வே மனிதனுக்கு இருக்கக் கூடாது என்றும் சொல்ல முடியாது. சரியற்ற, செவ்வையற்ற, தவறான, தீமையான காரியங்களின் மேல் மனிதனுக்கு ஒரு கோப உணர்வு இல்லாமல் போனால் அவன் நல்லதை விரும்பி, தீயதை வெறுக்கும் சுபாவத்தையும் இழந்து போவான்.

பிள்ளைகள் சில வேளை தவறு செய்கின்றன. அப்போது பெற்றோர் கோபமடைகின்றனர். அந்த கோபத்தை தவறு என்று கூறிவிட முடியாது. அந்த தவறின் மேல் அவர்களுக்கு கோப உணர்வு வராமல் போனால், தவறைக் கண்டிக்கவோ, மேலும் அதைச் செய்யாமல் அவர்களை திருத்தவோ அவர்கள் முன்வர முடியாது.

அதே வேளையில் பலர் கோப நிலையில் வெடிமருந்து போலிருப்பார்கள். அதாவது தங்கள் சுயத்தில் கோபப்பிழம்புகளாக இருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் பிறரின் சிறு தவறைக் கண்ட மாத்திரத்தில் ஆவேசமாக பொங்கி எழுவார்கள். பல பெற்றோர்களும் அப்படியே. பிள்ளைகளின் சில தவறைக் கண்டு கொதிப்படைந்து கண்டபடி, திட்டி, கன்னா, பின்னா என்று அடித்து உதைப்பார்கள்.

அது தவறுகளின் மேல் அவர்களுக்கு உள்ள வெறுப்பு என்றோ, தவறை சரி செய்ய வேண்டும் என்ற ஆதங்கம் என்றோ கூற முடியாது. அது அவர்களின் உள்ளான நிலையில் உள்ள முரட்டுத் தன்மையின் வெளிப்பாடு. யாராவது கொஞ்சம் தீண்டி விட்டால் சிங்கம் போல் பாய்வார்கள். இது சரியான சுபாவம் அல்ல.

அதே வேளையில் கோப உணர்வேயில்லாமல் எதனாலும் பாதிக்கப்படாத ஒரு குளிர்ந்த மன நிலையும் ஆகாது. இயேசு கிறிஸ்து

சாந்தகுணம் உள்ளவர். *நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன்* என்று அவர் சொன்னார். (மத் – 11:28) ஆனாலும் அவர் கோபமடைந்த சில சம்பவங்களை வேதத்தில் நாம் காண்கின்றோம். பரிசேயர்களின் முரண்பாடு நிறைந்த மாய்மாலத்தைக் கண்டு அவர் கோபமடைந்தார். (மாற்கு – 3:5)

தேவனுடைய ஆலயத்தை வியாபார ஸ்தலமாக்கியவர்களைக் கண்டு அவர் வெகுண்டெழுந்தார். அங்கே அவர் மிகுந்த கோப உணர்வுடன் முறை கேடான மனிதர்களை வெளியே துரத்தியதோடு அவர்களது மேசை, நாற்காலி போன்றவற்றையும் கவிழ்த்துப் போட்டார். (மாற்கு – 11 : 15 – 17)

இவைகளின் மூலம் இயேசுவிடம் கோபமடையும் தன்மை இருந்தது என்பதைப் பார்க்கின்றோம். அப்படியானால் கோப உணர்வற்ற ஒரு நிலைதான் சாந்த குணம் என்று சொல்ல முடியாது என்பதைக் காண்கின்றோம். இங்கே எதை அறிந்து கொள்கின்றோம்? தேவையான, சரியான ஒரு நேரத்தில் கோபமடைதலும் அவசியமே என்று காண்கின்றோம்.

தவறான உபதேசக்காரர்களின் மேல் பவுல் அப்போஸ்தலனுக்கு ஒரு கோபம் ஏற்படாதிருந்தால் நிருபதிற்கு, நிருபம் அவர்களைக் கண்டிக்கும் வார்த்தைகளை அவன் எழுதியிருக்க முடியாது. (உதாரணம் – கலா 1 : 8 ; 5 : 12 ; 11 கொரி – 11 : 12 – 15) மாய்மாலமான மதத்தலைவர்களின் போலித்தனமான செயல்களின் மேல் இயேசுவுக்கு ஒரு கோப உணர்வு தோன்றாதிருந்தால், அவர்களைப் பார்த்து மதிகேடரே, மாயக்காரரே, விரியன் பாம்பு குட்டிகளே என்பது போன்ற கடுமையான வார்த்தைகளை உபயோகித்திருக்க முடியாது.

கோப உணர்வு தேவை. ஆனால் எங்கே, எப்படி, எதற்காக கோபமடைகிறோம் என்பதை நன்கு கவனிக்க வேண்டும். இயேசு ஒரு போதும் தம்முடைய சுயத்தை மையமாக வைத்து கோபமடைந்ததில்லை. தம்முடைய உள்ளுணர்வை அல்லது சுயநிலையை பிறர் பாதிக்கின்றார்களே என்று வெம்பிப் போய் கோபத்தில் கொந்தளித்தது கிடையாது.

அவரை சமாரியன், தச்சனின் மகன், வஞ்சிக்கின்றவன், பிசாசுகளின் தலைவன் மூலம் பேய் விரட்டுகிறவன் என்றெல்லாம் அவமானகரமாகப் பேசிய போது, அவர் கோபமடைந்தது இல்லை. அவரைக் கன்னத்தில் அடித்து, கடுமையான வார்த்தைகளால் திட்டிய போது அவர் கோபத்தினால் பொங்கியதில்லை. தம்முடைய மன உணர்வுக்கெதிராகவும், கவுரவத்திற்கு எதிராகவும் வந்த எல்லா நிந்தை, எதிர்ப்பு, அவமானங்களையும் மிகுந்த பொறுமையுடன்தான் சகித்தார்.

ஆனால் தேவனுடையக் காரியங்களின் மேல் வைராக்கியம் கொண்டு, தேவனுக்கெதிரான செயல்களைக் கண்டு அவர் தம்முடைய கோபத்தை வெளிப்படுத்தினார். தம்முடைய சுயத்திற்கு பாதிப்பு ஏற்படுகிறது என்பதற்காக அல்ல. தேவனுடைய உண்மைகளுக்கு புறம்பாக விஷயங்கள் நடக்கிறதே என்ற சத்தியம் சார்ந்த எரிச்சலே அது. *உம்முடைய வீட்டைக் குறித்த பக்தி வைராக்கியம் என்னை பட்சித்தது* என்ற வேத வசனத்தின் படியான ஆவிக்குரிய கோபமே அது. (யோ–2:17)

மோசே வாழ்ந்த காலத்தில் பூமியில் உள்ள எல்லோரையும் விட அவன் சாந்தகுணம் உள்ளவன் என்று வேதம் சொல்கின்றது. (எண் – 12:3) ஆனால் மோசே கோபமடைந்து செயல்பட்ட பல வேளைகள் உண்டு. ஆனால் அவைகள் சுயத்தோடு சம்பந்தப்பட்டவை அல்ல. தேவனுடைய காரியங்களின் மேல் கொண்டிருந்த உண்மையான வைராக்கியத்தின் விளைவாகவே அவைகள் நிகழ்ந்தன. வனாந்தரத்தில் பயணம் செய்த ஜனங்கள் மோசேயை ஒரு விரோதியைப் போல எண்ணி அவனுக்கு மிகவும் கோப மூட்டினார்கள். ஆனாலும் அவன் அவர்கள் மேல் கோபமடைந்து கொந்தளிக்காமல், தேவ கோபம் அவர்கள் மேல் வராமல் தடுக்க பலமுறை தேவ சமுகத்தில் விழுந்து கிடந்தான்.

தேவனுடைய உண்மைகளை காலின் கீழ் போட்டு மிதித்து, வேதத்தை எங்கோ வைத்துவிட்டு, தங்கள் சொந்த கொள்கைகளை இறைக்கொள்கைகளாக மாற்றி மக்களை ஏமாற்றிக் கொண்டிருந்தது ரோமத்திருச்சபை. அவர்களின் பொல்லாத செயல்கள் மேலும், பொய் பொதிந்த கொள்கைகள் மேலும் மார்ட்டின் லூத்தருக்கு ஒரு கோபம் ஏற்படாதிருந்திருந்தால், ஒரு மாபெரும் சமயப்புரட்சி ஏற்பட்டிருக்க முடியாது.

தேவனுக்கெதிரான செயல்களின் மேலும், பிறருக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள் மேலும் நமக்கு கோப உணர்வு அவசியமே. ஆனால் ஆவிக்குரிய மக்கள் தங்களுக்கெதிராக வரும் விஷயங்களில் பொறுமையையும், கோபப்படாத் தன்மையையும் காத்துக்கொள்தல் அவசியம். *எனக்கெதிராக, என்னை பாதிக்கும்படி வருகின்ற எந்த ஒரு காரியத்திலும் நான் கோபமடையாமல் கிறிஸ்துவுக்காக பொறுமையை கடைபிடிக்க வேண்டும்* என்பதே ஒரு உண்மையான கிறிஸ்தவனின் கொள்கையாக இருக்க வேண்டும். ஆம் உண்மையான கிறிஸ்தவன் தான் எதற்காக கோபப்பட வேண்டும், எந்த அடிப்படையில் கோபப்பட வேண்டும் என்பவைகளை அறிந்து, அதற்கேற்ப, நிதானமிழக்காமல், தன்னுடைய உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தேவனுடைய காரியங்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில்கூட, நம்முடைய கோப உணர்வு வெளிப்பட நேர்ந்தால் உண்மையிலேயே ஆவிக்குரியக் காரியங்கள் மேல் கொண்ட வைராக்கியத்தின் விளைவாக அது வருகின்றதா அல்லது மாம்சப்பிரகார சுயநிலை பாதிக்கப்பட்டதால் வருகிறதா என்பதையும் நன்கு கவனிக்க வேண்டும்.

சிலர் உண்மையில் தேவனுக்கேற்றபடி வாழ மாட்டார்கள். ஆனால் யாராவது வேதத்திற்கு புறம்பாக செயல்பட்டாலோ, ஊழியம் செய்தாலோ கொதித்தெழுவார்கள். இது ஆவிக்கேற்ற கோபம் அல்ல. மாம்சப்பிரகாரமான கோபம். ஏனென்றால் இது தேவ வைராக்கியத்தில் உருவாகாமல், சுய வைராக்கியத்தில் ஏற்பட்டது.

அதுபோலவே சில விசுவாசிகளும், ஊழியர்களும் உபதேச வேற்றுமை சம்பந்தமாக பிறரோடு கடுமையாக கோபத்தோடு சண்டை போடுவார்கள். தாங்கள் தேவ வைராக்கியத்தில் கோபம் கொள்வதாகச் சொல்வார்கள். ஆனால் அது மாம்ச வைராக்கியத்தில் எழுந்த கோபமாக இருக்கும். ஏனென்றால் அது ஆவிக்குரிய வர்ணத்தில் இருந்தாலும் நாங்கள்தான் சரி, எங்கள் உபதேசம்தான் சரி என்ற பெருமையினாலும் பிறருடைய கருத்துக்களை 'பொறுத்துக் கொள்ள இயலாத கடின மனதாலும் ஏற்பட்ட கோபமே ஆகும். சுயநிலை அல்லது சுயநலம் சார்ந்த கோபம் பாவமே ஆகும்.

பக்குவப்படுதல்

சாந்த குணத்தினை குறிக்கும் கிரேக்க பதமாகிய ப்ராவஸ் Praus என்பதற்கு இன்னுமொரு முக்கியமான அர்த்தமுண்டு. மேற்கண்ட கிரேக்க பதம் மிருகங்களை பழக்கி குறிப்பிட்ட ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதைக் குறிக்கவும் உபயோகிக்கப்படுவதுண்டு. அதாவது வித்தியாசமான சுபாவ நிலைகளை உடைய மிருகங்களை பலவித பயிற்சிகள் மூலம் பழக்கி குறிப்பிட்ட சில விதங்களில் இயங்கும்படி செய்ய வைப்பதை அந்த கிரேக்க வார்த்தைக் குறிக்கும்.

இதுவும் சாந்தகுணம் என்பதனை சரியாகப் புரிந்து கொள்ளுவதற்கு உதவி செய்கிறது என்பது உண்மை. மனிதனுக்குள் இயற்கையாகவே கோபத்தால் கொந்தளித்தல், ஆத்திரமடைதல், ஆவேசப்படுதல், எரிச்சலால் எரிதல், தாழ்ந்து போகாமல் போராடுதல் போன்ற சுபாவங்கள் நிறைந்திருக்கின்றன. இவை கிட்டத்தட்ட மிருகத்திடம் காணப்படும் முரட்டுத்தனங்கள் போன்றதாகும். அவ்வித குண இயல்புகளை பயிற்சிகள் மூலம் பக்குவப்படுத்தி, சரியான கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்ற ஒரு நிலைதான் சாந்தகுணம்.

சிலரிடம் இயற்கையாகவே பொறுமையும், தாழ்மையும், எதிர்த்து நிற்காத தன்மையும், பதிலுக்குப் பதில் செய்யாத இயல்புகளும் இருக்கும். இயேசு குறிப்பிட்ட சாந்தகுணத்திற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. சாந்த குணமுள்ளவர்கள் என்றால் இயற்கையிலேயே சாந்தமான ஒரு தன்மையை கொண்டவர்களையல்ல. தேவனுக்காக தங்கள் முரட்டு சுபாவங்களையும் கொந்தளிக்கும் இயல்புகளையும் குறிப்பிட்ட விதமாக ஆளுகை செய்து, அதனை பக்குவமான நல்ல ஒரு ஒழுங்குக்குள் கொண்டு வருகின்ற மக்களையே இயேசு குறிப்பிட்டார். அதுதான் உண்மையான சாந்தகுணம்.

இங்கே ஒரு சிக்கலும் உண்டு. தேவனுக்காக ஒரு மனிதன் தன்னுடைய கரடு, முரடான கடினமான சுபாவங்களையும், ஆத்திரமும், ஆவேசமும் நிறைந்த உணர்வுகளையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரமுடியுமா? சாந்தகுணத்தை ஒரு மனிதன் தனக்குத்தானே உருவாக்கி விட முடியுமா?

இது முடியாத காரியம் தான். தன்னுடைய சுய முயற்சிகளாலும், தீர்மானத்தாலும் அவன் தன்னுடைய உணர்வுகளையும், கோப நிலைகளையும் முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விட முடியாது. தேவனுடைய ஆவியின் பலத்தினால்தான் அந்த கட்டுப்பாட்டு நிலையை உருவாக்க முடியும். எனவே சாந்தகுணம் அவனில் உருவாக வேண்டுமானால், அவனையும் அவனுடைய கொந்தளிப்பு மிகுந்த உணர்வுகளையும், சுபாவங்களையும் பயிற்சிகள் மூலம் பழக்கி ஒழுங்கு நிலைக்குள் கொண்டு வருவதற்கு தேவனை அனுமதிக்க வேண்டும். அப்பொழுது அவன் தேவனுடைய கட்டுப்பாடுகளை ஏற்று அதற்கேற்ப இயங்குகிறவனாக மாறிவிடுவான்.

இப்போது நாம் இயேசு சொன்ன மூன்றாவது பாக்கிய வசனத்தை கீழ்க்கண்ட விதமாக பொருள் கொள்ளலாம்.

யார் தங்களுடைய உணர்வுகளையும், இயல்புகளையும், சுபாவங்களையும், தேவனால் முழுமையாகக் கட்டுப்படுத்த அனுமதிக்கின்றார்களோ அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியானவர்கள். அவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள்.

இயேசு கிறிஸ்து சாந்த குணத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து தம்முடைய சீடர்களுக்கு ஏன் சொன்னார் என்பதன் காரணங்களை நம்மால் புரிந்துக் கொள்ள இயலும். இந்த உலகம் நல்லவர்களையும் உண்மையின்படி தேவ பயத்துடன் வாழ்கின்றர்களையும் அது விரோதிக்கின்றது. இங்கே அநியாயம் செய்கின்றவர்கள் பலர். அநீதி இழைக்கின்றவர்கள் பலர். நியாயங்களை காலின் கீழே போட்டு மிதிக்கின்றவர்கள் பலர். தகுந்த காரணமின்றி பிறரை பகைக்கின்றவர்கள் பலர். பிறரை வஞ்சித்து அவர்களின் வாழ்க்கையை கெடுக்க வருகின்றவர்கள் பலர். பொல்லாத இதயத்துடன் பிறரை துன்பப்படுத்துகின்றவர்கள் பலர்.

இப்படிப்பட்ட கொடிய மனம் படைத்த துன்மார்க்கமான மக்களால் பாதிக்கப்படும் நிலை வரும் போது கோபம் கிளறப்படுவது இயற்கை. அங்கே ஆத்திர, ஆவேச உணர்வுகள் ஏற்படுவதும் இயற்கை. பாவிகளின் பாதகமான செயல்களால், மனநிலை கொந்தளிப்புகள் ஏற்படும். அப்படிப்பட்டவர்களை பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று

எண்ணுவதும், அவர்களின் அக்கிரமச் செயல்களுக்கேற்ப தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும் என்று எண்ணுவதும் மனித இயற்கை.

இப்படிப்பட்ட இக்கட்டான நிலமைகளில் தம்முடைய சீடர்கள் ஒருபோதும் உலக மக்களைப் போல இயற்கை சுபாவங்களுக்கேற்றபடி செயல்படக்கூடாது என்பதே இயேசுவின் கொள்கை. அவர்கள் அநீதியை சகிக்க வேண்டும். அக்கிரமத்தை பொறுக்க வேண்டும். நியாயக் கேட்டின் செயல்களைத் தாங்கிக் கொள்ள வேண்டும். அவர்கள் பதிலுக்குப் பதில் செய்யவோ தீமைக்கு தீமை செய்யவோ முற்படக்கூடாது.

அவ்விதம் அவர்கள் பொறுமையைக் கடைபிடிக்கும்போது அங்கே கஷ்டங்களும், நஷ்டங்களும் வர வாய்ப்புண்டு. சில உரிமைகள் பறிபோகும். சில நியாயங்கள் கனவீனப்படும். தங்களுக்கு நியாயமாகச் சேரவேண்டிய பல நன்மைகளை அவர்கள் இழக்க நேரிடும். ஆனாலும் அவைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்விதம் அவர்கள் பக்குவமான மனநிலையுடன், பொறுமையாக செயல்பட்டால் அவர்கள் இந்த உலகத்தில் உண்மையாகவே மிகுந்த மகிழ்ச்சியுடைய மக்களாக விளங்குவார்கள். மட்டுமின்றி அவர்கள்தான் பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள். அதாவது அவர்கள் நீதிக்காக இழந்து போனதை விட பலமடங்கு அதிகமான நன்மைகளை தேவனிடமிருந்து பெறுவார்கள்.

சங்கீதம் 37 : 11 – ல் வரும் வசனத்தைத்தான் இயேசு மூன்றாவது பாக்கிய வசனமாக தம்முடைய சீடர்களுக்குச் சொன்னார்.

சாந்தகுணமுள்ளவர்கள், பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள். (சங் – 37:11)

சாந்தமின்மையின் தீய விளைவுகள்

சாந்த குணமுடையவர்கள் மிகுந்த மகிழ்ச்சியைக் காண்பார்கள் என்ற ஆவிக்குரிய சிந்தனை புதிய ஏற்பாட்டில் தோன்றியதல்ல. பழைய ஏற்பாட்டிலும் அந்த உண்மை ஆழமாக வற்புறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக சங்கீதம் – 37–ஐ விரிவாக எழுதிய தாவீது அந்தக் கருத்தை திரும்ப, திரும்ப வற்புறுத்துகின்றான். பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண் என்று பழிக்குப் பழி வாங்குகின்ற கலாச்சாரம் நிலவிய அந்த காலகட்டத்தில் கூட தேவனை அறிந்த மக்கள் சாந்தகுணத்தின் அவசியத்தையும், அதன் மேன்மையையும் நன்கு அறிந்திருந்தனர்.

சாந்தகுணத்தை உடையவர்கள் நிச்சயம் மிகுந்த ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள் என்ற உண்மையை மிக அழுத்தமாக தாவீது அறிந்திருந்தபடியினால்தான் சங் – 37–ல் அதனை மிகவும் ஆழமாக வற்புறுத்தினான்.

அநீதி இழைக்கப்பட்டு, அக்கிரமத்தால் துன்புறுத்தப்பட்டு, துன்மார்க்கர்களின் பொல்லாத செயல்களால் பாதிக்கப்பட்டு நிற்கும் ஒரு மனிதனுக்கு ஆறுதலும், ஆலோசனையும் சொல்வது போல அந்த சங்கீதம் அமைந்துள்ளது. நியாயமில்லாமல் பகைக்கப்பட்டு, வேதனைப் படுத்தப்பட்ட ஒருவன் ஆத்திரமடைந்து, கோபத்தால் நிறைந்து, பதிலுக்குப் பதில் செய்ய முற்படுகின்றான். அப்போது "அப்படி செய்ய வேண்டாம். சாந்தமாயிரு. கர்த்தர் அவர்களைப் பார்த்துக் கொள்வார். உனக்கு கர்த்தர் நிறைந்த ஆசீர்வாதத்தைத் தருவார்" என்று கூறி அவனை தீவினைச் செய்ய விடாமல் தடுப்பது போலவே அந்த சங்கீதம் அமைந்துள்ளது.

கோபத்தை நெகிழ்ந்து உக்கிரத்தை விட்டுவிடு பொல்லாப்பு செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம். பொல்லாதவர்கள் அறுப்புண்டு போவார்கள். கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். (சங் – 37 : 8, 9)

சாந்தகுணத்திற்கு எதிர்மறையான குணங்கள் என்ன? கோபத்தை கட்டுப்படுத்தாமை பணிவின்மை, விட்டுக் கொடுக்காமை, பொறுத்துக் கொள்ளாமை, சகிப்புத் தன்மையின்மை, பதிலுக்குப் பதில் செய்யத் துடித்தல், ஆத்திர உணர்வுகளுக்குக்கேற்ப செயல்படுதல் – பகையை மறக்க விரும்பாமை.

இப்படிப்பட்ட ஜென்ம சுபாவங்களின்படி செயல்படுகின்ற காரணத்தினால்தான், இன்று பெரும்பான்மையான மக்களின் வாழ்வில் அமைதியோ, சந்தோஷமோ இல்லை. அவர்களுக்கு இந்த உலகம் எப்போதுமே யுத்தக் களமாகவே உள்ளது. எத்தனையோ அடிதடிச் சண்டைகள், கலவரங்கள், கொடூரக் கொலைகள், குடும்ப உடைவுகள் யாவுமே மேற்கண்ட ஜென்ம சுபாவங்களுக்கு இசைந்து போவதாலேயே நிகழ்கின்றது. பலருடைய வாழ்க்கையில் எவ்வளவோ செல்வ வளமும்,

பண பெருக்கமும் இருந்தும், அவர்களுடைய இதயங்களில் எப்போதும் போராட்டமே நிகழ்கின்றது. ஏனென்றால் சாந்தகுணம் அவர்களுக்கு இல்லை. ஆகையால் பிறரைக் குறித்த பகையும், வெறுப்பும், பழிவாங்கும் உணர்வும் இதய அமைதியை இல்லாமல் செய்து விடுகின்றது.

பணிவு மிகுந்த, தாழ்மையுள்ள, பொறுத்துக் கொள்கின்ற, நியாயங்களையும், உரிமைகளையும் இழக்க தயாருள்ள, தீமைக்கு தீமை செய்ய விரும்பாத, கர்த்தர் பார்த்துக் கொள்ளட்டும் என்று அமைதியாயிருக்கின்ற ஒரு உயர்ந்த ஒரு சுபாவம்தான் சாந்தகுணம். இத்தகைய சுபாவத்தை உடைய ஒருவர் உலகத்தின் பார்வையில் கோழை அல்லது பலவீனமானவன் என்ற நிலையில் காணப்படலாம்.

ஆனால் சாந்தகுணம் என்பது ஒரு மிகப்பெரிய பலத்தினால் தாங்கப்படும் சுபாவமாகும். அது சாதாரணமாக நடைமுறைபடுத்தப்பட முடியாத ஒன்றாகும். அசாதாரணமான இதய பலமும், பக்குவமும் உடையவர்கள் மட்டுமே அந்த சாந்தகுணத்தை செயல்முறைப் படுத்த முடியும். ஏனென்றால் ஒருவர் மிகுந்த பலத்தை பிரயோகப்படுத்திக் காண்பிப்பதைவிட, மிகுந்த பலமிருந்தும் அதனை பிரயோகிக்காமல் அமைதியாயிருக்க அதிகமான ஆற்றல் வேண்டும்.

சாந்தம் என்பது பலவினமா?

இங்கே இன்னுமொரு உண்மையை அறிந்து கொள்தல் நல்லது. ஒருவன் அநீதி இழைக்கின்றான். அக்கிரமம் புரிகின்றான். அதனால் பாதிக்கப்பட்ட நபர் அந்த மனிதனோடு எதிர்த்து நிற்கவோ, பதிலுக்குப் பதில் செய்யவோ முன்வராமல் மிகவும் பொறுமையாயிருக்கின்றார். ஏனென்றால் அந்த அநீதிக்காரனை எதிர்க்கத் தேவையான எந்த பலமும் இவரிடம் இல்லை. எனவே சும்மா இருந்து விடுகின்றார். இதன் பெயர் சாந்தகுணம் அல்ல. இது பலவீனத்தின் விளைவாக கட்டாயப்படுத்தப்பட்ட பொறுமை. பலவீனத்தின் காரணமாக ஒருவன் இன்னொருவரின் அநீதியை சகிப்பது சாந்தகுணமாகாது.

உண்மையான சாந்தகுணம் என்பது அநீதி செய்த ஒருவரோடு எதிர்த்து நிற்கின்ற பலம் இருந்தும், அந்த பலத்தை பிரயோகிக்க விரும்பாமல் தன்னை கட்டுப்படுத்தி அமைதியாயிருப்பது ஆகும். ஒருவர்

பக்கத்தில் நியாயம் இருந்தும் அந்த நியாயத்திற்காக போராடாமல் கர்த்தர் நியாயம் செய்யட்டும் என்று பொறுமையாக இருப்பதுதான் உண்மையான சாந்தகுணம். இன்னொருவரோடு எதிர்த்து நிற்கும் வாய்ப்பு இருந்தும், கர்த்தர் தனக்காக யுத்தம் செய்யட்டும் என்று தன்னை பின்னுக்கு இழுத்துக் கொள்வதுதான் ஆவிக்கேற்ற சாந்தகுணம்.

தாவீதின் வாழ்க்கையில் சாந்தகுணம் செயல்பட்டதை பல இடங்களில் பார்க்கின்றோம். சிங்கத்தோடும், கரடியோடும் சண்டையிட்டு வெற்றி பெற்ற வீரன் அவன். எவராலும் எதிர்க்க முடியாது என்று எண்ணப்பட்ட கோலியாத்தை எளிதாக வென்றவன் அவன். சவுல்ராஜா அனுப்பிய இடங்களிலெல்லாம் போய் அவன் மாபெரும் வெற்றிகளை ஈட்டியவன்.

அத்தகைய மாவீரனுக்கு சவுலினால் ஏற்பட்ட உபத்திரவங்கள் கொஞ்சமல்ல. தன்னுடைய வாழ்க்கையை அழிப்பதற்கு தொடர்ந்து அலைந்து கொண்டிருந்த சவுலை ஒழித்துக் கட்டுவது ஒன்றும் அவனுக்கு பெரிய காரியமல்ல. மூன்றுமுறை சவுலைக் கொல்லுவதற்கு எந்த சிரமமும் இல்லாத வாய்ப்பு அவனுக்கு கிடைத்தது. அவனுடனிருந்தவர்களெல்லாம் சவுலை தொலைத்துக்கட்ட இதுதான் சரியான வேளை என்றனர். ஆனாலும் தாவீதோ சவுலைக் கொல்ல அவன் தன் கையை நீட்டவில்லை.

சவுலைக் கொல்வது அன்றைய அளவில் அநீதியான ஒன்றாக இராது. சவுலைக் கொல்வதற்கு போதுமான நியாயங்கள் இருந்தது. போதிய வாய்ப்பு இருந்தது. தன்னிடம் தேவையான பலமும் இருந்தது. ஆனாலும் தாவீது ஆத்திரத்திற்கும், ஆவேசத்திற்கும், கோபத்திற்கும் இடம் கொடுக்காமல் தன்னை பின்னாக இழுத்துக் கொண்டான். தன்னைத்தானே தடுத்துக் கொண்டான். கர்த்தர் பார்த்துக் கொள்ளட்டும். அவரே நியாயம் செய்யட்டும் என்று கூறி தன்னைத் தாழ்த்திக் கொண்டான்.

பாருங்கள். இங்கே தாவீது கடைப்பிடித்த சாந்தமான அணுகுமுறைக்கு ஒரு மாபெரும் பலம் அவசியம். ஒப்பற்ற ஒரு பொறுமையின் ஆற்றல் அவன் இதயத்தில் இல்லாதிருந்தால், அவனால் சாந்தகுணத்தை வெளிப்படுத்தியிருக்க முடியாது. கோலியாத்தை வீழ்த்துவதற்கு தேவைப்பட்ட ஆற்றலை விட, சவுல் விஷயத்தில் அமைதியாயிருக்க அவனுக்கு அதிகமான ஆற்றல் தேவைப்பட்டிருக்கும்.

தேவனுடைய தாசனாக அவன் இருந்ததாலும், தேவனோடு நெருங்கிய ஐக்கியம் இருந்ததாலும் அவன் ஆத்திரகுணத்திற்கும், கோபத்தின் வேகத்திற்கும் தன்னை விட்டு விடாமல் தடுக்கத் தேவையான தெய்வீக ஆற்றல் அவனிடம் செயல்பட்டது. தேவனுடைய ஆவியின் பலத்தினால்தான் அவனால் சாந்தமாக அமைதியாக செயல்பட முடிந்தது.

உலகம் விட்டுக் கொடுக்காதவனையும், கோபத்தால் பொங்கியெழுகிறவனையும், பதிலுக்குப் பதில் செய்கிறவனையும் வீரன் என்று சொல்கிறது. ஆனால் தேவனுடைய பார்வையிலோ சகிப்பவர்களும், பொறுத்துக் கொள்கிறவர்களும், அநீதியைத் தாங்கிக் கொள்கிறவர்களும் வீரராக விளங்குகின்றனர். ஏனென்றால் பொறுத்துக் கொள்ளவும், சகித்துக் கொள்ளவும் மற்றவர்களைவிட மாபெரும் ஆற்றலும், மனப்பக்குவமும் அவசியமாகின்றது.

இயேசு கிறிஸ்து தமக்கெதிராக எப்பொழுதும் இயங்கிக் கொண்டிருந்த யூத மதத்தலைவர்கள் நடுவில் சாந்தகுணத்தை யுடையவராக விளங்கினார். அவர்களுடைய அநீதியான செயல்களும், ஆத்திரமூட்டும் பேச்சுகளும் அவரை பொறுமையிழக்க செய்ய முடியவில்லை. கடைசியாக பலவிதங்களில் அவமானப்படுத்தப் பட்டவராய், சிலுவைபாடுகளுக்கு உட்பட நேர்ந்த போதும் அவர் பொறுமையை இழந்ததில்லை.

முக்காலங்களையும் அறிந்திருந்த அவரை முதுகில் குட்டி விட்டு, உன்னை அடித்தது யார் என்று தீர்க்கத்தரிசனம் சொல்லச் சொன்னார்கள். அவரோ அமைதியாயிருந்தார். சிலுவையில் தொங்குகின்ற அவரை "நீ கிறிஸ்துவானால் இறங்கி வா" என்றனர். அவரோ அமைதியாயிருந்தார். அவரிடம் வல்லமைகளும், வரங்களும் இருந்தது. ஆனாலும் அவைகளை அவர் பிரயோகிக்காமல் எதுவும் செய்ய இயலாத கோழையைப் போல அமைதியாக நின்றார். அவ்வித சாந்தகுணத்துடன் அமைதிக் காக்க அபாரமான மனவலிமை தேவை. தேவ வல்லமை அவரிடம் செயல்பட்டதால் அவரால் எல்லாவற்றையும் சகிக்கவும், பொறுக்கவும் இயன்றது.

இவ்விதமான சாந்தகுணம் யாருக்கும் எளிதாக வந்து விடாது. பக்தி வைராக்கியம் இருப்பதாலோ, ஆவிக்குரிய ஆர்வம் இருப்பதாலோ

சாந்தகுணம் இதயத்தில் வந்துவிடாது. தேவனோடு ஒரு மனிதனுக்கு எந்த அளவிற்கு ஐக்கியமும், நெருக்கமும் இருக்கிறதோ அந்த அளவிற்குதான் அந்த மனிதன் சாந்த குணமடையவனாக நிற்க முடியும்.

முதலாவதாக ஆவிக்குரிய வாழ்க்கையிலே சாந்தகுணம் உள்ளவராக வாழ வேண்டும் என்ற ஆக்கப்பூர்வமான ஆர்வம் தேவை.

இரண்டாவதாக, அவ்வித சாந்தகுணம் நம்மில் அதிகமாக உருவாகத்தக்க விதத்தில் போதிய ஆவிக்குரிய பயிற்சிகள் வேண்டும். போதிய அளவு வலிமையான ஜெபம், தியானம், உபவாசம் போன்றவை இல்லாவிட்டால் சாந்தம் உருவாகாது.

மூன்றாவதாக, நமக்கு முன்பாக கோபத்தைத் தூண்டுகின்ற, ஆத்திரத்தைக் கிளப்புகின்ற, பொறுமையை இழக்கச் செய்கின்ற விதத்தில் சோதனைகள் வரும் போது, சாந்தகுணத்தை வெளிப்படுத்த வேண்டும் என்ற ஆர்வத்துடன், பொறுமையாயிருக்கவும், விட்டுக் கொடுக்கவும், சாந்தமாயிருக்கவும் முன்வர வேண்டும். அப்போதுதான் ஆவியானவர் செயல்பட்டு நாம் சாந்தமாக இருக்கத்தக்க ஆற்றலைத் தர முடியும். யோர்தான் நதியில் ஆசாரியர்கள் காலை வைத்தும் தண்ணீர் விலகியது போல, நாம் செயல்பட முன்வரும் போதுதான் தேவன் அற்புதங்களைப்புரிய முடியும்.

பல ஆவிக்குரிய மக்கள் சாந்தகுணத்தின் மேன்மையையும், அதன் அவசியத்தையும் அறிந்திருக்கிறார்கள். ஆனால் அந்த சுபாவம் தங்களிடம் இருப்பது போல பிறருக்கு தெரிந்து விடக்கூடாது என்று விரும்புகின்றனர். மற்றவர்கள் தாங்கள் சாந்தமாக இருப்பதைப் பார்த்தால், தங்களை கோழைகள் என்றோ பலவீனமானவர்கள் என்றோ எண்ணி விடுவார்கள் என்று பயப்படுகின்றார்கள். தங்களை இளிச்ச வாயன்கள் என்று பிறர் நினைத்துவிடக் கூடாது என்று ஜாக்கிரதையாயிருக்கின்றனர்.

ஆனால் *உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக என்று* வேதம் சொல்கின்றது. (பிலி – 4:5) நாம் சாந்தமானவர்கள் என்றும், தீமையை சகிப்பவர்கள் என்றும், அநீதியை பொறுத்துக் கொள்கிறவர்கள் என்றும் பிறருக்கு தெரியும்படி வாழ்வது தான் கிறிஸ்தவ வாழ்க்கையின் சாட்சி. நாம் பிறர் நடுவில்

சாந்தமானவர்கள் என்று அறியப்பட்டிருந்தால்தான், சாந்தமாக வாழ்ந்து காட்ட வேண்டிய கட்டாயத்தையும் நமக்குள் உணர்ந்து செயல்பட முடியும்.

ஒருவேளை நம்முடைய சாந்தமான அணுகுமுறைகள் உலக மக்களின் பார்வையில் பலவீனம் போன்று காட்சியளிக்கலாம். அதன் விளைவாக நமக்கெதிராக அநீதியானக் காரியங்கள் செய்வதற்கு அவர்கள் அதிக ஊக்கம் பெறலாம். ஆனாலும் நாம் சோர்ந்து போகத் தேவையில்லை. ஏனென்றால் நான் மனிதன் முன்பு எப்படி காணப்படுகிறேன் என்பது அல்ல. நான் தேவனுக்கு முன்பாக எப்படிக் காணப்படுகிறேன் என்பதே முக்கியம். என்னிடம் சாந்தகுணம் இருந்தால் தேவன் என்னைப் பார்த்து *"பலசாலியே"* என்பார். அப்படியிருக்கையில் மனிதன் என்னைப் பார்த்து *"பலவீனனே"* என்று சொன்னாலும் கவலைப்பட தேவையில்லை. ஏனென்றால் எனக்கு தேவன் தரும் சாட்சிதான் முக்கியம்.

சாந்தமுடையோர் சொந்தமாக்குவார்

சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள் என்றார் இயேசு. பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள் என்ற வாக்குத்தத்தம் மிகுந்த நம்பிக்கையூட்டுகின்ற ஒன்றாக உள்ளது.

ஏனென்றால் பொல்லாத மனிதர்கள் நிறைந்த உலகில், நம்முடைய நியாயங்களுக்காக போராடாமல், நம்முடைய உரிமைகளை விட்டு கொடுத்து, அமைதியாகயிருந்தால் அதன் விளைவாக பல நன்மைகளை இழக்க நேரிடுமே என்ற பயம் பலருக்கு உண்டு. குனிந்து போகப் போக குட்டிக் கொண்டிருப்பார்கள். அமைதியாக இருக்க, இருக்க பொல்லாத மனிதர்கள் அதிகமாக அக்கிரமம் செய்வார்கள். இவ்விதமான சிந்தனை பலருக்கு உண்டு.

நடைமுறையிலும் இது உண்மைதான். நாம் பொறுத்து, பொறுத்து பின்னால் போகும் போதெல்லாம் அதிகமாக தாக்க ஓடிவரும் உலகம் இது. ஆனால் ஒரு நம்பிக்கையான செய்தி உண்டு. தேவன் நமக்காக யுத்தம் செய்வார். தேவன் நமக்காக வாதாடுவார். தேவன் நமக்காக நியாயம் பேசுவார். நம்மிடமிருந்து பிறர் பறித்ததை தேவன் நமக்கு பல மடங்காகத் திருப்பித் தருவார்.

நாம் சாந்தகுணத்தை கடைபிடிக்க வேண்டும். எதற்காக? நம்முடைய இடத்தில் தேவன் நின்று செயல்படுவார் என்பதற்காகத்தான். நாம் பொறுமையுடன் அநீதியை சகித்து பின் வாங்க வேண்டும். எதற்காக? தேவன் நமக்காக அநீதியாளர்களோடு போராடுவார் என்பதற்காகத்தான்.

நியாயங்களையும், உரிமைகளையும் விட்டு விட்டு நாம் அமைதியாக இருக்க வேண்டும். எதற்காக? தேவன் நம்முடைய நியாயத்தையும், உரிமையையும் நிலைநாட்டுவார் என்பதற்காகத்தான்.

உன் நீதியை வெளிச்சத்தைப் போலவும் உன் நியாயத்தைப் பட்டப் பகலைப் போலவும் விளங்கப் பண்ணுவார். (சங் – 37:6)

ஆம். தேவன் நமக்காக, நம்முடைய சார்பில் நின்று செயல்படுவதற்கேதுவாகத் தான், நாம் கோபத்தை தணித்து, உக்கிரத்தை விலக்கி, ஆத்திரத்தை அகற்றி, அமைதியாக காத்திருக்க வேண்டியது அவசியமாகின்றது. நம்முடைய நஷ்டங்களை அவர் சரிசெய்வார். நம்முடைய இழப்புகளை அவர் மீட்டுத்தருவார். நம்முடைய பொறுமைக்கும், தாழ்மைக்கும் ஏற்ற பரிசுகளை அவர் உரிய விதமாகத் தருவார். இவ்விதமான நம்பிக்கையின் பின்னணியில்தான் நாம் சாந்தமாயிருக்க வேண்டும்.

நமக்காக போராடவும், வாதாடவும் உரிய முறையில் நியாயம் வழங்கவும் ஒருவர் இருக்கையில் நாம் ஏன் நம்முடைய குறைவான பலத்தில் வீணாக பிறரோடு போராட வேண்டும். கர்த்தர் நம் சார்பாக இயங்கத் தயாராயிருக்கையில், நம்முடைய இதய அமைதியை இழந்து வீணான கஷ்டங்களுக்குள் ஏன் விழ வேண்டும்?

கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார். நீங்கள் சும்மாயிருப்பீர்கள். (யாத் – 14:14)

இந்த யுத்தம் உங்களுடையதல்ல தேவனுடையது. (11 நாளா–20:15)

இவ்விதமான சிந்தனைகளை சிலர் ஒத்துக் கொண்டாலும், அதன் மேல் அவர்களுக்கு நம்பிக்கை வருவதில்லை. ஏனென்றால் கர்த்தர் அவ்விதமாக அவர்களின் விஷயத்தில் செயல்பட்டதை அவர்கள் கண்டதில்லை. அவர்களுக்கு அநீதி செய்தவர்கள் மென்மேலும்

செழித்திருக்கையில் இவர்களுக்கோ இன்னும் நியாயம் கிடைக்கவில்லை. எனவே அவர்கள் சோர்ந்து போகிறார்கள். இதெல்லாம் புத்தகத்தில் எழுதவும், பிரசங்கம் செய்யவும்தான் உதவும், மற்றபடி அனுபவரீதியில் அவ்விதம் நடப்பதில்லை என்று தங்களுக்குள் முனகிக் கொள்கிறார்கள்.

ஆனால் நான் இவைகளை ஒரு புத்தகச் செய்திக்காக எழுதவில்லை. நான் முழுமையாக விசுவாசிப்பதையே எழுதுகிறேன். அதுவும் வெறும் விசுவாசம் அல்ல. நடைமுறையில் இது உண்மை என்று உறுதியாக நம்பும் விசுவாசம்.

சில வேளைகளில் நாம் நினைப்பது போல காரியங்கள் நிகழ்வதில்லை என்பது உண்மைதான். உதாரணமாக நமக்கு அநீதி செய்த ஒருவர் விஷயத்தில், நாம் தேவன் பார்த்துக் கொள்ளட்டும் என்று அமைதியை கடை பிடித்திருக்கலாம். ஆயினும் காலம் பல கடந்தும் அவ்விதம் அநீதி செய்தவருக்கு எந்த குறைவும் ஏற்பட்டதாக தெரிவதில்லை. அப்போது தேவன் ஏன் நியாயம் தீர்க்கவில்லை என்ற குமுறல் நமக்குள் ஏற்படலாம்.

ஆனால் ஒரு விஷயத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேவன் செயல்படும் விதத்தையோ, செயல்படும் காலத்தையோ நம்மால் அறுதியிட்டு கூற முடியாது. நாம் நினைக்கின்ற விதமாக அவர் செயல்படுவார் என்று எதிர் பார்க்கவும் முடியாது. அவருடைய வழிகளை ஆராய்ந்து அறிந்தவர் யார்?

நமக்கு தீங்கிழைத்தவர்கள் விஷயத்தில் அவர் எப்படி செயல்படுவார் என்று நம்மால் கூற முடியாது. ஆனால் கர்த்தரை நம்பி, நாம் சாந்தமாக இருந்ததுண்டானால், தேவன் நமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு பல மடங்கு அதிகமான பலன்களைத் தருவார் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் பல வேளைகளில் நமக்காக கர்த்தர் செயல்பட்டு நமக்கு பிரதிபலன்களை அருளாமல் போவதற்கு நாமே காரணமாக இருக்க முடியும். எப்படியென்றால் நாம் நமக்கு தீங்கிழைத்தவர்களுக்கு சில கஷ்டங்களும், நஷ்டங்களும் வரவேண்டும். அப்படி வந்தால்தான் தேவன் செயல்படுகிறார் என்று நினைத்தால் அங்கே தேவன் செயல்பட முடியாது. நாம் நம்முடைய பக்கத்தில் தேவ நன்மையை எதிர்பார்க்க வேண்டுமே

ஒழிய மற்றவர்களுக்கு தீங்குவர வேண்டும் என்று எண்ணக்கூடாது. ஏனென்றால் சாந்தகுணத்தோடு நமக்கு அன்பும் வேண்டும். அன்பு யாருக்கும் தீங்கு நினையாது. சத்துருக்களை சிநேகிக்க இயேசு சொல்லியிருக்கையில், நம்முடைய சத்துருக்களுக்கு தீங்குவர வேண்டும் என்று நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்?

என்னுடைய ஊழியப்பாதையில் கூட எனக்கு விலாசம் இல்லாமல் போகத்தக்க விதத்தில் பல விதத்தில் தீங்கு புரிந்தவர்கள் உண்டு. என் விஷயத்தில் மிருகத்தனமாக நடந்தவர்கள் உண்டு. அந்த நாட்களில் நான் அவைகளை சகித்தேன். பதிலுக்குப் பதில் வாய் திறந்து கூட பேசவில்லை. கர்த்தர் பார்த்துக் கொள்வார் என்று மிகுந்த வியாகுல வேளையிலும் அமைதியாக இருந்தேன். அன்று நான் வடித்த கண்ணீரும், அடைந்த வேதனைகளும் கொஞ்சமல்ல.

இன்று ஆண்டுகள் பல ஓடிவிட்டது. அந்த நபர்கள் இன்றும் நன்றாகத்தான் இருக்கிறார்கள். தேவகிருபையினால், அவர்களுக்கு ஏதாவது தீங்கு நிகழ வேண்டும் என்றுநான் ஒரு போதும் எண்ணியதுமில்லை. அது என் ஆசையாக இருந்ததுமில்லை. ஆனால் நான் இல்லாமல் போய்விட வேண்டும் என்று எண்ணியவர்கள் நடுவில் என்னை உறுதியாக தேவன் நிலைநிறுத்தியிருக்கிறார். நான் அவரை நம்பி காத்திருந்தது வீணாகவில்லை. நான் வாலாகாமல், தலையாவதையே தேவன் காணச் செய்தார். அதுதான் தேவனுடைய செயல்.

அதே வேளையில் தேவ பயமின்றி இருதயத்தின் முரட்டுக் குணங்களுக்கேற்ற படி செயல்பட்டு, பிறரை வருத்திய பலர் பரிதாபமாக விழுந்து போவதை நடைமுறையில் பார்க்க முடிகின்றது. நியாயமின்றி பிறருக்கு தீங்கிழைத்த பலர் சிலர் நடுவில் மிகவும் மோசமான நிலையில் நாசமடைவதை இன்றும் பார்க்க முடிகிறது. தேவனின் நியாயத் தீர்ப்புகள் பல விதங்களில் செயல்படவே செய்கின்றது.

ஆயினும் ஆவிக்குரிய மக்கள் தங்களுக்கு எவ்வளவு பெரிய தீங்கு நேர்ந்தாலும், அதற்குரியவர்கள் நாசமாக வேண்டும் என்று ஒரு போதும் எண்ணக் கூடாது. சத்துருக்களுக்காக ஜெபிப்பதுதான் ஆவிக்குரியவனின் அணுகுமுறை. தேவனுடைய நியாயாசனத்தில் ஒரு போதும் நாம் அமர்ந்து விடக்கூடாது. *

இதய திருப்தி எதனால் வரும்?

5

> நீதியின் மேல் பசிதாக முள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் திருப்தியடைவார்கள்.
> (மத்தேவு – 5:6)

இந்த உலகத்தில் உண்மையிலேயே மிகுந்த மகிழ்ச்சியானவர்கள் அல்லது பாக்கியவான்கள் யார் என்பதை இயேசு சுட்டிக்காட்டினார். அவர்களில் நான்காவது வரிசையில் வருகின்றவர்கள். *நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள்.* நீதியின் மேல் பசி தாகமுள்ளவர்களை மிகுந்த மகிழ்ச்சியானவர்களாக இயேசு கண்டார். அவர்கள் திருப்தியடைவார்கள் என்ற உண்மையையும் வெளிப்படுத்தினார்.

இங்கே உலகத்தில் திருப்தியடைகின்ற ஒரு கூட்டம் மக்களை இயேசு சுட்டிக் காட்டுகின்றார். யார் இந்த உலகத்தில் உண்மையிலேயே திருப்தியுடன் வாழ முடியும்? நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள்தான் திருப்தியுடன் வாழ முடியும் என்பதே இயேசு அளிக்கும் பதில்.

இந்த உலகத்தில் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய ஒவ்வொரு செயல்களிலும் திருப்தியை எதிர்பார்க்கின்றோம். ஒரு பொருளை வாங்கினால் அது திருப்திகரமாக இருக்க வேண்டும். ஒரு வீட்டைக் கட்டினால் அது திருப்தியாக இருக்க வேண்டும். ஒரு வேலையைச் செய்தால் அது திருப்தியாயிருக்க வேண்டும். ஒரு திருமணம் செய்து கொண்டால் அது திருப்தியாயிருக்க வேண்டும். மொத்தத்தில் வாழ்க்கையில் திருப்தியாயிருக்க வேண்டும். என்பதையே, நாம் விரும்புகின்றோம்.

தையல்காரன் ஒரு உடையை நமக்குத் திருப்தியளிக்கும் விதமாக தைத்துத் தராமல் போனால், மனதில் ஏதோ ஒன்று குறைந்து விடுகிறது. அப்போது அந்த உடையைப் பார்க்க, பார்க்க வெறுப்பே மிஞ்சுகிறது. ஒரு வீடு நாம் எதிர் பார்க்கின்ற பிரகாரம் கட்டப்படாமல் போகும் போது, அந்த வீட்டைப் பார்க்கும் போதெல்லாம் மனதில் சோர்வுதான் தோன்றும். இதுபோலவே இன்று பெரும்பாலான மக்களுக்கு இந்த உலக வாழ்க்கையே திருப்தியற்று போய், அவர்கள் மகிழ்ச்சியற்ற மக்களாகக் காணப்படுகின்றனர்.

ஆம். வாழ்க்கையில் திருப்தி என்பது மிகவும் அவசியம். மனதில் திருப்தியான ஒரு நிலை தோன்றாத பட்சத்தில் வாழ்க்கை விருப்பமில்லாத ஒரு பாரமாகி விடுகின்றது. அதுவே சலிப்பிற்கும், விரக்திக்கும் வழி வகுக்கின்றது.

இதய திருப்தி என்பது ஒரு மாபெரும் செல்வமாகும். ஆனால் உலக நிலையில் கொடி கட்டி பறக்கும் ஏராமான செல்வந்தர்களிடம் கூட இந்த "இதய திருப்தி" என்ற செல்வம் இல்லை. இயற்கையாக ஒவ்வொரு மனிதனுடைய இதயத்தின் ஆழத்திலும் திருப்தியைத் தேடுகின்ற ஒரு உணர்வு மிகத்தீவிரமாக உள்ளது. ஆனால் மனிதனோ அந்த திருப்தி நிலையை அடைய எப்படி, எப்படியோ சிரமப்பட்டும் அந்த நிலையைக் காணாமல் போய் விடுகின்றான்.

பணம் அதிகமாக சேர்த்துவிட்டால் – போதிய செல்வம் சேர்ந்து விட்டால் – நினைத்தபடி வாழ்க்கை அமைந்துவிட்டால் – நல்ல அந்தஸ்தினை சமுதாயத்தில் பெற்று விட்டால் – வாழ்க்கையில் திருப்தியான ஒரு நிலையை அடைந்து விடலாம் என்று மனிதன் எண்ணுகின்றான். ஆனால் அவன் எதிர்பார்த்ததெல்லாம் வந்த பின்னரும் கூட, அவன் எதிர்பார்த்த திருப்தி நிலையோ வராமல் போவதைக் கண்டு சோர்ந்து போகிறான்.

பணத்தையும், செல்வத்தையும் தன் வாழ்க்கையில் மிகவும் அதிகமாகக் கண்டவன் சாலொமோன் ராஜா. ஆனால் அதே ராஜா

பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை. செல்வப்பிரியன் செல்வப்பெருக்கினால் திருப்தியடைவதில்லை. இதுவும் மாயையே. (பிர – 5:10)

என்று தெள்ளத் தெளிவாக எழுதி வைத்துச் சென்றான். ஆம். பெரும்பாலும் மனிதன் பணமும், பொருளும் தன்னை திருப்தியாக்கும் என்று உள்ளூர எண்ணுவதால்தான், அவன் அதற்காக அதிகமாக அலைமோதுகின்றான். ஆனால் பரிதாபகரமாக, பணமும், பொருளும் அவனை திருப்திபடுத்துவதற்கு பதிலாக மேலும், மேலும் அவனை திருப்தியடையாத ஒரு நிலைக்கே அவனைக் கொண்டு போகும். ஏனென்றால் பணத்திலும், பொருளிலும், திருப்தியை தேடும் மனிதன் எவ்வளவு சேர்த்தாலும் "போதும்" என்ற மனநிலையை ஒரு போதும் பெற இயலாததால், அவன் திருப்தி நிலையைக் காணவே முடியாது.

இவ்விதமான பரிதாப நிலையை உணர்ந்த ஏசாயா தீர்க்கத்தரிசி தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்டு, உண்மையான திருப்தியை அடையும் வகையைக் கூறி மக்களை தேவனிடம் வர அழைத்தான்.

நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத்தையும் திருப்தி செய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்கு செவி கொடுத்து நலமானதைச் சாப்பிடுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும். உங்கள் செவியைச் சாய்த்து என்னிடத்தில் வாருங்கள். கேளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும். (ஏசாயா – 55:2,3)

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு கடிதம் எழுதும் போது, *போதும் என்ற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்* என்று குறிப்பிட்டான். (1 தீமோ – 6:6) இந்த *போதும் என்ற மனநிலைதான்* திருப்தியை தருகின்ற சக்தியாகும். ஆனால் போதும் என்ற மனநிலையை பெறுவதற்கு என்ன செய்வது? போதும் என்ற மனநிலையைப் பெறுவதுதான் பெரிய விஷயம். அதற்கு சரியான பதில் இயேசு சொன்ன வசனத்தில் உண்டு. *நீதியின் மேல் பசிதாகம் கொள்ளுகின்ற* நிலையை அடைவதின் மூலம் தான் போதும் என்ற மனநிலையை எளிதாய் அடைந்து வாழ்க்கையில் உண்மையான திருப்தியை பெற முடியும்.

வரலாறுகளைப் புரட்டிப் பார்க்கும் போதும், தற்காலத்த மனிதர்களின் வாழ்க்கை நிலைகளை கவனித்துப் பார்க்கும் போதும் அங்கே மனிதன் மிகுந்த பசி, தாகம் உடையவனாக இருப்பதையே காண முடிகின்றது. சிலருக்கு பணப் பசி. சிலருக்கு செல்வப் பசி, சிலருக்கு

அதிகாரப் பசி. சிலருக்கு புகழ் தேடும் பசி. சிலருக்கு அந்தஸ்துகளை அடையும் பசி. சிலருக்கு காமப் பசி. இவ்விதமான பசியும், தாகமும் மனிதனிடம் அடங்காத விதமாக செயல்பட்டு, அவனை இரவு, பகல் ஓய்வு ஒழிச்சலின்றி அலைய வைக்கின்றது. ஆனாலும் திருப்தியோ, நிஜமான மகிழ்ச்சியின் நிறைவோ இல்லாத வெறுமையின் நிலைதான் முடிவாக அமைகின்றது.

சாலொமோன் ராஜாவுக்கு அடங்காத காமப்பசி. ஆயிரம் பெண்களோடு அவன் சம்பந்தப்பட்டும்கூட இறுதிநிலை திருப்தியற்ற வெறுமைதான். ஹிட்லருக்கு உலகத்தையே ஆட்டிப் படைக்க வேண்டும் என்ற அதிகாரப் பசி. எத்தனையோ வெற்றிகளைக் கண்டும் போதும் என்று அடங்காமல் அவனுடைய பசி ரஷ்யாவை நோக்கி அவனை போக வைத்தது. அங்கே அவனுடைய பரிதாப முடிவு நிர்ணயிக்கப்பட்டது. அவனுடைய கடைசி நாட்கள் மிகவும் பரிதபிக்க நிலையில் அமைந்தது.

இன்று உலகப்பிரகாரமான பணம், பொருள், புகழ் மேல் உள்ள பசியினாலும், தாகத்தினாலும் எவ்வளவோ, பிரபல ஊழியர்களும், ஏராளமான விசுவாச பெருமக்களும் வீணாகிக் கொண்டிருக்கிறார்கள்! எவ்வளவோ சேர்த்தும் அவர்கள் திருப்தி நிலைகாணாத மக்களாக மாறி, தெய்வீக நிலைகளை விட்டு வெகு வேகமாக விலகிப் போகிறார்கள்.

ஆனால் நீதியின் மேல் பசிதாகம் கொள்ளுகின்ற மனிதர்கள் மட்டுமே திருப்தியுடையவர்களாகவும், மகிழ்ச்சியுடையவர்களாகவும் போதும் என்ற மனநிலையுடையவர்களாகவும் விளங்குவார்கள். இந்த ஆவிக்குரிய ரகசியத்தினை அறியாத எந்த கிறிஸ்தவரும் உண்மையான திருப்தியை வாழ்க்கையில் காண முடியாது.

நீதி என்றால் என்ன?

நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று இயேசு சொன்ன வசனத்தில் வருகின்ற *நீதி* என்ற வார்த்தையின் சரியானப் பொருளை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இந்த நீதிக்கு சமுதாய ரீதியான நியாயம் அல்லது Justice என்று பொருள் கொள்ளக் கூடாது. இயேசு கிறிஸ்து சொன்ன *நீதி* என்ற வார்த்தைக்கு வேதத்தை அடிப்படையாகக் கொண்டு, ஆவிக்குரிய கண்ணோட்டத்தில்தான் அர்த்தம் கொள்ள வேண்டும்.

வேதாகமம் முழுவதும் நீதி என்ற வார்த்தை பரவிக் கிடக்கின்றது. இதற்கு வேதாகம ரீதியில் சுருக்கமான அர்த்தம் சொல்வதென்றால் *தேவனுக்குப் பிரியமானது எது என்பதை அறிந்து அதனை செய்தல்* என்று சொல்லலாம். தேவனுடைய கிருபையை, ஆசீர்வாதத்தை, அங்கீகாரத்தை நாம் பெறுவதற்கு தகுதியாக, நாம் எதனைச் செய்ய வேண்டும் என்று தேவன் நிர்ணயிக்கின்றாரோ அதனை முழுமையாகச் செய்வதுதான் நீதி ஆகும். அவ்வித நீதியை நிறைவேற்றுகின்றவன்தான் தேவனுடையப் பார்வையில் நீதிமான் ஆவான்.

ஆபிரகாமை தேவன் நீதிமான் என்ற கணக்கிலெடுத்தார். அவன் நீதி, நெறி, தவறாமல் மிக ஒழுங்காக நடந்தான் என்பதற்காக தேவன் அவன் நீதிமான் என்று சொல்லவில்லை. அவர் அவனிடம் எதிர்பார்த்ததை அவன் செய்தான். அதுதான் அவருடையப் பார்வையில் நீதியாக இருந்தது. அதாவது தேவனுடைய கிருபையை பெறுவதற்காக தேவன் நிர்ணயித்த தகுதி அது.

அது என்ன? தேவன் அவன் மூலமும் அவன் சந்ததி மூலமும் செய்யப் போகின்ற பெரிய காரியங்களைக் குறித்து அவனிடம் சொன்னார். அது மனித ரீதியாக நம்புவதற்கு ஏற்றதாக இல்லாத போதிலும், "தேவன் சொன்னார்" என்ற காரணத்திற்காக அவன் அதை விசுவாசித்தான். அந்த விசுவாசத்தைத்தான் தேவன் நீதி என்று கணக்கிட்டார். அதுவே அவனை நீதிமானாக்கும் தகுதியாக இருந்தது. (ஆதி – 15:6)

வேதத்தை நன்கு ஆராய்ந்து பார்க்கும் போது, தேவன் நிர்ணயித்த நீதி என்பது காலத்திற்கேற்ப பெருத்த மாறுதலைக் கண்டிருப்பதை காண முடியும். அதாவது மாறி வருகின்ற ஒவ்வொரு கால கட்டங்களுக்கும் ஏற்றபடி, தேவன் மனிதனிடமிருந்து எதிர்பார்க்கும் காரியங்கள் மாறிக் கொண்டே வந்திருக்கின்றது. மோசேயின் காலத்திலிருந்து யோவான் ஸ்நானன் வரையிலும் நியாயப் பிரமாணத்தின் நியமங்களை நிறைவேற்றுவது தேவனுடைய நீதியாக எண்ணப்பட்டது. யோவான் ஸ்நானன் காலத்தில் நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றுவதோடு, மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்பது தேவனுடைய நீதியாக எண்ணப்பட்டது.

புதிய ஏற்பாட்டு காலத்தில் வாழ்கின்ற நாம் நிறைவேற்ற வேண்டிய நீதி என்ன? தேவனுடைய குமாரனாகிய இயேசுவை நாம் ஏற்றுக் கொண்டு அவருக்கு சாட்சிகளாக வாழ்வதே நாம் நிறைவேற்ற வேண்டிய அந்த நீதி. அதாவது இயேசுவோடு நாம் காணப்பட வேண்டும். இயேசுவோடு நாம் காணப்படுவதின் விளைவாக அவரைப் போல நாமும் மாறிக் கொண்டிருக்க முடியும். இதுவே தேவனால் நாம் அங்கீகரிக்கப்படுவதற்கு அவர் நிர்ணயித்த தகுதி. (1கொரி – 1:31)

நடைமுறை பிரயோஜனத்திற்காக நீதி என்பதின் அர்த்தத்தை ஆவிக்கேற்ற அணுகுமுறையுடன் சுருக்கமாக புரிந்து கொள்வோம். *தேவனுக்கு பிரியமாக வாழ்வதே* நீதி என்ற வார்த்தையின் பின்னால் உள்ள உண்மையான பொருள் ஆகும். அப்படியானால் இயேசு சொன்ன நான்காவது பாக்கிய வசனத்தின் பொருள் என்ன?

தேவனுக்குப் பிரியமாக வாழ வேண்டும் என்ற பசிதாகம் உள்ளவர்கள் மிகுந்த மகிழ்ச்சியானவர்கள். அவர்கள் திருப்தியுடன் வாழ்வார்கள்.

முழுமையான நீதி

இந்த நான்காம் பாக்கிய வசனத்தில் *நீதி* என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைக்கான கிரேக்க மொழிப் பதம் மிகவும் சிறப்பானது. கிரேக்க மொழி இலக்கணத்தை நன்கு அறிந்த அறிஞர்கள், அந்த பதத்திற்கு சரியான ஒரு விளக்கத்தைக் கொடுக்கின்றனர். அதாவது கிரேக்க மொழியில் அந்த வார்த்தை வெறும் நீதி என்ற அர்த்தத்தை கொடுக்காமல் *"முழுமையான நீதி"* என்ற அர்த்தத்தையே குறிக்கின்றதாம்.

நீதியின் மேல் பசிதாகம் என்பது ஒரு குறிப்பிட்ட நீதியின் மேலோ அல்லது ஒரு சில நீதிகளின் மேலோ பசிதாகம் கொள்வதல்ல. தேவனுடைய அனைத்து நீதிகளின் மேலும் பசிதாகம் கொள்ள வேண்டும். அதாவது வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும், எல்லா நிலைகளிலும், தேவனுடைய நீதிகளை அல்லது எதிர்பார்ப்புகளை முழுமையாக நிறைவேற்ற வேண்டும்.

உதாரணமாக ஒருவர் மற்றவர்களுக்கு இரங்குவதிலும், தாராளமாக உதவி செய்வதிலும் சிறந்தவர். பிறருக்காக பரிதவிக்கும் கருணை உள்ளம் கொண்டவர். இவருடைய செயல்கள் தேவனுடைய

நீதிதான். தேவனுக்கு இவை பிரியமானவைதான். ஆனால் இவர் எளிதில் கோபம் கொள்பவர். சகிப்புத் தன்மை இவருக்கு கிடையாது. யாரிடமும் அவர் விட்டுக் கொடுத்து போகும் பழக்கம் கிடையாது.

இங்கே இவருடைய சில செயல்கள் தேவநீதிக்கு உட்பட்ட செயல்களாகயிருந்தபோதிலும், அவர் திருப்தியான மனிதராக மாறமுடியாது. ஏனென்றால் அவருடைய சில சுபாவங்கள் முரண்பாடாக உள்ளன. அவர் தேவனுடைய முழுமையான நீதியின் மேல் பசி தாகம் கொள்ளவில்லை. எனவே இவரை தேவனுக்குப் பிரியமானவர் என்றோ, தேவனுக்குப் பிரியமாக வாழ்கிறார் என்றோ சொல்ல முடியாது.

அதுபோலவே ஒருவர் மிகுந்த பொறுமையும், சாந்த குணமும் உள்ளவர். தாழ்மையும், எளிமையும் மிகுந்தவர். சகிப்புத் தன்மை மிக அதிகம் உள்ளவர் ஒரு கன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தை காட்டுகின்ற அளவிற்கு பண்பட்டவர். ஆனால் யாருக்கும் இரங்கும் சுபாவமோ, பிறர் கஷ்டத்தைக் கண்டு பரிதவிக்கும் பழக்கமோ கிடையாது. இங்கே இவர் தேவனுடைய நீதியை இவர் நிறைவேற்றுவது உண்மை தான். ஆனாலும் அதில் முழுமை இல்லை. சில பகுதியில் மட்டுமே நீதிமான். இவரும் தேவனுக்கு பிரியமாக வாழ்கின்றவர் என்ற பெயரைப் பெற முடியாது. எனவே திருப்தியுடன் வாழும் வாய்ப்பும் இல்லை.

ஆம். தேவனுடைய எல்ல நீதிகளின் மேலும் நாம் பசிதாகம் கொண்டவர்களாக இருக்கவேண்டும். வாழ்க்கையின் எல்லா பக்கங்களிலும் தேவனுடைய எல்லா பிரியங்களையும் நாம் நிறைவேற்ற தாகம் கொள்ள வேண்டும். மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன் என்று தேவனால் நற்சாட்சி பெற்றான். (எண்–12:7) அதாவது மோசேயின் வாழ்க்கையின் எந்த ஒரு பக்கத்தைப் பார்த்தாலும் அங்கே தேவனுக்கு பிரியமான உண்மை இருந்தது. நம்முடைய ஒவ்வொரு செயலிலும் தேவனுடைய உண்மை விளங்க வேண்டும் என்ற பசிதாகம் வேண்டும். நம்முடைய ஒவ்வொரு குணங்களும் தேவனுடைய பிரியத்திற்கேற்றதாக இருக்க வேண்டும் என்ற பசிதாகம் வேண்டும். தேவனுக்கு பிரியமாக வாழ வேண்டும் என்ற பசிதாகம் வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் விளங்கினால் அங்கே தேவன் நம்மை தம்முடைய நன்மைகளினால் திருப்தியாக்குவார்.

புதிய ஏற்பாட்டின் படி தேவனுக்கு பிரியமாக வாழ்தல் என்பதின் பொருள் என்ன? நாம் இயேசுவோடு நெருங்கிய ஐக்கியம் கொண்டிருக்க வேண்டும். இயேசுவைப் போல நாமும் செயல்களிலும், சுபாவங்களிலும், இயல்புகளிலும் மாறிக் கொண்டிருக்க பிரயாசப்பட வேண்டும். இயேசு நம் வழியாக பிறருக்கு வெளிப்படுகின்ற அளவிற்கு, நாம் அவருடைய சாட்சிகளாயிருக்க ஆர்வம் கொள்ள வேண்டும். இவைகளின் மேல் நாம் மிகுந்த பசிதாகம் கொண்டிருப்போமானால், நாம் திருப்தியுடன் வாழ்வதற்கு எதுவும் தடையாகயிராது.

விருப்பம் மட்டும் அல்ல பசி வேண்டும்

நீதியின் மேல் அல்லது தேவனுக்கு பிரியமான காரியங்களின் மேல் நமக்கு வெறும் விருப்பம் மட்டும் போதாது. அவைகள் மேல் பசிதாகம் வேண்டும். இன்று ஏராளமான ஆவிக்குரிய கிறிஸ்தவ மக்கள் கிறிஸ்துவுக்கேற்ற உயர்ந்த வித வாழ்க்கையை வாழ விரும்புகின்றார்கள். ஆனால் அவர்கள் அவ்விதம் வாழ்வதில்லை. ஏனென்றால் விருப்பங்கள் இருந்த போதிலும் அவ்விதம் வாழத்தூண்டுகின்ற பசி தாகம் அவர்களுக்கு இல்லை.

இந்த பசி, தாகம் என்ற வார்த்தைகளையும் நாம் நன்கு புரிந்துக் கொள்வோம். இயேசு பாக்கிய வசனங்களை அந்நாட்களில் வாழ்ந்த யூதர்களிடம்தான் பேசினார். அவர்களிடம் பசி, தாகம் என்ற வார்த்தைகளைப் பேசும் போது, அதனுடைய முழுமையான அர்த்தத்தை அவர்கள் நன்கு அறிந்திருப்பார்கள். அதாவது பசி, தாகம் என்ற வார்த்தைகள் எந்த அளவிற்கு ஆழமாக புரிந்துக் கொள்ளப்பட வேண்டும் என்று இயேசு எதிர்பார்த்திருப்பாரோ அந்த அளவிற்கு அவர்களால் அது புரிந்துக் கொள்ளப்பட்டிருக்கும்.

பசி, தாகம் என்ற வார்த்தைகளின் அர்த்தத்தை எல்லோரும் அறிந்திருந்தாலும், அந்த பொருளினுடைய அழுதத்தை எல்லோரும் ஒரே விதமாக உணர்வதில்லை. காலையில் டிபன் சாப்பிட்டு விட்டு வேலைக்குப் போகிறீர்கள். வழக்கமாக ஒரு மணிக்கு மதிய உணவு சாப்பிடும் பழக்கம் உங்களுக்கு உண்டு. ஆனால் இன்று சில அலுவல்கள் காரணமாக காலதாமதமாகிறது. இந்த கொஞ்ச கால தாமதத்தின் போது நீங்கள் உணருவதும் பசிதான்.

அதே வேளையில் வறுமையில் உழலுகின்ற ஒருவனுக்கு இரண்டு மூன்று நாட்களாக எந்த உணவும் கிடைக்கவில்லை. இங்கே இவன் உணருவதும் பசிதான். ஆனால் இங்கே உங்கள் பசிக்கும் இவனுடைய பசிக்கும் இடையே உள்ள வித்தியாசம் கொஞ்சமல்ல. பசி என்பதை அவன் புரிந்து கொள்வதற்கும், நீங்கள் புரிந்து கொள்வதற்கும் பெருத்த வேறுபாடு உண்டு. உங்கள் பசியை உங்களால் தாங்க முடியும். உணவு கிடைக்காவிட்டாலும் ஒன்றும் ஆகிவிடாது. அவன் அப்படியல்ல. அவன் உணவிற்காக மிகவும் அங்கலாய்ப்பான், ஆகாரத்திற்காக அவன் கொள்கின்ற ஆர்வமும், வாஞ்சையும் அடக்க இயலாதவை.

அது போலவே தாகமும், பெரும்பாலும் நாம் ஓரளவிற்கு தாராளமாக தண்ணீர் கிடைக்கும் சூழ்நிலைகளிலேயே வாழ்கின்றோம். ஆனாலும் நமக்கு தாகம் உண்டு. கொஞ்சம் வெயிலில் போய் வந்த உடன் தாக உணர்வு ஏற்படுகிறது. ஏதாவது குளிர்பானம் குடித்தால் நல்லது என்று தோன்றுகிறது. இதுவும் தாகம்தான்.

ஆனால் பாலைவனங்களில் பல நாட்கள் பயணம் செய்யும் பயணிகளுக்கு, பல வேளைகளில் தண்ணீர் கிடைக்காமல் போய்விடும். பல மைல்கள் கடும் வெயிலில் பயணம் செய்தும் தண்ணீர் கிடைப்பதில்லை. ஒருநாள், இரண்டு நாள் என்று தாகத்தோடு பயணம் செய்ய நேரிடும். இதுவும் தாகம்தான். ஆனால் நாம் தண்ணீரின் மேல் கொள்கின்ற வாஞ்சைக்கும், அவர்கள் கொள்கின்ற வாஞ்சைக்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு. அவர்கள் தண்ணீருக்காக எடுக்கும் பிரயாசத்தை, நாம் எடுக்கமாட்டோம். ஏனென்றால் தண்ணீரை விரும்புகிறேமேயன்றி, தண்ணீர் கிடைக்காவிட்டால் வாழ முடியாது என்ற நிலை இல்லை.

பாலஸ்தீன தேச மக்கள் அந்நாட்களில் பசியாலும், தாகத்தாலும் அதிகமாக பாதிக்கப்பட்டு வாழ்ந்தார்கள். உணவும், தண்ணீரும் அவர்களுக்கு சுலபமாக கிடைக்கவில்லை. எனவே பசி, தாகம் என்பதை அவர்கள் புரிந்து கொண்ட விதம் நம்மை விட மிக, மிக அதிக அழுத்தம் உடையதாகவே இருக்கும். அவர்களைப் பொறுத்தவரை, பசி, தாகம் என்பது இன்னும் கொஞ்ச நேரத்தில் உணவோ, தண்ணீரோ கிடைக்காவிட்டால் சாக நேரிடும் என்ற நிலையாகும். அப்படியென்றால் உணவை, தண்ணீரை எவ்வளவு அதிக வாஞ்சையோடு அவர்கள் தேடுவார்கள்.

அது போன்ற உணர்வுடனும், மிகுந்த வாஞ்சையுடன் தேவனுடைய நீதியை நம் வாழ்வில் தேட வேண்டும் என்றே இயேசு பசி, தாகம் என்ற வார்த்தைகளை உபயோகித்தார். ஆம். தேவனுக்கு பிரியமாக வாழ வேண்டும் என்ற வெறும் ஆசை மட்டுமல்ல. எப்படியாகிலும் அவ்விதம் வாழ்ந்தே ஆக வேண்டும் என்ற அடங்காத பசியும் தாகமும் அவசியம். அதனை தவிர்க்க முடியாத அளவிற்கு அது நமக்குள் தீவிரமான உணர்வுகளை உருவாக்க வேண்டும்.

மேற்கண்ட விதமான ஒரு மிகுந்த பசிதாகமான அனுபவத்தை யோசேப்பின் வாழ்க்கையில் நாம் காண்கின்றோம். தேவனுக்குப் பிரியமாக இந்த உலகத்தில் வாழ வேண்டும் என்ற மேன்மையான பரிசுத்த தாகம் உடையவன் அவன். அது சாதாரண ஒரு தாகமல்ல. எப்படியும் தேவனுக்குப் பிரியமாக வாழ்ந்தே ஆக வேண்டும் என்ற அடக்க முடியாத பசிதாகம் அது. அவன் பரிசுத்தமாக வாழ்வது என்பதின் மேல் வெறும் விருப்பம் மட்டும் கொள்ளாமல், மிகுந்த வாஞ்சையுடன் அதை தேடத்தக்க நிலையில் ஆழ்ந்த பசியை உடையவனாக இருந்தான்.

அது ஒரு வெறும் விருப்பமாக மட்டும் இருந்திருந்தால், போத்திபாரின் வீட்டில் அவனுக்கு ஏற்பட்ட நிர்ப்பந்தமான சூழ்நிலையில் பாவத்தில் விழுந்திருப்பான். பரிசுத்த வாஞ்சையில் அவன் மிகுந்த தாகமுடையவனாக இருந்ததால் சாதாரணமாக யாராலும் தவிர்க்க முடியாத நிலையில் கூட, அவன் பாவம் தன்னை குறைப்படுத்தாதபடி காத்துக் கொண்டான். எனவேதான் தேவன் அவனை ஒரு தேசத்திற்கே தலைவனாக்கி அனேகருக்கு முன்பாக அவனை உயர்த்தினார்.

இன்றும் பரிசுத்தமாக வாழ விரும்புகின்றவர்கள் பலர். தேவனோடு நெருங்கி வாழ ஆர்வம் கொள்ளுகின்றவர்கள் பலர். வேத வார்த்தைகளின் படி வாழப் பிரியப்படுகின்றவர்கள் பலர். ஆனாலும் அவ்விதம் வாழ்வதற்கான உண்மையான பசியோ, தாகமோ இல்லாத காரணத்தால், அவர்களின் விருப்பங்களினால் எந்த விளைவுகளும் ஏற்படவில்லை.

தேவன் நாம் எந்த அளவிற்கு அவருடைய நீதியை வெற்றியாக நிறைவேற்றுகிறோம் என்பதையல்ல. நாம் அவருடைய நீதியை நிறைவேற்ற எந்த அளவிற்கு பசியுள்ளவர்களாகவும், தாகமுள்ளவர்களாகவும் இருக்கிறோம் என்பதையே பார்க்கிறார்.

ஏனென்றால் நீதியை நிறைவேற்றுகிறவர்கள் பாக்கியவான்கள் என்று அவர் சொல்லாமல், நீதியின் மேல் பசி, தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்றுதான் சொன்னார்.

இது நம்மால் முடியுமா?

பல நேரங்களில் தேவனுடைய மேன்மையானக் காரியங்களைக் குறித்து கேட்கும் போது, அந்த அளவிற்கு நாம் வாழ முடியுமா, இந்த பொல்லாத உலகத்தில், அந்த அளவிற்கு பரிசுத்தமாக வாழ இயலுமா என்ற கேள்விகளையே கேட்கின்றோம். ஆனால் வாழ முடியுமா? முடியாதா? என்பதல்ல முக்கியம். நாம் அவ்விதம் வாழ வேண்டும் என்று விரும்புகின்றோமா? அவ்விதம் வாழ விரும்பும் ஒரு வலிமையான தாகம் நமக்கு உண்டா என்பதே முக்கியம். *தாகமுள்ளவன் மேல் தண்ணீரை ஊற்றுவேன் என்பதே தேவனுடைய வாக்குத்தத்தம். (ஏசாயா – 44:3) தவனமுள்ள ஆத்துமாவைக் கர்த்தர் திருப்தியாக்கி, பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறாரென்று* வேதம் சொல்கிறது. (சங்–107:8)

சவுல் ராஜாவைப் பாருங்கள். அவன் தேவனை அறிந்தவன்தான். தேவனுடைய மகத்துவ வல்லமைகளை வாழ்க்கையில் கண்டவன்தான். தேவன் மேல் பக்தியும் உடையவன்தான். ஆனால் கோலியாத் என்ற மகா ராட்சதன் இஸ்ரவேலருக்கு எதிராக வந்து தேவனை தூஷித்த போது அவனால் எதுவும் செய்ய இயலவில்லை. கோலியாத்தை எதிர்க்க யாரால் இயலும் என்று எண்ணி அவன் பேதலித்து நின்றான். அவனுக்கு தேவனை தூஷிக்கும் கோலியாத்தை வீழ்த்தும் விருப்பம் இருந்திருக்கலாம். ஆனாலும் அவனை மேற்கொள்ள வேண்டும் என்ற உண்மையான பசிதாகம் இல்லை.

ஆனால் சாதாரண கொஞ்ச வயது வாலிபனாகிய தாவீது தேவனை கோலியாத் தூஷிப்பதைக் கண்டு பொங்கியெழுந்தான். தேவனை தூஷிப்பவனை விட்டு விடுவதா என்று கர்ஜித்தான். தேவனை தூஷிப்பவனை யார் தடுத்தாலும் விட மாட்டேன் என்று அவன் வேகமாக அவனுக்கு எதிராக ஓடினான். காரணம் என்ன? அவனுடைய பலம் கொஞ்சம்தான். கோலியாத்திற்கு முன்பு அவன் மிக சாதாரணம்.

ஆனாலும் தேவனைக்குறித்த அவனுடைய பசிதாகம் கொஞ்சமல்ல. அந்த அடங்காத ஆவிக்குரிய பசி தாகத்தினால் தூண்டப்பட்டு தான், அவன் கோலியாத்தை எதிர்த்து போரிட தயங்காமல் போனான். அவன் உடலளவில் சாதாரணமாக இருந்தாலும், தேவனைக் குறித்த தாகம் அதிகமாக இருந்தபடியால் தேவன் அவனை கைவிடவில்லை. தாகமுள்ள அவனை தம்முடைய பலத்தினால் இடைகட்டி மாபெரும் வெற்றியைக் காணச் செய்தார்.

ஆம். ஒரு விஷயம் எவ்வளவு கடினமானது என்பதல்ல. அந்த விஷயத்தில் நம்முடைய தாகமும், வாஞ்சையும் எந்த அளவில் உள்ளது என்பதே முக்கியம் ஆகும். ஆவியின் கனிகள் என்று அழைக்கப்படும், ஆவிக்குரிய நற்குணங்களை வெளிப்படுத்தி வாழ்வதென்பது எளிதான காரியம் அல்ல. பொய்யும், புரட்டும் நிறைந்த உலகில் உண்மையை சார்ந்து வாழ்வது சுலபமானது அல்ல.

ஆனாலும் அவ்விதம் வாழ வாஞ்சிக்கும் ஒரு மனிதனை, அவனுடைய வெற்றியின்படியல்ல. அவனுடைய வாஞ்சையின் படியும், தாகத்தின் படியுமே தேவன் அவனை ஆசீர்வதிக்கின்றார். அவனுடைய வெற்றியல்ல. அவனுடைய இதயம் நிறைந்த தெய்வீக தாகமே தேவனுடைய நன்மைகளை அவனுக்கு கொண்டு வருகிறது.

இன்று கிறிஸ்தவ வட்டாரங்களில் விசுவாசத்தின் வெற்றிகளைக் குறித்த போதனைகள் ஏராளம், ஏராளம். மலைகளை பெயர்ப்பது எப்படி என்பது போன்ற விசுவாச வீரம் நிறைந்த உபதேசங்கள் ஏராளம். ஆனாலும் அந்த விசுவாசத்தை, மக்கள் தங்கள் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட உலகத் தேவைகளுக்காக மட்டுமே அப்பியாசிக்கின்றனர்.

விசுவாசத்தின் மூலம் தங்களால் இயலாத உலக சம்பந்தமான காரியங்களை வெற்றியாக பெறுவதிலேயே அவர்கள் கவனமாயிருக்கின்றனர். ஆனாலும் இயேசு கிறிஸ்துவுக்கேற்ற ஒரு உண்மை நிறைந்த, தூய்மையான வாழ்க்கையை வாழ்ந்து காட்ட முடியும் என்று விசுவாசித்து செயல்படும் மக்கள் மிக, மிகக்குறைவு.

கிறிஸ்துவைப் போல நிந்தைகளை அவமானங்களை பொறுமையுடன் தாங்க முடியும். பொங்கி வரும் கோபத்தை கட்டுப் படுத்த முடியும். மற்றவர்களுக்கு முன்பாக நம்மை தாழ்த்திக் கொள்ள முடியும்.

பிறர் செய்கின்ற அநீதிகளுக்கு பதிலுக்குப் பதில் செய்யாமல் சகிக்க முடியும். கபடும், கள்ளமும் இல்லாமல் மன உண்மையோடு பேச முடியும். பொருளாசையை வெறுக்க முடியும். உலக வழிகளை கையாளாமல் வாழ்க்கைத் தேவைகளை விசுவாசத்தின் மூலம் பெற முடியும். எந்த சூழ்நிலையிலும் கிறிஸ்துவிற்கு சாட்சியாக வாழ முடியும். இவ்விதமான மேலான ஆவிக்குரிய அனுபவங்களை விசுவாசத்தின் மூலம் பெற விரும்பும் மக்களை அதிகமாகக் காணமுடியவில்லை.

ஏனென்றால் ஆவிக்குரிய வாழ்க்கை என்பது, உலக தேவைகளை எளிதாகப் பெறுகிறதற்கான ஒரு வாசலாகவே அவர்களுக்கு தோன்றுகிறது. எனவேதான் அவர்களின் விசுவாசம், ஜெபம், உபவாசம், காணிக்கை ஆகியவைகள் கூட உலகப் பிரகார சுயநலத் தேவைகளை பெறுவதற்காக மட்டுமே உபயோகிக்கப்படுகிறது.

எனவேதான் இன்றைக்கு உலகத்தால் கறைபட்டு போன கிறிஸ்தவ பத்திரிகைகள், ஜெபம், உபவாசம், காணிக்கை மூலம் மக்கள் தங்கள் சரீரப்பிரகார வாழ்க்கையில் பெற்ற நன்மைகளையே பெரிதாக விளம்பரம் செய்து, கிறிஸ்தவத்தை ஒரு வியாபார மார்க்கத்தைப் போல காண்பிக்கின்றன. ஆவிக்குரிய வர்ணத்துடன் பல விஷயங்கள் இருந்தாலும், அனைத்திற்கும் பின்னால் பண ஆசையும், பொருளாசையுமே மறைந்து நிற்கின்றது. ஏனென்றால் அவர்கள் *கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல், தங்களுக்குரியவைகளையேத் தேடுகிறார்கள்.* (பிலி – 2:21)

ஆனால் வேதம் மேலானவைகளை நாம் தேட வேண்டும் என்று நமக்கு அறிவுரை கூறுகின்றது நம்முடைய நோக்கங்களும், ஆசைகளும், தாகங்களும், உலகத்தின் காரியங்களை மையமாகக் கொள்ளாமல், தேவனுடைய ஆவிக்குரிய மேன்மையான காரியங்களையே மையம் கொள்ள வேண்டும்.

நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால் கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்.

பூமியிலுள்ளவைகளையல்ல. மேலானவைகளையே நாடுங்கள். (கொலோ – 3:1, 2)

நாம் தேவனுக்கு பிரியமாக வாழ்தல் என்ற அனுபவத்தின் மேல் ஆழமான பசி, தாகமுடையவர்களாக இருப்போமாயின், நம்முடைய உலகப் பிரகார தேவைகளை அதிசயகரமாக நமக்குத் தர அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். ஏனென்றால் *முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் (வாழ்க்கை தேவைகள்) உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்* என்று சொன்ன இயேசு கிறிஸ்து உண்மையுள்ளவராயிருக்கிறார். (மத் – 6:33)

பசி எப்பொழுது வரும்

ஆவிக்குரிய பசி, தாகம் அல்லது நீதியின் மேல் பசிதாகம் என்பது எல்லாருக்கும் இருந்து விட முடியாது. ஏனென்றால் ஆவிக்குரிய தாகம் அல்லது தேவனுக்குப் பிரியமாக வாழ வேண்டும் என்ற ஆசை, தேவனால் மறுபடியும் பிறந்த அனுபவம் பெற்றவர்களுக்கு மட்டுமே வர முடியும். ஜென்ம சுபாவமான மனிதனுக்கு தேவ நீதியை நிறைவேற்றும் அதிக ஆர்வம் வர முடியாது. ஆவிக்குரியப் பிரகாரமான உயர்ந்த வாஞ்சைகளும், தாகங்களும் உருவாக வேண்டுமானால், முதலில் அவர்கள் ஆவியின்படி மறுபடியும் பிறந்திருக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்துவை மிக நிச்சயமான முறையில் விசுவாசித்து, இதயத்தில் ஏற்றுக் கொள்ளும் போது, ஒருவர் மனிதன் என்ற தாழ்ந்த நிலையிலிருந்து, தேவவனுடைய பிள்ளை என்ற உயர்ந்த நிலைக்கு வருகிறார். அங்கே அவன் ஒரு ஆவிக்குரிய புதிய படைப்பாக மாறி விடுகிறான். (11 கொரி – 5:7) அப்போது அவனுக்குள் பரிசுத்த ஆவியானவர் வந்து செயல்பட ஆரம்பிக்கின்றார். ஆவியின் செயல்பாட்டிற்கு அந்த மனிதன் இசைந்து போகும் போது அவனுக்குள் ஆவிக்குரிய பசியும், தாகமும் தோன்ற ஆரம்பிக்கின்றது. ஆக பரிசுத்தாவியின் கிரியையின் மூலம்தான் ஒரு மனிதன் ஆவிக்கேற்ற பசிதாக முடையவனாக மாறி, மேலான தேவநீதியை வாஞ்சிக்க முடியும்.

இன்று அனேகமான ஆவிக்குரிய மக்கள் தாங்கள் ஆவியினால் நிரப்பப்பட்டவர்கள் என்றும், பலவித ஆவியின் அபிஷேகங்களைப் பெற்றவர்கள் என்றும் பெருமிதத்துடன் கூறுகின்றனர். தங்களுடைய அனுபவங்களை செல்லுமிடமெல்லாம் சாட்சியாக கூறுகின்றனர்.

அதே வேளையில் ஆவிக்கேற்ற நற்குணங்கள் போதிய அளவில் இல்லை. அன்பும், தயவும் இல்லை. கிறிஸ்துவுக்கேற்ற சுபாவ மாற்றங்கள் இல்லை. ஆவிக்கேற்ற உயர்ந்த குணாதிசயங்களை பெற வேண்டும் என்ற உண்மையான தாகம் இல்லை.

ஆவி என்பதும், அபிஷேகம் என்பதும் கொஞ்ச நேர ஆரவாரங்களும், தற்காலிகமான பரவச நிலைகளுமாகவே யிருக்கின்றது. பரிதாபகரமாக இன்றைய ஆவியின் அபிஷேகங்களும், வல்லமையின் வரங்களும், கூடிவரும் இடங்களில் ஆடுவதும், பாடுவதும், உற்சாக கோஷங்கள் போடுவதும் தான் என்ற நிலைக்கு இறங்கி விட்டது. ஆனால் குணங்களிலும், செயல்களிலும் பழைய மனிதனே வெளிப்படுகின்றான். அப்படியானால் இவ்வித அபிஷேகங்கள் ஒருபோதும் உண்மையானவையாக இருக்க முடியாது.

ஆவிக்கேற்ற அணுகு முறைகளிலும், தெய்வீக சுபாவங்களிலும் வளரத் தூண்டாத அபிஷேகம் பரிசுத்த ஆவியின் அபிஷேகமாக இருக்க முடியாது. பழைய மனிதனுக்குரிய சுபாவங்களிலிருந்து விடுதலை அடையாத நிலையில், புதிய படைப்பிற்குரிய புதிய மகிமையான இயல்புகள் தோன்றாத நிலையில், வெறும் வெளிப்புற உற்சாக நிலைகளில் மட்டும் ஒருவரை மகிழ வைத்தால் அது ஆவியானவரின் அபிஷேகம் அல்ல என்பதில் சந்தேகமில்லை.

ஒருவர் அன்னிய பாஷையில் ஆர்ப்பரிக்கிறார். பிறரைக் குறித்த சில காரியங்களை தீர்க்கத்தரிசனம் என்று சொல்கிறார். தினமும் பலவித தரிசனங்களைக் காண்பதாக கூறுகிறார். நோய்களை குணமாக்கும் வல்லமை உண்டென்றும் கூறுகின்றார். வார்த்தைக்கு, வார்த்தை இயேசு தன்னோடு பேசினார் என்றும் சொல்லுகின்றார். நல்லது. இவைகளெல்லாம் ஒரு ஆவியில் நிரம்பிய மனிதனிடம் நிச்சயம் இருக்க முடியும்.

ஆனால் அந்த மனிதனிடம் தாழ்மை நிலை இல்லை. பொறுத்துப் போகும் தன்மை இல்லை. மற்றவர்களை மதிக்கும் பண்பு இல்லை. உள்ளொன்று வைத்து கொண்டு, உதட்டில் மட்டும், தேனொழுக இன்னொன்றைப் பேசுகின்றார். பேசுகிற பேச்சுகளிலும், செயல்களிலும் மாய்மாலமும், கபடும் கலந்திருக்கிறது. பொருளாசையை மையம் கொண்டே அவரின் செயல்பாடுகள் உள்ளன.

இப்படிப்பட்ட முரண்பாடு எப்படி உருவாக முடியும்? ஆவியானவர் வல்லமையாக கிரியைச் செய்யும் மனிதனிடம் ஒரு போதும் இப்படிப்பட்ட மாறுபட்ட நிலைகள் இருக்க முடியாது. ஆவியினை பெற்றாலும் சரி அபிஷேகத்தை பெற்றாலும் சரி அதனை ஆவியின் கனிகளின் மூலம் அடையாளப்படுத்த வேண்டும். இல்லையென்றால் அவரிடம் இருப்பது தேவ ஆவியாக இருக்க முடியாது. தேவன் பரிசுத்தத்தின் தேவன் முரண்பாடுகளின் தேவன். அல்ல.

ஆம். பரிசுத்த ஆவியினைப் பெற்ற மனிதன், எப்போதும் பரிசுத்த வாஞ்சை உடையவனாகவும், தேவனுக்குப் பிரியமாக வாழ வேண்டும் என்ற அடங்காத பசிதாகமுடையவனாகவே இருப்பான். அது ஆவியானவரின் இயற்கையான செயல்பாடு ஆகும்.

அந்த மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ச்சியடைவானோ அவ்வளவுக்கவ்வளவு, இன்னும் கர்த்தருக்குள் வளர வேண்டும் என்ற தாகத்தை உடையவனாக இருப்பான். அவன் அடைந்து விட்ட ஆவிக்குரிய அனுபவங்களில் அதிக சுயதிருப்தியடைந்து, நின்றுவிடாமல், இன்னும் அடைய வேண்டிய மேலான அனுபவங்களை வாஞ்சித்து, மிகுந்த தாகத்தோடு அவைகளைத் தேடுவான். அவ்விதமான வாஞ்சைகளைக் காணுகின்ற தேவன் அவனை எப்பொழுதும் மனநிறைவும், திருப்தியும் உடைய மனிதனாக நிலைநிறுத்துகின்றார்.

உண்மையான கிறிஸ்தவன் தன்னிடம் குறைவான சுபாவ நிலைகளும், தவறான குணாதிசயங்களும் வெளிப்பட்டால் அதனை சாதாரணமாக எடுத்துக் கொள்ளமாட்டான். தன்னிடம் காணப்படும் தேவனுக்கு உகந்ததல்லாத விஷயங்களோடு ஒரு போதும் சமரசம் செய்து கொள்ளமாட்டான். அவைகளை சாதாரணமாக எடுத்துக்கொண்டு அவைகளைக் குறித்து கவலைப்படாத மனநிலையோடு வாழ்வது அவனுக்கு கடினமான காரியமாகவேயிருக்கும்.

எவ்வளவு பெரிய பரிசுத்த நிலையை அடைந்தவர்களும் கூட முற்றிலும் குறைவுகளுக்கு விதிவிலகிவிட்டவர்கள் அல்ல. அவ்வப்போது சில தவறான சுபாவங்களும், இயல்புகளும், தங்களைத் தொடர்ந்து வருவதை அவர்கள் பார்க்கவே செய்வார்கள். அவ்வப்போது தங்களால் ஏற்கெனவே துரத்தி விடப்பட்ட சில பழைய குணங்களும், போக்குகளும் திரும்பவும் தங்களிடம் வந்து ஒட்டிக் கொள்ள முயற்சிப்பதை அவர்கள் காண்பார்கள்.

ஆவிக்கு எதிராக மாம்சீக இயற்கைகள் போராட வருவது சகஜம்தான். ஆனால் அவைகளோடு சமரசம் செய்து கொண்டு, அவைகளை துரத்த முயற்சிக்காமல் போவதுதான் தவறு. உண்மையான கிறிஸ்தவர்கள் தங்களோடு சேர்ந்து கொள்ள முயற்சிக்கின்ற தவறான குணாதிசயங்களுக்கு எதிராக எப்போதும் போராட தயாராயிருப்பார்கள்.

எகிப்தை விட்டு விலகி வந்து கானானுக்குள் பிரவேசித்த இஸ்ரவேலர்கள் அங்கே ஏற்கெனவே குடியிருந்த சில தவறான வழிமுறைகளைக் கொண்ட இனத்தாரை துரத்திவிட தீவிரம் காட்டாமல் போனார்கள். அவர்களை துரத்திவிட தீவிரமாயிருக்கும்படி தேவனால் அவர்கள் கட்டளை பெற்றிருந்தும் அவர்கள் அந்த விஷயத்தில் தீவிர கவனம் செலுத்தவில்லை.

அதன் விளைவாக பின்னாட்களில் அந்த குடியினர், இஸ்ரவேலர்களுக்கு கண்ணிகளாக மாறினார்கள். காலப்போக்கில் இஸ்ரவேல் மக்கள் அவர்களின் தவறான பழக்க வழக்கங்களையும், தேவனுக்கு எதிரான செயல் முறைகளையும் கற்றுக்கொண்டு, தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கு தூரமாகிப் போனார்கள்.

அதுபோலவே தேவன் நம்மை பாவத்திலிருந்து விடுதலையாக்கிய பின்னரும் கூட பரிசுத்தத்திற்கு புறம்பான சில விஷயங்கள் நம்மிடம் வந்து ஒட்டிக் கொள்வதுண்டு. அங்கே நாம் அவைகளை துரத்திவிட ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். அது ஒரு பொருளாசையாகவோ, புகழாசையாகவோ, தாழ்மையற்ற நிலையாகவோ, கோபமாகவோ, மன வைராக்கியமாகவோ, பெருமையாகவோ, விட்டுக் கொடுக்க விரும்பாத மன நிலையாகவோ இருக்க முடியும். அவைகள் எந்த வடிவத்திலிருந்தாலும், அவைகளால் நாம் கறைப்படக்கூடாது என்ற தாகம் நமக்கு வேண்டும். அவைகளை இன்று சற்று அனுமதித்தால், நாளை துரத்தினாலும் போகாமல் ஒட்டிக் கொள்ளும் என்ற விழிப்புணர்வு வேண்டும். அவைகளை விலக்கி வெளியேற்ற விரும்பும் தாகமில்லாவிடில், தேவனோடுள்ள தொடர்பு நிலைகளில் மிகவும் பின்னுக்கு போய்விட்டோம் என்பதே அர்த்தமாகும்.

சிறப்பான பிரசங்கங்களை செய்கின்ற சில ஊழியர்களும், சிறப்பான பிரசங்கங்களை கேட்கின்ற சில விசுவாசிகளும் தங்களிடம் உள்ள சில சுபாவங்களும், ஆசை நிலைகளும், செயல்பாடுகளும் தேவனுக்கு எதிரானவை என்பதை அறியாமலில்லை. ஆனால் அவைகளை தங்களைவிட்டு அப்புறப்படுத்தும் தாகம் இல்லை. அவைகளை அருவருப்பாக உணரும் தன்மை இல்லை. எனவே

ஆசைகளை சாதாரணமாக எடுத்துக் கொண்டு, நாளடைவில் ஆசைகள் ஒன்றும் பெரிய தப்பில்லை என்று மனநிலைக்கு வந்து விடுகின்றார்கள். எனவே அவர்கள் தேவனால் திருப்தியடையும் ஆசீர்வாத நிலைக்கு புறம்பாகி, உலகப்பிரகாரமான உயர்வுகளிலும், லாபங்களிலும் திருப்தியைத் தேடும் நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகின்றார்கள்.

பிறருடைய தவறான போக்குகளோடு

உண்மையான நீதிமான் தன்னிடம் உள்ள தவறான போக்குகளோடு சமரசம் செய்ய விரும்பாதவன் மட்டுமல்ல. அவன் பிறரிடம் காணப்படும் தவறான போக்குகளோடும் சமரசம் செய்து கொள்ள மாட்டான். அவன் பிறருடைய அநீதிகளையும், அக்கிரமங்களையும் பொறுமையோடு சகித்துக் கொள்வான். ஆயினும் பிறரிடம் உள்ள முரண்பாடுகளையும், சத்தியத்திற்கு புறம்பான செயல்பாடுகளையும் சாதாரணமாக எடுத்துக் கொள்ள அவனால் இயலாது.

பிரபலமான ஒரு தேவ ஊழியர் பண ஆசையின் விளைவாக தப்பிதமான முறையில் ஊழியம் செய்வதை பலர் அறிவர். அவர் தன்னை பெரிய ஒரு தீர்க்கத்தரிசியாகக் காட்டி கொள்வதற்காக அவ்வப்போது பொய்யான காரியங்களை தீர்க்கத்தரிசனமாக உரைப்பதை பலர் அறிவர். அவருடைய செயல்பாடுகள் யாவும் பணம், புகழ், ஆடம்பரம் ஆகியவற்றை மையமாகக் கொண்டிருப்பதை, யாராலும் எளிதாகக் கண்டறிய முடியும்.

ஆனாலும் சத்தியத்தை நன்குணர்ந்த பெரிய பாஸ்டர்கள் பலர் கூட அவரை வைத்து தங்கள் சபையில் கூட்டங்கள் நடத்துவதை பெருமையாக எண்ணுகின்றனர். பிரபலமானவர் என்ற ஒரே காரணத்திற்காக அவரோடு தொடர்பு கொள்வதையும், அவரை தங்கள் சபைக்கு அழைத்து பேச வைப்பதையும் அவர்கள் ஒரு அந்தஸ்தாக எண்ணுகின்றனர்.

கர்த்தருடைய பெயரைச் சொல்லிக் கொண்டு ஒருவர் தவறாக செயல்படுகிறார் என்று அறிந்திருந்தும், அவர்கள் அவருடைய தவறுகளை சாதாரணமாக எடுத்துக் கொள்ளும் காரணம் என்ன? சத்தியத்தைக் குறித்த ஒரு சரியான தாகமின்மைதான். அவர்களால் அவருடைய தவறுகளை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடிகிறதென்றால், உண்மையைக் குறித்த விஷயத்தில் அவர்களின் உணர்ச்சி நிலைகள் அவ்வளவுதான் என்பது தெளிவாகிறது.

ஆனால் கர்த்தருடைய வழிகளின் மேலும், அவர் எழுதிக் கொடுத்த சத்திய நெறிகளின் மேலும் உண்மையான வாஞ்சையும், தாகமும் உடையவர்களால், பிறருடைய குற்றமான காரியங்களை எளிதாக ஜீரணித்துக் கொள்ள முடியாது. யோவானால் பரிசேயர்களின் விஷங் கலந்த விஷயங்களை அற்ப விஷயங்களாக எடுத்துக் கொள்ள இயலவில்லை. எரோதுவின் பாவத்தை அவன் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்க இயலவில்லை. அவன் குறை கூறினான். அவன் குற்றஞ்சாட்டினான்.

மதத்தலைவர்களின் மாய்மாலமான காரியங்களை இயேசுவால் சாதாரணமாக எடுத்துக் கொள்ள இயலவில்லை. அவர் காரசாரமாக குற்றஞ்சாட்டி கண்டித்துப் பேசினார். பவுலின் நிருபங்களிலெல்லாம், தவறான நோக்கங்களோடு ஊழியம் செய்தவர்களை கடுமையாகச் சாடியதை அதிகமாகப் பார்க்க முடியும். ஆம் நீதியின் மேலும், தேவனுடைய உண்மைகளின் மேலும் சரியான தாகங்கொண்டவர்களால் மற்றவர்களின் உண்மைக்கு புறம்பான போக்குகளோடு சமரசம் செய்து கொண்டு, சாதாரண மனநிலையோடு தொடர முடியாது.

வேதனைக்குரியப் பிரகாரமாக இந்நாட்களில், மற்றவர்களின் போலித்தனங்களையும், தவறான செயல்பாடுகளையும், சாதாரணமாக எடுத்து கொண்டு, அவர்களோடு நல்ல ஐக்கியம் கொள்வதையே பலர் உயர்ந்த ஆன்மீக நிலையாக எண்ணுகின்றார்கள். பிறருடைய தப்பிதமான, அநேகரை பாதிக்கும் விதமான மாய்மாலச் செயல்பாடுகளைக் குறித்து விமர்சிப்பதை, குறை கூறும் ஆவியின் செயலாகவும், குற்றஞ்சாட்டும் ஆவியின் குணமாகவும் காண்பிக்கின்றார்கள்.

சகிப்புத்தன்மையும் சமரசமும்

சகிப்புத் தன்மை என்பது வேறு. சமரசத்தன்மை என்பது வேறு. மற்றவர்களின் தவறுகளையும், குற்றங்களையும் கண்டு கொதிப்படைந்து அவர்களுக்கு எதிராக கோபாவேசத்தோடு செயல்படாமல் சகிப்புத் தன்மையோடும், பொறுமையோடும் பக்குவத்தோடும் செயல்பட வேண்டியது அவசியம். அதே வேளையில் யார் எப்படி தவறாகப் போனாலும் அதைக் குறித்த ஒரு உறுத்தலின்றி, சாதாரணமாக அவைகளை எடுத்துக் கொண்டு சமரசமாகிப் போவது மிகவும் தவறான விஷயமாகும். மற்றவர்களின் தவறுகளை சாதாரணமாக எடுத்து கொள்கின்றவன், தன்னுடைய தவறுகளைக் குறித்தும் உணர்ச்சியற்றவனாகவே இருப்பான்.

யோசேப்பு தன்னுடைய சகோதரர்கள் தவறாகச் செயல்படுவதைக் கண்டு மனப்புழுக்கமடைந்து, தன் தகப்பனிடம் போய் அவைகளைச் சொன்னான். தவறுகளை அவனால் சாதாரணமாக எடுத்துக் கொள்ள இயலவில்லை. தப்பிதமான செயல்களோடு அவனால் சமரசமாகிப் போக இயலவில்லை. நீதியின் மேலும், உண்மையின் மேலும் அவன் தாகங்கொண்டவனாகயிருந்தபடியினால், யார் எப்படி போனால் எனக்கென்ன, எனக்கு பிரச்சனை இல்லாமலிருந்தால் சரிதான் என்று அவனால் சும்மாயிருக்க முடியவில்லை.

அன்று இஸ்ரவேலர்களின் பாளையத்தில் சிலர் பாவமான காரியங்களில் ஈடுபட்டபோது அதனை எல்லோரும் பெரிய விஷயமாக எடுத்துக் கொள்ளவில்லை. அதனைத் தொடரவிடக் கூடாது என்ற ஆவிக்குரிய வைராக்கியம் எல்லாருக்கும் ஏற்பட்டுவிட வில்லை. ஆனால் பினகாஸ் என்ற மனிதன் அந்த பாவமானச் செயல்களைக் கண்டு மனங்குமுறி, தேவ வைராக்கியத்தோடு ஈட்டியோடு பாய்ந்து வந்தான்.

அவனால் அந்தத் தவறானச் செயல்களைக் கண்டு மனப்பாதிப்பின்றி சும்மாயிருக்க இயலவில்லை. நீதியின் மேல் அவனுக்கிருந்த பசிதாகம், தேவனுக்காக வைராக்கியத்தோடு எழுந்து செயல்படத் தூண்டியது. ஆம். தேவனையும் அவருடைய வேதத்தையும் நன்கு உணர்ந்து ஏற்றுக் கொண்டவர்கள் நீதியின் மேல் தாகமாயிருந்து சத்தியத்திற்கு புறம்பான விஷயங்களை கண்டு மனக் கொதிப்படையவேச் செய்வார்கள்.

வேதாகமத்தில் எந்த ஒரு தீர்க்கத்தரிசியும் சத்தியத்திற்கு புறம்பான செயல்களைக் கண்டுகொண்டு சும்மாயிருக்கவில்லை. உண்மையைக் குறித்த தாகமும், தேவ வைராக்கியமும் சத்தியத்திற்கு உகந்ததல்லாத விஷயங்களுக்கெதிராகவும், மாய்மாலமான போக்குகளுக்கெதிராகவும் அவர்களை கொதித்தெழத் தூண்டியது. பல நேரங்களில் அந்த தாகத்தின் விளைவாக கடுமையான வார்த்தைகளை உபயோகிக்கவும் அவர்கள் தயங்கவில்லை.

தாகமுடையோர் திருப்தியடைவார்

இந்த உலகம் பணத்தின் மேல் தாகமாயிருக்கிறது. பேர், புகழ், செல்வாக்கு, வசதி நிலைகளுக்காக மிகவும் பசியாயிருக்கிறது. எப்படியாவது உலகப்பிரகாரமான வளமை நிலைகளை அடைய வேண்டும் என்ற தாகத்தினால் நீதி, நேர்மை, உண்மை, பண்பு, மனசாட்சி ஆகியவற்றை அது புறக்கணித்து செயல்படுகிறது. பணம், பொருள், புகழ்

உயர்நிலைகளுக்காக மனிதன் உண்மை நிலைகளை மிகவும் சாதாரணமாக ஊதாசினம் செய்கின்றான். ஆனால் வாழ்க்கையின் பாதையில் அவன் உண்மையான திருப்தி நிலைகளையும், மனநிறைவினையும் அடையாமலேப் போகிறான்.

ஆனால் கர்த்தருக்குப் பிரியமான உண்மை, நேர்மை, உயர்ந்த குணநிலைகளில் தாகமாயிருப்பவன், இந்த உலகத்தின் பார்வையில் ஏதுமற்றவனாகயிருந்தால் கூட, தேவனால் அவன் திருப்தியாக்கப்பட்ட மனிதனாக இருக்கின்றான். ஏனென்றால் கர்த்தருடைய நியாயங்களையும், நீதிநெறிகளையும் வாழ்க்கையில் நிறைவேற்ற வேண்டும் என்ற தாகம் உடையவனோடு தேவன் எப்போதும் தம்முடைய ஐக்கியத்தை விளங்கச் செய்கின்றார். உண்மை என்னும் விஷயத்தில் மிகவும் பசியாயிருந்த யோசேப்போடு தேவன் எப்போதும் தம்முடைய ஐக்கியத்தை வைத்திருந்தார். (ஆதி – 39:2) எனவே பாடுகளின் பாதையிலும் அவன் தேவனால் திருப்தியாக்கப்பட்டவனாக வாழ்ந்தான். அப்படிப்பட்ட மனிதனை தேவன் ஒருநாள் மிகவும் உயர்ந்த நிலைக்கு கொண்டு வந்தார்.

சவுலினால் அதிகமாக துன்புறுத்தப்பட்ட போதிலும் தாவீது, சவுலுக்கு அழிவைத் தேடுகின்ற ஒரு பசியை உடையவனாயிருக்கவில்லை. சவுலைக் கொன்று போடுவதற்கான வாய்ப்புகள் அவனை தேடி வந்த வேளைகளில் கூட அவனோ தேவனுடைய நீதி, நியாயங்களுக்காக தாகமுடையவனாக விளங்கி, கர்த்தருக்கு உகந்தவனாக நிற்பதிலேயே அதிக குறியாயிருந்தான். எனவேதான் அவன் பலவித சோதனைகளின் நடுவிலும் தேவனுடைய ஐக்கியத்தினால் சமாதானத்தையும், மனதிருப்தியையும் அனுபவிக்கிற மனிதனாக விளங்கினான். அவன் துன்பங்களின் நடுவிலும் சமாதானத்தோடு நித்திரை செய்கிறவனாக இருந்தான். (சங். – 4:8)

ஆம். கர்த்தருக்கேற்ற பரிசுத்த குணநிலைகளுக்காகவும், உயர்ந்த உண்மை நிலைகளுக்காகவும் நாம் அதிக வாஞ்சையாயிருக்கும் போது, கர்த்தர் நம்மை தம்முடைய நன்மைகளினாலும், ஐக்கியத்தினாலும் திருப்தியடையச் செய்வது நிச்சயம். உண்மைக்காக தாகம் கொண்ட மனிதனை விட்டு அனைவரும் அகன்று போனால் கூட, தேவ ஐக்கியம் அவனுடைய இதயத்தை நிரப்பிக் கொண்டேயிருக்கும். அந்த நிறைவினால் அவன் எப்போதும் திருப்தியடைந்த மனநிலையை யுடையவனாக விளங்குவான்.

*****

இரக்கமுள்ள இதயம் மகிழ்ச்சியின் உறைவிடம்

6

> இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் இரக்கம் பெறுவார்கள். (மத்தேயு – 5:7)

சகலவற்றிலும் சிறந்தது எது என்றால் அது அன்பே என்று உறுதியாகக் கூறலாம். அந்த அன்பின் முக்கியமான ஒரு வெளிப்பாடுதான் இரக்கம். இரக்கம் இல்லாத எவரும் அன்புள்ளவராக அல்லது அன்பை அறிந்தவராகவோ இருக்க முடியாது. தேவன் அன்பாயிருக்கிறார் என்று சொல்லுகின்ற வேதம் *அவர் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர்* என்றும் கூறுகிறது. எரேமியா தீர்க்கத்தரிசி தேவனைப் பற்றிக் கூறும் போது "அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை" என்று குறிப்பிடுகின்றான். (புலம்பல் – 3:22)

மாபெரும் சாம்ராஜ்யத்தை நிறுவி உலகளாவிய செல்வாக்கு படைத்தவர்களாயிருந்த ரோமர்கள் இரக்கக் குணத்தை ஒரு பலவீனமாகவே எண்ணினார்கள். மற்றவர்களுக்கு எளிதாக இரங்குகிறவர்கள் மன உறுதியற்ற மனிதர்கள் என்று அவர்கள் எண்ணினார்கள். அவர்கள் நீதி, நியாயம் சட்டதிட்டம் ஆகிய விஷயங்களில் மிகவும் கடுமையான அணுகுமுறைகளை உடைவர்கள். இரக்கம் அதிகமானால் அவைகளை சரியாக செயல்படுத்த முடியாது என்பது அவர்களது கருத்தாகயிருந்தது. யூதர்களும் கிட்டதட்ட இரக்கத்தை விட கடுமையாக நடந்து கொள்ள முடிகின்ற, கண்டிப்பினை செயல்படுத்த முடிகின்ற நிலையையே மேன்மையாக எண்ணினார்கள்.

அப்படிப்பட்ட ஒரு காலத்தில்தான், அப்படிப்பட்ட சிந்தையுள்ள மக்கள் மத்தியில்தான் இயேசு *"இரக்கம் உடையவர்கள் பாக்கியவான்கள்"* என்று போதனை செய்தார். அதாவது யார் இரக்க குணத்தை உடையவர்களாக இருக்கின்றார்களோ, அவர்கள் மிகவும் மகிழ்ச்சியானவர்களாகவும், மனநிறைவு உடையவர்களாகவும், திருப்தியுடைய மக்களாகவும் இருப்பார்கள் என்று கூறினார்.

இந்நாட்களில் இரக்கம் என்பது ஒரு உயர்ந்த பண்பாக சமுதாயத்தில் எற்றுக் கொள்ளப்பட்டிருப்பது உண்மை. ஆயினும் பெரும்பாலோனார் தங்களை கண்டிப்பான, கடுமையான, வறட்சியான மனநிலையை உடையவர்களாகவே காண்பிக்க விரும்புகின்றனர். அலுவலகங்களிலும், தொழில் ஸ்தாபனங்களிலும் முக்கிய நிலையிலிருப்பவர்கள் தாங்களை ஹிட்லர் ரக ஸீரியஸான மனிதர்களாகக் காண்பிக்கவே ஆசைப்படுகிறார்கள்.

எந்த ஒரு துறையாயினும் சரி அங்கே காரியங்களில் போதுமான அளவிற்கு கடுமை நிலையை காண்பிக்க வேண்டியது அவசியமே. கண்டிப்பும், கடுமையும் பல நிலைகளில் முக்கிய தேவைகளே. அதே வேளையில் இரக்கம் என்ற உயர் பண்பினை அதற்கு தடையான ஒன்றாக எண்ணி தள்ளிவிடக் கூடாது. தேவன் சத்தியம் என்ற நிலையில் கடுமையான அணுகுமுறை உள்ளவர். அதே வேளையில் மிகுந்த இரக்கமும், தயையும் உள்ளவரே அவர்.

ஆம். மிக முக்கிய தெய்வீக சுபாவங்களில் ஒன்றே இரக்கம். ஒரு மனிதனுக்குள் மிகுந்த சந்தோஷத்தையும், திருப்தியையும் கொண்டு வருகின்ற வல்லமை உடையதே இரக்கம். ஒருவர் இரக்கம் உடையவராகயிருக்கிறார் என்றால், அவர் சந்தோஷமாயிருக்கிறார் என்றும் அர்த்தம் கொள்ள முடியும்.

ஆனால் இரக்கம் என்பது ஒரு வெறும் ஒரு உணர்ச்சி நிலை அல்ல. அது மனிதனை செயல்படத் தூண்டுகின்ற சக்தியுடையதாக விளங்க வேண்டும். எனக்கு தெரிந்த ஒருவர் மிகவும் இளகிய சுபாவமுடையவர். பிறரிடம் ஒரு சிறு கஷ்டத்தைக் கண்டால் யார், எவர் என்ற பேதமின்றி மனதுருகி விடுவார். யாருடைய துன்பத்தைக் கண்டாலும் கண்ணீர் விட்டு விடுவார். வறுமை, பசி, நோய் ஆகியவற்றைக் குறித்து யாராவது அவரிடம் பேசினால், "ஐயோ – பாவம்"

என்று மிகவும் பரிதாபப்படுவார். ஆயினும் நல்ல வசதி நிலை உடைய அவர், எந்த சூழ்நிலையிலும் யாருக்கும் ஒரு சிறு உதவி செய்ய மாட்டார். பசியால் வாடுகிறவனைக் கண்டு பரிதாபப்படுவார். ஆனால் ஒரு "பன்" வாங்கிக் கொடுக்கக் கூட முன்வரமாட்டார்.

ஆம். வெறும் பரிதாப உணர்வோ, பச்சாதாப உணர்வோ, உண்மையான இரக்கம் அல்ல. என்னுடைய ஊழியத்தின் தொடக்க காலங்களில் ஒரு வேளை உணவுக்கு கூட நான் மிக, மிகக் கஷ்டப்பட்டு கொண்டிருந்தேன். அந்நாட்களில் சிலர் என்னுடைய காரியங்களை மிக, மிக அக்கறையாக விசாரிப்பார்கள். "உங்கள் சகோதரனைப் போல என்னை நினைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி என்னுடைய சோதனையாக நிலமைகளை மிகவும் ஆர்வமாக கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். சில நேரங்களில் என்னுடைய கஷ்ட நிலைகளைக் கேட்டு கண்கலங்கி விடுவார்கள். ஆனாலும் ஒரு சிறு உதவியை செய்து ஒரு உற்சாகத்தைத் தர முன்வரமாட்டார்கள். ஆம். அவர்கள் எந்த பிரயோஜனமுமில்லாத அக்கறையாளர்களே.

ஆனால் இரக்கம் என்பது மற்றவர்களின் நிலமைகளைக் கண்டு நாம் சிந்தனை நிலையில் உருகுகின்ற ஒரு உணர்ச்சி நிலை அல்ல. இரக்கம் என்பது வலிமையான ஒரு செயலுக்கு நேராக மனிதனை நடத்துகின்ற மேன்மையான ஒரு விசையாகும். இரக்கம் ஆக்கப் பூர்வமாக நன்மை செய்கின்ற ஒரு நிலைக்கு நேராக நம்மை நடத்த வேண்டும். *வசனத்தினாலும், நாவினாலுமல்ல, கிரியையினாலும், உண்மையினாலும் அன்பு கூர வேண்டும்* என்று யோவான் கூறுகிறான். (1 யோ – 3:18)

இவர்களும் பாவிகளா?

பல நேரங்களில் யாருக்கும் தீங்கு செய்யாத, தொந்தரவு கொடுக்காத நிலையையே உயர்ந்த பண்பின் நிலையாக நாம் நினைத்து விடுகிறோம். அதனால்தான் சிலருடைய வாழ்க்கையில் ஏதாவது கஷ்டங்கள் வரும் போது "எனக்கு ஏன் இந்த துன்பம் நான் யாருக்கு என்ன தீங்கு செய்தேன்" என்று அவர்கள் புலம்புகின்றனர். ஏனென்றால் யாருக்கும் எந்த பிரச்சனையையும் கொடுக்காமல் இருப்பதையே அவர்கள் நீதி மிக்க வாழ்வு என நினைக்கின்றனர்.

ஆனால் இறைநீதி வித்தியாசமானது. நாம் பல விஷயங்களை செய்யாமலிருப்பது மட்டுமல்ல. பல விஷயங்களை செய்ய வேண்டியதும் அவசியமாகிறது. நாம் பல விஷயங்களை செய்யத் தவறுவதும் தேவனுடைய பார்வையில் பாவமே. தேவனுடைய நியாயத்தீர்ப்பில் பாவமான செயல்களை செய்தவர்களுக்கு மட்டுமல்ல. நன்மையான பல செயல்களை செய்யத் தவறினவர்களுக்கும் ஆக்கினைத் தீர்ப்பு உண்டு.

உலக அரசாங்கமும், சட்டங்களும் நாம் நன்மை செய்யாததற்காகவோ, பிறருக்கு உபகாரங்களைச் செய்யாததற்காகவோ, நம்மை கண்டித்து தண்டனை தர முடியாது. ஆனால் தேவனுடைய நீதியின்படி நாம் நலமானவைகளை செய்யத் தவறியவைகளுக்காகவும் தண்டிக்கப்படுவோம்.

உலகத்தில் நாம் மிக மோசமாக செயல்பட்டவர்களையே பாவிகள் என்றும் படுபாவிகள் என்றும் நாசமாகப் போகிறவர்கள் என்றும் கூறுவோம். ஆனால் தேவனோ பிறருக்கு நல்ல பல செயல்களை செய்ய மனதை சாய்க்காதவர்களையும், சிரமப்படாதவர்களையும் கூட நாசமாகப் போகிறவர்கள் என்ற நிலையிலும் சபிக்கப்பட்டவர்கள் என்ற நிலையிலும் பார்க்கின்றனர்.

நியாயத்தீர்ப்பின் தன்மைகளைக் குறித்து இயேசு சீடர்களிடம் பேசும் போது ஒரு கூட்டம் மக்களை சபிக்கப்பட்டவர்கள் என்று காண்பித்து, அவர்கள் நித்திய அக்கினியை பிசாசோடு சேர்ந்து அனுபவிப்பார்கள் என்றும் கூறினார்.

யார் அந்த கூட்டத்தார்? அவர்களில் யாரும் ஊழல் செய்தவர்களோ, அக்கிரமம் புரிந்தவர்களோ, கொலை, கொள்ளை குற்றம் புரிந்தவர்களோ அல்ல. அவர்கள் சபிக்கப்பட்டவர்களாகக் கருதப்படும் அளவிற்கு என்ன தவறைச் செய்தார்கள்? இயேசு கூறுகிறார் பாருங்கள்.

அவர்கள் பசியாயிருந்த சிலருக்கு உணவளிக்கவில்லை. தாகமாயிருந்த சிலருக்கு தண்ணீர் தர முன்வரவில்லை. உடையில்லாதிருந்த சிலருக்கு உடையளிக்கவில்லை. வியாதியாயிருந்த சிலரைப் போய் விசாரிக்கவில்லை.

நம்முடையப் பார்வையில் இவைகளெல்லாம் பாவங்களோ, தண்டனை பெறத்தக்க குற்றங்களோ அல்ல. அப்படித் தானே. ஆனால் இயேசுவின் பார்வையில் இவை கொடிய குற்றங்கள். இவர்கள்

கடுமையான தண்டனைக்குரியவர்கள். (மத்தேயு – 25:31 – 46) *நன்மை செய்யும் படி உனக்கு திராணியிருக்கும் போது அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே"* என்று வேதம் சொல்கிறது (நீதி–3:27) *ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற் போனால், அது அவனுக்கு பாவமாயிருக்கும்* என்று யாக்கோபு எச்சரிக்கை செய்கிறான். (யாக் – 4:17)

காணிக்கையும், உதவியும்

இன்று ஏராளமான ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் கூட இரக்க சிந்தையை செயல்படுத்த வேண்டியதின் தேவையை உணராமலே இருக்கின்றார்கள். அநேகர் காணிக்கை விஷயத்தில் மிகவும் தாராளமாகவே உள்ளனர். அது மெச்சத்தக்கதே. ஆனால் அவர்கள் பாஸ்டர்களிடமும், மிஷனரி ஸ்பானங்களிடமும் காணிக்கை அளிப்பதோடு நின்று விடுகின்றார்கள். பேரளவில் சபைகளிலும் இரக்கச் சிந்தையோடு பிறருக்கு உதவி செய்வதைக் குறித்து போதுமான அளவு பேசப்படவேயில்லை. ஏனென்றால் அது தங்களுக்கு வந்து கொண்டிருக்கின்ற காணிக்கையின் அளவுகளை பாதிக்கும் என அஞ்சுகின்றார்கள். ஆனால் காணிக்கை கொடுக்கின்ற விஷயத்திலே காண்பிக்கின்ற அளவு சிந்தையை நாம் இரங்கி உதவி செய்கின்ற விதத்திலும் காண்பிக்க வேண்டியது அவசியமாயிருக்கின்றது. கர்த்தர் அதை விரும்புகின்றார்.

ஒரு முறை நோயினால் பாதிக்கப்பட்ட விசுவாசி ஒருவர், சிகிட்சை செய்ய பணமில்லாமல், தன்னுடைய சக விசுவாசியிடம் கடனாக ஒரு சிறு தொகையைக் கேட்டார். விஷயத்தை நன்கு கேட்டறிந்த அந்த சகவிசுவாசி" உங்கள் கஷ்டம் எனக்கு புரிகிறது. பணம் இல்லை என்றும் பொய் சொல்லமாட்டேன். ஆனால் காணிக்கை பணம் தான் என்னிடம் உள்ளது. கர்த்தருக்கு கொடுக்க வேண்டியதை வேறெதற்கும் செலவு செய்வதை நான் அனுமதிப்பதில்லை" என்று பக்தி பூர்வமாக பதிலளித்து அந்த விசுவாசியை அனுப்பி வைத்தார்.

காணிக்கை விஷயத்தில் வைராக்கியம் தேவைதான். அதே வேளையில் காணிக்கை என்ற பெயரில் கொடுப்பது மட்டுமே கர்த்தருக்கு கொடுப்பது என்று கூற முடியாது. தேவை மிகுந்த ஒருவருக்கு இயன்ற உதவியைச் செய்வதும் கர்த்தருக்கு கொடுக்கின்ற காணிக்கைதான்.

தேவை வற்புறுத்தப்படும் போது காணிக்கைக்கென்று வைத்தப் பணத்திலிருந்து எடுத்து உதவி செய்வதும் தவறாக இருக்க முடியாது.

சற்று முன்னர் இயேசு ஒரு கூட்டம் மக்களை சபிக்கப்பட்டவர்களாக அடையாளம் காட்டினதைப் பார்த்தோம். அதே வேத பகுதியில் ஒரு கூட்டம் மக்களை ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகவும் காண்பித்தார்.

பசி, தாகம், உடையின்மை, வியாதி போன்ற சூழ்நிலைகளில் இருந்தவர்களுக்கு செய்யப்பட்ட உதவிகளை தமக்கே செய்யப்பட்ட உதவிகளாக அவர் அங்கே கூறுவதை நாம் காண்கின்றோம். (மத்தேயு – 25: 34 – 40) அப்படியானால் இரக்கத்தை வெளிப்படுத்தும் உதவிகளும் கர்த்தருக்கு காணிக்கைக் கொடுத்தலின் ஒரு பகுதிதான் என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

ஒரு குறிப்பிட்ட விசுவாசி தான் சார்ந்துள்ள சபைக்கு பெருந்தொகையை தசம பாகமாகக் கொடுக்கின்றார். அந்த விஷயத்தில் அந்த சபையில் அவர் மிகப் பெரிய கொடையாளராக அறியப்பட்டுள்ளார். ஆனால் அந்தக் கொடையாளர் அந்த சபையில் உள்ள எந்த ஓர் ஏழை விசுவாசிக்கும் ஒரு நாலணா உதவி கூட செய்தது இல்லை. வறுமையில் வாழுகின்ற பல விசுவாசிகள் அங்கே உண்டு. ஆனால் அவரோ அதைக்குறித்து கவலைப்படுவதேயில்லை. பாஸ்டரின் கையில் கொடுக்காத எந்த தொகைக்கும் கர்த்தரின் ஆசீர்வாதம் இல்லையென்று அவர் நினைக்கின்றார். அவ்விதமாக நினைக்கும்படி அவர் தவறாகப் போதிக்கப்பட்டுள்ளார்.

அன்று இயேசு பரிசேயர்களைப் பார்த்து நீங்கள் ஒற்தலாமிலும், வெந்தயத்திலும், சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப் பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள் என்று குற்றஞ்சாட்டினார். (மத் – 23:23) அவர்களை குற்றங்கூறியதோடு "உங்களுக்கு ஐயோ" என்றும் கூறினார். பாருங்கள். இங்கே இயேசு தசமபாகம் கொடுப்பதைவிட நீதியான செயல்களைச் செய்வதும் இரக்கமான செயல்களைச் செய்வதும் எவ்வளவு முக்கியமானது என்பதை சுட்டிக்காட்டுகிறார்.

ஒரு பெரிய சபையைச் சார்ந்த விசுவாசி சற்று வசதியானவர். அந்த குடும்பத்தார் மீன் குழம்பு, கறிக்குழம்பு மற்றும் எந்த பலகாரங்கள் செய்தாலும் முதலில் சபைப்பாஸ்டருக்கு கொண்டு போய் கொடுத்த பின்னர்தான் சாப்பிடுவார்கள். ஆனால் அந்த சபை பாஸ்டர் வீட்டில் எப்போதுமே சிறந்த வகை உணவுகள் தாராளமாகக் காணப்படும். இவர்கள் கொடுக்கும் மீன் குழம்பையும், கறிக்குழம்பையும் வாங்கி சாப்பிட்டு உற்சாகமடைய வேண்டிய நிலையில் அவர்கள் இல்லை.

அதே வேளையில் அந்த விசுவாசியின் வீட்டின் அருகில் அன்றாடம் கூலிவேலை செய்து வறுமையின் நடுவிலேயே வாழ்கின்ற சில விசுவாசக் குடும்பங்கள் உண்டு. கறிக்குழம்பு, பலகாரங்கள் போன்றவற்றை அவர்கள் காண்பது கிறிஸ்துமஸ் போன்ற தினங்களில் மட்டுமே. இந்தக் குடும்பங்களுக்கு கொஞ்சம் பழைய சாதத்தைக் கொடுத்தால் கூட அவர்கள் மிகவும் மகிழ்ந்து போவார்கள். ஆனால் அந்த வசதியான குடும்பத்தார், அவர்களை திரும்பிக்கூட பார்ப்பதில்லை.

ஊழியரை கனப்படுத்துவது நல்ல விஷயமே. ஆயினும் அதற்கான தேவை அங்கே இருக்க வேண்டும். எங்கே தேவை இருக்கிறது என்பதை உணர்ந்து செய்யாத செயல்கள் யாவும் முட்டாள்தனமானவையே. இந்த சிறியரில் (இயேசுவை பின்பற்றும் எளியவர்கள்) ஒருவனுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்றுதான் இயேசு சொன்னார்.

பல நேரங்களில் நம்முடைய பெருமையான உணர்வுகளுக்குதான் தீனி போடுகிறோமே ஒழிய, இரக்க சிந்தைகளுக்கு உரிய முக்கியத்துவம் கொடுப்பதில்லை. குறிப்பிட்ட வசதிமிக்க நபர் ஒருவர் அவ்விதமே, வலிமையான நிதி நிலமை உடைய பிரபல ஊழியர் ஒருவருக்கு வருடந்தோறும் பல்லாயிரங்களை செலவிட்டு கோட் சூட், சபாரி உடை வகைகளை வாங்கி அனுப்பி வைப்பார். ஆனால் அவர் வாழ்கின்ற பகுதியில் எத்தனையோ, ஏழை ஊழியர்கள் உடுத்த உடைக்கு போதிய மறு உடை இன்றி அவதிப்படுகின்றனர். ஆனால் அவர்களுக்கு ஒரு பழைய சட்டை கொடுத்த ஒரு நிகழ்ச்சி கூட அவருடைய வாழ்க்கையில் இல்லை.

வ்சதி நிலை உள்ளவர்களுக்கு வாரி வழங்குகிறவர்கள் பாக்கியவான்கள் என்று இயேசு சொல்லவில்லை. மிகுதியாக காணிக்கை கொடுப்பவர்களை பாக்கியவான்கள் என்று இயேசு சொல்லவில்லை. வசதிமிக்க ஊழியர்களுக்கு கொடை கொடுப்பவர்கள் பாக்கியவான்கள் என்று இயேசு சொல்லவில்லை. *இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்* என்று தான் இயேசு சொன்னார்.

யார் துன்பப்படுகிறார்களோ, யார் கஷ்டப்படுகிறார்களோ, யார் தேவைகளை சந்திக்க முடியாமல் தடுமாறுகிறார்களோ, யார் வறுமை நிலையால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்களோ, அவர்களுக்காக மனதுருகி ஏற்ற நன்மைகளை இயன்ற அளவில் செய்வதுதான் உண்மையான இரக்கம். அது ஒரு மனிதனை பாக்கியவான் ஆக்கும். அதுதான் ஒரு மனிதனை மகிழ்ச்சி நிறைந்தவனாக மாற்றும்.

ஏவுதல் இதற்கு தேவையா?

சிலர் சிலருடையக் கஷ்டங்களைப் பார்த்து புரிந்து கொள்வார்கள். ஆனாலும் இதெல்லாம் நம்முடைய வேலை இல்லை. தேவன்தான் அவர்களுக்கு நல்லதை செய்ய வேண்டும். நாம் வேண்டுமானால் இதற்காக பாரத்தோடு ஜெபிக்கலாம் என்ற எண்ணங்களோடு விலகிப் போய்விடுவார்கள். இன்னும் சிலர் கர்த்தர் பேசினால் ஏதாவது உதவி செய்யலாம் என்று சொல்வார்கள். சிலர் உதவி செய்வதற்கான ஏவுதல் எதுவும் கிடைக்கவில்லை என்று சொல்வார்கள்.

ஆனால் இவையாவும் இரக்கமில்லாத நம்முடைய இதயங்களில் உருவாகின்ற சாக்கு போக்குகளே. உதவுவதற்கு முன்வராத நம்முடைய கடின இதயத்தின் முடிவுகளை ஆவிக்குரிய நிறங்களைக் கொண்டு நியாயப்படுத்தி, பொறுப்பினை தட்டிக் கழித்து விடுகிறோம்.

வேதாகமம் முழுவதும் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்ற வேறுபாடின்றி, பிறருக்கு நாம் இரங்கி உதவி செய்தல் வேண்டும் என்ற கட்டளை பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. *தேசத்திலே எளியவர்கள் இல்லாமலிருப்பதில்லை. ஆகையால் உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும், எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையை தாராளமாய் திறக்க வேண்டும். மோசே* (உபா – 15:11)

தேவரீர் ... என் செல்வம் உமக்கு வேண்டியதாயிராமல், பூமியிலுள்ள பரிசுத்தவான்களுக்கும் நான் என் முழுப்பிரியத்தையும் வைத்திருக்கிற மகாத்துமாக்களுக்கும் அது வேண்டியதாயிருக்கிறது.

தாவீது – (சங் – 16:2,3)

உதார குணமுள்ள ஆத்துமா செழிக்கும். எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்.

சாலொமோன் (நீதி – 11:25)

பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்த்து சிறுமைப்பட்ட ஆத்துமாவைத் திருப்தியாக்கினால் அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதிக்கும்.

ஏசாயா – (ஏசாயா – 58:10)

யாவருக்கும் விசேஷமாக விசுவாசக் குடும்பத்தாருக்கும் நன்மைச் செய்யக்கடவோம்.

பவுல் – (கலா – 6:10)

தன் சகோதரனுக்கு குறைச்சலுண்டென்று கண்டும் தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலை கொள்ளுவதெப்படி?

யோவான் – (1 யோ – 3:17)

ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக் கடவன்.

பேதுரு – (1 பேதுரு – 4:11)

இவ்விதமாக தேவன் தம்முடைய ஒவ்வொரு ஊழியக்காரர்கள் வழியாகவும், நாம் மற்றவர்களின் கஷ்ட நேரங்களில் அவர்களுக்காக இரங்கி நன்மை செய்ய வேண்டியதின் தேவையை போதுமான அளவிற்கு வற்புறுத்தியுள்ளார். இதற்கு மேலும் நாம் நன்மை செய்யும் விஷயத்தில் தேவ வழிநடத்துதலை தனியாகத் தேடத் தேவையில்லை. இப்படி கூறுவதால் நன்மை செய்யும் விஷயத்தில் தேவ ஆலோசனையையும், வழி நடத்துதலையும் தேடவேக் கூடாது என்று அர்த்தம் அல்ல. முதலாவதாக நன்மை செய்தலைக் குறித்து தேவன் தெளிவாகப் பேசியுள்ளார் என்பதை உணர்ந்து அதற்காக நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். அந்தந்த சூழ்நிலைகளில் காரியங்களை தேவன் கூறியுள்ள வசனங்களின்படி சிந்தித்து, நிதானித்து அதற்கேற்ப செயல்பட வேண்டும். ஒவ்வொருவருடைய விஷயத்திலும் ஆவிக்கேற்றபடி நிதானித்து செயல்படுதல் தேவையே.

தேவனை அறிந்த நாம் இந்த உலகில் தேவனுடைய பிரதிநிதிகளாக இருக்கின்றோம். அவர் நம் வழியாகத்தான் செயல்படுகிறார். தேவன் ஒரு மனிதனுக்கு ஒரு பலா பழத்தை கொடுக்க

விரும்பினால் அதனை ஒரு பலா மரத்தில் தோன்ற செய்துதான் கொடுக்க முடியும். அதுபோல ஒரு மனிதனுக்கு இரங்கி ஒரு நன்மையை செய்ய விரும்பினால் நம் வழியாகத்தான் அதனைச் செய்ய முடியும். எனவே தேவனுடைய கருவிகளாக மற்றவர்களுக்காக இரங்கிச் செயல்பட நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

யூதனும் சமாரியனும்

இயேசு கூறிய சமாரியன்கதை இரக்கத்தைக் குறித்து மிகச்சிறப்பாக விளக்கும் ஒன்றாகும். அங்கே ஒரு சமாரிய பிரயாணி மூலம் இரக்கத்தை நாம் நன்கு புரிந்து கொள்ள செய்தார். அந்த சமாரியப் பிரயாணி கழுதையில் வந்து கொண்டிருக்கும் பாதையில், கள்ளர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டு குற்றுயிராகக் கிடக்கும் ஒருவனைக் காண்கின்றான்.

அவன் அந்த இடத்திற்கு வரும் முன்னரே ஏற்கெனவே இரண்டு பேர் அந்த காயமடைந்து கிடக்கும் மனிதனை பார்த்துவிட்டு போயிருக்கின்றனர். குற்றுயிராகி உயிருக்காக போராடும் அந்த மனிதனின் பரிதாப நிலை அந்த மனிதர்களை போதிய அளவு பாதிக்கவில்லை.

ஆனால் பாதிக்கப்பட வேண்டியவர்கள் அவர்களே. அவர்கள் இருவரும் யூதர்கள். ஒருவன் ஆசாரியன். ஒருவன் ஆசாரியனுக்கு உதவி புரியும் லேவியன். நியாயப் பிரமாணங்களில் உள்ள தேவனுடைய நியாயங்களை நன்கு அறிந்தவர்கள். இரக்கமாயிருக்கவும், துன்புற்றோருக்கு உதவி செய்யவும் கடமைப்பட்டவர்கள். தேவனுடைய பிரதிநிதிகளாக இருந்து இரக்கத்தை வெளிப்படுத்த வேண்டியவர்கள்.

ஆனால் பரிதாபம். அந்த இதயங்களில் இரக்கம் இல்லை. ஆக்கப்பூர்வ பரிதாபம் இல்லை. வறண்டு போன சுயநலப் பிறவிகள். ஆனால் அங்கே வந்த சமாரியன் அந்த ஆசாரியனிடத்திலும், லேவியனிடத்திலும் காணப்படாத உயர்ந்த பண்புகளை உடையவனாக இருந்தான். தேவன் எதிர்பார்க்கும் அன்பும், பரிவும், இரக்கமும் தேவனை அறியாத அந்த சமாரியனிடம் தான் வெளிப்பட்டது.

யூதர்களின் பார்வையில் சமாரியர்கள் தேவனுடைய சுதந்தரத்திற்கு புறம்பானவர்கள், தேவ நியாயங்கள் அறியாதவர்கள்,

ஆலய வழிபாடு இல்லாதவர்கள். மொத்தத்தில் அவர்கள் மிகவும் இழிவானப் பிறவிகள். ஆனால் அவ்விதம் இழிவாக எண்ணப்பட்ட சமாரியனிடம் தான் தேவன் விரும்புகின்ற இரக்க சுபாவம் இருந்தது. யாரிடம் அது இருக்க வேண்டுமோ அவர்களிடம் அது இல்லை.

உண்மையில் அந்த உவமையை இயேசு சொன்னதின் நோக்கம் தம்மை ஒரு நல்ல சமாரியனாக காண்பிப்பதற்காக அல்ல. பரிசேயர்களின் மதப்பெருமைக்கும், சுய மேன்மை பாராட்டலுக்கும் சாட்டையடி கொடுப்பதற்காகவே அந்த உவமையைச் சொன்னார். அங்கே இழிவாக யூதரால் கருதப்படும் சமாரியன் ஒருவனை உயர்பண்பாளனாகக் காண்பித்தார். ஆனால் மிகச் சிறந்த ஆன்மீக வாதிகளாக எண்ணிக் கொள்ளும் யூதர்களை பிரயோஜனமற்ற, தேவனுக்கு உபயோகமற்றுப் போனவர்களாக காண்பித்தார்.

யூதர்களே ... பரிசேயர்களே – மத வைராக்கியம் மிகுந்தவர்களே... ஆபிரகாமின் சந்ததி என்று பெருமை பாராட்டுகிறவர்களே, நியாயப் பிரமாணங்களை கற்றுத் தேறியவர்களே ... தேவன் எங்களுக்கு மட்டும் தான் தந்தை என்று பெருமையடிக்கிறவர்களே... உங்களைத் தவிர மற்ற யாவரையும் அற்பமாய் எண்ணுகின்றவர்களே .... சமாரியர்களை இழிபிறவிகளாக எண்ணி புறக்கணிக்கின்றவர்களே ... உங்களைக் குறித்து யோசித்து பார்த்தீர்களா? ஆன்மீக வாதிகளாகிய உங்களிடம் இல்லாத உயர் பண்புகள், உங்களால் அற்பமாக எண்ணப்படும், இழிவான சமாரியர்களிடம் இருக்கிறது. தேவனுடைய பிள்ளைகளாக எண்ணிக் கொள்ளும் உங்களிடம் காணப்பட வேண்டிய சிறந்த சுபாவங்கள், உங்களால் அற்பமாக எண்ணப்படும் சமாரியர்களிடம் காணப்பட்டால், உண்மையில் உங்களைவிட அவர்கள்தானே உயர்ந்தவர்கள், உயர்ந்த குணங்களை உருவாக்காத உங்கள் மதபக்தியும், பாரம்பரியமும், பெருமை பாராட்டலும் வீணல்லவா.

இவைதான் இயேசு அந்த உவமையின் மூலம் யூதர்களுக்கு உணர்த்திய செய்திகள். இன்று கூட இதே நிலைதான் தொடர்கின்றது. பல சபைப்பிரிவுகள் தங்களை பல விஷயங்களில் பெருமை பாராட்டி, தாங்களே உண்மையான தேவனுடையப் பிள்ளைகள் என்றும், தாங்களே உண்மையான ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் என்றும் பறைசாற்றிக் கொள்கின்றார்கள். ஆனால் நல்ல கிறிஸ்தவர்களுக்கேற்ற பண்புகளும், உயர்வான செயல்களும் தங்களிடம் உள்ளதா என்று சிந்தித்துப் பார்ப்பதில்லை.

நாம் உயர்ந்தவர்கள் என்று கூறுவதில் தவறில்லை. ஆனால் நம்மிடம் வெளிப்படும் உயர்வுகள் என்ன என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்று பெந்தேகோஸ்தே சபைகள் புராதனை சபைகளை செத்த சபைகள் என்று கூறி தங்களை உண்மையான ஆவிக்குரியவர்கள் என்று கூறிக்கொள்கின்றன.

ஆனாலும் இவைகளின் செயல்பாடு சபை வட்டாரத்தோடு மட்டும் நின்று விடுகின்றன. ஆனால் இன்று செத்த சபையாக எண்ணப்படும் சபைகளைச் சார்ந்தவர்கள் தியாகமான மிஷனரி ஊழியங்களையும், பல பெரிய சமுக நல சேவைகளையும் செய்கின்றார்கள். அவர்களிடம் காணப்படும் தியாகமும் தொலை நோக்கும் உண்மையான ஆவிக்குரியவர்களிடம் இல்லாமல் போனதென்ன?

புராட்டஸ்டண்டு பிரிவினராகிய நாம் ரோமன் கத்தோலிக்க சபைப் பிரிவு வேதத்திற்கு முற்றிலும், முரண்பட்ட ஒரு இயக்கம் என்பதை அறிந்திருக்கின்றோம். பல நேரங்களில் நாம் நம்மை சரியான விசுவாசக்காரர்களாகவும், வேதத்தின்படி செயல்படுகிறவர்களாகவும் பெருமைப்பட்டுக் கொள்கின்றோம். தேவ அன்பு, பிரிவு, பாசம் யாவுமே வேதத்தை சரியாக அறிந்த நமக்குத்தான் உண்டு என்று எண்ணுகின்றோம்.

ஆனால் உலகளாவிய நிலையில் மாபெருந் தலைவர்களெல்லாம் புகழ்மாலை சூட்டும் விதமாக இரக்கமான பணிகளுக்காய் பெரிதும் உயர்ந்து நின்ற அன்னை தெரசா கடைசிவரை ஒரு கத்தோலிக்க சபை விசுவாசியே. ஒரு கத்தோலிக்கராக இருந்து கொண்டே புராட்டஸ்டண்டுகளை ஆயிரம் மடங்கு மிஞ்சும் விதமாக அவர் பணிபுரிந்து உலகப் புகழ் பெற்றார்.

இங்கே நாம் புரிந்து கொள்ள வேண்டிய உண்மை என்னவெனில், நம்மால் சாதாரணமாக எண்ணப்படுகின்றவர்களிடம், நம்மிடம் வெளிப்படாத மிகப்பெரிய மேன்மையான விஷயங்கள் வெளிப்படுகின்றன.

பெருமை பாராட்டும் பழக்கத்தை உடைய யூதனிடம் காணக்கூடாத உயர் பண்புகள் சமாரியனிடம் இருப்பதைச் சுட்டிக் காட்டி, வீண்பெருமை பாராட்டுதல்களை விட்டு விட்டு விஷயத்திற்கு வரும்படி இயேசு அழைத்தார்.

பிறர் கஷ்டத்தை கவனிக்க வேண்டாமா?

இப்போது மீண்டும் இயேசு சுட்டிக் காண்பித்த சமாரியனைக் குறித்த சில விஷயங்களைப் பார்ப்போம். முதலாவதாக அந்த சமாரியன் குற்றுயிராய் கிடப்பவனைக் கண்டும் காணாதவனாய் போல் போகவில்லை. அவன் காயமுற்றுக் கிடந்தவனைக் கவனித்தான். யாருக்கு எது நேர்ந்தால் எனக்கென்ன என்று அவன் தன் வழியாய் போகவில்லை. நான் உண்டு என் வேலை உண்டு, பாதையில் பல நடக்கும். அதைபற்றியெல்லாம் எனக்கென்ன கவலையென்று அவன் நினைக்கவில்லை. ஏதோ ஒரு அசம்பாவிதம் நடந்திருக்கிறது. யாரோ ஒருவன் காயமடைந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறான் என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

பம்பாய், கல்கத்தா, சென்னை போன்ற பட்டணங்களில் பட்டப்பகலில் ஆயிரக்கணக்கான மக்கள் நடமாடும் சாலையில் அநேகம் அராஜகங்கள், அக்கிரமங்கள் நடக்கும். யாரோ ஒருவன் அநியாயமாக அடித்து உதைக்கப்படுவான். யாரோ ஒருவனுடைய பணப்பையை ஒருவன் பறித்துக் கொண்டு ஓடுவான். ஆனால் யாரும் அதைத் தடுத்து என்னவென்று கேட்கப் போக மாட்டார்கள். ஏனென்றால் நமக்கெதற்கு தொல்லை என்ற சிந்தனை. நாம் வந்த வேலையைப் பார்த்துவிட்டு பாதுகாப்பாக வீடு போய் சேர்வோம் என்ற சிந்தனையே எல்லாரிடமும் காணப்படும்.

அது போலவே நாம் கடந்து செல்லும் பாதையிலே எத்தனையோ பேருடைய துன்பங்களை துயர் நிலைகளை, ஆதரவற்ற சூழ்நிலைகளைக் காண்கிறோம். அவைகளை நாம் சற்று கவனித்துப் பார்க்கின்றோமா? எல்லாருக்கும் நாம் உதவி செய்து விட முடியாது என்பது உண்மைதான். ஆனால் எத்தனை பேருடைய கஷ்ட நிலைகளை நாம் கவனித்துப் பார்க்கின்றோம். எத்தனை பேருடைய துக்கங்களின் ஆழங்களை நாம் உற்று கவனிக்கின்றோம். எத்தனை பேருடைய வாழ்க்கை போராட்டங்கள் நம்முடைய சிந்தனைக்குள் வருகின்றன.

பல நேரங்களில் பிறருடைய வியாகுல சூழ்நிலைகளைப் பார்க்காமல் கண்ணை மூடிக்கொள்வதே சிறந்தது என்று எண்ணுகின்றோம். மும்பை பட்டிணத்தில் மின்சார ரயில் பாதைகளை கடக்கும் போது, ஏராளமான பயணிகள் தினமும் வேகமாக வருகின்ற

ரயிலில் அடிபட்டு பலியாவார்கள். இது தினசரி சம்பவம். திடீரென்று அத்தகைய காட்சிகளை தூரத்தில் காண நேரிடுகின்ற அனேகர் அந்தக் காட்சி ஆழமாக தங்களுக்குள் வந்து பாதிப்பை ஏற்படுத்தி விடாதபடி, கண்களை மூடிக் கொண்டு வேகமாக விலகிப் போவார்கள்.

ஆனால் இதே அணுகு முறையை நாம் எல்லா இடங்களிலும் பின்பற்றி போவது மனிதத் தன்மைக்கு ஏற்றதல்ல. பிறருடைய துன்பங்களை, துக்கங்களை, வேதனைகளை, பாடுகளை கவனித்துப் பார்க்கும் கண்கள் நமக்கு வேண்டும். பலர் கஷ்டங்கள் பெருகும் போது ஆண்டவா உனக்கு கண் இல்லையா... என் கஷ்டம் உனக்கு தெரியவில்லையா" என்று புலம்புவார்கள். ஆனால் அவர்கள் தங்களை சுற்றி வாழும் எத்தனை பேருடைய துன்பங்களைக் காண்கின்ற கண்களை உடையவர்களாயிருந்தார்கள் என்று எண்ணிப் பார்ப்பதில்லை. இன்னொருவரின் கஷ்டத்தை நாம் கண்டு கொள்ளாமல் போக விரும்பினால், நம்முடைய கஷ்ட வேளைகளில் கர்த்தருடைய கண்கள் அதனை கவனித்துப் பார்க்காது.

ஒருவர் தன்னுடைய தொழிலில் ஏற்பட்ட சரிவினை சரி செய்வதற்காக தேவ கிருபையை தேடி அதிகமாக ஜெபித்தார். அதிகமாக உபவாசித்தார். பல ஊழியர்களிடம் ஜெபிக்க வேண்டினார். ஆனால் அவர் எதிர்பார்த்த திருப்பம் ஏற்படவில்லை. சோர்ந்து போன அவர், ஒரு ஊழியரிடம் பேசும் போது "எவ்வளவோ மன்றாடிப் பார்த்து விட்டேன். கர்த்தரின் கண்களில் கருணை கிடைக்கவில்லையே" என்று சலித்துக் கொண்டார். ஆனால் அதே நபர் நன்றாயிருக்கும் போது அவருடைய தம்பி வறுமையின் விளைவாக இவரிடம் ஒரு சிறு உதவி கேட்டு எத்தனையோ முறை நடையாய் நடந்தார். ஒரு சிறு வருவாய் வரும்படி ஏதாவது ஒரு ஏற்பாடு செய்து தர எவ்வளவோ கெஞ்சினார். ஆனால் இவருடைய மனமோ கல்லாகயிருந்தது. உனக்கு எதையாவது செய்யும் படி என்னிடம் ஒன்றுமில்லை என்று கூறிவிட்டார். அதே நபர் பின்னர் கர்த்தரின் கண்கள் தன்னைக் காணவில்லையே என்று வருந்தும் காலம் வந்தது.

ஆம். இன்று நம்முடைய கண்களை பிறரின் துன்பங்களுக்கு முன்னால் மூடிக்கொண்டு அவரவரின் தலையெழுத்து போல் ஆகட்டும் என்பது போல் நடந்து கொண்டால், கர்த்தரிடமிருந்து நாம் விசேஷ விடுதலைகளை பெறமுடியாது. நாம் செய்தபடியே நமக்கும் ஒரு நாள் செய்யப்படும்.

உண்மையான மனதுருக்கம்

அடுத்ததாக அந்த சமாரியனைக் குறித்து இயேசு சொன்ன செய்தி காயமுற்று கஷ்டப்பட்டு கொண்டிருந்தவனைக் கண்டு அவன் மனதுருகினான் என்பதாகும். (லூக் – 10:33) சுவிசேஷங்களை வாசிக்கும் போது பல இடங்களில் இயேசு மனதுருகினார். இயேசு பரிதவித்தார் என்று சொல்லப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம். மகனை இழந்து துக்கம் தாங்காமல் கதறிய நாயின் ஊர் விதவையைப் பார்த்து இயேசு மனதுருகினார். (லூக் – 7:13) தங்களின் அருமை சகோதரனை இழந்து தவித்த மார்த்தாள், மரியாள் ஆகியோரைக் கண்ட போது இயேசு ஆவியிலே கலங்கி துயரமடைந்து கண்ணீர் விட்டார். (யோ – 10:33,35) தம்முடைய பிரசங்கத்தை கேட்க வந்த மக்கள் பசியாக இருப்பதைக் கண்டு இயேசு பரிதவித்தார். (மாற்கு – 8:2) இயேசுவை நோக்கி திரளான ஜனங்கள் வந்தபோது அவர்களின் இதயநிலையைப் பார்த்து அவர்கள் மேய்ப்பனற்ற ஆடுகளைப் போல தொய்ந்து போனவர்களாக இருக்கிறார்களே என்று அவர் மனதுருகினார். (மத் – 10:36) தன் மேல் வரவிருக்கும் மாபெரும் அழிவை உணராமல் பண்டிகை கொண்டாட்டத்தில் மூழ்கிப் போயிருந்த எருசலேம் பட்டிணத்தைப் பார்த்து இயேசு கண்ணீர் விட்டழுதார். (லூக் – 19:41)

இன்றைய பல கிறிஸ்தவ ஊழியர்கள் போலியான ஒரு மனதுருக்கத்தின் மாயையில் பெருவாரியான மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய மனதுருக்கம் எல்லாம் மேடையில் மட்டுமே. அவர்கள் ஏழைகளின் துயரங்களைக் கண்டு உண்மையிலேயே உள்ளம் நொந்து போனவர்களைப் போல தங்களை காண்பித்து அழுவது போல, கண்ணீர் விடுவது போல, நடித்துக் காட்டுவார்கள். மேடையில் அவர்கள் ஏறெடுக்கும் கண்ணீர் ஜெபம் மக்களை பரவசப்படுத்துவதற்காகத் தானேயன்றி வேறொன்றிற்கு மில்லை. தங்களை விசேஷ மனதுருக்கத்தின் ஆவியைப் பெற்றவர்களைப் போல காண்பிப்பதெல்லாம், தங்களின் சுய நிலைகளை ளைர்த்துக் கொள்வதற்காகவே.

மேடையிலே மனதுருகும் மாபெரும் மனிதர்களாக விளங்கும அவர்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலோ மன இறுக்கம் பிடித்தவர்களே. தனிப்பட்ட சுபாவ நிலைகளில் அவர்கள் இரக்கசீலர்கள் அல்ல. ஏழைகளின் பெயரைச் சொல்லி பெரும்பணம் பண்ணும் அரசியல் வாதிகளைப் போல, மக்களின் துன்பங்களை மூலதனமாக வைத்தே ஆடம்பர வாழ்க்கை வாழும் இறைப் பணியாளர்கள் ஏராளம்.

ஆனால் நம்மால் எவ்வளவு உருக்கமாக எழுதவும், பேசவும், மேடையில் ஜெபிக்கவும் முடிகிறது என்பது முக்கியமல்ல. நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கைப் பாதையிலே நாம் சந்திக்க அல்லது காண நேரிடுகின்ற எத்தனை பேருடைய துன்ப நிலை நம்முடைய உள்ளத்தை உருகச் செய்து செயல்படத் தூண்டுகிறது என்பதே முக்கியம்.

காயமுற்று கிடந்தவனுடைய பரிதாப நிலையைக் கண்டதும் அந்த சமாரியன் மனதுருகினான். கடவுளை அறியாத – ஆலய போக்குவரத்துகள் இல்லாத – வேத வெளிச்சம் பெறாத – மற்றவர்களால் இறைவனற்ற அஞ்ஞானிகள் என்று மட்டமாக எண்ணப்பட்ட அந்த சமாரிய மனிதனின் உள்ளத்தில் ஊற்றெடுத்த மனதுருக்கத்தை இயேசு அங்கே சுட்டிக்காட்டினார்.

அந்த மனதுருக்கம்தான் சற்று முன்னர் அந்த வழியாகக் கடந்து சென்ற ஆசாரியனிடமும் லேவியனிடமும் காணப்படாமலிருந்த விஷயம்.

சமீபத்தில் ஒரு பள்ளிக்கூட சுவற்றில் எழுதப்பட்ட ஒரு வாசகத்தைக் கவனித்துப் படித்தேன். *"அணிவதற்கு ஒரு சட்டை கூட இல்லாதவனின் சட்டை, பத்து சட்டைகளை ஒன்றாக வைத்திருக்கிற உன்னிடம் தான் இருக்கிறது. ஒரு வேளை உணவில்லாமல் தவிப்பவனுடைய உணவை, பல நாட்களுக்கான உணவை ஒன்றாக குவித்து வைத்திருக்கும் நீதான் வைத்திருக்கிறாய்,"* என்று எழுதப்பட்டிருந்தது.

சிந்திக்கத் தூண்டும் ஒரு வாசகம் இது. அநேகருடைய மனநிலை அப்படித்தான் உள்ளது. ஏராளமாக சேர்த்து வைத்திருப்பவர்கள், சிறிதும் இல்லாதவர்களைக் காணும் போது, தங்களுக்கு ஏதாவது செய்ய வேண்டிய கடமை உண்டு என்று எண்ணுவதில்லை. அது அவர்களின் தலை விதி என்பது போல எண்ணிவிடுகிறார்கள். ஆனால் அதிகமாக வைத்திருக்கின்ற நாம் இல்லாமையிலிருப்பவர்களுக்கு ஏதாவது ஒரு விதத்தில் உதவி செய்ய கடமைப்பட்டவர்கள் என்பதை மறந்து விடக் கூடாது.

திடீரென ஒரு மாலையில் சென்னையில் உள்ள அனைத்து நட்சத்திர அந்தஸ்துள்ள ஓட்டல்களிலும் போய் ஒரு சோதனை போட்டால் அங்கே ஏராளமான மனதுருக்க சுவிசேஷகர்களும், சபை மேய்ப்பர்களும்

விலையுயர்ந்த ஆடம்பர உணவுகளை குடும்பத்தோடும், நண்பர்களோடும் வந்து உண்டு சுகிப்பதைக் காணமுடியும். அவர்களில் அநேகர் பெரும்பாலும் மாதத்தில் பல நாட்கள் அவ்விதமான ஓட்டல்களில் பல்லாயிரங்களை செலவழித்து உணவு உண்பதை வாடிக்கையாகக் கொண்டவர்களே. அவர்கள் யாவரும் *"மனுஷ குமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை"* என்று கூறிய ஏழைப்பங்காளாராகிய இயேசுவின் எளிமையைக் குறித்து பிரமாதமாக பிரசங்கிக்கின்றவர்களே.

முன்னுக்கு வந்த ஊழியர் ஒருவர் தான் காலையில் ஒரு நட்சத்திர ஓட்டலில் சாப்பிட்டால், மாலையில் வேறொரு நட்சத்திர ஓட்டலில் சாப்பிடுவதாகக் கூறி பெருமையடித்தாராம். தன்னை அந்த அளவிற்கு தேவன் ஆசீர்வதித்திருப்பதாக பரவசமாகக் கூறி எல்லாரையும் உற்சாகப்படுத்தினாராம். இன்று அநேகர் கர்த்தரின் ஆசீர்வாதத்தை நட்சத்திர ஓட்டலின் ஆடம்பர உணவு வகைகளின் விடிவத்திலும், பங்களா, பாங்க் பேலன்ஸ் வடிவத்திலும் பார்ப்பது பரிதாபத்திற்குரியது.

தேவ ஊழியக்காரர்கள் நட்சத்திர ஓட்டல்களில் சாப்பிடக் கூடாதென்றோ, அவ்வித ஓட்டல்களில் சென்று சாப்பிட நேரிட்டால் தவிர்த்து விட வேண்டும் என்றோ நான் கூறுவதாக எடுத்துக் கொள்ள வேண்டாம். அங்கே போய் சாப்பிடுவது தவறல்ல. அங்கே போய் சாப்பிட வேண்டிய தருணங்கள் நேரிடவேச் செய்யும்.

ஆனால் நமக்கு வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறதென்பதற்காக, அதிக சுவையையும், அந்தஸ்தையும் விரும்பி பல்லாயிரங்களை பாழ்படுத்துவதை பழக்கமாக்கிக் கொள்ளக் கூடாது. அதிக பணம் கையில் வந்திருப்பதால் ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் போய் ரகம் ரகமாக சாப்பிடுவதற்காகத்தான் கர்த்தர் தந்திருக்கிறார் என்று எண்ணிவிடக்கூடாது.

ஒரு வேளை சாதாரண உணவு கூட இல்லாமல் வருந்தி வாழ்கின்றவர்கள் நம்மைச் சுற்றிலும் ஏராளம் உண்டு. அதிக ருசி ஓட்டல்களைத் தேடி நாம் வித்தியாச சுவைகளை அனுபவிப்பதற்குப் பதிலாக அவைகளைக் கொண்டு ஒரு சிலருக்கு உணவளித்தால் அது எவ்வளவு பெரிய மகிழ்ச்சி. நாலு ஏழைகளின் வயிறு நம்மால் நிரம்புவதை காண்கின்றபோது கிடைக்கின்ற மனதிருப்தியை எந்த நட்சத்திர ஓட்டலும் தரமுடியாது.

டெல்லியைச் சேர்ந்த ஒரு மார்வாடி வியாபாரி மிகவும் வசதிபடைத்தவன். ஒரு வித்தியாச குதூகலத்திற்காகவும், பொழுது போக்கிற்காகவும் மாலை வேளையில் நண்பர்களோடு நட்சத்திர ஓட்டல்களுக்கு போய் பல்லாயிரங்களை வாரியிறைத்து சாப்பிடுவான். ஒருநாள் அவ்விதம் ஒரு ஓட்டலில் போய் சாப்பிட்டு விட்டு திரும்பும் போது, வழியிலே பசியால் துடித்துக் கொண்டிருந்த ஒரு ஏழையைக் கண்டபோது, அந்தக் காட்சி அவனது உள்ளத்தை உருக்கியது. உடனே ஒரு ஐந்து ரூபாய் தாளை எடுத்து அவனிடம் எறிந்து விட்டுப் போய் கொண்டிருந்தான். சில அடிகள் நடந்த பின் எதிர் பாராத விதமாக திரும்பிப் பார்க்க நேர்ந்தபோது, அவன் கண்ட காட்சி மேலும் அவனை அதிகமாகத் தொட்டது. ஐந்து ரூபாய் கிடைத்த மகிழ்ச்சியில் அந்த ஏழை அந்த மார்வாடி நடந்து சென்ற பாதையை நன்றிப் பெருக்கால் விழுந்து விழுந்து கும்பிட்டுக் கொண்டிருந்தானாம்.

அப்பொழுதுதான் அந்த மார்வாடி சிந்தித்துப் பார்த்தான். வெறும் ஐந்து ரூபாயால் ஒரு ஏழையை இந்த அளவு மகிழ்ச்சியாக்க முடியுமென்றால், தான் தினமும் தனக்காக ஓட்டல்களில் ஆடம்பரமாக செலவிடும் பல்லாயிரங்களைக் கொண்டு எத்தனையோ ஏழைகளை மகிழ்விக்க முடியும் என்று எண்ணிப் பார்த்தானாம்.

அன்றிலிருந்து அவன் ஓட்டல்களில் ஆடம்பரமாக செலவிடும் பணத்திற்கு சாதாரண ஓட்டல்களில் போய் உணவு பொட்டலங்களை வாங்கி ஏராளமான ஏழைகளுக்குக் கொடுத்து, அதையே பொழுது போக்காக்கி கொள்வானாம். ஆம். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கின்றேன் என்றார் ஒரு அரசியல் தலைவர். ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காணமுடியாது. ஆனால் இறை சந்தோஷத்தை ஏழையின் சிரிப்பில் நிச்சயம் நாம் உணர முடியும்.

எல்லாவற்றிற்கும் தேவை மனதுருகும் ஒரு மனநிலைதான். இரக்கம் உள்ளவர்கள் மிகவும் மகிழ்ச்சியானவர்கள் (பாக்கியவான்கள்) என்று இயேசு சொன்னார். எவ்வளவு பெரிய உண்மை! இரக்க சுபாவம் நம்முடைய மனதில் என்றும் நிலைத்திருக்கத்தக்க ஒரு பேருவகையைக் கொண்டு வருகின்றது. அதனை பிறருக்கு உதவி செய்ய முற்படும் போதே அதனை நாம் உணர முடியும்.

இன்று நாம் சபை கூடுதல் என்றாலே சற்று நேரம் பரவசம் அடைந்து விடுவதற்கான ஒரு ஏற்பாடு என்ற நிலையிலேயே உணர்ந்துள்ளோம். ஆனால் சபை கூடுதல் என்பது பாடுவோம், ஜெபிப்போம், பரவசமடைவோம் என்ற நிலைகளோடு நின்று விடக்கூடாது. சபை கூடுதல் என்பது பாடிப் பரவசமடையவும், பிரசங்கம் கேட்டு உற்சாகமடையவும், ஆராதித்து ஆனந்தம் அடையவுமே ஏற்பட்டது என்று எண்ணிவிடக்கூடாது.

எபிரேயர் 10 : 24, 25 – ஐ வாசித்துப் பாருங்கள். அன்புக்கும், நற்கிரியைகளுக்கும் ஏவப்படும்படி நாம் சபை கூட வேண்டும் என்ற அர்த்தத்தில் கூறப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். ஏதோ சில ஆவிக்குரிய நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவதல்ல சபை கூடுதல். அங்கே அன்பு காண்பிக்கும் வேலை உண்டு. நற்செயல் செய்யும் வேலை உண்டு. துன்பப்படுகிற, துயரப்படுகிற, பொருளாதாரக் குறைவுகளால் வருத்தப்படுகிற பலர் நம் சபைகளில் உண்டு. அவர்களுக்கு உதவி செய்வதும் ஆராதனையின் ஒரு பகுதியே.

வெறுக்கத்தக்கவனுக்கும் இரக்கம்

அந்த சமாரிய பிரயாணியைக் குறித்து இன்னுமொரு விஷயத்தை நாம் சிந்திப்பது நல்லது. எருசலேமிலிருந்து எரிகோவை நோக்கிச் சென்ற வழியில் கள்ளர்களால் தாக்கப்பட்டவன் நிச்சயம் ஒரு யூதனாகவே இருக்க முடியும். *"என்னுடைய அயலான் யார்?"* என்ற கேள்வியைக் கேட்ட யூதனுக்குத்தான் இயேசு இந்த சமாரியன் உவமையைச் சொன்னார். *"உண்மையிலேயே நான் நேசிக்கத்தக்க சகோதரன் யார்"* என்பதே அந்த யூதனுடைய கேள்வியின் சாரம் ஆகும். உண்மையில் அவனுடைய அன்புக்கும், மரியாதைக்கும் உரிய அவனுடைய சகோதரன் அல்லது அயலான் யாராக இருக்க முடியும் என்பதை விளக்கவே இயேசு அந்த உவமையைக் கூறினார். எனவே காயமுற்று கிடந்த மனிதன் யூதன் என்று நம்மால் ஊகிக்க முடியும்.

இப்பொழுது ஆபத்துக்குள்ளான ஒரு யூதனுக்கு, அவனுடைய இனத்தவனாகிய ஆசாரியன் ஓர் உதவியைச் செய்யத்தக்க இரக்க முடையவனாக இருக்கவில்லை. அவனுடைய இனத்தைச் சேர்ந்த ஒரு லேவியனுக்கும் அந்த மனிதன் மேல் ஓர் உண்மையான இரக்கம் ஏற்படவில்லை. நியாயப்பிரமாணத்தின்படி ஒரு பகைவனுடைய ஆடோ,

மாடோ குழியில் விழுந்து கிடந்தால்கூட அதனை ஒருவன் கண்டு கொள்ளாமல் போகக்கூடாது. அவன் அதனை தூக்கி விட முன்வர வேண்டும். ஆனால் அவ்விதமான ஒரு நியாயப்பிரமாணத்தை நன்கு அறிந்திருந்த யூத ஆசாரியனும், லேவியனும் தங்கள் இனத்தவனாகிய ஒரு மனிதன் அடிபட்டுக்கிடந்த பரிதாபத்தைக் குறித்துக் கூட கவலையில்லாமல் கடந்து போனார்கள். அதே வேளையில் அன்னியன் என்றும் ஆகாதவன் என்றும் கருதப்பட்ட ஒரு சமாரியன் மனதுருகி உதவி செய்ய முன்வந்தான்.

சாதாரண நிலையில் பார்க்கும் போது இந்த சமாரியன் காயமுற்று கிடந்த யூதப் பிரயாணியை பார்த்து மனதில் குஷியடைந்திருக்க வேண்டும். ஏனென்றால் யூதர்கள் சமாரியர்களை மிகவும் இழிவாக எண்ணி அவர்களை கேவலமாகப் பேசுகின்றவர்கள். அப்படிப்பட்ட யூத இனத்தை சேர்ந்த ஒருவனுக்கு ஒரு தீமையென்றால் ஒரு சராசரி சமாரியன் மனதில் மகிழத்தான் செய்வான்.

ஆனால் இந்த சமாரியனோ தன்னுடைய வெறுப்புக்குரிய ஒருவனின் கஷ்ட நிலையைக் கண்டு மனதுருகினான். அவன் யார், எவன், அவன் எப்படிப்பட்டவன் என்பதைப் பற்றியெல்லாம் சிந்திக்காமல் "மனிதன்" என்ற உணர்வில் ஒரு பெரிய மனித நேயத்தைக் காண்பிக்க முன்வந்தான்.

ஆம். இரக்கம் என்பது யார், எவர், நண்பனா, பகைவனா, உறவினனா, அன்னியனா என்றெல்லாம் பாராமல் மனிதாபிமானத்தின் அடிப்படையில் செயல்படுகின்ற ஒன்று. தேவன் மழையையும், வெளிச்சத்தையும் தமக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் அனுப்பாமல் எல்லாருக்கும் பொதுவாகவே அனுப்புகிறார். அவருடைய தயையின் பலனை நல்லவனும் அனுபவிக்கின்றான். தீயவனும் அனுபவிக்கின்றான். பாவியும் அனுபவிக்கின்றான். பரிசுத்தவானும் அனுபவிக்கின்றான்.

அது போலவே தெய்வீக சுபாவமாகிய இரக்கமும் யார் எவர் என்ற பேதமின்றி செயல்பட வேண்டிய ஒன்றாகும். ஆபிரகாமை விட்டு லோத்து சுயநலத்தின் காரணமாக பிரிந்து சென்றது மிகவும் வருத்தத்திற்குரிய ஒன்றாகும். ஆயினும் லோத்துவுக்கு ஒரு ஆபத்து என்ற கேள்விபட்ட போது, "அவனுக்கு அப்படித்தான் வேண்டும்... நன்றாய் அனுபவிக்கட்டும். சரியாக பாடம் கற்றுக் கொள்ளட்டும்" என்றெல்லாம் ஆபிரகாம் சிந்திக்கவில்லை.

லோத்துவின் ஆபத்தான நிலமையைக் குறித்த செய்தி ஆபிரகாமை விசனப்படுத்தியது. உடனேயே அவன் லோத்துவை மீட்பது எப்படி? என்று யோசித்து அதற்குரிய நடவடிக்கைகளை வேக வேகமாய் எடுத்தான். ஆம். உண்மையான அன்பு, *அநியாயத்தில் சந்தோஷப்படாது. அது தீங்கு நினையாது* என்று வேதம் சொல்கிறது. (1 கொரி – 13:5,6) *உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்கு போஜனங் கொடு* என்று வேதம் சொல்கிறது. (ரோமர் – 12:20)

தாவீதின் வாழ்க்கையிலும் இவ்விதமான ஒரு அணுகுமுறையையே காண்கின்றோம். அவன் நீண்டகாலமாக தாவீதை மிகக் கொடுமையாக துன்புறுத்தியவன். ஆயினும் அவனுடைய மரணச் செய்தி தாவீதை மனம் மகிழச் செய்யவில்லை. "பாவி .... அவன் செய்த மாபாதகங்களுக்கு உரிய தண்டனையை அடைந்தான் என்று சொல்லி குதூகலமடையவில்லை. அதற்குப் பதிலாக சவுலின் மரணச் செய்தியைக் கேட்டு மிகவும் துக்கமடைந்து, அவனுடைய பரிதாபமான முடிவுக்காக மனதுருகி புலம்பல் பாடினான். (2 சாமு – 1:17)

உன் சத்துரு விழும்போது சந்தோஷப்படாதே. அவன் இடறும் போது களிகூராதிருப்பாயாக! உன் இருதயம் களிகூராதிருப்பதாக. என்று வேதத்தில் வாசிக்கின்றோம். (நீதி – 24:17) இயேசு கூறிய உவமையில் வரும் சமாரியனிடம் இப்படிப்பட்ட ஒரு நற்பண்பைதான் பார்க்கின்றோம். ஆம். இந்த யூதர்களால் நாம் எவ்வளவு தாழ்வாக எண்ணப்பட்டு இழிவுபடுத்தப்படுகிறோம். அப்படிப்பட்ட ஒரு யூதனுக்கு நாம் ஏன் இரங்க வேண்டும் என்று அவன் எண்ணவில்லை.

வெறும் இரக்க உணர்வு அல்ல ஆக்கப்பூர்வ செயல் தேவை

மூன்றாவதாக இந்த சமாரியனிடம் நாம் ஒரு ஆக்கப்பூர்வமான, செயல் சார்ந்த ஒரு இரக்கத்தையே காண்கின்றோம். அவன் ஒரு வேதனையானக் காட்சியைக் கண்டு மனதில் மட்டும் துக்கப்பட்டுவிட்டு போய்விடவில்லை. ஏதோ எல்லோருக்கும் இயற்கையாக ஏற்படுகின்ற ஒரு பச்சாதாப உணர்வை, பரிதாப உணர்வை மனதில் உணர்ந்து "ஐயோ... பாவம் .... எந்த பாவி இந்த மாதிரி செய்தானோ தெரியவில்லையே" என்று வாயால் சொல்லிவிட்டு கடந்து போய்விடவில்லை. அவனுடைய மனதுருக்கம் இயற்கையாக எல்லோருக்கும் ஏற்படுவது போன்ற ஒன்றாகயிருக்கவில்லை.

எங்கள் ஊரில் ஒரு ஏழைப் பெண்ணுக்கு வயதுகள் அதிகமாகியும் திருமணம் ஆகவில்லை. வர தட்சணையாக ஒரு சிறு தொகை கொடுக்கக் கூட அந்தக் குடும்பத்தில் வசதியில்லை. எனவே யாரும் திருமணம் செய்ய முன்வரவில்லை. ஆனால் அந்த குடும்பத்திற்கு வசதியுடைய அவர்களின் உறவினர் பலர் அடிக்கடி வருவார்கள். ஊரில் அவர்களைத் தெரிந்த பலர் வருவார்கள். வயதுகள் ஏறிப்போன பின்னரும் திருமணம் ஆகாத நிலையைக் கண்டு பரிதவிப்பார்கள். "ஐயோ – பாவம் – இந்த பெண்ணிற்கு இன்னும் திருமணம் ஆகவில்லையே. ... வாழ வேண்டிய வயதில் இன்னும் இது இந்த வீட்டிலேயே இருக்கிறதே ... ஒரு கூலி வேலை செய்கிறவனாவது வந்தால் நலமாயிருக்குமே ..." இப்படியெல்லாம் பலவிதத்தில் தங்களின் அனுதாப உணர்வுகளை வார்த்தைகளால் வெளிப்படுத்திவிட்டு போய்விடுவார்கள். ஆனால் அவர்களில் யாராவது ஒருவர் ஒரு சிறு உதவியை செய்ய முன்வந்திருந்தால் எப்போதே அந்த பெண்ணிற்கு திருமணம் ஆகி ஒரு குடும்ப வாழ்வைக் கண்டிருக்க முடியும்.

பலருடைய இரக்க உணர்வுகள் இப்படியே வார்த்தைகளோடு நிறைவடைந்து போகிறது. ஆனால் இயேசு காண்பித்த அந்த சமாரியன் அப்படியல்ல. அவன் ஆபத்தான நிலையைக் கண்டான். மனதுருகினான். அத்துடன் நிற்கவில்லை. தன் வாகனத்தை விட்டு இறங்கி வந்தான். காயமுற்றவனின் காயத்தைக் கட்ட முன்வந்தான். அவனுக்கு சரியான ஒரு முதலுதவி செய்தான். அதனைத் தொடர்ந்து அவனைத் தன் வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சத்திரம் ஒன்றைக் கண்டுபிடித்து, காயம் பட்டவனை குணமாக்க போதிய நடவடிக்கைகளை எடுத்தான்.

ஆம். அவன் முதுலுதவி மட்டும் செய்யவில்லை. முழு உதவியையும் செய்திட முன்வந்தான். ஆபத்தான ஒரு சூழ்நிலையில் ஒரு சிரமத்தை ஏற்றுக் கொண்டு, அதனால் வருகின்ற கஷ்டங்களை சந்திக்க தன்னை தயார் செய்து கொண்டான். ஆம். செயல்படத் தூண்டுகின்ற ஒரு இரக்கம்தான் உண்மையான இரக்கம். யார் வேண்டுமானாலும் பச்சாதாபப்பட முடியும். ஆனால் அது ஒரு செயலுக்குள் நம்மை கொண்டு போகாவிட்டால் பிரயோஜனமில்லை.

பாருங்கள். இப்படிப்பட்ட செயல்பாடு நிறைந்த ஒரு மனிதனாக அந்த சமாரியப் பிரயாணியை இயேசு காட்டுவதின் நோக்கத்தை நாம்

புரிந்துக் கொள்ள வேண்டும். நாமும் இந்த மனிதனைப் போல ஆக்கப்பூர்வமான ஒரு செயல்படுகின்ற இரக்கவான்களாக விளங்குவதைத்தான் தேவன் விரும்புகிறார் என்பதை புரிந்து கொள்ள வைப்பதே அந்த நோக்கம்.

கொஞ்சத்தில் உதவி செய்யாதவன்

பல நேரங்களில் இரக்கத்தை வெளிபடுத்தாமல், நம்முடைய வழியிலேயே நாம் சென்று விடும்போது, நாம் சொல்லுகின்ற ஒரு நியாயம் என்னவென்றால் "என்னிடம் உதவி செய்ய என்ன இருக்கிறது?" என்பதேயாகும். "அவர்களின் நிலமையைப் பார்க்கும் போது மனதுக்கு கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆனால் என்ன செய்வது ... நம்மிடம் செய்வதற்கான வசதி எதுவும் இல்லையே" என்று மனதை ஆற்றிக் கொள்வார்கள்.

ஆனால் ஒன்றை நாம் புரிந்துக் கொள்ள வேண்டும். நாம் எதையும் இழக்காமல் யாருக்கும் எந்த நன்மையும் செய்ய முடியாது. நம்மிடத்தில் உள்ளதை கொஞ்சம் கரைக்காமல், பிறருக்கு நாம் எதையும் கொடுக்க முடியாது. சில தியாகமான நடவடிக்கைகள் இல்லையேல் நாம் எதுவும் செய்ய இயலாது.

அந்த சமாரியன் ஏராளமாக பணம் வைத்திருக்கவில்லை. அவனிடம் இரண்டு பணம்தான் இருந்தது. ஆனால் அதனை துன்புற்ற மனிதனுக்காக தியாகமாக செலவு செய்ய முன்வந்தான். அவன் தன்னுடைய பிரயாணப் பாதையில், அவனுக்குக்காகக் கொண்டு வந்த திராட்சை ரசத்தையும் ஒலிவ எண்ணெய்யையும் தியாகம் பண்ண முன் வந்தான். அவனுடைய பயணக் களைப்பின் போது மிகவும் அவசியமாகின்ற அந்த பொருட்களை அந்த காயம் பட்டவனுக்காக செலவு செய்ய தயங்கவில்லை. எனக்குத் தேவையானதை இவனுக்கு கொடுத்து விட்டு நான் என்ன செய்வேன் என்று அவன் தயங்கிக் கொண்டிருக்கவில்லை. அவன் தியாகம் செய்ய முன் வந்தான்.

ஆம். நமக்குத் தேவையானவைதான் நம்மிடம் உள்ளது. ஆனால் அதிலிருந்தும் நாம் செலவு செய்ய மனதைப் பக்குவப்படுத்துவதே இரக்கம். நம்மிடம் கொஞ்சமாயிருக்கும் போதே அதில் ஒரு பகுதியை பிறருக்கு இரங்கி தியாகம் பண்ண முன் வராவிட்டால், நம்மிடம் எவ்வளவு பெரிய நிறைவுகள் வந்தாலும் இரக்கத்தை செயல்படுத்தும் மனம் நமக்கு வராது. கொஞ்சத்தில் உண்மையாயிராதவன் அநேகத்திலும் அப்படித்தான் இருப்பான்.

ஒரு மனிதர் ஒரு காலத்தில் மிகவும் ஏழையாகயிருந்தார். வறுமையின் விளைவாக அவருடைய வீட்டில் அதிகமாக பயிற்றங்கஞ்சி சமைத்து தான் சாப்பிடுவார்கள். ஆனால் அந்த மனிதர் அந்த பயிற்றங்கஞ்சியில் கூட அக்கம் பக்கத்திலுள்ள ஏழை பிள்ளைகளுக்கு ஒரு பகுதியை தாராளமாகக் கொடுப்பார். ஒரு நாள் அவருடைய பிள்ளைகள் வளர்ந்து அரபு நாடுகளுக்கு சென்று ஏராளம் பணம் சம்பாதித்தார்கள். ஒரு காலத்தில் பயிற்றங்கஞ்சியில் பங்கு கொடுத்த அந்த மனிதர் பணம் திரளாக வந்த போது கஞ்சனாக மாறிவிடவில்லை. பல ஏழை பிள்ளைகளை படிக்க வைத்தார். பல ஏழைப் பெண்களுக்கு பணம் செலவு செய்து திருமணம் செய்து வைத்தார்.

ஆம். கொஞ்சமாயிருக்கும் போது நம்முடைய மனநிலை எப்படியிருக்கிறதோ அதே போல்தான் அதிகமாயிருக்கும்போதும் இருக்கும். ஏனென்றால் இரக்கம், தயவு என்பது மனதின் தன்மையைப் பொறுத்து ஏற்படுவதேயன்றி, கையில் உள்ள பொருளாதார வலுவின் அடிப்படையில் அமைவதில்லை.

என்னுடைய பள்ளிக்கூடத்தில் படித்த சக மாணவன் ஒருவன், ஏழையாயிருக்கும் போதே வடிகட்டின கஞ்சன். பக்கத்து மாணவனுடைய பேனாவில் மை திடீரென்று தீர்ந்து போனால், ஆபத்திற்கு ஒரு துளி மை கூட கொடுக்கமாட்டான். ஒரு பென்சிலை இரவலாகக் கேட்டால் கூட கொடுக்கமாட்டான். அன்று அவன் ஏழை. ஆனால் இன்று அவன் வெளிநாடுகளுக்கு போய் பணிபுரிந்து ஏராளம் பணம் சம்பாதித்துக் கொண்டு வந்துள்ளான். அந்த பணத்தை வைத்துக் கொண்டு வட்டி வியாபாரம் பண்ணி மிகுதியாக சம்பாதிக்கின்றான். ஆனால் இன்றும் அதே கஞ்சத்தனம்தான். இரண்டு பேர் உடனிருந்தால் ஒரு டீகூட வாங்கி குடிக்க மாட்டான். பங்கு கொடுக்க வேண்டி வருமே. கண்ணெதிரே ஒருவர் பசியால் துடித்தால் கூட நாலணா செலவு பண்ண மாட்டான்.

ஆம். நமக்கு எவ்வளவு இருக்கிறது என்ற அடிப்படையில் ஏற்படுவதல்ல இரக்கமும், தயவும். அது இல்லாமையின் நடுவில்கூட இருக்க வேண்டும். உன்னிடம் இரண்டு சட்டை இருந்தால் ஒன்றை இல்லாதவன் ஒருவனுக்கு கொடுத்துவிடு என்றான் யோவான். (லூக்கா – 3:11) ஆம். நல்லது செய்வதற்கும், உதவி புரிவதற்கும் பத்து சட்டை இருக்கத் தேவையில்லை. ஒன்று அதிகமாயிருந்தால் கூட

போதும் என்பதை தெளிவுபடுத்தினான். ஆம். யாருக்கும் எந்த உதவியும் செய்யாமலிருந்தால் அதனுடைய காரணம் நம்மிடம் வசதி இல்லாமையல்ல. நம்மிடம் இயக்கம் இல்லாமையே என்பதை நாம் உணர வேண்டும்.

மன்னிப்பும் இரக்கமும்

இங்கே நாம் தியானிக்க வேண்டிய இன்னும் ஒரு சத்தியம் உண்டு. நாம் எருசலேமிலிருந்து எரிகோவை நோக்கிச் சென்ற பிரயாணி ஒரு யூதனாகத்தான் இருக்க முடியும் என்று யூகித்தோம். அப்படியிருக்கும் பட்சத்தில் அவனுக்கு உதவி செய்ய முன்வந்த சமாரியனிடம் வெளிப்படும் இன்னும் ஒரு விசேஷ குணம் *மன்னிக்கும் மாண்பு* ஆகும். மன்னிக்கும் ஒரு மனநிலை இல்லாவிடில், அந்த அளவிற்கு அவன் தியாகமான உதவிகளை செய்திருக்க முடியாது.

ஒரு சமாரியன் விஷயத்தில் யூதனுடைய மனநிலை என்னவென்பதை நாம் ஏற்கெனவேப் பார்த்தோம். சமாரியர்கள் யூதர்களால் பல நிலைகளில் அவமரியாதைச் செய்யப்படுகிறவர்கள். சமாரியர்களோடு யூதர்கள் எந்த ஒரு தொடர்பையும் வைத்துக் கொள்ள மாட்டார்கள். (யோவன் – 4:9) இயேசுவின் மேல் தங்களுக்கிருந்த வெறுப்பை வெளிப்படுத்தி, அவரை அவமானப்படுத்த விரும்பிய போது அவர்கள் அவரை "உன்னை நாங்கள் சமாரியன் என்று சொல்வது சரிதானே" என்று கேட்டதை நாம் வேதாகமத்தில் காண்கின்றோம். (யோாவன் – 8:48)

அதிலிருந்து அவர்கள் எந்த அளவிற்கு சமாரியர்களை இழிவாக எண்ணி நடத்தினார்கள் என்பதை நாம் உணர முடியும். அப்படியிருக்கும் பட்சத்தில் தங்களை மிக இழிவாக எண்ணி கேவலப்படுத்தும் யூதர்கள் விஷயத்தில் சமாரியர்கள் எந்த அளவிற்கு கோபத்தையும், வெறுப்பையும் வைத்திருப்பார்கள் என்பதை புரிந்து கொள்வது கஷ்டமானதல்ல.

அப்படியானால் காயமடைந்து குற்றுயிராகக் கிடந்த யூதன் விஷயத்தில் அந்த சமாரியன் ஒரு பெரிய மன்னிப்பின் மாண்பினைக் காண்பித்தான் என்று சொல்ல முடியும். காலா காலமாக தங்களை அவமானப் பிறவிகளாக எண்ணி புறக்கணித்து வரும் யூத இனத்தைச் சேர்ந்த ஒருவனுக்கு உதவி செய்வதற்கு சாதாரண உலக வழக்கில் எந்த நியாயமும் இல்லை. ஆனால் அந்த சமாரியப் பிரயாணி அவைகளைப் பொருட்படுத்தாமல் மனிதாபிமான உணர்வோடு இரங்கி செயல்பட்டான்.

ஆம். இரக்க குணத்தின் முக்கியமான ஒரு வெளிப்பாடு மன்னிக்கும் பண்பாகும். மன்னிக்கும் திறனுடையவர்களாக இல்லாத பட்சத்தில் ஒருவருடைய இரக்கம் சார்ந்த செயல்கள் போற்றுதலுக்குரியதல்ல. பொருளாதார நிலையில் மிகவும் பின் தங்கி வறுமையில் வாடுகின்ற பல குடும்பங்களுக்கு பலவித உதவிகளைச் செய்கின்ற ஒரு பெரியவர் உண்டு. யாருக்கு ஒரு கஷ்டம் என்றாலும் இரவு பகல் பாராமல் சென்று அவர் நல்லது செய்வார். ஆனால் ஒரு முறை அவருடைய வெறுப்புக்குரியவராக ஒருவர் மாற நேரிட்டால் அந்த நபரை அதற்குபின் திரும்பிப் பார்க்கவே விரும்பமாட்டார். எவ்வளவு மன்னிப்பு கேட்டாலும் இவர் மனம் மாறவே மாட்டார்.

ஆனால் மன்னிக்கும் பண்பினை உள்ளடக்காத இரக்கசீலங்கள் தேவனுடைய அங்கீகாரத்தைப் பெறுவதில்லை. ஏனென்றால் தேவன் மனுக்குலத்தின் மேல் தாம் காண்பிக்கும் இரக்கத்திற்கு மன்னிப்பையே முதற்படியாகக் கொண்டுள்ளார். *கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்* என்று வேதம் சொல்கின்றது. (எபே – 4:32)

பிறருடைய வார்த்தையாலோ, செயலாலோ, அணுகுமுறைகளினாலோ விசனப்படுத்தப்பட்ட நாம் அல்லது ஏதாவது ஒரு விதத்தில் பாதிக்கப்பட்ட நாம், அதனைக் குறித்த கசப்புணர்வையும், வெறுப்புணர்வையும் உள்ளதை விட்டு விலக்கி விடுதலே மன்னிப்பு என்பதாகும்.

சில நேரங்களில் மற்றவர்கள் நம்முடைய மன்னிப்பை விரும்புவதோ, அதனை எதிர்பார்ப்பதோ இல்லை. ஆயினும் நாம் அவர்களைக் குறித்த எதிர்விதமான உணர்வுகளை உள்ளத்தில் வைக்காமல் அகற்றி விடுதலே நமக்கு மேன்மையாகும்.

பல வருடங்களுக்கு முன்பு ஒரு சகோதரரால் நான் பல விதங்களில் பெரிதும் துன்பப்படுத்தப்பட்டேன். சில காலம் அவர் நடந்து கொண்ட தீங்கான விதங்கள் எனக்குள் மிகுந்த கசப்புணர்வை ஏற்படுத்தவே செய்தது. ஆனாலும் தேவ ஆவியின் உணர்த்துதலால் நான் அவைகளை வெகு விரைவில் உள்ளத்திலிருந்து வெளியேற்றிவிட்டேன். அதே வேளையில் அந்த சகோதரர் தான் செய்த தவறுகளை, முறைகேடுகளை இன்று வரை உணர்ந்ததற்கான எந்த அறிகுறியும் இல்லை.

யூதர்களால் மிகுந்த அவமானங்களையும், வேதனைகளையும் அடைய நேரிட்ட இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் போது *"பிதாவே இவர்களுக்கு மன்னியும்"* என்று பிரார்த்தனை செய்தார். ஆனால் யூதர்கள் அங்கே அவருடைய மன்னிப்பையோ, தேவனுடைய மன்னிப்பையோ கேட்கவேயில்லை. ஆகிலும் இயேசு தம்முடைய இருதயத்தில் அவர்களைக் குறித்த எந்தக் கசப்புணர்வும் இராதபடி செய்தார்.

மன்னிப்பதின் மூலம் நாம் மற்றவருக்கு நல்லதை செய்கின்றோம் என்பது இரண்டாவது உண்மையே. ஆனால் நமக்கு நாம் நன்மை செய்கின்றோம் என்பதுதான் முதல் உண்மை. மற்றவர்கள் தங்கள் தவறினை உணர்கின்றார்களோ,இல்லையோ அது வேறு விஷயம் மற்றவர்கள் மன்னிப்பை ஒரு பொருட்டாக எண்ணி கேட்கின்றார்களோ இல்லையோ அது இரண்டாவது விஷயம். முதலாவது, பிறரை மனதளவில் மன்னிப்பதால் நாம் விடுதலை அடைகின்றோம். பிறரைக் குறித்த கசப்புணர்வையும், வெறுப்புணர்வையும் நாம் விட்டு விடுவதால் இதயத்திற்கு ஒரு பெரிய அமைதி கிடைக்கின்றது. அது மட்டுமன்றி அங்கே நாம் தேவனுடைய மெச்சுதலையும், ஆசீர்வாதங்களையும் பெற்றிட தகுதி பெறுகின்றோம். எனவே மற்றவர்கள் "மன்னிப்பு கேட்க முன்வரவில்லை" என்பது முக்கியமல்ல.

மற்றொருவர் நமக்கு தவறு செய்துள்ளார் அல்லது ஏதாவது ஒரு வகையில் வருத்தப்படுத்தியுள்ளார் என்று நாம் உறுதியாக நம்பும் பட்சத்தில், அவராக மன்னிப்பு கேட்காதவரை நாமாக வலியப் போய் மன்னித்தேன் என்றுச் சொல்லத் தேவையில்லை. நாம் கர்த்தருக்காக மனதளவில் மன்னித்து, மற்றவர் எப்போது வந்தாலும் ஏற்றுக் கொள்கின்ற ஒரு தயார் நிலையில் இருந்தால் போதும்.

விசுவாசி ஒருவர் மன்னித்தலைக் குறித்த வல்லமையான ஒரு பிரசங்கத்தை சபையில் கேட்டார். மனதில் தொடப்பட்ட அவர் நேராக தனக்கு மிகவும் தீங்கிழைத்த தன்னுடைய உறவினர் ஒருவரிடம் போய் "நீங்கள் செய்ததை நான் மன்னித்தும் விட்டேன். இனி நமக்குள் கசப்பு வேண்டாம்" என்றார். மற்றவர் அதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைவார் என்று இவர் நினைத்தார். ஆனால் அவரோ இவரை வாய்க்கு வந்தபடி திட்டி தீர்த்தார். "நீ என்ன கவர்னரா ... ஜனாதிபதியா எனக்கு

மன்னிப்பு தருவதற்கு .... நான் என்ன உன்னிடம் கருணை மனு போட்டேனா ... இல்லை மன்னிப்பு கேட்டு மன்றாடினேனா" என்று கட்டபொம்மன் பாணியில் வசனம் பேசி இவரை நொந்து போகச் செய்து விட்டார்.

உடனேயே அவர் நேராக பிரசங்கம் செய்த பாஸ்டரிடம் போய் நடந்த விஷயங்களைக் கூறி "இனி நான் நரகத்திற்கு போனா கூட பரவாயில்லை. ஆனாலும் இந்த படுபாவியை மன்னிக்கவே மாட்டேன்" என்று உறுதிமொழி எடுத்தார். பாஸ்டர் அவருக்கு காரியங்களை விளங்கும் படி செய்வதற்கு மிகவும் சிரமப்பட நேர்ந்தது.

மற்றவர்கள் தாங்கள் செய்த தவறை உணராமல் போகலாம். அப்படி உணர்ந்தாலும் மன்னிப்பு கேட்கும் மனப்பக்குவம் அவர்களுக்கு வராமலிருக்கலாம். அவர்களிடம் போய் நம்முடைய மன்னிப்பின் செயலை திணிக்கத் தேவையில்லை. "இனி அவர்கள் விஷயத்தில் என் மனதில் எந்த கசப்பும் இல்லை" என்ற நிலைக்கு வந்தால் போதும்.

இரக்கமுடையவர்கள் இளமையானவர்கள்

இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று இயேசு கூறியதின் மூலம், மனிதன் மனமகிழ்ச்சியாயிருப்பதற்கு இரக்கம் மிகவும் முக்கியமான ஒரு சுபாவம் என்பதை நாம் கண்டறிய முடிகிறது. இரக்கம் இன்னொருவரின் நலனுக்காக நம்மை தயார் செய்து செயல்படுத்துகின்ற ஒரு நல்ல சக்தியாக விளங்குகின்றது.

இந்த உலகத்தில் யார் மற்றவர்களின் நலனை முக்கியமான ஒரு கடமையாக எண்ணி செயல்படுகின்றார்களோ, அவர்கள் வயதுகளில் மூத்த நிலை அடைந்தாலுங்கூட மனநிலையில் இளமையானவர்களாக விளங்கி மகிழ்ச்சியை ருசிக்கின்றார்கள் என்பது உண்மை. இந்த உண்மையை மனவியல் ஆய்வாளர்களும், பேரறிஞர்கள் மறுப்பின்றி ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

இந்த உலகத்தில் நம்முடைய ஒவ்வொரு நாட்களையும், ஒவ்வொரு வயதினையும் அர்த்தமுடையதாக்குவதற்கு விரும்பினால், தேவன்பின் உணர்வுகளால் உந்தப்பட்டு இரக்கமுடையவர்களாக பிறருக்காக எதையாவது செய்து கொண்டேயிருக்க வேண்டும்.

பலருடையக் கண்கள் எப்போதுமே பிறரையோ பிறரின் துன்ப நிலைகளையோ பார்க்கவே பாராது. அவர்கள் நான், என் மனைவி, என் பிள்ளைகள் என்ற வட்டத்திற்கு வெளியே ஒரு போதும் தங்கள்

கண்களையோ, மனதையோ செலுத்தவேமாட்டார்கள். ஆனால் உண்மையில் அப்படிப்பட்டவர்களின் வாழ்க்கை அர்த்தமற்றது மட்டுமல்ல, இளமையிலேயே முதுமை அடைகின்ற ஒன்றாகும்.

ஏனென்றால் அவர்கள் எப்போதுமே தங்களையே கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தலையில் ஒரு வெள்ளை மயிர் வந்ததும் ஐயோ ... இளமை போகிறதே என்று வருத்தப்பட ஆரம்பிக்கின்றார்கள். முகத்தில் லேசாகத் தோன்றிய ஒரு சுருக்கு அவர்களை விசனப்படுத்துகிறது. உடலில் தோன்றிய ஒரு சிறுவியாதி அவர்களை அதிகமான சுய பச்சாதாபத்திற்கு அழைத்துச் செல்கின்றது. மற்றவர்களின் நிலமைகளைப் பார்த்து இரங்கிச் செயல்படுகின்றவர்கள் முதுமையிலும் இளைஞர்களைப் போன்று உற்சாகமாயிருக்கின்றார்கள். தங்களையேப் பார்த்து, பார்த்து தங்களில் ஏற்படும் சிறு சிறு குறைவுகளுக்காய் சுய இரக்கத்தால் வருந்துகின்றவர்கள், இளமை காலத்திலேயே வாழ்க்கையில் சலிப்பு மிக்க மனிதர்களாக மாறிவிடுகின்றார்கள்.

யார் மனமகிழ்ச்சியானவர்கள் என்பதை கூறிக் கொண்டே வந்த இயேசு இரக்கமுள்ளவர்கள் மனமகிழ்ச்சி மிகுந்தவர்கள் என்று கூறியதோடு, அவ்விதம் இரக்கமுள்ளவர்கள்தான் தேவனுடைய இரக்கத்தைப் பெற முடியும் என்று கூறினார். (மத் – 5:7) இந்த பாக்கிய வசனம் சற்று நிபந்தனைத் தன்மையோடு காணப்படுகிறது. இரக்கம் உள்ளவர்கள் இரக்கம் பெறுகிறார்கள்.

ஆம். தேவனுடைய இரக்கங்கள் இந்த மண்ணுலகத்தில் மட்டுமன்றி, விண்ணுலகத்திற்குள் பிரவேசிக்கவும் தேவைப்படுகின்றது. ஆனால் அவைகள் நமக்கு சொந்தமாக வேண்டுமானால் நாம் இரக்கங்களை உடையவர்களாக விளங்க வேண்டும்.

ஆயினும் நம்முடைய இரக்கம் என்ற மூலதனத்தில் சம்பாதிக்கின்ற ஒன்றல்ல தேவனுடைய இரக்கம். இரக்கம் காட்டுவதில் தேவன் முந்துகிறார். அவர் நமக்கு மாபெரும் இரக்கமான காரியத்தை முதலாவது செய்யாவிட்டால், நாம் இரக்கம் உடையவர்களாக விளங்க முடியாது.

தேவனுடையப் பார்வையில் நாம் கொடிய தண்டனைக்குத் தகுதியான பாவிகள். ஆனால் தேவன் தம்முடைய மாபெரும் இரக்கத்தினால் நம்முடைய பாவங்களை மன்னித்து, பாவத்திற்கு பரிகாரம் செய்யும்படி தம்முடைய ஒரே பேறான குமாரனை நமக்காக ஜீவபலியாகத் தந்தருளினார். அவ்விதமான மாபெரும் இரக்கத்தினை தேவனிடமிருந்து பெற்றுக் கொண்ட நாம், அதனுடைய பிரதிபலிப்பாக மற்றவர்களுக்கும் இரங்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். அவ்விதம் நாம் பெற்ற மலையளவு இரக்கத்தின், ஒரு பகுதியை மற்றவர்கள் விஷயத்தில் காண்பிக்கும் போதுதான் தொடர்ந்து தேவ இரக்கம் நமக்குப் பெருகுகின்றது. இல்லையேல் ஏற்கெனவே பெற்ற கிருபை என்ற சுதந்திரமும் எடுக்கப்பட்டு போகிறது.

பலருடைய வாழ்க்கையில், பாவ மன்னிப்பை பெற்றிருப்பார்கள். தேவனுடைய இரக்கத்தை அனுபவித்திருப்பார்கள். ஆனால் காலப் போக்கில் அவர்களிடம் எந்த தேவ கிருபையும் செயல்படாது. அவர்களிடம் பாவ மன்னிப்பின் சந்தோஷமோ, தண்டனையிலிருந்து விடுதலையான உற்சாகமோ சிறிதளவும் காணப்படாது. ஆவிக்குரிய வாழ்க்கையில் அவர்களிடம் எந்த மகிழ்ச்சியும் காணப்படாது. பல வேளைகளில் இரட்சிக்கப்பட்ட நிச்சயமே இருக்காது. காரணம் என்ன? கர்த்தரிடத்திலிருந்து மாபெரும் மன்னிப்பைப் பெற்ற அவர்கள், தங்கள் வாழ்க்கைப் பகுதிகளில் யாரையும் மன்னிக்க முன்வரவில்லை. தேவனுடைய இரக்கங்களைப் பெற்ற அவர்கள், யாருக்கும் இரங்கி எந்த நலமானக் காரியத்தையும் செய்வதில்லை. எனவே தேவ இரக்கமும், மன்னிப்பின் நிச்சயமும் அவர்களிடம் செயல்படாமல் போய்விடுகிறது.

ஆம். தேவனிடத்திலிருந்து எவைகளைப் பெற்றுக் கொண்டதாக நாம் விசுவாசிக்கின்றோமோ அவைகளை பிறருக்கு பகிர்ந்தளிக்கும் தார்மீகக் கடமை நமக்கு உண்டு. கொடுக்கின்றவர்களுக்குத்தான் கர்த்தர் மேலும் மேலும் கொடுப்பார். இல்லையேல் ஏற்கெனவே தந்ததையும் பிடுங்கிக் கொள்வார். தேவன் எவைகளையெல்லாம் நமக்கு கிருபையினால் தருகின்றாரோ, அவைகளையெல்லாம் நாம் மற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். தேவ அன்பு, ஐக்கியம், இரக்கம், சந்தோஷம், நன்மைகள் ஆகிய எந்த ஒன்றும் பிறருக்கு நம்மால் கொடுக்கப்படுகின்ற போதுதான், அவைகள் நமக்கு தேவனால் மிகுதியாகத் தந்தருளப்பட்டுள்ளதை உணர முடியும்.

ஆம். தேவனிடமிருந்து பெற்றதை பிறருக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். தேவனிடம் நாம் அடைந்தவைகளை பிறரோடும் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். அவர் நமக்கு எப்படியிருந்தாரோ, அப்படியே நாமும் மற்றவர்களுக்கு இருக்க வேண்டும். அவர் நம்மை எப்படி கனிவாக நடத்தினார் என்று நம்புகின்றோமோ, அப்படியே நாமும் மற்றவர்களிடம் கனிவாக நடந்துக் கொள்ள வேண்டும்.

பதினாயிரம் தாலந்து கடன்பட்டவன் உவமையைச் சொன்ன இயேசு இந்த உண்மையை மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார். அங்கே பதினாயிரம் தாலந்து கடன் பெற்றவன் அதனை திருப்பிச் செலுத்த திராணியின்றி போனபோது கடன் கொடுத்தவன் மனமிரங்கி அவனை மன்னித்து கடன்களிலிருந்து விடுதலை கொடுத்தான்.

ஆனால் அவ்வளவு பெரிய கடன் தொகையிலிருந்து விடுதலை பெற்ற அவன், தன்னிடமிருந்து சிறு கடனை வாங்கியிருந்த ஒருவனிடம் மிகவும் கடுமையாக நடந்து கொண்டான். அவன் எவ்வளவோ கெஞ்சி மன்றாடியும், இவனுடைய மனம் இரங்கவில்லை. உண்மையில் இவனுக்கு கிடைக்கப்பெற்ற இரக்கம் ஒரு மலையளவானது. ஆனால் அவனிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டதோ ஒரு துரும்பளவு இரக்கம். அதைக் கூட அவன் காண்பிக்க மறுத்து விட்டான்.

இந்த அநீதியான போக்கின் காரணமாக பதினாயிரம் தாலந்து கடன் சுமை மீண்டும் அவன் தோளில் வந்து ஏறியது. கொடுத்த விடுதலையை வாபஸ் வாங்கிவிட்ட அந்த எஜமான் சொன்ன நியாயம் சிந்திக்கத்தக்கது.

"நான் உனக்கு இரங்கினது போல நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்க வேண்டாமா?" (மத்தேயு – 18:33)

ஆம். பிறருக்கு இரங்கவும், மன்னிக்கவும், நலமானவைகளைச் செய்யவும் நாம் தாராள மனதுடனே இருக்க வேண்டும். அப்போது தேவன் நமக்கு காண்பித்த இரக்கத்தின் ஆசீர்வாதங்கள் நிலைத்திருப்பதோடு மேலும் மேலும் அது பெருகும்.

இது வரையிலும் இரக்கத்தைக் குறித்து பல விஷயங்களை தியானித்தோம். ஆனால் இந்த இரக்கம் சராசரி மனிதனுடைய ஒரு இயற்கையான சுபாவம் அல்ல. செயல்பட தூண்டுகின்ற இரக்கம் என்பது ஒரு தெய்வீகமான சுபாவம் ஆகும். இதனை நாம் முயற்சிகளாலோ, சுய முடிவுகளாலோ செயல்படுத்துவதென்பது எளிதான விஷயமல்ல.

ஷேக்ஸ்பியருடைய ஒரு நாடகத்தில் இரக்கம் என்பது வானத்திலிருந்து பொழிகிற மழை போன்றது. அது தானாக வரவேண்டியது. அதனை கட்டாயப்படுத்தி வரவழைக்க முடியாது என்ற வாக்கியங்கள் வரும். இது உண்மையிலும் உண்மை.

ஒரு வேளை சில உபதேசங்களைக் கேட்டதினால் பெற்ற உணர்வினாலும், வேதம் வற்புறுத்துகின்றதே என்ற சிந்தனையினாலும் இரக்கமான காரியங்களை செய்திட நாம் முன்வரலாம். ஆனாலும் அதில் நாம் நிலைத்திருக்க முடியாது. ஏனென்றால் இரக்கம் என்பது இருதயத்திலிருந்து ஊற்றெடுக்கின்ற ஒன்றாக இராவிட்டால், இரக்கம் சார்ந்த செயல்களில் நாம் தொடர இயலாமல் போகும்.

பொதுவாக இயற்கையான ஜென்ம சுபாவ மனிதனிடம் இரக்கம் என்ற தெய்வீக சுபாவம் இல்லை. அதனை ஒருவன் மறுபடியும் பிறத்தல் என்ற அனுபவத்தின் மூலம், தேவனுடைய பிள்ளை என்ற புதிய படைப்பாக மாறும் போதே அந்த சுபாவம் உள்ளத்தில் தோன்றும். இரக்கம் பரிசுத்தாவியின் கனிகளில் ஒன்றாக இருக்கிறது. இயேசு கிறிஸ்துவுக்கு நம்மை ஒப்புக் கொடுத்து, இரட்சிப்பைப் பெற்று கர்த்தருடைய பிள்ளையாக மாறி ஆவியினால் நிரம்பினால்தான் இருதயத்தில் இரக்கம் தோன்றும். அந்த இரக்கம்தான் பிறருக்காக மனதுருகவும், பிறரை மன்னிக்கவும், பிறருக்கு ஆக்கப்பூர்வ நன்மைகளைச் செய்யவும் நம்மை உற்சாகப்படுத்தும்.

******

நோக்கங்களில் தூய்மையுடையோர் இறைவனைக் காண்பார்கள்

7

> இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனை தரிசிப்பார்கள். (மத்தேயு 5:8)

சென்னைப் பட்டிணத்தில் அனாதைப் பிள்ளைகளுக்காக ஒரு ஆசிரமம் உண்டு. அங்கே பல அனாதை பிள்ளைகளுக்கு ஆதரவு அளிக்கப்பட்டு வருகிறது. அதனை நடத்துகின்றவர் அவ்விதமான சமூக சேவைக்காக பலரால் பெரிதும் பாராட்டப்படுகின்றார். அனாதை பிள்ளைகளின் நலனுக்காக அயராமல் பாடுபடுகிறவர் என்று பல சமூக அமைப்புகள் அவரைப் பாராட்டுகின்றன.

ஆனாலும் உண்மைநிலை சற்று வித்தியாசமானது அனாதை பிள்ளைகள் பலருக்கு அவருடைய சேவையால் ஆதரவு கிடைக்கிறது. உண்மையாயினும், அந்த சேவையை அவர் மிகத்தீவிரமாகச் செய்வதின் முக்கிய நோக்கம் சுயநலம் சார்ந்ததுதான். சமூக சேவை என்ற பெயரில் அவர் ஏராமான நிதி உதவிகளை உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் பெறுகிறார். அவற்றில் பாதியை அனாதைப் பிள்ளைகளுக்காக செலவு செய்து விட்டு மீதத்தை தனக்காக சேர்த்து வைக்கின்றார். ஆயினும் அவரால் பலர் பயன் அடைகின்றபடியால் அநேகருடைய பாராட்டுகளும் வந்து குவிகின்றன.

ஆம். சமுதாயத்தில் ஒருவருடைய நற்செயல்கள் பலருக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும் போது அவரை மிகுதியாகப் பாராட்டுவது இயற்கை. ஆனால் தேவனின் பார்வை முற்றிலும் வித்தியாசமானது. அவர் வெளியே தெரிகின்ற நற்செயல்களை மட்டும் பாராமல், அந்த

நற்செயல்கள் நல்ல நோக்கங்களிலிருந்து வருகிறதா என்றும் பார்க்கின்றார். ஏனென்றால் நல்ல செயல்கள் எதுவாயினும் நல்ல ஒரு இதயத்திலிருந்து தோன்றும் நல்ல நோக்கங்களின் விளைவாக வரவேண்டும் என்பதே இறை நியதியாக இருக்கின்றது.

தேவன் தம்மைக் குறித்து சாமுவேல் தீர்க்கத்தரிசியிடம் கூறும் போது, *மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன். மனுஷன் முகத்தை பார்ப்பான். கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்*" என்று குறிப்பிட்டார். **(1 சாமு – 16:7)** மனிதனுடையப் பார்வையிலிருந்து தம்முடையப் பார்வை முற்றிலும் வேறுபட்டது என்பதை அவர் தெளிவுபடுத்தினார்.

மனிதக் கண்களால் ஒரு மனிதனுடைய வெளித் தோற்றத்தைத்தான் பார்க்க முடியும். ஆனால் தேவனுடையக் கண்களோ அந்த மனிதனுடைய உள் தோற்றத்தை, அதாவது இதயத்தின் நிலையை உற்றுக் கவனிக்கிறது.

பல நேரங்களில் இங்கேதான் நாம் தவறு செய்துவிடுகின்றோம். இதயத்தைப் பார்க்கின்றவர் தேவன் என்ற உண்மையை அறிந்திருந்தாலும், அந்த சிந்தையில் அவ்வளவு விழிப்புணர்வோடு செயல்படுவதில்லை. நம்முடைய செயல்களின் வெளித்தோற்றத்தைக் கண்டு தேவன் திருப்தியடைந்து விடுவார் என்பது போன்று நாம் நடந்து கொள்கின்றோம்.

காயீன் அவ்விதமான ஒரு தவறைத்தான் செய்தான். பக்திமிக்க தன்னுடைய சகோதரனாகிய ஆபேல் தேவனுக்கு காணிக்கைகள் செலுத்தி வழிபடச் சென்றபோது, அவனும் அதுபோல வழிபடச் சென்றான். ஆனால் ஆபேல் சரியான ஒரு இதயத்தோடு, தூய்மையான ஒரு நோக்கத்தோடு தேவனை ஆராதிக்கச் சென்றான். காயீனோ பொறாமை, வெறுப்பு, கசப்பு ஆகியவைகளை இதயத்தில் வைத்துக் கொண்டே, ஆபேலைப் போன்ற ஒரு பக்தி செயலை தானும் செய்திடச் சென்றான்.

ஆனால் உள்ளத்தைக் கவனிக்கும் தேவன். அவனுடைய ஆராதனையையோ, காணிக்கையையோ அங்கீகரிக்கவில்லை. வெளித்தோற்றத்தில் அவன் பக்திமானாகவும், அவனுடைய செயல் பக்திச் செயலாகவும் தோற்றமளித்த போதிலும், இதயத்தின் தோற்றமோ முரண்பட்டதாக இருந்தது. எனவே தேவன் அவனுடைய வழிபாட்டு பக்தியின் மேல் பிரியமாயிருக்கவில்லை.

இந்த உலகத்தில் யார் மிகுந்த மன மகிழ்ச்சியையும், மனநிறைவையும் உடையவர்கள் என்று இயேசு குறிப்பிடும் போது, அந்தப்பட்டியலில் *"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள்"* என்ற கூட்டத்தாரையும் சேர்த்துக் கொண்டார். (மத் – 5:8) இருதயத்தில் சுத்தமுள்ள அந்த கூட்டத்தாரால்தான், தேவனை தரிசிக்க முடியும் என்றும் கூறினார். அங்கே இதய சுத்தத்திற்கும், மனமகிழ்ச்சிக்கும் இடையே நெருங்கிய ஒரு தொடர்பு இருப்பதை நாம் அறியும்படி செய்தார். அங்கே இதய சுத்தத்திற்கும், இறைத் தொடர்பு நிலைக்கும் இடையே ஒரு வலிமையான தொடர்பு இருப்பதை நாம் புரிந்து கொள்ளும்படி செய்தார்.

தேவன் என்னோடு பேசினார். தேவன் எனக்கு தரிசனம் தந்தார். தேவனை நான் தரிசித்தேன் என்று அதிகமாக கூறுகின்ற சில தேவ ஊழியர்களை நான் கவனித்திருக்கின்றேன். ஏராமான மக்கள் அவர்கள் தேவனை அடிக்கடிப் பார்க்கின்றவர்கள் என்றே நம்புகின்றனர். ஆனால் அந்த ஊழியர்கள் பல பொய்களை துணிந்து பேசுகிறார்கள். பண ஆசைக்கு அடிமையாகி இருக்கிறார்கள். மனுஷீக சுபாவ நிலைகளை மேற்கொள்ளாதவர்களாயிருக்கின்றார்கள். முரண்பாடான ஒரு வாழ்க்கையை வாழ்கின்றார்கள்.

அப்படியிருக்கையில் அவர்கள் எப்படி தேவனை தரிசிக்க முடியும்? தேவன் எப்படி அவர்களோடு பேசுவார்? இதய சுத்தம் உள்ளவர்கள் தான் தேவனை தரிசிக்க முடியும் என்று இயேசு கூறியுள்ளாரே. அப்படியானால் அவர்கள் கண்டதாகக் கூறுகின்ற தேவ தரிசனங்கள் பொய்யானவையாகவே இருக்க முடியும்.

வெளிப்புறமும் உட்புறமும்

இயேசு கூறின இருதயத்தில் சுத்தம் உள்ளவர்கள் பாக்கியவான்கள் என்ற செய்தி அக்கால யூதர்கள் நடுவில் சற்று சவாலான ஒரு விஷயமாகும். ஏனென்றால் இயேசுவின் காலத்தில் வாழ்ந்த பரிசேயர்கள், சதுசேயர்கள் போன்ற யூதர்கள் மிகவும் பக்தி வாய்ந்தவர்கள். அவர்கள் பல சுத்திகரிப்பு ஆச்சாரங்களை மிகவும் கவனமாகக் கடைபிடிப்பார்கள்.

அவர்கள் அடிக்கடி மத ஆச்சாரங்களின் அடிப்படையில் கைகளை கழுவிக் கொள்வார்கள். கடைக்கு போய் திரும்பி வந்தால் கூட ஏதோ தீட்டுப்பட்டு விட்டது போல உணர்ந்து உடனேயே ஸ்நானம் பண்ண மறக்க மாட்டார்கள். அது போலவே பலவித பாத்திரங்களையும் இந்த சிந்தனையின் பின்னணியில் அவ்வப்போது கழுவி சுத்தம் செய்வார்கள். (மாற்கு – 7:3,4)

இவ்விதமாக மதப்பாரம்பர்யங்களின் அடிப்படையில் வெளிப்புறமாக பல சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட அவர்கள் மக்கள் மத்தியில் மிகவும் சுத்தமானவர்கள் என்ற ஒரு பெயரைப் பெற்றிருந்தார்கள். ஆனால் இவ்விதமான வெளிப்புற சுத்திகரிப்புகள் பிரயோஜனமற்றவை என்பதை எடுத்துரைத்து, உண்மையான சுத்திகரிப்பு நடைபெற வேண்டிய இடம் இருதயமே என்பதை அழுத்தமாக வற்புறுத்தினார்.

இந்தக் கருத்தை வெளிப்படையாக விளக்குவதற்காக ஒரு முறை பரிசேயன் ஒருவன் கொடுத்த விருந்தின் போது வேண்டுமென்றே இயேசு கை கழுவாமல் போய் சாப்பிட உட்கார்ந்தார். பாரம்பர்யமான வெளிப்புற சுத்திகரிப்பை, மிகப்பெரிய மத பக்தியாக கடைபிடிக்கும் பரிசேயர்களுக்கு அவருடைய செயல் ஆச்சர்யத்தைக் கொடுத்தது. சுத்தத்தைப் பற்றி சற்றும் கவலைப்படாமல் சாப்பிட உட்கார்ந்து விட்டாரே என்று மனதிற்குள் கொந்தளித்தனர்.

அவர்களைப் பார்த்து இயேசு *பரிசேயராகிய நீங்கள் போஜன பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள். உங்கள் உள்ளமோ கொள்ளையினாலும், பொல்லாப்பினாலும் நிறைந்திருக்கிறது என்றார். மதிகேடரே, வெளிப்புறத்தை உண்டாக்கினவர் உட்புறத்தையும் உண்டாக்கவில்லையோ* என்று கேள்விக்கணை தொடுத்தார். (லூக் – 11:37 – 40)

ஆம், உண்மையான பக்தி என்பது புறம்பான நிலையை மட்டும் சுத்தப்படுத்துவதல்ல. உள்ளான நிலையை சுத்தப்படுத்துவதே அது என்பதை விளங்கக் காட்டினார். உள்ளத்தில் படிந்துள்ள ஆகாத அசுத்தங்களை அகற்றத் தேவையான சுத்திகரிப்பு முயற்சிகளை மேற்கொள்ளாமல், உடலை மட்டுமே சுத்தப்படுத்தும் பிரயோஜனமற்ற மதபக்தியின் செயலை அவர் மதிகேடு என்ற நிலையில் பார்த்து கண்டித்தார்.

இந்தியா போன்ற நாடுகளில் பல மதங்கள் உடலை சுத்தம் செய்து விட்டால் எல்லா பாவங்களும் போய், இறைவனை நெருங்கிவிடலாம் என்று நம்புகின்றன. கங்கை போன்ற ஆறுகளில் போய் ஸ்நானம் செய்துவிட்டால் சகல பாவ தோஷங்களும் நீங்கிவிடும் என்ற நம்பிக்கையில் செயல்படும் மக்கள் எண்ணிலடங்காதோர்.

எத்தனை தவறான ஒரு மதபக்தியின் பாதை இது? ஒரு மனிதனுடைய உடலைக் கழுவுவதால் அவனுடைய நுரையீரலோ, சிறுநீரகமோ, இரத்தமோ சுத்தம் அடைய முடியாது. அதுபோலவே புறம்பான சுத்திகரிப்பு முயற்சிகளினால் ஒரு மனிதனுடைய இருதயம் சுத்தமாகாது. இருதயத்திற்குள் ஊடுருவி செல்கின்ற ஒரு உள்ளான சுத்திகரிப்பு முயற்சி அவனுக்கு அவசியமாயுள்ளது.

சரீரத்தை மட்டும் பாதிக்கும் தன்மையுடைய வெளிப்புற சுத்திகரிப்புகளால், தங்களை சுத்தவான்களாக எண்ணிக் கொண்டிருந்த யூதர்களின் காலத்தில்தான் இயேசு இருதய ரீதியான ஒரு உள்ளான சுத்திகரிப்பினால் மட்டுமே மனிதன் தேவனை நெருங்கவோ, அவரைக் காணவோ முடியும் என்று சீடர்களுக்கு போதித்தார். ஏனென்றால் ஒரு மனிதனுடைய இருதயம் சுத்தமில்லாமல் போனால், அது அவனுடைய முழு வாழ்க்கைப் பகுதிகளிலும், பலவித மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பது உண்மை.

அநேகர் தங்கள், உடலை, உடைகளை, வசிக்கும் வீடுகளை மிக, மிக சுத்தமாக பராமரிப்பதில் மிகவும் கவனமாயிருக்கின்றார்கள். ஆனால் உள்ளான தூய்மை நிலைகளுக்கு எந்த முக்கியத்துவமும் கொடுப்பது இல்லை. உட்புற சுத்தமின்மையின் விளைவுகள் பலவிதங்களில் அவர்களின் வெளிப்புற வாழ்க்கையையும் வெகுவாகப் பாதிக்கின்றன.

நற்செயல்களின் நல்லது பின்னால் தவறான நோக்கங்கள்

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் என்ற வாக்கியத்தில் வருகின்ற சுத்தம் என்ற தமிழ் வார்த்தை மூல பாஷையில் கலப்படம் எதுவும் இல்லாமல் சுத்தம் செய்யப்பட்டு தூய்மை நிலையை ஏற்படுத்துகின்ற ஒரு அர்த்தத்தையே குறிக்கின்றது. ஆங்கிலத்தில் இந்த வசனம் (Pure In Heart) என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

எந்த ஒரு நல்லப் பொருளிலும் கூட சில ஆகாத விஷயங்கள் சேர்ந்திருக்க முடியும் இந்நாட்களில் மக்கள் நல்ல தண்ணீரை அல்ல. சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரையே (PurifieD Water) அதிகமாக விரும்புகின்றார்கள். ஏனென்றால் நல்ல தண்ணீரிலும் கூட உடலுக்கு சில பாதிப்பு ஏற்படுத்தும் தன்மையுள்ள சில பாக்டீரியாக்கள் இருக்க முடியும். அத்தகைய பாக்டீரியாக்களையும் நீக்கி முழுமையாக சுத்தம் செய்யப்பட்ட தண்ணீரைத்தான் மக்கள் நம்பிக்கையோடு வாங்கிக் குடிக்கின்றார்கள்.

அது போலவே நாம் சாப்பிடுகின்ற பல உணவுப் பொருட்கள் முன்னேறிய தொழில் நுட்பங்களின் மூலம் பல விதங்களில் சுத்தம் செய்யப்படுகின்றன. ஆரோக்கியத்திற்கு பாதகம் ஏற்படுத்தும் தன்மையுள்ள எல்லா அம்சங்களும் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்ட பொருட்களையே அதிகவிலை கொடுத்து மக்கள் வாங்குகின்றனர்.

பல நேரங்களில் நம்முடைய பார்வைக்கு பல விஷயங்களில் தீமை எதுவும் இருப்பதாக நமக்குத் தெரியாது. ஆனால் சற்று ஆழமாக சோதித்தால்தான் இன்னும் அங்கே பாதகமான விஷயங்கள் கண்ணுக்குத் தெரியாமல் இருப்பதைக் கண்டறிய முடியும். பாலோடு தண்ணீர் சேர்ந்திருந்தால் தோற்றத்தில் அந்த கலப்படம் கண்களுக்குத் தெரியாது. அங்கே நன்கு சோதித்து பார்த்தால்தான் அதனை கண்டறிந்து அகற்ற முடியும்.

அது போலவே நம்முடைய செயல்களோடு கலந்திருக்கும் சில தீய அம்சங்களை பிறருடையக் கண்கள் கண்டறியாது. ஏன்? சில நேரம் நமக்கே அது தெரிவதில்லை. நாம் அதிகமாக நம்முடைய செயல்களின் புறத்தோற்றங்களைத்தான் கணக்கிலெடுத்து நமக்குள் திருப்தியடைந்து கொள்வோம்.

ஆனால் தேவன் எதையுமே அதிகமாக ஆராய்ந்து பார்க்கிறவர். எரேமியா தீர்க்கத்தரிசி மூலமாக தேவன் பேசும் போது *"நான்" இருதயத்தை ஆராய்கிறவரும், உள்ளந்திரியங்களை சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்"* என்று கூறினார். (எரேமியா – 17:10) இந்த உண்மையை நன்கு உணர்ந்து கொண்டவனாக தாவீது *கர்த்தாவே நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர்* என்று கூறினான் (சங் – 139:1)

உலகம் நாம் எதைச் செய்கின்றோம் என்றுதான் பார்க்கிறது. ஆனால் தேவனோ அவைகளை நாம் எதற்காக செய்கின்றோம் என்று பார்க்கின்றார். நம்முடைய நலமான செயல்களின் பின்னணியில் கூட நாம் கொண்டுள்ள எண்ணங்கள், நினைவுகள், நோக்கங்கள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை சோதித்துப் பார்த்து கண்டறிகிறார்.

புதுவை மாநிலத்தைச் சார்ந்த ஒரு அரசியல் தலைவர் தன்னுடைய தொகுதி மக்களுக்கு அரிய பல சேவைகளை பல ஆண்டுகளாக செய்து வருகிறார். அவருடைய உதவி பெற்று பலர் முன்னுக்கு வந்துள்ளனர்.

வறிய நிலையில் உள்ள மக்களுக்கு அவர் தொடர்ந்து செய்து வருகின்ற உதவிகள் ஏராளமானவை. ஆனால் அதில் சிந்திக்க வேண்டிய ஒரு விஷயம் என்னவென்றால் அந்த தொகுதிக்கு வெளியே ஒரு சிறு உதவியை கூட யாருக்கும் அவர் செய்ய மாட்டார். தன்னுடைய உறவினர் சிலருக்கு கூட தேவைகளில் அவர் உதவியதில்லை.

ஏனென்றால் அவர் தொகுதி மக்களுக்கு செய்யும் உதவி உள் நோக்கம் கொண்டது. சமூக சேவை செய்யும் ஆர்வத்தாலோ, ஏழைகள் மேல் கொண்ட இரக்கத்தாலோ அவர் சேவை செய்யவில்லை. அந்தத் தொகுதியிலிருந்து தொடர்ந்து வெற்றி பெறுவதற்கு தேவையான மக்கள் ஆதரவை எதிர்பார்த்தே அதனை செய்கின்றார். ஆம். சுயம் நலம் சார்ந்த ஒரு எதிர்பார்ப்பில்தான் அவர் சேவையாளராக தன்னை நிறுத்தியுள்ளார். ஆனால் இவ்விதமான கலப்படமான ஒரு இதயத்திற்கு தேவனிடமிருந்து எந்த பாராட்டும் கிடைக்க முடியாது.

இந்நாட்களில் ஆவிக்குரிய உலகிலும் இது போன்ற கலப்படங்கள் வெகுவாக பெருகிவிட்டன. பலருடைய இறைப்பணிகளின் வெளித்தோற்றம் மிகவும் மெச்சப்படத்தக்கதாகவும், தேவையான தாகவுமேத் தோன்றுகிறது. ஆனாலும் செயல்படும் விதங்களின் சில அம்சங்களைப் பார்க்கும் போது அங்கே இறைப்பணி நோக்கம், சுய நல நோக்கமும் கலந்து கலப்படமாகவே உள்ளது. ஒரு வேளை அவைகள் பெருவாரியான மக்களின் பாராட்டையும், ஆதரவையும் பெற முடியும். ஆனால் உள்ளங்களை ஆராய்ந்து பார்த்து கண்டறியும் தேவனுக்கு முன்பாக எதுவுமே மறைந்திருக்க முடியாது.

அன்றைய பரிசேய மதத்தலைவர்கள் பல்வேறு ஆன்மீக சம்பந்தமான ஈடுபாடுகளின் அடிப்படையில் மக்கள் மத்தியில் நீதிமான்களாக தோன்றினார்கள். மக்கள் அவர்களை நீதிமான்களாகப் பார்த்து மரியாதை செலுத்தினார்கள். ஆனால் இயேசுவோ அவர்களின் சுயம் சார்ந்த உள் நோக்கமுடைய இருதயத்தைப் பார்த்து அவர்களின் வேடமிடும் வாழ்க்கையை வெளியரங்கப்படுத்தினார். எனவே அவர்களைப் பார்த்து *நீங்கள் மனுஷருக்கு முன்பாக நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள். உள்ளத்திலோ மாயத்தினாலும், அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்* என்று கூறினார். (மத் – 23:28)

நோக்கங்களில் கலப்படம்

ஒரு குறிப்பிட்ட பட்டணத்தில் இரண்டு பாஸ்டர்கள் ஊழியம் செய்கின்றனர். இரண்டு பேரும் வேறு, வேறு ஸ்தாபனங்களைத் சேர்ந்தவர்கள். இரண்டு பேரும் பெரிய தலைமை சபைகளோடு ஏராளம் கிளை சபைகளையும் ஸ்தாபித்துள்ளார்கள். இரண்டு பேரும் பெரிய பெரிய கூட்டங்களை நடத்தி ஆத்தும ஆதாய காரியங்களை தீவிரமாக செய்கின்றவர்கள். இரண்டு பேரும் இரவு பகல் பாராமல் ஊழியம், ஊழியம் என்று கடுமையாக உழைக்கின்றார்கள். கிறிஸ்தவ வட்டாரங்களில் அவர்கள் மிகக் கடுமையாக உழைத்து, ஊழியங்களைக் கட்டி எழுப்பியவர்களாக அறியப்பட்டு அதிகமாக மெச்சப்படுகின்றனர்.

உண்மையாகவே ஊழிய விஷயத்தில் இரண்டு பேரும் அயராமல் உழைத்து பாடுபடுகின்றவர்கள் என்பது மறுக்கமுடியாத ஒன்றாகும். அவர்களின் தீவிரமான ஊழியச் செயல்பாடுகளை யாரும் மெச்சாமல் இருக்க முடியாது.

ஆனால் அங்கே மறைந்து நின்று செயல்படுகிற இன்னொரு விஷயம் உண்டு. இந்த இரண்டு பாஸ்டர்களுமே ஒருவருடைய உயர்வை ஒருவர் விரும்பாதவர்கள். ஒருவருடைய வளர்ச்சியை ஒருவர் பார்த்துப் பொறாமைப்படுகிறவர்கள். ஒருவரையொருவர் கவனித்து மற்றவரை முந்திச் செல்ல வேண்டும் என்று தீவிரப்படுகிறவர்கள். இருவருமே மற்றவரை விட கொஞ்சமும் கீழேப் போய்விடக் கூடாது என்று போட்டியுணர்வோடு செயல்படுகிறவர்கள். இவர் ஒரு கிராமத்தில் ஒரு சபை ஸ்தாபிக்கப் போகிறார் என்று அறிந்தால், மற்றவர் அதற்கு முந்தி அங்கே ஒன்றை ஸ்தாபிப்பார். இவர் ஒரு பெரிய நற்செய்தி கூட்டம் நடத்தினால், அவரும் உடனேயே ஒரு கூட்டம் நடத்துவார்.

இங்கே இருவரும் தீவிரமான ஆத்தும ஆதாயகர்களாக இருந்த போதிலும், நோக்கங்களில் தூய்மையில்லை. அங்கே கலப்படம் உள்ளது. மற்றவரைவிட தான் பெரிய அளவில் ஊழியங்கள் செய்ய வேண்டும் என்ற சுயம்சார்ந்த ஆசைகள்தான் இரண்டு பேரையும் அதிகமாக பாரப்படுத்தி தீவிரப்படுத்தியுள்ளது. இங்கே ஆவிக்குரிய நோக்கங்களும், சுயம் சார்ந்த நோக்கங்களும் கலந்து கலப்படமாக விளங்குகின்றது. நோக்கங்களில் சுத்தம் (Purity) இல்லை. இவ்விதமான செயல்பாடுகள் மனிதர்களின் பாராட்டையும் மெச்சுதலையும் அதிகமாகப் பெற்றுத் தந்தாலும் கூட தேவ அங்கீகாரத்தை பெற முடியாது.

இவ்விதமான தீவிரமான செயல்பாடுகளால், ஆவிக்குரிய கோணத்தில் பல நன்மைகள் இருப்பது உண்மை. ஆனாலும் நோக்கங்களில் கலப்படமற்ற தூய்மையில்லாதவர்களோடு தேவன் இடைபடுவதில்லை. அப்படிப்பட்டவர்கள் தேவ பலத்தில் அல்ல. சுய பலத்திலேயே தங்களின் கடுமையான ஓட்டங்களை ஓட முடியும். ஏனென்றால் இருதயத்தில் சுத்தமில்லாதவர்கள் (எண்ணங்களில், நோக்கங்களில், கலப்படமற்ற தூய்மையில்லாதவர்கள்) தேவனை தரிசிக்க முடியாது. ஏனென்றால் நாம் எதைச் செய்கின்றோம். என்பதை விட எதற்காக அதனைச் செய்கின்றோம் என்பதையே தேவன் கூர்ந்து கவனிக்கின்றார்.

இயேசு தம்முடைய காலத்தில் வாழ்ந்த பரிசேயர்களையும், சதுசேயர்களையும் அவர்களுடைய கலப்படமான இருதய நிலைக்காகத் தான் அதிகமாகக் கடிந்து கொண்டார். ஒரே நேரத்தில் இறைவனின் ஆசீர்வாதத்தையும், மனிதனின் புகழ்ச்சியையும் எதிர்பார்த்த அவர்களிடம் அது சாத்தியமில்லை என்பதை சுட்டிக்காட்டினார்.

அவர்கள் தர்மம் செய்கிற பழக்கத்தை உடையவர்களாக விளங்கினார்கள். ஆனால் பெரிதாக விளம்பரப்படுத்தி பலர் அறியும்படிதான் அதனை செய்வார்கள். அவர்கள் நன்றாக ஜெபிப்பார்கள். ஆனாலும் அநேகர் பார்த்து தங்களை சிறந்த ஆன்மீக வாதிகளாக மெச்ச வேண்டும் என்ற ஆசையினால்தான் அவ்விதம் செய்வார்கள். அவர்கள் நன்றாக உபவாசம் இருப்பார்கள். ஆனாலும் அவர்கள் உபவாசமிருப்பதை பலர் அறியும்படி செய்ய கவனமாயிருப்பார்கள்.

இவ்விதமான ஆன்மீக நோக்கத்தையும், சுய நோக்கத்தையும் கலந்து செயல்பட்ட அவர்களிடம் நீங்கள் உங்கள் பலன்களை அடைந்து தீர்ந்ததென்று இயேசு கூறினார். (மத்தேயு – 6:2,16) ஒரே நேரத்தில் சுயத்தையும், தேவனையும் திருப்தி செய்ய முடியாது. ஒரே நேரத்தில் மனிதர்களிடமிருந்தும், தேவனிடமிருந்தும் பலன் அடைய முடியாது. இரண்டு வித நோக்கங்களையும் கலந்து செயல்படுகிறவர்களுக்கு, மனிதர்களிடமிருந்து நல்ல பலன்கள் கிடைக்கலாம். ஆனால் தேவனிடத்திலிருந்து பலன் அடைதல் இயலாத காரியம்.

இன்று அநேகர் நல்ல பல காரியங்களை செய்தும் கூட, தேவனால் அவர்கள் எந்த பலனையும் அடைய முடியாததைப் பார்க்க முடிகிறது. சிலர் இப்படியெல்லாம் நலமானக் காரியங்களைச் செய்தும் எந்த ஆசீர்வாதமும் இல்லையே என்று சலித்துக் கொள்வதுமுண்டு. ஆனால் நோக்கங்களில் தூய்மை இருந்தால் மட்டுமே தேவனால் பலன் அடைய முடியும். மனிதர்களிடமிருந்து எதையும் எதிர்பாராமல் செயல்பட்டால்தான் தேவனிடத்திலிருந்து நற்பலன்களை அடைய முடியும்.

நாலுபேர் தங்களை நல்லவர்கள் என்று பாராட்ட வேண்டும் என்று நன்மைகள் செய்தால் அங்கே தேவனால் பலன் இல்லை. சபை பாஸ்டரும், சபை மக்களும் தன்னை உயர்வாக எண்ண வேண்டும் என்பதற்காக தாராளமாக காணிக்கை வழங்கினால் தேவனிடமிருந்து எந்த பலனும் இல்லை. தான் எப்படியாவது பெரிய பாஸ்டராக வேண்டும், பெரிய சபையை உருவாக்க வேண்டும் என்ற சுயம்சார்ந்த ஆசைகளின் பின்னணியில் கடுமையாக ஊழியம் செய்தாலும் கர்த்தரிடமிருந்து எந்த பலனும் இல்லை.

மனிதன் எப்போதுமே எதைச் செய்தாலும் இதனால் தனக்கென்ன கிடைக்கும் என்று எதிர்பார்க்கும் இயற்கையை உடையவன். அவைகளை நூறு சதவிகிதம் தவிர்த்து விட்டு தியாகி ஆகிவிடுவது எளிதான விஷயம் அல்ல. தனக்காக எதையாவது எதிர்பார்க்கும் இயற்கை அவ்வப்போது தலைதூக்கவே செய்யும். ஆனால் அவைகளுக்கு இசைந்து போகாமல், அவற்றை மேற்கொள்ள வேண்டும். அவைகளை சோதித்து கண்டறிந்து களைந்திட போதிய கவனம் செலுத்தாவிடில், அவைகளே நம்மை ஆளுகை செய்து, தெய்வீக உணர்வுகளுக்கு முரண்பட்டு செயல்பட நம்மை கட்டாயப்படுத்தும்.

இரண்டுங்கெட்டான் நிலை

"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள்" என்று இயேசு குறிப்பிடும் சுத்தத்தை அசுத்தத்திற்கு எதிர்பதமான ஒரு வார்த்தையாக எடுத்துக் கொள்ளக்கூடாது. நன்கு கவனித்துப் பார்க்கும் போது அது கலப்படம் என்ற அர்த்தத்திற்கு எதிர்பதமான அர்த்தத்தைக் கொடுக்கும் வார்த்தையே இயேசு கூறிய சுத்தம் என்ற வார்த்தை.

அசுத்தம் என்பது நூற்றுக்கு நூறு ஆகாத ஒரு விஷயம். ஆனால் கலப்படம் என்பது அப்படியல்ல. அங்கே அசுத்தமான அம்சங்களோடு சுத்தமான அம்சங்களும் கலந்திருக்கும். அது அசுத்தத்திலும் முழுமையானது அல்ல. சுத்தத்திலும் முழுமையானது அல்ல.

ஒரு முறை நான் இன்னொருவரோடு சேர்ந்து மலைநாட்டு தேன் வாங்குவதற்காக ஒரு கடைக்குச் சென்றிருந்தேன். அந்த கடைக்காரர் இரண்டு விதமான பாட்டில்களை காண்பித்து விலையையும் கூறினார். இரண்டிற்கும் இடையில் விலை வித்தியாசம் அதிகமாயிருந்தது. விலை வித்தியாசத்தைப் பார்த்து கடைக்காரரிடம் இது என்ன தேன், அது என்ன தேன் என்று கேட்டோம். கடைக்காரர் இரண்டுமே மலைநாட்டுத் தேன்தான் என்றார். அப்படியானால் ஏன் இந்த விலைவித்தியாசம் என்று கேட்டோம். "அதுவா ... விலை அதிகமானது ஒரிஜினல் ப்யூர் (Original Pure) மலைநாட்டுத் தேன் – விலைகுறைவானது கொஞ்சம் சர்க்கரைப்பாவு கலந்தது என்று வெளிப்படையாக பதிலளித்தார் கடைக்காரர்.

பாருங்கள். இரண்டு பாட்டிலிலும் மலைத்தேன் உள்ளது. ஆனால் ஒன்றில் நாம் விரும்பாத சர்க்கரைப் பாவு தேனுக்குள் மறைந்துள்ளது. மற்றதில் நாம் எதனை எதிர்பார்க்கிறோமே அந்த அம்சங்கள் யாவும் அங்கே இருக்கிறது. சர்க்கரைப் பாவு கலந்த தேனை அசுத்தம் என கூற முடியாது. ஆனால் அரைகுறையானது. நாம் எதிர்பார்க்காத தரக்குறைவு அதில் உள்ளது. அது விரும்பத்தக்கது அல்ல.

இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் போதே பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருந்தது. புளியங்கொட்டையின் ஆடையை மிகுதியாகக் கலந்து தேயிலைத் தூள் தயாரித்து மக்களை ஏமாற்றிய மிகப் பெரிய கும்பலை போலீஸ் கைது செய்து விசாரித்து வருவதைக் குறித்த செய்தி அது. அந்த கலப்பட வியாபாரம் நீண்ட நாட்களாக நடந்து வந்துள்ளது. ஆயிரக்கணக்கானோர் அந்த கலப்படத் தேயிலையை விஷயம் தெரியாமல் உபயோகித்து வந்துள்ளனர்.

இந்த தேயிலைத்தூள் நூற்றுக்கு நூறு புளியங்கொட்டையின் ஆடையால் தயாரிக்கப்பட்டதல்ல. அதனை டீத்தூள் என்று நம்ப வைக்கும்படி தேயிலையும் ஓரளவு கலக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த கலப்படம் ஒரு பெரிய மோசடி. மக்களை ஏமாற்றும் மோசமான செயல்.

லவோதிக்கேய சபையைப் பார்த்து ஆவியானவர் *நீ குளிருமல்ல, அனலுமல்ல. நீ குளிராயாவது, அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும்* என்றார் (வெளி – 3:15) அது தான் கலப்படமான ஒரு ஆவிக்குரிய நிலை. மாய்மாலமான ஒரு ஆவிக்குரிய அனுபவம் அங்கே ஆவிக்குரிய அம்சங்களும் இருக்கிறது. மாம்சீக அம்சங்களும் இருக்கிறது. கர்த்தருக்கு இது ஏற்புடையது அல்ல.

அனனியாள் சப்பீராள் செய்த பாவத்தின் தன்மையைக் கவனித்துப் பாருங்கள். காணிக்கை விஷயத்தில் பொய் சொன்னது தான் அவன் மேல் தேவ கோபத்தை பாயச் செய்தது. ஆனாலும் அந்த பொய்யின் பின்னணியிலிருந்த விஷயம் என்ன? விசுவாசிகள் பலரும் இயேசு கிறிஸ்துவின் மேல் கொண்ட பற்றின் காரணமாக, தங்கள் சொத்துக்களை விற்று, முழுமையாக அப்போஸ்தலர்களின் பாதத்தில் முழுமையாக வைத்தனர்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அனனியா சப்பீராள் தம்பதியினரும் மற்றவர்களைப் போல அனைத்தையும் இயேசுவுக்காக அர்ப்பணித்தவர்கள் போல காணப்பட விரும்பினார்கள். ஆனாலும் அந்த அர்ப்பண சிந்தை அவர்களிடம் முழுமையாக இல்லை. இல்லாததை இருப்பதை போல பலருக்கு காண்பிக்க சென்றதால்தான் நிலத்தை விற்ற விஷயத்தில் உண்மையாயிருக்க முடியவில்லை. அர்ப்பண சிந்தை இருதயத்தில் சுத்தமானதாக (Pure) இருக்கவில்லை. அந்த அரைகுறையான அர்ப்பணம் தேவனுடையப் பார்வையில் ஒரு மாய்மாலமாக தெரிந்ததால்தான் அவர்கள் அழிவைக் காண நேரிட்டது.

ஆம். கலப்படமான ஒரு வாழ்க்கையை அல்ல. சுத்தமான ஒரு வாழ்க்கையை வாழவே கிறிஸ்துவினால் அழைக்கப்பட்டோம். நாம் எப்படி பிறரால் காணப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோமோ அப்படியே நமக்குள் நாம் இருக்க வேண்டும். நாம் நம்முடைய செயல்களை மக்கள் எப்படி புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோமோ, அப்படியே நம்முடைய செயல்களின் விஷயத்தில் நம்முடைய நோக்கங்கள் இருக்க வேண்டும்.

குறிப்பிட்ட ஒரு பாஸ்டர் எந்த ஒரு பிரசங்கமாயினும் சரி, போதனையாயினும் சரி காணிக்கைக் கொடுத்தலைக் குறித்தும், தசம பாகம் கொடுப்பதைக் குறித்தும் பேசாமல் விடவே மாட்டார். பிரசங்கத்தின் பெரும் பகுதி காணிக்கை கொடுத்தலினால் வரும் ஆசீர்வாதங்களைப் பற்றியதாகவே இருக்கும். அவ்விதம் பிரசங்கித்து விட்டு "எனக்கு நீங்கள் காணிக்கைத் தரவேண்டும் என்பதற்காக இதை நான் சொல்லவில்லை. நீங்கள் கர்த்தருக்குக் கொடுப்பதால் வரும் நன்மைகளை அடையாமல் போய்விடக் கூடாது என்பதற்காகவே சொல்கிறேன்" என்பார்.

ஒரு நாள் ஆராதனை வேளையில் அவருடைய சபையைச் சேர்ந்த நல்ல வருவாய் நிலையுள்ள ஒருவர் சாட்சி சொன்னார். "பாஸ்டரின் பிரசங்கங்களைக் கேட்டு பல ஊழியங்களுக்கு நான் அதிகமாக காணிக்கைக் கொடுக்க ஆரம்பித்தேன்.அதனால் என்னைக் கர்த்தர் மிகுதியாய் ஆசீர்வதித்து வருகிறார்" என்று சாட்சியில் குறிப்பிட்டார்.

இந்த சாட்சி அந்த பாஸ்டரை சற்று கோபப்படுத்தியது. ஏனென்றால் சாட்சி சொன்னவர் காணிக்கை முழுவதையும் இவரிடம் கொடுக்காமல் பல பிற ஊழியங்களுக்கும் கொடுத்திருந்தார். எனவே மறு வாரத்திலிருந்து அந்த பாஸ்டர் காணிக்கை கொடுத்தால் மட்டும் போதாது. அதனை ஸ்தல சபை பாஸ்டரிடம் கொடுத்தால்தான் ஆசீர்வாதம்" என்ற ரீதியில் பேச ஆரம்பித்தார். ஒரு கடையில் சாப்பிட்டுவிட்டு, இன்னொரு கடையில் போய் பில் கொடுப்பதா என்ற கேள்வியையும் முன்வைத்தார்.

பாருங்கள் இதன் பெயர்தான் கலப்படம். இதயத்தில் கலப்படமில்லாத சுத்த சிந்தையும் நோக்கமும் இல்லை. அங்கே ஆவிக்குரிய விஷயங்களோடு சுயலாப சிந்தை கலந்துள்ளது. எண்ணங்களில் தூய்மை இல்லை. குறிப்பிட்ட ஒரு பிரபல சுவிசேஷகர் காணிக்கைகள் பற்றி எழுதும் போது, சிலர் எங்கள் ஊழியத்திற்கு நிலங்களை காணிக்கையாக தருகின்றனர். சிலர் வேலையிலிருந்து ஒய்வு பெறும் போது கிடைக்கின்ற தொகையில், ஒரு பகுதியை காணிக்கையாகத் தருகின்றனர் என்று எழுதுவார். பகுத்தறிந்து சிந்திக்கும் ஆவியின் அனுக்கிரகம் உள்ளவர்களால் அவருடைய மாய்மாலத்தைக் கண்டு கொள்ள முடியும். உண்மையில் அவர் அங்கே சொல்ல வருவது நீங்களும் எங்கள் ஊழியத்திற்கு நிலம், நகை ஆகியவற்றை தாருங்கள் என்பதையேயாகும்.

இதுதான் இதயத்தில் சுத்தமாயிருப்பதற்கு எதிர்பதமான ஒரு கலப்பட நிலை. உண்மைகளுக்குப் பின்னால் மறைமுகமான எதிர்பார்ப்புகளும், ஆசைகளும் மறைந்திருக்கின்றன.

ஒருமுறை ஒரு பெரிய உபவாசக் கூட்டத்திற்கு நான் சென்றிருந்தேன். அந்த உபவாசக் கூட்டத்தின் கடைசி நாளில், அதனை ஒழுங்கு செய்த ஊழியர் இந்த உபவாசக் கூட்டம் நடத்தியது சம்பந்தமாக இன்னும் ஏராளம் பணம் தேவைப்படுகிறது என்று அறிவித்தார்.

அத்துடன் நிற்காமல் இந்த தேவையை சந்திப்பதற்காக முதலாவது என்னுடைய கைக்கடிகாரத்தை நான் தரப்போகிறேன். அது ஏலம் விடப்படும் என்றார். உடனேயே கூட்டத்திலிருந்த பலர் உணர்ச்சி வசப்பட்டு, தங்கள் கைக்கடிகாரங்களையும், மோதிரம், கம்மல், செயின் ஆகியவைகளையும் கழற்றி காணிக்கையாகக் கொடுத்தனர். கொஞ்ச நேரத்தில் அவர் எதிர்பார்த்ததை விட அதிக தொகை அங்கே திரண்டது.

உண்மையிலேயே அவர் அதை எதிர்பார்த்துதான் தன்னுடைய கைக்கடிகாரத்தை தியாகமாக கொடுத்தார். இந்நாட்களில் உள் நோக்கங்களை மறைத்து வைத்து, ஆவிக்குரிய தோற்றத்தை புறம்பே கொடுத்து மக்களை ஏமாற்றும் செயல்கள் ஏராளம். ஏராளம். ஆனால் மறைவான எதிர்பார்ப்புகளை மனதில் வைத்து செயல்படுவதை தேவன் கடுமையாக வெறுக்கின்றார்.

விசுவாசியாயினும் சரி, ஊழியராயினும் சரி "என்னுடைய செயல்களுக்கு பின்னால் பேச்சுகளுக்கு பின்னால், ஈடுபாடுகளுக்கு பின்னால் சுயம் சார்ந்த எண்ணங்களை, நினைவுகளை, எதிர்பார்ப்புகளை மறைத்து வைக்கவில்லையா" என்ற கேள்வியைக் கேட்டு செயல்பட வேண்டியது மிகவும் அவசியம்.

இயேசு கிறிஸ்து த்ாம் ஊழியம் செய்த காலத்தில் தேவனைத் தேடாத, ஜெபிக்காத, உபவாசிக்காத, நல்லதை செய்யாத, ஆன்மீகத்தில் நாட்டமில்லாத முழு நேரப் பாவிகளைக் கண்டித்தும், கடிந்தும் பேசவில்லை. அவருடைய தாக்குதல்கள் எப்போதும் அதிகமாக ஜெபிக்கின்ற, உபவாசிக்கின்ற, தசமபாகம் கொடுக்கின்ற, தேவ வைராக்கியம் காண்பிக்கின்ற வேதத்தை போதிக்கின்ற, அதிகமான ஆன்மீக ஈடுபாடுகளைக் கொண்ட பரிசேயர்களுக்கு எதிராகவே இருந்தது.

எனென்றால் அவர்கள் கலப்பட ஆன்மீகவாதிகள். அவர்கள் இதய நிலையில் சுத்தமானவர்கள் என்று சொல்லத்தக்க நிலையில் செயல்படவில்லை. ஆன்மீக விஷயங்களில் மூழ்கிக்கொண்டிருந்தாலும், மனநிலைகளில் தூய்மையான எண்ணங்களையும், நோக்கங்களையும் முக்கியமாகக் கொண்டிருக்கவில்லை. ஒவ்வொரு ஆன்மீக செயல்களுக்கு பின்னாலும் சுயத்தை பிரியப்படுத்தும் விதமான கபடமுள்ள எதிர்பார்ப்புகளை வைத்தே அவர்கள் செயல்பட்டார்கள்.

இயேசு கிறிஸ்து பரிசேயர்களின் தவறான ஆன்மீக பக்தி நிலைகளைக் கண்டித்து பேசிய போதெல்லாம் அவர்களை குறிப்பிட அவர் உபயோகித்த பதம் *"மாயக்காரரே"* என்பதாகும். மாயக்காரன் என்றால் வேடம் போட்டு நடிக்கின்றவன் என்று அர்த்தம். ஒரு நடிகன் ஒரு ராஜாவைப் போல, மந்திரியைப் போல, வேடமிட்டு நடித்தாலும் அவன் உண்மையில் ராஜாவும் அல்ல. மந்திரியும் அல்ல. அவனுடைய வெளித்தோற்றம் மற்றவர்களுக்கு அவ்விதம் தெரியும் படி செய்திருக்கிறானேயன்றி, அவனுடைய உண்மை நிலை வேறு.

ஆக; உண்மை நிலை ஒன்றாக இருக்க, அதனை மறைத்துக் கொண்டு, இன்னொரு விதமாக தன்னை பிறர் பார்த்து நம்பும்படி செய்கின்ற ஒரு செயல் வேடமிடுகின்ற ஒரு செயலாக இருக்கின்றது. அதனைத் தான் இயேசு கடுமையாகக் கண்டித்தார். நாம் உள் நிலையில் எப்படியிருக்கின்றோமோ அப்படியே பிறர் நம்மை பார்க்கத்தக்க விதத்தில் வாழ்வது தான் சரியான வாழ்க்கை. நாம் வெளியே மற்றவர்களின் கண்களுக்கு சிறந்தவர்கள் போலக் காணப்பட விரும்பினால், அவ்விதமாக நம்முடைய உள்நிலையை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம்.

சுத்தமானவர்கள் மகிழ்ச்சியானவர்கள்

இருதயத்தில் சுத்தமாயிருத்தலின் விளைவாக ஒரு பெரிய சந்தோஷத்தை மனிதன் பெற முடியும். எனவே இயேசு கிறிஸ்து, இருதயத்தில் சுத்தமுள்ளவர்களை பாக்கியவான்கள் என்றார். அதாவது அவர்கள் மனமகிழ்ச்சி, மனநிறைவு, மனதிருப்தி ஆகியவற்றை அதிகமாக அனுபவிக்க இயன்றவர்கள். எப்போதுமே சுத்தத்திற்கும் சந்தோஷத்திற்குமிடையே நெருங்கின தொடர்பு உண்டு.

நம்முடைய வீட்டை சுத்தமாக வைக்கும் போதும், உடலை, உடையை சுத்தமாக வைக்கும் போதும், அந்த சுத்த நிலை மனரம்மியான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதை நாம் காணமுடியும். ஒரு முறை சற்று வசதியான ஒருவருடைய வீட்டிற்கு சென்று சில மணி நேரங்களை செலவு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. அந்த வீட்டில் எதுவுமே சுத்தமாகக் காணப்படவில்லை. எல்லாமே ஒழுங்கு முறையற்று, அழுக்கடைந்த நிலையில் இருந்தன. ஒரு விதமான மோசமான நாற்றம் அந்த வீட்டிலிருந்து வந்து கொண்டேயிருந்தது. பெரிய வீடு தான்.

ஆனால் சுத்தமற்ற வீடு. எனவே மிகுந்த அருவருப்புணர்வோடு, எப்பொழுது வெளியேப் போகலாம் என்ற சிந்தனையோடேயே அங்கே தங்க நேர்ந்தது. ஆம். அழுக்கான ஒரு சூழ்நிலை சந்தோஷமான மனநிலைகளைக் கூட உடைத்துவிடும்.

அதே வேளையில் ஒரு முறை சாதாரண வசதியுள்ள ஒரு ஏழை விசுவாசியின் வசதி குறைவான வீட்டிற்கு சென்றிருந்தபோது, அங்கே வித்தியாசமான ஒரு சூழ்நிலை நிலவியது. எந்த ஒரு வசதியான பொருட்களும் அங்கு இருக்கவில்லை. ஆனால் குடிசை போன்ற அந்த வீட்டை கூட அவர்கள் மிகவும் சுத்தமாக வைத்திருந்தார்கள். எந்த ஒரு குப்பை கூளங்களோ, தூசி படிந்த பொருட்களோ, துர்வாசனையோ அங்கு இல்லை. எனவே அந்த சூழ்நிலை மனதுக்கு நல்ல ரம்மியத்தை தருகின்ற விதமாக இருந்தது. ஆம். ஒருவர் பெரிய வசதி படைத்தவராக இல்லாவிடினும், அவருடைய இருதயம் கள்ளங்கபடற்ற, மாசற்ற, ஒரு சுத்தமான நிலையில் இருக்குமாயின் அங்கே மகிழ்ச்சி நிச்சயமாக நிறைவாகவே இருக்கும்.

தாவீது மிகுந்த பாடுகளுக்கு நடுவிலும், நெருக்கங்களின் நடுவிலும் வாழ்ந்த ஒரு கால கட்டத்திலும் கூட, மற்றவர்களுக்கு மிகுந்த தானியமும், திராட்சை ரசமும் இருப்பதினால் கிடைக்கின்ற சந்தோஷத்தை விட அதிகமான சந்தோஷத்தை அவன் தனக்குள் அனுபவித்தான். (சங் – 4:7) ஏனென்றால் அவன் பிரச்சனைகளின் நடுவிலும், பாடுகளின் நடுவிலும் வாழ்ந்த போதிலும் கூட, சுத்த மன சாட்சியுடனும், மாசற்ற ஒரு மனநிலையோடும் வாழ்ந்ததினால் அங்கே மிகுந்த சந்தோஷத்தை அவன் தேவனிடமிருந்து பெற்றான்.

இயேசு கிறிஸ்து பாடுகளின் நடுவில்தான் வாழ்ந்தார். பலவித நெருக்கங்கள், எதிர்ப்புகள் நடுவில்தான் தினமும் தம்முடைய பணிகளைச் செய்தார். சந்தோஷத்தை உருவாக்கத் தக்கதான ஒரு இலகுவான சூழ்நிலை அவரைச் சுற்றிலும் நிலவவில்லை. ஆனால் அவர் உள்ளொன்று புறம்பொன்றாக வாழவில்லை. அவர் ஒன்றை நினைத்துக் கொண்டு, இன்னொன்றை நினைப்பது போல காட்டிக் கொள்ளவில்லை. அவர் தம்முடைய செயல்களால் உயர்ந்த நோக்கங்களை வெளிப்படுத்தியது போலவே, உள்ளேயும் உயர்ந்த நோக்கங்களை உடையவராக விளங்கினார். அவருடைய இதய சுத்தம் செயல்களில்

வெளிப்பட்டது. எனவே அவர் எப்போதும் சந்தோஷமாயிருந்தார். எனவேதான் அந்த சந்தோஷத்தை தம்முடைய சீடர்களும் அனுபவிக்க வேண்டும் என்று விரும்பினார். (யோ – 15:11) இயேசுவின் சந்தோஷம் சூழ்நிலைகளால் ஏற்படவில்லை. அவருடைய சுத்த இருதயம்தான் பரலோகத்தின் சந்தோஷத்தை அவருக்குள் கொண்டு வந்தது.

ஆம். இருதய சுத்தம் அல்லது சுயம் சார்ந்த நோக்கங்களற்ற ஒரு பரிசுத்தமான மனநிலை, தெய்வீக சந்தோஷங்களை தன் பக்கமாக வேகமாக இழுத்துக் கொள்ள முடிகின்ற ஒரு காந்தமாகும். ஆனால் தன்னுடைய எண்ணங்களில், நோக்கங்களில், செயல்களில், தேவனுக்கேற்ற தூயநிலை இல்லாதவர்கள் மற்றவர்கள் பார்வையில் சந்தோஷமானவர்களைப் போல தோன்றுவார்களேயன்றி, உண்மையில் அவர்கள் தங்களுக்குள் நிறைவான மகிழ்ச்சியை உடையவர்கள் அல்ல.

சுத்தமான நோக்கங்களையும், நேர்மையான எண்ணங்களையும் உடைய மனிதன் தன்னை திருப்தி செய்கின்ற சந்தோஷத்தை தன்னுடைய இருதயத்திலேயே எதிர்பார்க்கின்றான். அவன் தன்னுடைய மனதிலே கர்த்தர் மகிழ்ச்சியைத் தந்தால் போதும் என்று எண்ணி, அதைப் பெற்றுக் கொண்டால் பெருஞ் செல்வத்தை அடைந்துவிட்டது போன்ற ஒரு மனநிறைவினை அடைகின்றான்.

ஆனால் தன்னுடைய இதயம் கர்த்தருடைய பார்வையில் சுத்தமாகயிருக்கிறது என்ற நிச்சயத்தைப் பெற முடியாத மனுஷன், தன் மனநிலையிலே, தேவன் மகிழ்ச்சியை அருளுவார் என்ற விசுவாசத்தை உடையவனாக விளங்க முடியாது. அப்படிப்பட்டவர்கள் மிகுந்த ஆவிக்குரிய ஈடுபாடுகளை உடையவர்களாகவும், மிகப் பெரிய ஊழியர்களாகவும்கூட இருக்க முடியும். ஆயினும் நோக்கங்களில் தூய்மையில்லாத நிலையில், தேவசமுகத்து மகிழ்ச்சியால் மனநிறைவு அடைகின்ற ஒரு அனுபவம் அவர்களுக்கு இருக்க முடியாது.

இன்று ஆன்மீக ஈடுபாடுகளுடைய அநேகரும், மிகப் பெரிய ஊழியர்கள் பலரும் பண ஆசை மிகுந்தவர்களாகவும், ஆடம்பர பொருட்களின் மேல் அதிக நாட்டமுடையவர்களாகவும், பெரும் பொருள் சேர்ப்பதிலேயே அதிக கருத்துடையவர்களாகவும் இருக்கின்ற காரணம் என்ன?

மனநிலையில் மகிழ்வடைந்து, இதய நிலையில் நிறைவடையும் நிலமையைப் பெற முடியாததால்தான். அவர்கள் தங்கள் திருப்தியையும், மனநிறைவையும், உற்சாக உணர்வுகளையும் பணம், பொருள், செல்வாக்கு ஆகிய நிலைகளிலேயே எதிர்பார்க்கின்றார்கள். ஆனாலும்

மன நிறைவினை அவர்கள் அடைய முடியாமல், அவைகள் கானல் நீர் போல, தூரத்திலேயே தெரிந்துக் கொண்டிருக்கும். அதனை அடைந்திட அவர்கள் இன்னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சம் என்று பயணம் செய்தும் அதனை அடைய முடியவில்லை.

இதயத்தில் நேர்மையும், நோக்கங்களில் தூய்மையையும் உடையவன் தனக்குள்ளேயே ஒரு சந்தோஷ நீருற்றைக் காண்கின்றான். அவன் சந்தோஷத்தையும், மனநிறைவையும், பரிசுத்தமான வாழ்க்கையின் மூலமாகவே தேடுகின்ற மனிதனாக இருப்பான்.

சுயம் சார்ந்த உள் நோக்கங்கள் ஏதுமின்றி மன உண்மையும், நேர்மையும் உடைய மனிதன் எந்த சூழ்நிலையிலும் மனமகிழ்ச்சியின் உத்தரவாதத்தை இழக்காத மனிதனாகவேயிருப்பான் என்பதற்கு, பவுல் அப்போஸ்தலன் அற்புதமான ஒரு சாட்சி. பாடுகள் பல சூழ்ந்த மனிதன் அவன். அடுத்தது என்ன நடக்கும் என்ற நிச்சயம் இல்லாத நிலையில், சந்தோஷத்திற்கு வாய்ப்பற்ற சூழ்நிலைகளில் இருக்க நேர்ந்தவன். ஆனால் அவன் சந்தோஷமான மனிதன். நெருக்கங்களின் நடுவிலும் அவன் மனநிறைவுள்ள மனிதன். அவன் சந்தோஷமாயிருக்க இயன்ற மனிதனாக மட்டுமன்றி, எப்போதும் சந்தோஷமாயிருங்கள் என்று கூறி, சந்தோஷத்தின் ரகசியங்களை அறிவிக்கின்ற மனிதனாகவும் விளங்கினான். (பிலி – 3:1 ; 4:4)

ஆம். மனத்தூய்மையுடைய எவரும் இந்த உலகில் பாக்கியமானவர்களே. அவர்கள் கஷ்டத்திலும், நெருக்கத்திலும், உயர்விலும், தாழ்விலும், எல்லா எதிர்மாறான சூழ்நிலைகளிலும் தேவனைத் தங்களுக்குள் கண்டு களிகூரும் ஆவிக்குரிய கண்களை உடையவர்களாயிருப்பார்கள். யோபுவின் வாழ்க்கை பாடுகள் நிறைந்த ஒரு வாழ்க்கையாக ஒரு நாள் மாறியது. ஆனாலும் அவனுடைய வாழ்க்கை பரிசுத்தமற்றதாகவோ, இதயத் தூய்மையற்றதாகவோ ஒரு போதும் மாறவில்லை. எனவே உடலெல்லாம் நோய் பிடித்து நொந்து போயிருந்த நிலையிலும் *என் மீட்பர் உயிரோடிருக்கிறார். நான் அவரைக் காண்பேன்* என்ற நிச்சயம் உடையவனாகயிருந்தான். (யோபு–19:25, 26) ஆம். இருதயத்தில் சுத்தமுடையவர்கள் பாக்கியவான்கள்தான். அவர்களின் மகிழ்ச்சிக்கும், திருப்திக்கும் என்றும் உத்தரவாதம் உண்டு.

தேவனை தரிசிப்பார்கள்

பெரும்பாலும் ஒருவர் இதயசுத்தம் உள்ளவரா, இல்லையா என்பதை அவருடைய செயல்களின் தன்மைகள் அல்லது அவருடைய செயல்படும் விதங்கள் வெளிப்படுத்தாமல் போவதில்லை. சத்தியத்தினால் தெளிவடைந்த கண்களை உடையவர்கள் மற்றவர்களின் செயல்பாடுகளில் பின்னணியில் உள்ள இதய நிலைகளை அறிந்து கொள்ள முடியும்.

ஆனாலும் மற்றவர்களின் செயல்களின் பின்னாலுள்ள சுயம் சார்ந்த உள் நோக்கங்களை தேடி ஆராய்ந்து கொண்டிருப்பது நமக்கு அனுமதிக்கப்பட்ட ஒன்றல்ல. தவறான உள்நோக்கங்கள் செயல்களில் போதுமான அளவு பிரதிபலித்தாலன்றி யாரையும் நியாயம் தீர்க்க நமக்கு அதிகாரம் கிடையாது. ஒவ்வொரு நற்செயலுக்கும் கூட நாம் ஒரு உள்நோக்கத்தை கற்பித்து விட முடியும். பின்னர் எந்த ஒரு நற்செயலையும் நாம் நல்ல கண்களோடு பார்க்க இயலாமல் போகும். மற்றவர்களைக் குறித்து விழிப்புணர்வோடும், எச்சரிக்கை உணர்வோடும் இருக்க வேண்டியது அவசியமே. அதே வேளையில் எந்த ஒரு செயலுக்கு பின்னாலும் ஒரு தவறான உள்நோக்கம் இருக்கும் என்ற எண்ணத்தை அளவுகோலாக வைத்து செயல்படக்கூடாது.

தேவன் ஒருவருடைய இருதயம் இன்னொருவருக்கு தெரியாத விதமாகவே மனிதனை படைத்துள்ளார். ஆனாலும் அவருடைய பார்வைக்கு எதுவும் மறைவாயிருப்பதில்லை. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும், வெளியரங்கமாயுமிருக்கிறது என்று வேதம் சொல்கிறது. (எபி – 4:13)

ஒருவர் நற்செயலாளர் என்றும் நற்பண்பாளர், என்றும் பிறர் பார்க்கும் விதமாக செயல்பட்டு விட்டு, அந்த அளவிற்கு இருதயத்தில் நோக்கங்கள் இல்லாதவராகவும் இருக்க முடியும். கறுப்பு நிற நோக்கங்களை மனதில் மறைத்துக் கொண்டு, அவைகளை வெள்ளை நிறச் செயல்களால் நிறைவேற்றிக் கொண்டிருக்க முடியும். இறைவனுக்காக அயராது பாடுபடுகிற ஒருவரைப் போல பிறர் கண்களுக்கு தன்னைக் காண்பித்துக் கொண்டு, தன் சுய நோக்கங்களுக்காக செயல்படுகிறவராக அவர் இருக்க முடியும்.

போதகர் ஒருவர் "நான் மரிக்கும் முன்பு என் ஆண்டவருடைய வேலைக்காக எப்படியாவது நூறு ஊழியர்களை எழுப்பி விட வேண்டும், இதுவே என் ஆத்தும வாஞ்சை. இந்த பட்டணத்திற்கு அநேகம் வேலையாட்கள் தேவைப்படுகிறதே" என்று கண்ணீரோடு தன் சபை மக்களிடம் கூறிக் கொண்டிருப்பாராம். அவருடைய ஆத்தும பாரத்தைக் கண்டு சபையார் உருகிப் போவார்களாம். ஆனால் அந்தப் போதகர் தன்னுடைய ஊழிய வட்டத்திற்கு வெளியே எழும்புகின்ற எந்த ஒரு ஊழியனையும் ஊழியனாக ஏற்றுக்கொண்டதில்லை. இன்னொரு சபையை அல்லது இன்னொரு அமைப்பை சார்ந்த எந்த ஒரு ஊழியரையும் சாதாரண மனிதன் என்ற நிலையில் கூட பார்த்து மதித்ததில்லை. அப்படியானால் அவருடைய ஆத்தும பாரத்தின் பின்னாலிருந்து செயல்படுகிற நோக்கம் எது?

தனக்கு கீழே நூறு பணியாட்கள் வர வேண்டும். அதனால் தன்னுடைய சுயராஜ்யத்தின் எல்லை விரிவாக வேண்டும். எல்லோரும் தன்னை பெரிய ஒரு சாதனையாளராக எண்ணிப் புகழ வேண்டும். இவைகள்தான் பின்னணியில் உள்ள உண்மையான நோக்கங்கள். ஆம். இருதய சுத்தமில்லாமையின் விளைவுகள் இப்படித்தானிருக்கும்.

ஆம். இந்த உலகத்தில் எப்படி வேண்டுமானாலும் செயல்படலாம். எப்படி வேண்டுமானாலும் நாம் தோற்றங்களை நமக்கென்று உருவாக்கிக் கொள்ளலாம். ஆனால் நம்முடைய வெளித்தோற்றங்கள் எவ்வளவு சிறப்பாகயிருந்தாலும், உள்தோற்றம் தேவ உண்மைக்கு உகந்ததாயிராவிட்டால் தேவனை நாம் தரிசிக்க முடியாது.

இருதயத்தில் சுத்தமுள்ளவர்களை இயேசு மிகவும் மகிழ்ச்சியானவர்கள் (பாக்கியவான்கள்) என்று கூறியதோடு, அவர்கள் தேவனை தரிசிப்பார்கள் என்றும் கூறினார். இது யார் தேவனை தரிசிக்க முடியும் என்ற கேள்விக்கான தெளிவான விடையைக் கொடுப்பதாக உள்ளது. எபிரேயர்களுக்கு கடிதம் எழுதிய தேவ மனிதனும், *பரிசுத்தமில்லாமல் ஒருவரும் கர்த்தரை தரிசிப்பதில்லையே* என்று எழுதியதை வேதத்தில் காண்கின்றோம். (எபி – 12:14)

இந்த மண்ணின் வாழ்விற்கு பின்னால் வரும் மறு உலகத்தில் நாம் தேவனைப் பார்க்க வேண்டும். நாம் அவர் இருக்கிறவண்ணமாய், முகமுகமாய் ஒருநாள் அவரை நேரில் பார்க்க வேண்டும். (1 யோ – 3:2)

இன்று நாம் அவரை தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கின்றோம். (11 கொரி – 5:6) *இப்பொழுது அவரை தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து வாழ்கின்றோம்.* (1 பேதுரு – 1:8) ஆனால் ஒரு நாள் அவரை நாம் நேரில் பார்த்து மகிழ்ந்து, களிகூரும்படி ஆயத்தமாகவேண்டும்.

இன்று அவரை நாம் நம்புகிறோம். அவரை விசுவாசிக்கின்றோம். நம் நடுவில் உலாவுகிறார் என்பதை பல விதங்களில் மனதால் உணருகின்றோம். ஆனால் நம்மால் நம்பப்படுகின்ற, விசுவாசிக்கப்படுகின்ற, உணரப்படுகின்ற அவரை நேரடியாக தரிசிக்க வேண்டும். அதுதான் இறைவாழ்வின் இறுதி நோக்கம். ஆனால் யார் அவரை தரிசிக்க முடியும்? அதற்கான தகுதி என்ன?

விசுவாசித்தவர்களெல்லாரும் அவரை தரிசித்து விடுவார்களா? ஊழியம் செய்தவர்களெல்லாம் தரிசித்து விடுவார்களா? காணிக்கை கொடுத்தவர்களெல்லாம் தரிசித்து விடுவார்களா? அவரைக் குறித்து ஆயுட்கால முழுவதும் எழுதிய, பேசிய எல்லாரும் தரிசித்து விடுவார்களா? நியாயதீர்ப்பின் நாளில் அநேகர் நாங்கள் உமது பெயரில் தீர்க்கத்தரிசனம் உரைத்தோம் அல்லவா? என்பார்கள். அநேகர் உமது பெயரில் பிசாசுகளை துரத்தினோம் அல்லவா? என்பார்கள். அநேகர் உமது பெயரில் அற்புதங்களைச் செய்தோமல்லவா? என்பார்கள். (மத் – 7:22) ஆனாலும் அவர்கள் தேவனை தரிசிக்க தகுதியற்றவர் களாகப் போக முடியும்.

இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாக வாழ்ந்து முடித்தவர்கள் மட்டுமே அந்நாளில் தேவனை தரிசிக்கும் தகுதியுடையவர்களாக வெளிப்படுவார்கள். நம்பின, விசுவாசித்த, கடுமையாய் உழைத்த, பெரும்பிரசித்தி பெற்ற, வாரி வாரி வழங்கின, உயிரைக் கொடுக்கவும் தயாராயிருநத அநேகர் கூட அந்நாளில் ஏமாற்றமடைந்து தேவனை தரிசிக்கும் பாக்கியத்தை அடைய முடியாமல் போவார்கள். ஏனென்றால் இந்த உலகத்தில் ஒருவர் தேவனுக்காகவும் தேவனுடைய பணிகளுக்காகவும் பாடுபட்டார் என்ற அடிப்படையில் அல்ல. ஒருவர் எந்த அளவிற்கு, கபடமற்ற, இரு நோக்கங்களை உள்ளடக்கிய கலப்படமற்ற, தேவனுக்கேற்ற சுத்த மனசாட்சியோடு, இருதய சுத்த நிலையை முக்கியப்படுத்தி வாழ்ந்தார் என்ற அடிப்படையிலேயே தேவனை தரிசிக்கும் பாக்கியம் அமைகிறது.

தேவனை தரிசிப்பது என்பது முற்றிலும் இவ்வுலக முடிவிற்கு பின்னரே என்பது உண்மையல்ல. இருதய சுத்தம் உடையவர்கள் இந்த உலக வாழ்க்கையின் நடுவிலும் தொடர்ந்து அவரைத் தரிசிக்க முடியும். நேருக்கு நேர் அவரை இந்த உலகத்தில் நாம் பார்க்க இயலாதென்றாலும், சுத்த இதயத்தை உடையவர்களின் ஆத்துமா அவரை தரிசிக்கின்றது என்பது உண்மை.

தேவனை தரிசித்தல் என்றால் தரிசனங்கள் அல்லது சொப்பனங்கள் மூலமாகப் பார்ப்பதுதான் என்று எண்ணிவிட முடியாது. கர்த்தருக்காக மன உண்மையோடு மிக வல்லமையாக செயல்பட்ட அநேக தேவ மனிதர்கள், எந்த தரிசனத்தையும், சொப்பனங்களையும் கண்டதில்லை. அவர்கள் தேவனுடைய சத்தத்தை காதுகளால் கேட்க தக்கவிதமாக கேட்டதில்லை. ஆனால் தரிசனம், சொப்பனம் என்று பார்க்கின்ற பலரைவிட அவர்கள் தேவனை அதிகமாக அறிந்து உணர்ந்திருந்தார்கள்.

தரிசனங்கள், சொப்பனங்களால் தேவன் தம்மை வெளிப்படுத்துவது உண்மை. ஆனால் அவைகளின் வழியாக அல்லாமல் கூட பல்வேறு விதங்களில் தேவன் சுத்த இதயமுடையவர்களுக்கு தம்மைக் காண்பித்துக்கொண்டேயிருக்கின்றார். அவர்கள் தங்களுக்குள் அவரைக் கண்டு களி கூருகிறார்கள். அது கண்களின் தரிசனம் அல்ல. ஆத்மாவின் தரிசனம்.

தேவனுடைய சமாதானத்தை தெளிவாகத் தனக்குள் உணருவது, தேவனை தரிசிக்கின்ற ஒரு அனுபவம்தான். தேவன் தம்முடைய வார்த்தையின் நியாயங்களை இருதயத்திற்குள் வெளிப்படுத்திக் காட்டுவது தேவனை தரிசிக்கும் ஒரு அனுபவம்தான். தெய்வீக சந்தோஷங்களை இதயத்திற்குள் திட்டவட்டமாய் அனுபவிப்பது தேவனை தரிசிக்கும் ஒரு அனுபவம்தான். தேவனுடைய தெளிவான வழி நடத்துதல்களை உள்ளான மனிதனில் உணர்வது தேவனை தரிசிக்கின்ற ஒரு அனுபவம்தான். ஜெப நிலைகளிலும், வேத தியானங்களின் போதும், தேவ ஐக்கிய நிலைகளை உள்ளத்தில் உணர்ந்து உற்சாகமடைவது தேவனை தரிசிக்கின்ற ஒரு அனுபவம்தான். போராட்டங்களின் நடுவிலும் மிகுந்த ஒரு நம்பிக்கையுணர்வினை உள்ளத்தில் உணர்வது தேவனை தரிசிக்கும் ஒரு அனுபவம்தான்.

சொப்பனம், தரிசனம் என்பது எப்போதாவது ஒரு முறை, யாராவது ஒருவருக்கு மட்டுமே. ஆனால் தேவன் இதய சுத்தத்தை மனதார விரும்பி செயல்படுகின்ற ஒவ்வொருவருக்கும் தொடர்ந்து ஏதாவது ஒரு விதத்தில் தம்மை காண்பித்துக் கொண்டேதான் இருக்கிறார். இதய சுத்தமுடையவர்கள் அவரை தங்கள் ஆத்துமாவில் தரிசித்து ஆனந்தமடைகின்றார்கள்.

தரிசனங்கள், சொப்பனங்கள் எதற்காக? தேவன் ஒருவருக்கு தம்மை வெளிப்படுத்தி அவருக்கு தம்மைக் குறித்த நிச்சயத்தை ஏற்படுத்துவதற்காகவும், தாம் சொல்ல விரும்பும் விஷயங்களை அவருக்கு அறிவிப்பதற்காகவுமே. ஆனால் தேவன் தரிசனங்கள் மூலமாகவும், சொப்பனங்கள் மூலமாகவும்தான் அவைகளை செய்ய முடியும் என்று இல்லை. தேவன் பல்வேறு விதங்களில் தம்முடைய திட்டங்களையும் வழி நடத்துதல்களையும் கொடுக்கின்றார். அவைகளில் ஒரு விதம்தான் தரிசனமும், சொப்பனமும்.

தரிசனங்கள், சொப்பனங்கள் போன்றவை இல்லாமலே தேவன் ஒருவருக்கு தம்மை அதிகமாக வெளிப்படுத்தவும், அவருக்கு மகிமையான பெரிய பெரிய காரியங்களை அறிவித்து செயல்படுத்தவும் முடியும். எனவே தேவ தொடர்பு நிலையில், சொப்பனம், தரிசனம் பெறுவோரை மிக உயர்ந்த வகுப்பு என்றோ அவ்விதம் இல்லாதோரை மிகத்தாழ்ந்த வகுப்பு என்றோ கூறுவதற்கு எதுவும் இல்லை. அது போல சொப்பனம், தரிசனம் பெறுவோரை அதிக பரிசுத்த நிலை உடையவர்களாக எண்ணுவதும் அவ்விதம் இல்லாதோரை குறைந்த பரிசுத்த நிலை உடையவர்களாக எண்ணுவதும் தவறு.

தேவன் எந்த தரிசனமோ, சொப்பனமோ இன்றி பல தேவ ஊழியர்களுக்கு மிக வல்லமையான திட்டங்களைக் காண்பித்து அவர்கள் மூலம் மிகப் பெரிய காரியங்களைச் செய்து முடித்துள்ளார். தேவன் ஒவ்வொரு விஷயத்திலும் வேறு, வேறு விதங்களில் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்துகின்றார். வேறு வேறு விதங்களில் தம்முடைய விருப்பங்களையும், திட்டங்களையும் அவர்கள் புரிந்து கொண்டு செயல்படும்படி செய்கின்றார். சுத்த இருதயத்தோடு வாழ்கின்றவர்கள் தங்களுடைய இருதயங்களில் தேவ சத்தத்தினைக் கேட்கவும், தேவன் எதைச் சொல்லுகின்றார் என்பதைப் புரிந்துக் கொள்ளவும், அவர் செய்ய விரும்பும் காரிபங்களை அறிந்து கொள்ளவும் முடியும்.

*****

சமாதானத்தின் இருப்பிடமே சந்தோஷத்தின் பிறப்பிடம்

8

சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப் படுவார்கள். (மத்தேயு – 5:9)

ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும் ஓயாமல் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். இறுதியில் விவாகரத்திற்கான ஒரு நிலையை அடையும் நேரத்தில் நண்பர்களும், உறவினர்களும் குறுக்கிட்டு பேச்சுவார்த்தை நடத்தி பிரிவினையைத் தடுத்தனர். சிறிது காலத்திற்கு பின்பு கணவனின் நண்பர் ஒருவர் நலம் விசாரிக்கும் படி அவனுக்கு டெலிபோன் செய்து "நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்" என்று கேட்டார். அந்த கணவன் நாங்கள் *"சமாதானமாயிருக்கிறோம், ஆனால் சந்தோஷமாகயில்லை"* என்று பதிலளித்தான்.

ஆம். அவர்கள் பழையதுபோல சண்டையிட்டுக் கொண்டிருக்கவில்லை. ஆனால் ஒருவருக்கொருவர் பேச்சு வார்த்தையும் வைக்கவில்லை. சண்டையில்லைதான். ஆனால் நல்ல ஐக்கியமும் பரஸ்பர பேச்சு வார்த்தைகளும் இல்லாததால் அவர்களுக்கு சந்தோஷமுமில்லை.

உலகம் இன்று சமாதானம் என்றால் என்னவென்பதை புரிந்து கொள்ளாமலேயிருக்கிறது. பெரும்பாலும் ஒருவருக்கொருவர் சண்டையிடாமல் அமைதியாயிருப்பதையே உலகம் சமாதானம் என்று புரிந்து கொண்டிருக்கிறது. ஆனால் சண்டையற்ற, பிரச்சனைகளற்ற ஒரு நிலையே சமாதானமல்ல.

இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்குமிடையே ஏற்பட்ட சிம்லா ஒப்பந்தத்திற்கு பிறகு இதுவரையிலும் இரு நாடுகளுக்கிடையே நேரடியான பெரிய யுத்தங்கள் இல்லை. இரு நாடுகளும் சண்டையிடாமல் சமாதானமாகவே உள்ளன. ஆனால் இது ஒரு போலியான அல்லது அரைகுறையான ஒரு சமாதானம் ஆகும்.

ஏனென்றால் பெரிய யுத்தங்கள் இரு நாடுகளுக்கிடையே இல்லாவிட்டாலும் கூட, இரு நாடுகளுக்கிடையிலும் ஒரு நல்ல ஐக்கியம் இல்லை. பல்வேறு விதங்களில் இரு நாடுகளும் ஒருவருக்கொருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டு, வெறுப்பையும், விரோத உணர்வையும் வாரி இறைத்துக் கொண்டேயிருக்கின்றன. இதன் விளைவாக எந்த நேரத்திலும் ஒரு பெரிய யுத்தம் வருவதற்கான சாத்திய கூறுகள் கத்தியைப் போல மேலே தொங்கிக் கொண்டு நிற்கின்றன. எனவே இங்கே சமாதானம் உண்டு. ஆனால் சந்தோஷமில்லை.

ஆனால் இந்தியாவுக்கும் ரஷ்யாவிற்கும் இடையே உள்ள ஒப்பந்தம் சற்று வித்தியாசமானது. இரு நாடுகளுக்குமிடையே சண்டை சச்சரவு இல்லாமலிருப்பதோடு, நல்ல ஐக்கியமும் நல்லுறவும், நேசமும் நிலவுகிறது. ஏனென்றால் இரு நாடுகளும் தங்களுக்கிடையே உள்ள நல்லுறவை வளர்ப்பதற்காக பல நல்ல நடவடிக்கைகளை எடுத்துச் செயல்படுகின்றன.

உண்மையான சமாதானம் என்பது இருவருக்கிடையே பிரச்சனைகள் இல்லாமலிருப்பதோடு, இருவருக்கிடையே நல்ல அன்பையும் ஐக்கியத்தையும் செழிப்படையச் செய்வதேயாகும். சரித்திரத்தைப் பார்க்கும் போது, உலக நாடுகள் தங்களுக்கிடையே செய்த சமாதான ஒப்பந்தங்கள் கணக்கிலடங்காதவை. ஆனால் விரல் விட்டு எண்ணத்தகுந்த அளவு கூட அந்த சமாதான ஒப்பந்தங்கள் ஒரு நீண்ட கால ஆயுளோடு செயல்பட்டதில்லை.

ஏனென்றால் "போர் நிறுத்தம்" என்ற ஒரே நோக்கத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகள் நிறைந்த ஒப்பந்தங்களே அவை. நிபந்தனைகள் மீறப்பட்ட போதெல்லாம் மீண்டும், மீண்டும் போர் வெடித்தது. நல்ல நண்பர்களாயிருக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட்டு, நல்லுறவிற்கான செயல்களோடு அவைகள் பலப்படுத்தப்படாததால் அங்கே சமாதானம் மிகவும் பலவீனமாயிருந்தன.

சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள் என்று இயேசு கிறிஸ்து கூறினார். (மத் – 5:9) சமாதானம் பண்ணும் பண்பினை உடையவர்கள் இந்த உலகில் மிகவும் மகிழ்ச்சியானவர்கள் (பாக்கியவான்கள்) என்று சொன்னதோடு, அவர்கள்தான் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்பட தகுதியானவர்கள் என்று கூறினார்.

இந்த உலகத்தில் நாம் பிரிவினைகளையும், பாகுபாடுகளையும், வெறுப்புணர்வுகளையும் அகற்றுவதற்கு பாடுபட்டால் அது நம்மை மிகுந்த மகிழ்ச்சியுடையவர்களாக மாற்றும் என்ற உண்மையை இதிலிருந்து கற்றுக் கொள்கின்றோம். எக்காலத்திலும் இல்லாத அளவிற்கு இந்நாட்களில் உலகத்தில் மிகுந்த சமாதானக் குறைவு ஏற்பட்டுள்ளது. நாடுகளுக்கிடையே சமாதானம் இல்லை. ஒரு நாட்டிற்கு உட்பட்ட மாநிலங்களுக்கிடையே சமாதானமில்லை. ஜாதிகளுக்கிடையே சமாதானம் இல்லை. குடும்பங்களிலே சமாதானமில்லை. சபைகளிலே சமாதானம் இல்லை. எங்கும் வேற்றுமையுணர்வுகளும், பிரிவினை சிந்தைகளும், மேலோங்கி நிற்கின்றன.

மனிதன் தனிப்பட்ட நிலையில் மற்றவர்கள் ஒன்றாயிருப்பதை விரும்பாத நிலை உள்ளது. இரண்டு பேர் நல்ல நண்பர்களாயிருந்தால், அதனை உடைப்பதற்கு இன்னொருவர் விரும்புகிறார். ஒரு குடும்பம் ஒன்றாகயிருந்தால், அங்கே குழப்பங்களை ஏற்படுத்த இன்னொரு குடும்பம் முயற்சிக்கின்றது. ஒரு அமைப்பு ஒன்றாயிருந்தால் அதனை பிளவுபடுத்த இன்னொரு அமைப்பு விரும்புகிறது.

இன்று ஆன்மீக வட்டாரத்திலும் இவ்வித சமாதான எதிரிகள் மிகுந்துள்ளார்கள். இதனால்தான் சபைகளும் ஊழிய அமைப்புகளும், மிஷனரி ஸ்தாபனங்களும் கூட பல நிலைகளில் உடைந்து கொண்டிருக்கின்றன. ஒரு பாஸ்டர் இன்னொரு பாஸ்டரின் சபை உடைந்து போகாதா என்று ஆவலோடே கொக்கைப் போல காத்திருக்கின்றார். அதன் விளைவாக தன்னுடைய சபைக்கு சில விசுவாசிகள் வரமாட்டார்களா என்று எதிர்பார்க்கின்றார்.

தமிழ் நாட்டில் குறிப்பிட்ட ஒரு பேராயர் தன்னுடைய பணிக்காலத்தில் ஒன்றாயிருந்த சபைகளையெல்லாம் இரண்டாக, மூன்றாக உடைத்ததுதான் அவர் செய்த பெரிய தொண்டு என்று சிலர் கூறினார்கள். தன்னை ஆதரிக்கும் அல்லது தன்னுடைய விருப்பங்களை

அப்படியே செயல்படுத்தும் ஒரு கூட்டம் தனக்கு தேவைப்பட்டதால் ஒவ்வொரு சபையிலும் அவர் பிளவுகளை ஏற்படுத்தினார்.

சமாதானக் குறைவுகளை ஏற்படுத்துவதாலும், பிரிவினை பேதங்களை ஏற்படுத்துவதாலும் ஒருவர் தான் நினைத்ததை நிறைவேற்றிவிட்ட அற்ப திருப்தியை பெறலாம். ஆனால் அது அவருக்கு உண்மையான சந்தோஷத்தைக் கொண்டு வராது. உண்மையில் அவ்வித வெற்றிகள் சமாதானக் கேட்டைதான் மனதிற்கு தர முடியும். ஆனால் சமாதானத்தை பிறர் நடுவில் காணவிரும்புகிறவர்களும், அதற்காகப் பாடுபடுகிறவர்களும், ஒரு பெரிய மன நிறைவையும், சந்தோஷத்தையும் அடைவார்கள் என்பது நிச்சயம். எனவேதான் இயேசு தம்முடைய சீடர்கள் சமாதானம், செய்கிறவர்களாக, சமாதானத்தை வளர்க்கிறவர்களாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

யார் சமாதானத்தை ஏற்படுத்த முடியும்?

ஆனால் யார் சமாதானத்தை ஏற்படுத்த முடியும்? யார் சமாதானத்தை வளர்க்க முடியும்? பிறர் நடுவில் சமாதானத்தை ஏற்படுத்த பாடுபடுகின்றவர்கள் முதலாவது தங்களில் சமாதானத்தை உடையவர்களாக விளங்க வேண்டும். ஒருவர் சமாதான விரும்பியாக இருக்கலாம். ஆனாலும் சமாதானத்தை உடையவர் என்பவரும், சமாதானத்தை விரும்புகிறவர் என்பவரும் ஒன்றல்ல. ஒருவர் தனக்குள் சரியான சமாதான நிலையைக் காணாமலே, மற்றவர்களிடம் சமாதானத்தை விரும்ப முடியும்.

குறிப்பிட்ட ஒரு கிராமத்தில் நாட்டாண்மை ஒருவர் உண்டு. ஊரில் எந்த மோதல், பிரச்சனை, குடும்ப குழப்பங்கள் வந்தாலும், அவர் தான் போய் பஞ்சாயத்து பண்ணி சமாதானம் செய்து வைப்பார். ஆனால் அவருடைய வீட்டிலோ எப்போதுமே சமாதானம் இல்லை. கணவனுக்கும் மனைவிக்கும் இடையே எப்பொழுதும் பிரச்சனை.

சமாதானம் செய்கின்றவர்கள் (Peace Makers) தேவனுடையப் பிள்ளைகள் என்னப்படுவார்கள் என்று இயேசு சொன்னார். அதனை வேறு விதமாகச் சொல்வதாக இருந்தால், தேவனுடையப் பிள்ளைகளாகயிருக்கிறவர்கள் சமாதானம் செய்கிறவர்களாயிருப்பார்களென்றும், தேவனுடைய புத்திரர்கள்தான் சமாதானம் செய்கின்றவர்களாக இருக்க முடியும் என்றும் கூறலாம்.

மனிதன் சமாதானத்தை விரும்புகிறவனாகவும், சமாதானம் செய்கிறவனாகவும் இருக்க வேண்டுமானால் அவன் தேவனுடைய பிள்ளையாக மாற வேண்டியது மிகவும் அவசியம்.

ஏனென்றால் சமாதானம் என்பது தேவனால் மனிதனுக்கு கிடைக்கும் அருட்கொடை எனலாம். பவுல் அப்போஸ்தலன் அதனை ஆவியினால் உருவாகும் கனிகளின் பட்டியலில் சேர்த்துள்ளான். (கலா– 5:22) பரிசுத்த ஆவியினால் உருவாகின்ற ஒரு சிறந்த சக்தி வாய்ந்த குணநிலைதான் சமாதானம் ஆகும். இந்த சமாதானம் சண்டையற்ற, சலசலப்பற்ற ஒரு நிலையை மட்டுமல்ல. இது ஒரு பெரிய சந்தோஷமான நிலையையும் ஏற்படுத்துகின்ற ஒன்றாகும்.

இதனை முதலாவது ஒரு மனிதன் தனக்குள் பெற வேண்டும். இயேசு கிறிஸ்து பரமேறிச் செல்லும் முன்பு தம்முடைய சீடர்களுக்காக வைத்துவிட்டுப் போன ஒரு பெரிய சொத்து சமாதானமே. நான் உங்களுக்கு சமாதானத்தை வைத்து விட்டுப் போகிறேன் என்று அவர் சீடர்களிடம் கூறினார். (யோவான் – 14:27)

இயேசு கிறிஸ்துவுக்குள் அவ்விதமான ஒரு வலிமையான சமாதானம் செயல்பட்டுக் கொண்டிருந்ததால்தான், தம்மை மிகவும் இழிவுபடுத்தி துன்புறுத்தியவர்கள் மேல் வெறுப்பையோ, கசப்பையோ கொட்டாமல், சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் போதே, *"பிதாவே இவர்களுக்கு மன்னியும்"* என்று பிரார்த்தனையும் செய்தார்.

இந்த விதமான சமாதானத்தைதான் இயேசு சீடர்களுக்கு அருளினார். அவர்கள் அந்த சமாதானத்தின் பலத்தினால்தான் தாங்கள் ஊழியப் பாதையில் சந்திக்க நேர்ந்த அனைத்து பாடுகளையும், சோதனைகளையும், அவமானங்களையும், அநீதிகளையும் பொறுமையாய் சகித்து உயர்ந்த இலக்குகளை அடைந்தனர்.

இன்று சபைகளிலே, ஊழியங்களிலே, விசுவாசக் குடும்பங்களிலே பிளவுகளும், பிரிவுகளும், வேறுபாடுகளும் பெருகி, ஒருவரையொருவர் தள்ளிவிட தொடர்ந்து முயற்சி செய்வது ஏன்? இந்த சமாதானத்தின் ஆவி அவர்களிடம் செயல்படவில்லை. அற்ப காரியங்களுக்கெல்லாம் அவசியமற்ற ஆரவாரங்கள் எழுப்பப்படுவது ஏன்? சமாதானத்தின் ஆவி அவர்களிடத்தில் இல்லை. இதுவே காரணம்.

சமரச போக்கும் சமாதானமும்

இந்நாட்களில் சமாதானத்திற்காக எதையும் இழக்க நாம் தயாராக இருக்க வேண்டும். சமாதானத்திற்காக எந்த ஒரு பெரிய விலையையும் கொடுக்க தயாராயிருக்க வேண்டும் என்று சொல்வதை நாம் அடிக்கடிக் கேட்கின்றோம். உண்மைதான். சமாதானத்திற்காக எதை வேண்டுமானாலும் தியாகம் செய்யும் மனோபாவம் வேண்டும். ஒற்றுமைக்காக ஒரு பெரிய விலையைக் கொடுக்க முன்வர வேண்டும்.

அதே வேளையில் தேவன் சமாதானத்தை விரும்புகிறார் என்பதற்காக, அவருடைய நியாயங்களையும், அவர் முக்கியப்படுத்திய கொள்கைகளையும், கோட்பாடுகளையும் தியாகம் செய்து விடக் கூடாது. சத்தியத்தின் சாராம்சங்களைப் பற்றி கவலைப்படாமல் அவைகளை இழக்கத் துணிந்து அதன் மூலம் சமாதானத்தை உருவாக்க முயற்சிப்பது முறையற்றது.

இன்று பல கிறிஸ்தவ சபைப் பிரிவுகள் தங்களுக்கிடையே நல்ல ஒரு ஐக்கியத்தை உருவாக்கி ஒரே அமைப்பாக நின்று செயல்பட விரும்புகின்றான். ஆனால் உபதேச ரீதியான, கோட்பாடு ரீதியான வேற்றுமைகள் அங்கே பிரச்சனையை ஏற்படுத்துகின்றன. எனவே இறுதியாக நாம் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் மறந்து விடுவோம். கிறிஸ்தவர்கள் என்ற ஒரே நிலையில் நின்று ஒற்றுமையாகச் செயல்படுவோம் என்ற முடிவுக்கு வருகின்றனர்.

இங்கே நோக்கம் மெச்சத்தக்கதே. ஆனால் அதை அடைவதற்காக உபதேச வித்தியாசங்களை மறந்து விடுவோம் என்ற நிலைப்பாடு சரியானதல்ல. ஏனென்றால் சமாதானத்திற்காகவும், ஒற்றுமைக்காகவும் நல்ல உபதேச கோட்பாடு நிலைகளை தியாகம் செய்வது சத்தியத்திற்கு புறம்பானதாகும். ஏனென்றால் சத்தியத்தின் முதுகெலும்பே சரியான கோட்பாட்டு நிலைகள்தான். அவைகள் போனாலும் பரவாயில்லை. நாம் ஒன்றாயிருந்தால் போதும் என நினைப்பது, தலையை இழந்து வாலைக் காப்பாற்ற முயற்சிப்பதாகும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு சில அதிகம் படித்த கிறிஸ்தவ தலைவர்கள் இந்து மதத்திலும் இரட்சிப்பு உள்ளது என்று கூறி, கிறிஸ்தவ, இந்து மத சமாச்சாரங்களை கலந்து ஒரு விசித்திர வழிபாட்டு முறையை கொண்டு வர முயற்சித்தார்கள்.

இன்று அனேகர் மத நல்லிணக்கம் என்பதைத் தவறாகப் புரிந்துள்ளனர். மதங்களுக்கிடையே உள்ள வெறுப்புணர்வுகளை களைவதற்காக எல்லா மத கொள்கைகைளயும் சரிதான் என்று ஏற்றுக் கொண்டு செயல்படுவதுதான் மத நல்லிணக்கம் என்று நினைக்கின்றனர். எந்த மதத்தலைவர்களையும் நாம் அன்போடு மதித்து ஏற்றுக் கொண்டு நல்லுறவுடன் வாழ வேண்டும். அதே வேைளயில் எல்லா மதக் கொள்கைகளையும் சரிதான் என்ற ரீதியில் செயல்படுவது நாம் தேவனை பொய்யராக்குகின்ற ஒரு தவறான செயலாகும்.

ஏனென்றால் தேவன் தம்மைத் தவிர வேறே தேவன் யாரும் இல்லை என்று மிகத் தெளிவாக பல முறைக் கூறியுள்ளார். தம்முடைய நியாயங்களையும், கட்டளைகளையும் தவிர வேறெந்த மதக் கொள்கைகளையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று கூறியுள்ளார். எனவே அதற்கு முரணாகப் போய் செயல்படுதல் மனித சமாதானத்தை விரும்பி தேவ சமாதானத்தை இழக்கும் செயலாகும். தேவனுடைய மாட்சிமை மிக்க உபதேசங்களை தியாகம் செய்து, மனித உறவுகளை வளர்ப்பது, தேவ உறவை பரிகாசம் செய்வதாகும்.

மரியாள் பாவமற்றவராக பிறந்தார் என்று வேதம் சொல்லவில்லை. கன்னி மரியாளை கடவுளைப் போல வழிபட வேதம் எங்குமே சொல்லவில்லை. எந்த ஒரு சிலையையும் வழிபாட்டு ஸ்தலங்களில் வைக்க வேதம் அனுமதிக்கவில்லை. இறைப்பணி செய்கின்றவர்கள் திருமணம் செய்யக் கூடாது என்று வேதம் சொல்லவில்லை. மரித்து போன பரிசுத்தவான்களின் பெயரில் வேண்டுதல் செய்யலாம் என்று வேதம் சொல்லவில்லை.

இவ்விதமாக வேதம் சொல்லாத தவறான விஷயங்களை உருவாக்கி வைத்துக் கொண்டு அதனை பரலோகத்தின் பாதையாகக் காண்பித்து வரும் கத்தோலிக்க திருச்சபையோடு, புராட்டஸ்டண்டுகள் கொள்கைகளைப் பற்றி கவலைப்படாத சமாதான உறவை வைப்பது, தேவனுக்கெதிரான ஒரு பாவமே.

சமுதாய அநீதிகளை எதிர்த்து போராடுகின்ற விஷயத்தில் கத்தோலிக்க பிரிவோடு சேர்ந்து செயல்படுவது தவறல்ல. ஆனால் தவறான உபதேசங்களைக் குறித்து கவலைப்படாத ஒரு சமரசப் போக்கு அந்த இணைப்பிற்கு கட்டாயமாகின்ற போது, அங்கே ஒற்றுமையைவிட

கோட்பாடே முக்கியமானது. சிலர் உபதேசம், கோட்பாடு எல்லாம் முக்கியமல்ல என்பார்கள். அது உயிர் முக்கியமல்ல. உடல்தான் முக்கியம் என்பது போலாகும்.

இயேசு கிறிஸ்துவை வேதம் சமாதானப் பிரபு என்று சொல்கிறது. (ஏசாயா – 9:6) அவரை வேதம் சமாதானக் காரணர் என்று சொல்லுகிறது. (எபே – 2:14) அவர்தான் சமாதானம் செய்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார். ஆனால் இயேசு என்றுமே சமரசக் கொள்கையை ஏற்றுக் கொண்டதேயில்லை. யூதர்களின் தவறான ஆன்மீகத்தோடு அவர் சமரசம் செய்து கொள்ளவில்லை.

யூதர்களின் பிரதான எதிரிகள் ரோமர்கள்தான். எனவே இயேசு தங்களோடு சேர்ந்து ஐக்கியமாக நின்று ரோமர்களை எதிர்க்க வேண்டும் என அவர்கள் ஆசைப்பட்டனர். ஆனால் இயேசு ரோமர்களை எதிர்க்காமல் யூதர்களின் தவறான மதப் போக்குகளைத் தான் எதிர்த்து நின்றார். அவர்களின் தப்பிதமான மதப் பாரம்பர்யங்களையும், மாய்மாலச் செயல்பாடுகளையும் சாதாரணமாக எடுத்துக் கொண்டு அவர்களோடு சமரசம் செய்திட அவர் விரும்பவில்லை. ஒற்றுமைக்காக அவர் சத்தியத்தின் உயர்நிலைகளை தியாகம் செய்ய அவர் முன்வரவில்லை. ரோமர்களின் ஆதிக்கத்தை விட, பரிசேயர்களின் தவறான மதச்செயல்பாடுகளையே அவர் அதிக ஆபத்தானதாகக் கண்டார்.

எனவேதான் சமாதானக் காரணராகிய அவர் ஒரு இடத்தில், சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்ப வந்தேன் என்றார். (மத் – 10:34) சமாதானத்தின் பிரபுவாகிய அவர், சமாதானம் செய்யக் கூறிய அவர் சமாதானத்திற்காக தாம் வரவில்லை என்று ஏன் கூறினார்.

ஆம். உண்மை பிரிவினையை ஏற்படுத்தும் தன்மை கொண்டது. உண்மையைப் பேசும் போது அங்கே பிளவுகள் வருகிறது. உண்மையைப் பற்றிக் கவலைப்படாதவன் எல்லோருக்கும் நண்பனாக சமரசப் பாதையில் செல்ல முடியும். ஆனால் இதுதான் உண்மை என தீர்க்கமாகக் கூறுகின்ற போது அங்கே விரோதிகள் உருவாவது உறுதி. ஏனென்றால் உண்மையை ஏற்றுக் கொள்கின்றவர்கள் வெகு சிலரே ! உண்மையைத் துறந்த ஒரு ஒற்றுமையை ஏற்படுத்த தாம் வரவில்லை என்றே இயேசு கூறினார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு மதநல்லிணக்கம் என்ற அடிப்படையில் சென்னையில் ஒரு பிரார்த்தனை கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஜப்பானில் நடந்த பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடவுளின் கருணை கிடைப்பதற்காக பிரார்த்தனை செய்யவே அந்த பிரார்த்தனைக் கூட்டம். அங்கே அந்தந்த மதத்தைச் சார்ந்த பிரமுகர்கள் அவரவர்களின் கடவுளை நோக்கி பிரார்த்தனை செய்ய வேண்டும். இந்த கூட்டுப் பிரார்த்தனையில் அனைத்து மதத்தலைவர்களும் கலந்து கொண்டு, அவரவர்களின் கடவுளை நோக்கி பிரார்த்தனை செய்தார்கள்.

அந்த கூட்டு பிரார்த்தனை எல்லா மதங்களும் கடவுள்களும் ஒன்றுதான் என்ற அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்று. அந்த கூட்டுப் பிரார்த்தனைக் கூட்டத்தில், பிரபலமான ஒரு கிறிஸ்தவ ஊழியரும் கலந்து கொண்டு தன் பங்கிற்கு இயேசுவின் பெயரில் ஜெபித்தார்.

மததுவேஷங்களை மறப்பதற்கு இந்த கூட்டுப் பிரார்த்தனைக் கூட்டம் ஒரு நல்ல சந்தர்ப்பம் என நாம் கூறலாம். ஆனால் மத நல்லிணக்கத்தை விட தேவனுடைய சத்தியம் அதிக கனத்திற்குரியது. பல்வேறு கடவுள்கள் இருப்பதாக நம்பி பிரார்த்தனை செய்யும் ஒரு கூட்டத்தில் ஒரு கிறிஸ்தவரும் பங்கு கொள்கின்றார் என்றால், இவரும் பல கடவுள்களையும், பல மத நம்பிக்கைகளையும் சரி என்று ஆமோதிக்கிறார் என்றுதானே அர்த்தம் கொள்ள முடியும். பிற மத மக்களோடு நமக்கு நல்ல ஐக்கியங்கள் தேவையே. ஆனால் தேவனோடுள்ள ஐக்கியங்களை பாதிக்கின்ற அளவிற்கு சமரசப் போக்குகளாக அவை இருக்கக் கூடாது. ஆம். சத்தியம் சார்ந்த ஒரு சமாதானமே நாம் தேட வேண்டிய சமாதானம்.

யோவான் ஸ்நானனை மதத்தலைவர்கள் எதிர்த்தனர். அவனுடைய சமரசமற்ற போக்கின் விளைவாக ராஜாவின் தண்டனையைப்பெற்று மரித்தான். சரியான சத்தியமும், சமரசமற்ற அணுகுமுறைகளும் ஒரு மனிதனுக்கு பல விரோதங்களை உருவாக்கிக் கொடுப்பதை தவிர்க்க முடியாது.

சுயத்தை தியாகம் செய்யாவிடில்

ஆனால் கர்த்தர் கூறுகின்ற சமாதானமும் உறவும் நம்முடைய சுயத்தையும் அதனுடைய விருப்பங்களையும் தியாகம் செய்து நிலைநாட்ட வேண்டிய ஒன்றாகும். ஏன் மனிதர்கள் மத்தியில் சமாதானக் குறைவுகளும், பிளவு பிரிவினைகளும் ஏற்படுகிறது? மனிதன் தன்னுடைய சுய உணர்வுகளின் அடிப்படையிலேயே செயல்படுகிறான். தன்னுடைய கருத்திற்கு புறம்பானவற்றை சகிக்க மறுக்கின்றான். தன்னுடைய எண்ணங்களுக்கு யாராவது எதிராக வந்தால் அதனை பொறுத்துக் கொள்ள முடியாமல், பிரிவினைக்கு தயாராகிறான். அவன் இசைந்து போகும் விஷயத்தில் மிகவும் சிரமப்படுகிறான்.

நல்ல ஐக்கியங்களுக்காக, நோக்கங்களுக்காக, நாம் பல நிலைகளில் நம்மை விட்டுக் கொடுக்க வேண்டியதும், இறங்கி வர வேண்டியதும் தேவையாகிறது. இவ்வித மனநிலைப் பக்குவங்கள் குறைவுபடுவதினால்தான் அங்கே சமாதானமற்ற சூழ்நிலைகள் ஏற்படுகின்றன.

இன்று சமுதாயத்தில் ஏராளமான குடும்பங்களில் சரியான ஐக்கியமும் ஒருவருக்கொருவர் சமாதானமும் இல்லை. காரணம் என்ன? சூழ்நிலைகளுக்கேற்ப தங்களின் சுபாவ நிலைகளை சரி செய்து கொள்ளவில்லை. அவரவர்களின் சுபாவநிலை இயற்கையின்படியே போக விரும்புகின்றார்கள். குடும்ப ஐக்கியத்தைக் காப்பதற்காக தாங்கள் விட்டுக் கொடுக்க வேண்டிய தேவையை உணராமல் போகிறார்கள்.

மொத்தத்தில் சமாதானத்திற்கு முக்கிய தடையாக இருப்பது மனிதனின் செவ்வை செய்யப்படாத சுபாவ நிலையே. ஒரு சபைக் கமிட்டிக் கூட்டத்தில் ஆலயத்தை விரிவுபடுத்துவது சம்பந்தமாக ஆலோசனை நடந்து கொண்டிருந்தது. ஒருவர் ஒரு யோசனை கூறினார். இன்னொருவர் அதை விட நல்ல ஒரு யோசனையைக் கூறினார். பலர் அதனை நல்லது என்று கண்டனர். ஆனால் முதல் கருத்தைச் சொன்னவர் அதனை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. எது நல்ல யோசனை என்பது அவருக்கு முக்கியமல்ல. தான் சொன்ன யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதே அவருக்கு முக்கியமாக மாறினது. தன்னுடைய கவுரவத்தையே முன்னிறுத்தினார். இறுதியில் எது நல்ல யோசனை என்ற விவாதம் போய் யார் பெரியவர் என்ற

பிடிவாதமே முன்னே வந்து நின்றது. முடிவு, கமிட்டி பிளவுபட்டது. சபை பிளவுபட்டது. ஆலயக் கட்டுமானம் அப்படியே ஸ்தம்பித்தது.

இன்று தனி மனிதர்கள் மட்டுமல்ல. நாடுகளும் அப்படித்தான் செயல்படுகின்றன. நாடுகள் எது சரி எது தவறு என்ற அடிப்படையில் காரியங்களைப் பார்க்கவில்லை. நம் நாடு பெரிதா, மற்ற நாடு பெரிதா என்ற கோணத்திலேயே பார்க்கின்றன. ஒவ்வொரு நாடும் தனி மனிதன் பிடிவாதம் பிடிப்பதைப் போல தாங்களும் கவுரவத்திற்காக பிடிவாதமாகச் செயல்படுகின்றன. அதன் விளைவாக யுத்தங்களும், அழிவுகளும் தொடர் கதையாகின்றன. காரணம் நாடு என்றாலும் அதன் பின்னால் மனித சுபாவங்கள்தானே நின்று அரசாளுகின்றன.

தேவனிடம் சமாதானமாக வேண்டும்

ஒரு மனிதன் சமாதானமுடையவனாகவும், சமாதானம் செய்கின்றவனாகவும் இருக்க வேண்டுமானால் முதலில் அவன் சமாதானத்தின் ரகசியத்தை அறிந்து கொள்ள வேண்டும். மனிதன் அடிப்படையில் சமாதானமற்றவனாகவே இருக்கின்றான். அவனுக்கும் அவனை படைத்த தேவனுக்கும் இடையே சமாதானம் இல்லை. அவன் தேவனுக்கு எதிராக நின்று செயல்படுகிறவனாக இருக்கின்றான். எனவே தேவனுக்கு பிள்ளையாக இருக்க வேண்டிய அவன் இப்போது தேவனுடையப் பார்வையில் சத்துருவாக இருக்கின்றான். (ரோமர் – 5:10) தேவனுக்கு முன்பாக அவனுடைய செயல்களெல்லாம் ஒரு சத்துருவின் செயல்களைப் போல உள்ளன.

யாரும் ஒரு மன முடிவின் அடிப்படையில் அல்லது மனதின் தீர்மானத்தின் அடிப்படையில் தேவனை எதிர்ப்பதோ, எதிர்த்து செயல்படுவதோ இல்லை. சொல்லப் போனால் எல்லாரும் தேவனை மனதளவில் மதிக்கவே செய்கின்றனர். தேவனுடைய வழிகளுக்கும், நியாயங்களுக்கும், கட்டளைகளுக்கும், வார்த்தைகளுக்கும் இசைந்து போகாத ஒரு வாழ்க்கை முறை தான், தேவனை எதிர்க்கும் செயலாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. கர்த்தருடைய வேதத்திற்கு உகந்ததல்லாத ஒரு வாழ்க்கைப் போக்கு தேவனுக்கு எதிரான நம்முடைய விரோதச் செயலாக எண்ணப்படுகிறது. *இரண்டு பேர் ஒரு மனப்பட்டிருந்தாலொழிய, ஒருமித்து நடந்து போவார்களோ?* என்று தேவன் கேட்கிறார். (ஆமோஸ – 3:3) ஆம். தேவனுடைய வழியில் நடவாத ஒரு வாழ்வே தேவனுக்கு விரோதமானது.

வேதத்தைப் பார்க்கின்ற போது மனிதன் இயற்கையாகவே தேவனுக்கு சத்துருவாகவே இருக்கின்றான். தேவனுடைய வழியில் நடவாமல் கால்களை விலக்கிய ஆதாம் தேவ சமாதானத்தை இழந்து தேவனுக்கு பகைஞன் என்ற நிலையை அடைந்தான். அந்த ஆதாமிலிருந்து தோன்றிய சந்ததியார் யாவருமே தேவனுடைய சந்துரு என்ற இயற்கையுடனேயே தோன்றுகின்றனர். ஒரு குழந்தை பிறந்து வளர, வளர அதனுடைய குணாதிசயங்களும், செயல்பாடுகளும் அவ்விதமாக இருப்பதை கண்டுணரமுடியும்.

எனவே ஒவ்வொரு மனிதனும் தேவனுக்கு எதிராகவே இருக்கின்றான். தேவனோடு அவனுக்கு நல்லுறவு இல்லாத காரணத்தினால் அவன் தனக்குள் எப்போதுமே ஒரு கலகம் நடப்பதையும், தன் மனதிற்குள் ஒரு போராட்டம் நடந்து கொண்டேயிருப்பதையும், உணருகின்றான். எனவே அவனுக்குள் உண்மையான சமாதானம் இல்லை.

கர்த்தருக்கு எதிராக நிற்கின்ற மனிதன் அவரோடு சமாதானம் செய்து நல்லுறவைக் கண்டாலொழிய மெய் சமாதானத்தை அவன் அடைய முடியாது. அவன் தேவனோடு சமாதானம் செய்து கொள்ள வேண்டிய சத்தியத்தை உணராமல், எவ்வளவுதான் பக்தி காரியங்களில் ஈடுபட்டாலும், தான தருமங்கள் செய்தாலும், புனிதத்தலங்கள் போய் வந்தாலும் மெய் சமாதானத்தைக் கண்டடைய முடியாது. மெய் சமாதானம் என்பது ஒரு மனிதன்தான் தேவனுக்கு வெகு தூரத்தில் விலகியிருப்பதை உணர்ந்து அவரை அருகில் வரவைப்பதற்கு தேவையான சத்தியத்தை அறிந்து செயல்படுவதாலேயே வருகிறது.

தேவனை நாம் எங்கே சந்தித்து அவரோடு சமாதானமடையும்? தேவனை எங்கே நாம் பார்த்து நம்முடைய தேவ விரோத வாழ்க்கையை விட்டு அவரோடு ஒப்பந்தம் செய்ய முடியும்? தேவனையும் மனிதனையும் சேர்த்தும் வைக்கும் வேலையை செய்யவே இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வந்தார். தேவனையும் நம்மையும் இணைத்து சமாதானம் செய்து வைக்கின்ற பணியை நிறைவேற்றவே இயேசு கல்வாரி சிலுவையில் மனிதனின் பாவங்களுக்காக தம்மையே பலியாக்கி பாவ நிவாரணம் செய்தார். மனிதனுக்கும் தேவனுக்கும் இடையே உள்ள இடைவெளியை நீக்கி அவர்களை ஒன்றாக்குவதற்காகவே இயேசு மனிதனுக்காக சமாதான பலியாக இரத்தத்தை சிலுவையில் சிந்தினார்.

தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே பாவம் என்ற பெருஞ்சுவர் ஒருவரையொருவர் சந்திக்க முடியாதபடி நின்று கொண்டிருந்தது. அந்த பெருஞ்சுவரை உடைத்துப் போட்டு தேவனை நெருங்க மனிதன் சக்தியற்றவன். எனவேதான் இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வந்து தேவ நீதியை தம்மைத் தாமே பலியிட்டதின் மூலமாக நிறைவேற்றி, பாவமாகிய பெருஞ்சுவரை உடைத்துப் போட்டார். இந்த தெய்வீக சத்தியத்தை விசுவாசிக்கின்ற ஒவ்வொருவரும் தேவனோடு சமாதானம் ஆகி ஐக்கியம் அடையும் வாய்ப்பைப் பெறுகின்றனர். எனவே தான் இயேசுவை வேதம் சமாதானக் காரணர் என்று சொல்கின்றது. (எபே – 2:14)

பவுல் அப்போஸ்தலன் இந்த சமாதானமாகுதலைப் பற்றி கூறுகின்ற போது *தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மை தம்மோடே (தேவனோடு) ஒப்புரவாக்கினார்* என்று கூறுகின்றான். (11 கொரி – 5:18) *தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல் கிறிஸ்துவுக்குள்* அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கினார் என்றும் கூறுகின்றான். (11 கொரி – 5:19)

ஆம். இயேசு கிறிஸ்துவின் மூலமாக நாம் தேவனண்டை வரும் போது, தேவனுக்கும் நமக்கும் இருந்த இடைவெளி அகன்று போகிறது. அங்கே தேவனோடு நாம் சமாதானம் அடைந்து ஒப்புரவாகி விட்டதற்கு அடையாளமாக தேவனுடைய சமாதானத்தின் ஆவி நமக்குள் வருகின்றது. அந்த ஆவியோடு நம்முடைய பழக்கங்களும், உறவு நிலைகளும் அதிகமாகும் போது, நாம் நமக்குள் சமாதான முடையவர்களாக மாறுகின்றோம்.

அவ்விதமாக நமக்குள் செயல்பட ஆரம்பிக்கும் தேவனுடைய சமாதானத்தின் ஆவி நமக்குள் நிகழும் போராட்டங்களை நிறுத்தி சமாதானம் அருள்வதோடு, எல்லாரோடும் சமாதானமாயிருக்கத்தக்க ஒரு மனப்பக்குவத்தையும், மன பலத்தையும் தருகின்றது. எனவே நாம் தேவ சமாதானத்தால் மனம் மகிழ்வதோடு மற்றவர்களோடும் சமாதானமாயிருக்கும் ஆற்றலைப் பெற்று, எங்கும் சமாதானத்தை செயல்படுத்த விரும்பும் மக்களாக மாறுகின்றோம். இவை யாவும் தேவனுடைய ஆவியினால் நடைபெறும் தெய்வீக செயல்பாடுகளே ஆகும்.

ஆனால் பரிதாபகரமாக இந்த உண்மை அநேகம் இரட்சிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையில் கூட, விசுவாசிக்கப்பட்ட ஒரு உபதேசமாக இருக்கின்றதேயன்றி, செயல்படுகின்ற அனுபவமாகயில்லை. அவர்கள் தங்களிலும் உண்மையான சமாதானத்தைக் காணவில்லை. பிறரிடமும் உண்மையான சமாதானத்தோடு செயல்பட முடியவில்லை. மற்றவர்களிடம் சமாதானத்தை விதைக்க அவர்களுக்கு இயலவும் இல்லை.

பிறரோடு சமாதானமில்லையேல் தேவ சமாதானம் இல்லை

இன்று இரட்சிக்கப்பட்ட எத்தனையோ ஆவிக்குரிய குடும்பங்களில் கணவன் – மனைவிக்கிடையில் சமாதானம் இல்லை. எத்தனையோ இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுக்கு தங்களின் சொந்த சகோதர சகோதரிகளோடு சமாதானம் இல்லை. பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெற்றதாக சாட்சி கூறி, ஆராதனை வேளைகளில் ஆவியில் நிரம்பியவர்களாக செயல்படுகின்ற எத்தனையோ பேருக்கு தங்கள் சொந்த சபை மக்களோடு நல்ல சமாதானம் இல்லை.

ஒவ்வொருவரும் சமாதானமின்மைக்கு மற்றவரையேக் காரணம் காட்டுகின்றனர். ஆனால் உண்மை என்ன? உண்மையான மனந்திரும்புதலை பின்பலமாகக் கொண்ட உண்மையான இரட்சிப்பின் அனுபவம் இல்லை. தேவ சமாதானத்தை உண்மையாக பெற்று அனுபவிக்காமல் அற்ப நேர ஆராதனை பரவசங்களையே தேவன் அருளிய சமாதானமாக எண்ணி செயல்படுவதினால் வலிமையான சமாதானத்திற்கு தேவை ஏற்படுகின்றபோது முடியாமல் போகிறது.

மற்றவர்களையே நாம் காரணம் காட்டுவது சரியல்ல. நம்மால் எந்த அளவிற்கு சமாதானத்திற்காக விட்டு கொடுக்க முடிந்தது? சமாதானம் செய்ய வேண்டும் என்று சொன்ன இயேசுவின் கட்டளையை கடைபிடிக்க எந்த அளவிற்கு நம்மால் பிரயாசப்பட முடிந்தது? நம்மிடம் போதிய சமாதான வலிமை இருந்தால் மற்றவர்களின் பிடிவாதப் போக்குகளின் நடுவிலும் சமாதானமாகிச் செயல்படமுடியும்.

அநேகர் பிறரோடு சமாதானமாயிருப்பதற்கு எந்தவித சிரமத்தையும் ஏற்காமலே, தேவனோடு சமாதானமாயிருக்க விரும்புவதுண்டு. ஆனால் அது தவறான அணுகுமுறை

தேவசமாதானத்தை நமக்குள் நாம் அனுபவிக்க வேண்டுமானால், பிறரோடு நாம் சமாதானமாயிருப்பதற்கு சில சிரமங்களை ஏற்றுத்தானாக வேண்டும்.

மற்றவர்களோடு சமாதானமாயிருப்பது அவ்வளவு எளிதான விஷயமல்ல. மற்றவர்களின் அன்பற்ற உண்மையற்ற சில விஷயங்களை பெரிதா எண்ணாமல், அவர்களுக்கு கசப்படையாமல் இருப்பது சற்று கடினமான விஷயமே. ஆனால் நம்முடைய உள்ளத்தில் தேவனுடைய சமாதானத்தை இழக்காமலிருப்பதற்காக, நாம் சில தியாகங்களைச் செய்துதான் ஆக வேண்டும். அநேகர் எவ்வளவோ ஜெபித்தும், ஆவிக்குரிய காரியங்களில் தீவிரமாக இருந்தும், சிறப்பாக ஊழியம் செய்தும் தனிப்பட்ட வாழ்க்கையில் தேவனால் வரும் சமாதானத்தை அனுபவிப்பதில்லை. ஏனென்றால் அவர்கள் பிறர் விஷயத்தில் தங்களை விட்டுக் கொடுத்து சமாதானமாயிருக்க வேண்டிய சிரமத்தை விரும்புவதில்லை.

பல நேரங்களில் பிறர் விஷயங்களில் நமக்கிருக்கும் இடைவெளியை குறைக்க விரும்புவதில்லை. சமாதானமாயிருப்பதற்கு தடையாயிருக்கின்ற காரியமுகளை தாண்டிச்செல்ல மனதைப் பக்குவப்படுத்துவதில்லை. சமாதானத்தைவிட சுய கவுரவம், மன வைராக்கியம், கசப்புணர்வு இவைகளையே மனதில் அதிக முக்கியமாக எண்ணிச் செயல்படுவோம். எனவே தேவன் நம்மோடு சமாதானமிருக்க முடியாமல் அவருடைய பாதையை அடைத்து விடுகிறோம். எனவே தேவன் அருளும் சமாதானம் தடை பட்டு போகிறது.

இரண்டு & விசுவாச சகோதரர்களுக்கிடையே சில ஆண்டுகளாக மனஸ்தாபமும், கசப்புணர்வும் நிலவி வந்தது. இரண்டு பேருமே தாங்கள் மற்றவரால் அதிகமாக விசனப்படுத்தப்பட்டுவிட்ட ஒரு எண்ணத்தையே மனதில் வைத்து வைராக்கியம் பாராட்டி வந்தார்கள். ஆனால் அவர்களில் ஒருவர் காலப்போக்கில் மனப்பக்குவமடைந்து, மற்றவரோடு ஒப்புரவாகிப் போக விரும்பினார். எனவே ஒரு சகோதரர் மூலமாக தன்னுடைய ஆணையை மற்றவருக்கு தெரிவித்தார். ஆனால் அவரோ தயாராகயில்லை. அவருடைய உறவோ, ஐக்கியமோ, சமாதானமோ எனக்குத் தேவையில்லை. தேவ உறவும், ஐக்கியமும் எனக்கு போதுமானது" என்று பதில் சொல்லி அனுப்பினார்.

மற்றவர்களின் உறவையும், சமாதானத்தையும், ஐக்கியத்தையும், சுய கவுரவத்திற்காக புறக்கணித்து விட்டு, தேவனுடைய ஐக்கியத்தை அனுபவிப்பது இயலாத காரியம் என்பதை அவர் உணரவில்லை. *உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும், விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்* என்று வேதம் சொல்கின்றது. (யாக். 3:14) கூடுமானால் *உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்* என்று வேதம் தெள்ளத் தெளிவாகக் கூறுகிறது. (ரோமர் – 12:18)

ஆம். சமாதானமாயிருக்க விரும்புவதும் சமாதானத்திற்கு தடையாயிருக்கின்றவைகளை அகற்ற சிரமம் விடுப்பதும் தேவனுடைய பிள்ளைகளுக்குரிய முக்கியமான அடையாளமாயிருக்கிறது.

*****

உண்மையின் பாதையில் துன்பமும் சந்தோஷத்தைத் தரும்

9

நீதியினிமித்தம் துன்பப் படுகிறவர்கள் பாக்கியவான்கள். பரலோக ராஜ்யம் அவர்களுடையது. (மத்தேயு – 5:10)

துன்பப்படுகிறவர்களைப் பார்த்து *"நீங்கள் பாக்கியவான்கள்"* என்று சொன்னால் உலகத்தின் மக்களுக்கு அது ஒரு வேடிக்கையானப் பேச்சாகவேயிருக்கும். எல்லா சீர் சிறப்புகளோடும் வாழ்க்கின்ற ஒருவரைப் பார்த்து *"பாக்கியவான்கள்"* என்று சொன்னால் அது பொருத்தமாயிருக்கும். ஆனால் *"துன்பப்படுகின்றவர்கள் பாக்கியவான்கள்"* என்று இயேசு கூறுகின்றார். அதிலும் *"நீதியின் நிமித்தம் துன்பப்படுகின்றவர்கள் பாக்கியவான்கள்"* என்று சொல்கின்றார். (மத்–5:10)

"துயரப்படுகின்றவர்கள் பாக்கியவான்கள்" என்று இயேசு சொன்னதைக் குறித்து ஏற்கெனவே சிந்தித்தோம். இயேசு கிறிஸ்து சொன்னவைகளை இயேசு கிறிஸ்து அருளும் ஆவியின் கண்களைக் கொண்டு பார்க்கும்போதுதான் அதனுடைய உண்மையின் சிறப்புகளைக் காணமுடியும்.

பாக்கியவான்கள் அல்லது மிகுந்த மகிழ்ச்சியானவர்கள் யார் என்பதைக் குறித்து சீடர்களுக்கு இயேசு கூறுகின்ற போது, ஒரு சில குணாதிசயங்களை முன் வைத்து அவ்விதமான குணாதிசயங்களை உடையவர்கள்தான் பாக்கியவான்கள் (மிகுந்த மகிழ்ச்சியானவர்கள்) என்று கூறினார். இறுதியாக நீதியினிமித்தம் துன்பப்படுகின்றவர்கள்" என்ற ஒரு கூட்டத்தை அறிவித்து அவர்களையும் பாக்கியவான்கள் என்றார்.

நீதி என்று இயேசு இங்கே குறிப்பிடுவது உலகத்தின் அங்கீகாரத்தை பெறத்தக்கதான ஒரு நீதி அல்ல. இயேசு குறிப்பிடுகின்ற நீதி தேவனுடைய அங்கீகாரத்தை பெறுவதற்கு ஏற்ற ஒரு நீதி ஆகும். அதாவது தேவன் விரும்புகின்றவிதமான குணாதிசயங்களின்படி வாழ்கின்ற ஒரு வாழ்க்கைநிலைதான் தேவனுடைய அங்கீகாரத்தைப் பெறத்தக்க ஒரு நீதி ஆகும். அந்த குணாதிசயங்களைத்தான் இயேசு கூறிக்கொண்டே வந்தார். அவைகள் ஆவியில் எளிமை, துயரங்களை ஏற்றல், சாந்தகுணம், நீதியின் மேல் வாஞ்சை, இரக்கம், இருதயத்தில் சுத்தம், சமாதானம் செய்தல் போன்றவையாகும்.

மேற்கண்ட சுபாவங்களை அல்லது குணரீதியான நிலைகளை உள்ளடக்கிய ஒரு வாழ்க்கை முறைதான் தேவனுடையப் பார்வையில் நீதி. ஆனால் இப்படிப்பட்ட ஒரு நீதியான வாழ்க்கை மற்றவர்களிடமிருந்து நமக்கு துன்பத்தை வரவழைக்கும் தன்மையையுடையது என்பதை இயேசு இங்கே முன்னறிவிக்கின்றார். ஆனால் அது மிகுந்த மகிழ்ச்சியை கொண்டு வரும் என்பதையும் அறிவிக்கின்றார்.

இயேசு கூறிய இந்த வசனம் அந்நாட்களில் சீடர்களுக்கு மிகுந்த ஆச்சர்யத்தைக் கொடுத்திருக்கும். ஏனென்றால் உண்மையும், நேர்மையும், இதயசுத்தமும் நிறைந்த ஒரு நீதியான வாழ்க்கை வாழ்ந்தால் பேரும், புகழும், பாராட்டும்தானே வரவேண்டும் என்று அவர்கள் சிந்தித்திருக்க முடியும். அதிலும் நீதியான ஒரு வாழ்க்கை வாழ்ந்து அதற்காக துன்பம் நேரிட்டால் அது வருத்தத்திற்குரியதல்லவா. ஆனால் இயேசு அதைப் போய் பாக்கியம் என்று கூறுகின்றாரே என்று தங்களுக்குள் குழம்பி போயிருக்க முடியும்.

சமீபகால சரித்திர நிகழ்வுகளைப் பார்க்கும் போது கூட உண்மையின் படியும், உயர்ந்த கொள்கையின் படியும் வாழ்கின்றவர்களை உலகம் துன்புறுத்தாமல் விட்டதில்லை என்று காண்கின்றோம். அடிமை விலங்கொடிக்க அயராது பாடுபட்டு வெற்றிகண்ட ஆபிரகாம் லிங்கனை உலகம் வாழவிடவில்லை. அஹிம்சா வழியில் அறப்போர் நடத்தி ஒரு தேசத்துக்கு விடுதலை வாங்கி வந்த மகாத்மாகாந்தியை உலகம் வாழவிடவில்லை. உண்மையாகவே நீதி நேர்மையோடும் மனத்தூய்மையோடும் வாழ முற்பட்ட எவரும் உலகத்தின் துன்பங்களைக் காணாமல் இருந்ததில்லை.

நீதியின்படியான ஒரு உயர்வான வாழ்க்கை அனேகருடைய வெறுப்பிற்கும், பொறாமைக்கும், குரோதத்திற்கும் காரணமாகி உபத்திரவங்களை வரவழைக்கும் என்பதை இயேசு முன்னறிவித்தார். ஆனால் அதனை தம்முடைய சீடர்கள் பெரிய துரதிருஷ்டமாக எண்ணி வருந்தக்கூடாது என்பதற்காக அது உண்மையிலேயே மகிழ்ச்சிக்கு ஏதுவான ஒன்று அல்லது பாக்கியவான் என்ற நிலைக்கு அழைத்துச் செல்கிற ஒன்று என்ற உண்மையையும் வெளிப்படுத்தினார்.

சில வருடங்களுக்கு முன்பு "எந்த சூழ்நிலையிலும் நாம் உண்மையையும், நேர்மையும் விட்டு விடாமல் வாழ்வது பெரிய ஆசீர்வாதமான ஒன்று" என்ற அடிப்படையில் ஒரு பிரசங்கம் செய்தேன். அதனைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் கூட்டம் முடிந்ததும் என்னிடம் வந்தார். உங்கள் பிரசங்கம் கேட்க நன்றாகயிருக்கிறது. ஆனால் உண்மையும், நேர்மையும் ஆசீர்வாதமான ஒன்று என்பது நடைமுறையில் ஒத்துக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல என்று கூறியதோடு, "உண்மையின் படி செயல்பட விரும்பியதால்தான் நான் ஒரு நல்ல வேலையை இழந்தேன். அதன் பிறகு இன்று வரை நான் ஒரு நல்ல வேலையைப் பெற முடியவில்லை" என்று தன்னுடைய கசப்பான அனுபவத்தையும் கூறினார்.

அவருடைய வருத்தமெல்லாம் தன்னுடைய உண்மைக்கு ஒரு நல்ல பலன் கிடைக்கவில்லையே என்பதுதான். ஆம், ஒரு சராசரி மனிதன் நீதி நேர்மை மிக்க வாழ்க்கைக்கு ஒரு நல்ல பரிசு கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றான். ஆனால் நடைமுறையில் அது கிடைக்காமல் போகும் போது, நீதி நேர்மையான வாழ்க்கையின் மேலிருந்து அவனுடைய பிரியம் அகன்று போய் விடுகிறது.

ஆனால் உண்மையின் படியான வாழ்க்கையை, நீதி நேர்மை தவறாத வாழ்க்கையை உலகம் கனப்படுத்துவதில்லை. அப்படிப்பட்டவர்களை உலகம் கனவீனப்படுத்தும் என்பதை இயேசு முன் கூட்டியே அறிவித்து விட்டார். ஆனால் மேன்மையான ஒரு குண நிலை சார்ந்த வாழ்க்கையினால் வரும் துன்பம் மகிழ்ச்சிக்குரியது என்று கூறினார்.

வேதாகம வரலாறு துவங்கிய காலத்திலிருந்தே நீதியினிமித்தம் மனிதன் துன்பப்படுவான் என்ற உண்மை தொடர்ந்து நிரூபிக்கப்பட்டு

வந்துள்ளது. காயின் ஏன் ஆபேலைக் கொலை செய்தான்? காயீன் பொல்லாத செயல்களைச் செய்கின்றவன். ஆபேலோ நீதியின் செயல்களை செய்கின்றவன். எனவே பொல்லாதவனாகிய காயீன் ஆபேலை துன்புறுத்திக் கொன்றான். (1 யோவான் – 3:12) பைபிளின் ஒரு சில பக்கங்களை புரட்டும் முன்னரே நீதியினிமித்தம் துன்பப்பட வேண்டி வரும் என்ற சத்தியம் நமக்கு தெள்ளத் தெளிவாக விளக்கப்பட்டு விட்டது.

பன்னிரெண்டு சகோதரர்களின் நடுவில் யோசேப்பு நீதிமானாக வாழ விரும்பினான். ஆனால் அவனுடைய நீதியான நடைமுறைகள் சகோதரர்களின் பாராட்டுதலையல்ல. அவர்களின் கடுங்கோபத்தையும், எரிச்சலையுமே அவனுக்கு சம்பாதித்துக் கொடுத்தது. யோசேப்பு தன்னுடைய உண்மை சார்ந்த வாழ்க்கைக்காக போன இடமெல்லாம் பெருந்துன்பங்களைச் சந்தித்தான்.

எனவேதான் தேவனுடைய ஆவியினால் பேசிய பவுல் அப்போஸ்தலன் *தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்* என்று எழுதினான். (11 தீமோ – 3:12)

குறிப்பிட்ட ஒரு கிறிஸ்தவர் நீதி, நேர்மை தவறாமல் கிறிஸ்தவ சத்தியத்தின்படி வாழ விரும்புகின்றவர். அவர் சென்றமிடமெல்லாம் அவருடன் பணிபுரிந்தவர்கள் அவருக்கெதிராக ஒரு குற்றச்சாட்டைக் கூட கூறமுடியவில்லை. ஆனால் அவர் லஞ்சம் வாங்குவதில்லை. சட்டத்திற்கு புறம்பான சிபாரிசுகளை ஏற்பதில்லை என்ற ஒரே காரணத்திற்காக அவர் பல முறை இடம் மாற்றம் செய்யப்பட்டார். அவருடைய திறமைக்கும், சீனியாரிட்டிக்கும் ஏற்ற பதவி உயர்வுகள் அவருக்கு மறுக்கப்பட்டன.

ஆம். உண்மையையும், உத்தமத்தையும் குறித்து உலகத்தில் புத்தகங்கள் எழுதுகின்றவர்கள் அனேகர். பிரமாதமாக சொற்பொழிவாற்றுகின்றவர்கள் அனேகர். ஆனால் அதனை உண்மையாகவே கனப்படுத்தி மனதார மரியாதை செலுத்துகின்றவர்கள் மிக. மிகக் குறைவே.

இன்று உண்மையும், நேர்மையும் உடையவர்கள் அரசியலில் ஒரு சில மாதங்கள் கூட தாக்குப்பிடிக்க முடியாத நிலமை உள்ளது. பொய், புரட்டு, ஏமாற்றுத்தனம் இல்லாதவர்கள் வியாபார உலகத்தில் பிரவேசிக்க தகுதியற்றவர்கள் என்ற நிலமை உள்ளது. மனசாட்சிக்கு விரோதமாக

செயல்பட தங்களை தயார் செய்யாதவர்கள் நிர்வாகப் பணிகளில் நிலைக்க முடியாது என்ற நிலமை உள்ளது. இன்று மனிதன் முன்னுக்கு வருவதற்கு பொய் நேர்மையின்மை, ஏமாற்றுத்திறன், வேடமிடுதல், தந்திரம், நீதி நியாயங்களைக் குறித்து கவலைப்படாமை, தேவபயமின்மை போன்றவையே பிரதான தகுதிகள் என்பது நடைமுறை உண்மைகளாக விளங்குகின்றன.

சிலரை உண்மைக் காயப்படுத்தும்

அநேகர் நீதி நேர்மை உண்மைக்கு மற்றவர்கள் புகழ் மாலை சூடுவார்கள் என்று நம்பி ஏமாந்து போகின்றனர். இன்று நீதி, நேர்மை, நியாயம், மனசாட்சி ஆகியவற்றை மக்கள் முற்றிலும் மதியாமல் போனமைக்கு முக்கியமான ஒரு காரணம், அவைகளால் தொந்தரவுகள்தானேயன்றி, நல்ல லாபங்கள் இல்லை. என்ற சிந்தனைதான்.

ஆம். உண்மையின்படியான வாழ்க்கை, நீதி தவறாத நிலைப்பாடுகள் நமக்கு சில நஷ்டங்களையும், கஷ்டங்களையும் கொண்டு வருவது உறுதி. சத்தியத்தின்படி வாழ்கின்ற அனேகருடைய கோபத்தையும் எரிச்சலையும் கொண்டு வரும் என்பது உறுதி.

ஒரு பிரபல ஊழியர் தான் மிகவும் உண்மையாக செயல்படுவதால் எல்லா மத மக்களும், எல்லா சபைப்பிரிவுகளும், பல்வேறு கொள்கைக் காரர்களும் தன்னை பெரிதும் மதித்து மரியாதை செய்து ஏற்றுக் கொள்வதாக பெருமிதத்துடன் கூறினாராம்.

ஆனால் சத்தியத்தின்படி அது சரியல்ல. ஒருவர் எல்லாருடைய ஆதரவையும், அன்பையும், அங்கீகாரத்தையும் எளிதாக பெறுகின்றாரென்றால் அங்கே சத்தியத்திற்கு புறம்பாக ஏதோ செயல்படுகின்றது என்பது நிச்சயம். அவர் உண்மையின் படி வாழ்கிறவரைப் போல போலித்தனம் பண்ணுகின்றவராக இருக்க வேண்டும். இல்லையேல் மக்களின் மனப்பிரியங்களை உணர்ந்து அதற்கேற்றபடி தன்னை வளைத்துக் கொண்டு செயல்படுகிறவராக இருக்க வேண்டும். சத்தியம் என்ற நிலையில் ஒரு உறுதியான நிலைப்பாடினைக் கொள்ளாமல், சமரசப் போக்கினைக் கையாளுகின்ற ஒருவரால்தான் எளிதாக எல்லோருடைய அன்பையும், ஆதரவையும் பெற முடியும்.

இன்று ஏராளமான கிறிஸ்தவ ஊழியர்கள் எளிதாக ஏராளமான மக்களின் இதயங்களுக்கு பிரியமானவர்களாக மாற முடிகின்றது. எல்லா சபைப் பிரிவு மக்களையும் அவர்களால் எளிதாகக் கவர முடிகின்றது. அவர்களால் எல்லோருக்கும் நல்லவர்கள் என்ற நிலையை எளிதாக அடைய முடிகிறது.

காரணம் என்ன? அவர்கள் நீதியின்படி செயல்படவில்லை. அவர்கள் மக்களின் மனப்பிரியங்களுக்குக்கேற்றபடி செயல்பட அறிந்திருக்கின்றார்கள். பினெகாசின் கையில் இருந்த வாளைப் போன்று, அவர்களின் கையில் உண்மை என்ற கூர்மையான வாள் இல்லை. எனவே அவர்களால் யாரும் காயமடையமாட்டார்கள். அவர்களின் வார்த்தைகள் எல்லாரையும் முதுகில் தட்டிக்கொடுக்குமேயன்றி, இதயத்தை வெட்டுகின்ற உண்மை என்ற கூர்மை அதற்கு கிடையாது.

யோவானின் உண்மை ஏரோதுவின் மனதைக் காயப்படுத்தியதால்தான் அவன் மரண தண்டனை அடைந்தான். மிகாயாவின் உண்மை ஆகாபை நோகச் செய்ததால்தான் அவன் கடுங்காவல் தண்டனையடைந்தான். எரேமியாவின் உண்மை ராஜாவையும், மதப்பிரமுகர்களையும் ஒங்கியடித்ததால்தான், கிணற்றில் தூக்கி வீசப்பட்டான். இயேசுவின் உண்மை மதத்தலைவர்களின் போலித்தனங்களை மட்டந்தட்டியதால்தான், அவர் சிலுவைத் தண்டனைக்கு தகுதியாக்கப்பட்டார்.

உண்மை ஒரு சிலரைக்குத்தும். நேர்மை ஒரு சிலரை விசனப்படுத்தும். இதய சுத்தம் ஒரு சிலரை காயப்படுத்தும். நியாயம் ஒரு சிலரை எரிச்சலூட்டும். சமரசம் செய்யாமை ஒரு சிலரை சஞ்சலப்படுத்தும் முகஸ்துதிப் போடத் தெரியாமை ஒரு சிலரை பொறுமையிழக்கச் செய்யும். சத்தியம் சார்ந்த துணிவு ஒரு சிலரை பற்களைக் கடிக்கத் தூண்டும் ஒளிவு மறைவின்றி உள்ளதை சொல்தல் ஒரு சிலருக்குள் ஆத்திரத்தை மூட்டும்.

எனவே நீதிக்காக, உண்மைக்காக, தெய்வீக நியாயங்களுக்காக நெஞ்சை நிமிர்த்துகிறவன். அனேகருடைய கண்களுக்கு ஆகாதவனாகவும், இதயங்களுக்கு ஏற்காதவனாகவும், சுவைகளுக்கு பொருந்தாதவனாகவும் மாறி பலருடைய வெறுப்புக்கும், விரோதத்திற்கும் ஆளாக நேரிடும்.

இவர்களை உலகம் வெறுக்காது

அன்று மாய்மால மதப் போதகர்களாகிய பரிசேயர்களும், மதி கேடுகளில் மூழ்கிப் போன வேத பாரகர்களும், உல்லாசப் பிறவிகளாகிய சதுசேயர்களும், இறை நியாயம் தெரியாத, நியாய சாஸ்திரிகளும் அனேகருடைய வெறுப்பிற்கும், விரோதத்திற்கும் ஆளாகவில்லை. அவர்களை அப்படியே நீதிமான்களாக ஏற்றுக் கொள்ள அநேகர் இருந்தனர். (மத் – 23:28) அவர்களால் மக்களின் வந்தனங்களையும், வாழ்த்துக்களையும், மதிப்பு மரியாதைகளையும் எளிதாகப் பெற முடிந்தது.

ஆனால் இயேசு கிறிஸ்துவோ அநேகருடைய வெறுப்பையும் விரோதத்தையும் விரைவாக சம்பாதித்தார். அவர் விரைவில் அனேகருடைய கசப்புக்குரிய ஒருவராக மாறினார். ஆம் உலகம் அவரை பகைத்தது. ஏன் அவரை உலகம் பகைத்தது? இயேசு கிறிஸ்து அதற்கு சரியான விளக்கம் கொடுத்தார்.

உலகம் உங்களை பகைக்கமாட்டாது. அதன் கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறதென்று நான் சாட்சி கொடுக்கிற படியினாலே அது என்னை பகைக்கிறது. (யோவான் – 7:7)

ஆம். மக்களின் மனதில் இடம் பிடிப்பதையே நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்ற மாய்மாலக்காரர்களை யாரும் வெறுக்க மாட்டார்கள். உண்மையை உண்மையாகச் சொல்லி சாட்சி கொடுக்கின்றவர்கள்தான் பகைக்கப்படுவார்கள். ஏனென்றால் அவர்களுடைய உண்மையான சாட்சி பலருடைய போக்குகளுக்கு எதிராக இருக்கிறது. உண்மையின் வெளிச்சம் பலருடைய பாவ நிலைகளை பகிரங்கப்படுத்தும். உண்மை அதற்கேற்ற பிரகாசத்தோடு வெளிப்படும் போது அனேகருடைய தப்பு, தவறுகள் அங்கே வெளியரங்கமாகும். தங்களின் உண்மைநிலை உலகத்திற்கு தெரியக்கூடாது என எண்ணுகின்றவர்களை அது கோபப்படுத்தாமல் இருப்பதில்லை.

என்னுடைய ஊழியத்தின் துவக்கக் காலங்களின் நான் ஒரு குறிப்பிட்ட பகுதியில் தொடர்ந்து ஜெபக்கூட்டங்களை நடத்தி வந்தேன். உண்மையோடும், உத்தமத்தோடும் யாரிடமும் காசு, பணம், உதவி கேட்காமல் மிகுந்த கஷ்டங்களின் மத்தியில் அவர்களுக்கு கர்த்தருடைய

வார்த்தைகளை அறிவித்து வந்தேன். ஆனாலும் அவர்களில் வெகு சிலருடைய அன்பை மட்டுமே நான் பெற முடிந்தது. பசி, பட்டினிகளுக்கு நடுவிலும் பாரத்தோடு ஊழியம் செய்த எனக்கு பத்து ரூபாய் தருவதற்கு பல முறை யோசிப்பார்கள். ஆனால் ஊழியர்கள் என்ற பெயரில் எங்கெங்கிருந்தோ வந்து, முகஸ்தி போட்டு, மாய்மாலமாக நடந்து கொள்கின்றவர்களுக்கு முகமலர்ச்சியோடு அள்ளி, அள்ளிக் கொடுத்து ஆதரிப்பார்கள். காலப் போக்கில் அவர்களில் சிலர் என்னுடைய ஊழியத்தை வெளிப்படையாகவே விரும்பவில்லை என்பதை புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால் அது எனக்கு நீண்ட காலம் மனவருத்தத்தை அளித்தது. ஏன் இவர்கள் என்மேல் அதிருப்தியாக இருக்கிறார்கள் என்ற கேள்வி என்னை அரித்துக் கொண்டே இருந்தது. போகப் போகத்தான் உண்மைகள் புரிந்தது. நான் போதித்த சத்தியங்களில் அவர்களின் மனம் பிரியமாயிருக்கவில்லை. சுபாவ, குண, இயல்பு நிலைகளை நான் முக்கியப்படுத்திப் பேசி, நடைமுறை வாழ்க்கையில் உள்ள விஷயங்களை அலசியதால் சிலருக்கு அது வெறுப்பை அளித்தது. "இவர் என்னைக்குறித்துதான் பேசுகிறார்? பிரதர் என் குணத்தைப் பற்றிதான் பிரசங்கத்தில் குத்திக் காட்டுகிறார்." என்றெல்லாம் அவர்கள் நினைத்துக்கொண்டு, வெறுக்க ஆரம்பித்தார்கள். ஆனால் உண்மையில் நான் அவ்வித நோக்கங்களோடு பேசவில்லை என்பதை தேவன் அறிவார். ஒரு வேளை நான் அவ்விதம் பேசாமல் எப்போதும் இயேசு உங்களை நேசிக்கிறார். இயேசு உங்களை ஆசீர்வதிக்கிறார் என்ன நிலையில் மட்டும் மேலோட்டமாக பிரசங்கித்திருந்தால் எல்லாருடைய அன்புக்கும் நான் பாத்திரனாக இருந்திருப்பேன்.

ஆம். உண்மை, உத்தமம், பரிசுத்தம் இவைகளை விரும்பி, குணநிலை, சுபாவநிலைக் கோளாறுகளைக் குறித்து வெளிப்படையாகப் பேசும் போது அது வேப்பங்காயாய் பலருடைய உள்ளத்தில் கசக்கவே செய்யும். அந்த கசப்பு அவ்விதம் பேசியவனையும் கசந்து கொள்ளவே தூண்டும், உண்மையுள்ளவர்களை ஏன் உலகம் உதாசீனப்படுத்துகிறது? ஒழுக்கம் நிறைந்தவர்களை மக்கள் ஏன் மதிக்க மறுக்கின்றார்கள்? நேர்மை உள்ளவர்களை பெரும்பான்மையோர் எதிர்ப்பதின் காரணம் என்ன? மாய்மாலமின்றி மனத்தூய்மையோடு செயல்படுகின்றவர்களை உலகம் ஏன் விரோதப் பார்வை பார்க்கின்றது? கடவுளின் வெளிச்சத்தில்

கண்ணியமாக நடக்கின்றவர்களைக் கண்டு அநேகர் எரிச்சலடைவது ஏன்? சுயாகப் போக்கின்றி சத்தியத்தை துணிந்து பேசுகின்றவர்களை மக்கள் வெறுப்புடன் பேசுவதின் காரணம் என்ன?

வேதத்தில் அதற்கு தெளிவான விடைகள் உண்டு. *உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது* என்று வேதம் சொல்கின்றது. (1யோ – 5:19) உலகத்து மக்களின் மேல் பொல்லாங்கனாகிய சாத்தானுடைய ஆவியின் ஆளுகை உள்ளது. நீதிமானாகிய ஆபேலுக்கு எதிராக காயீனை தூண்டிவிட்ட அந்த ஆவி எக்காலங்களிலும் அந்த அக்கிரமக்கிரியையைச் செய்து கொண்டேயிருக்கிறது.

என்னுடைய நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள் என்று இயேசு சொன்னார். (மத் – 10:22) அதாவது என்னுடைய உண்மையின் பாதையில் நடந்து, நான் போதித்த உண்மைகளைப் பேசும் போது நீங்கள் அநேகரால் பகைக்கப்படுவீர்கள் என்று சொன்னார்.

இப்போது நீதி நேர்மையின்படி சத்தியத்தைச் சார்ந்து வாழ்கின்றவர்களுக்கு உலகம் ஏன் துன்பத்தைக் கொண்டு வருகின்றதை என்பதைக் குறித்துப் பார்ப்போம்.

உண்மையை நேசிக்கும் இயற்கை உலகத்திற்கு இல்லை

முதலாவதாக, உலகம் உண்மையை நேசிக்கும் இயற்கையை கொண்டதல்ல. நேர்மை நியாயங்களை களப்படுத்தும் மனப்பக்குவமும், தன்மையும் அதற்கில்லை. இன்று மக்களின் பணத்தை கோடிக்கணக்கில் கொள்ளையடிக்கும் அரசியல் தலைவர்கள் மக்களால் "இதயம் தெய்வம்" என்ற நிலையில் மதிக்கப்பட்டு போற்றப்படுவது ஏன்? அசிங்கமான சினிமாப் படங்கள் மூலம் அனேகருடைய ஒழுக்கக் கேடுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கும் சினிமா நடிகர்கள் பெரும்பாலான மக்களின் இதய நாயகர்களாக எண்ணப்படுவது ஏன்? ஒரு சினிமா நடிகனின் விரலசைப்பிற்கு தலையசைத்து தங்களையே அடிமைகளாக்க தயாரான மக்கள் கணக்கிலடங்காதோர். சமுதாயம் தீயவர்களையும், மனசாட்சியில்லாதவர்களையும், போலித்தனத்தில் ஊறிப் போனவர்களையும் மாலையிட்டு வரவேற்று அவர்களுக்கு பின்னால் செல்லத் தயாராயிருக்கின்றதென்றால் அதற்கு காரணம் என்ன?

மக்களின் மனநிலைதான். மக்கள் அடிப்படையில் உண்மை, நீதி, நேர்மை, இதய சுத்தம் போன்றவற்றை இயற்கையாகக் கொண்டிராததால் தான், அவர்கள் பொய்யுரைப்பவர்களையும், போலித்தன மனிதர்களையும் எளிதாக ஏற்றுக் கொள்ள முடிகின்றது. சமுதாயத்தில் நல்லவன் ஒருவன் எழுந்தால் எத்தனை பேர் அவனுடைய ஸ்டைலைப் பின்பற்றி அவனைப் போல மாறவிரும்புவார்கள்? ஆனால் ஒரு சினிமா நடிகனை, கிரிக்கெட் விளையாட்டுக்காரனை, அரசியல் தலைவனை மக்கள் அதிகமாக விரும்புவதோடு, அவர்களின் ஆகாத ஸ்டைல்களை அப்படியே பின்பற்றுவதை பெரிய கவுரவமாக நினைப்பார்கள்.

அன்று யூதர்களைப் பார்த்து உங்களுக்கு யார் வேண்டும் இயேசு வேண்டுமா? பரபாஸ் வேண்டுமா என்று கேட்ட போது அவர்கள் யாரைத் தங்களுக்கு வேண்டும் என்றார்கள்? சத்தியவானாகிய இயேசுவை அல்ல. கலகக்காரனாகிய பரபாஸைத்தான் தெரிந்து கொண்டார்கள். அவர்களால் இயேசுவை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் சத்தியம் அவர்களிடம் இல்லை. எனவே சத்தியத்தையோ, சமாதானத்தையோ அவர்கள் வாஞ்சித்து ஏற்க முடியாது. அவர்கள் அடிப்படையில் கலக்காரர்கள். போலித்தனத்தால் பொதியப்பட்டவர்கள் அவர்களால் உண்மையை, உத்தமத்தை,மனத்தூய்மையை பெரிதாக எண்ணி ஏற்க முடியாது.

சாக்கடையில் இரண்டு பன்றிகள் மேய்ந்து கொண்டிருந்தால் தூரத்திலுள்ள பல பன்றிகள் அந்த சாக்கடையை நோக்கித்தான் ஓடிவரும். அவைகள் சுத்தமான இடத்தில் நிற்கும் ஆட்டிற்கு அருகில் போக விரும்பாது. ஏனென்றால் அவைகள் சாக்கடை வாசத்தை விரும்பும் இயற்கையுடைய பன்றிகள். அவைகளால் ஆடுகள் இருக்கும் இடத்தை விரும்பி போக முடியாது.

அரச குடும்பத்தில் பிறந்து, அரசகுமாரானை திருமணம் செய்து வாழ்ந்த இங்கிலாந்தின் இளவரசி டயானா, தன்னுடைய திருமண உறவிற்கு வெளியே மூன்று, நான்கு ஆடவர்களோடு தவறான தொடர்பு வைத்து வாழ்ந்தாள். இறுதியாக தன்னுடைய கணவன் அல்லாத ஒருவனோடு உல்லாசமாக ஊர்ச்சுற்றிக் கொண்டிருந்த பாதையில் திடீர் மரணம் அவளைச் சந்தித்தது. ஆனால் அத்தகைய ஒரு பெண்ணை இங்கிலாந்தின் பெரும்பாலான மக்கள் *"எங்கள் தேவதை"* என்று அழைக்க வெட்கப்படவில்லை. தவறான தொடர்புகளிலேயே நீண்ட

காலம் தொடர்ந்த ஒரு ஒழுக்கக்கேட்டின் நுகரை உலகம் தெய்வம் என்ற நிலையில் பார்க்கத் தயாராயிருந்ததென்றால் உலகம் எந்தளவு இயற்கையை உடையாதாயிருக்கிறது என்பதை புரிந்துக் கொள்ள முடியும்.

உண்மையையும், உத்தமத்தையும், உயர்குணங்களையும், உரிய முறையில் நேசிக்கும் மக்கள் சமுதாயத்தில் வெகு சிலராக மட்டும் இருப்பதால்தான், உண்மையற்றவர்களும், ஒழுக்க நிலை தவறியவர்களும், ஊழலில் ஊறினவர்களும் இன்று ஆட்சி பீடங்களில் எளிதாக வந்து அமர முடிகின்றது. ஆம், அடிப்படையில் நீதி நியாயங்களை நேசிக்கும் இயல்பு மனிதனுக்கு இல்லை. எனவே நீதியின் அடிப்படையில் வாழ்கின்றவர்களுக்கு அவர்களால் துன்பம் வருவது ஆச்சர்யப்படத்தக்க ஒன்றல்ல. எனவேதான் இயேசு கிறிஸ்து நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படி பேசுவீர்கள் என்று பரிசேயர்களைப் பார்த்துக் கேட்டார். (மத் – 12:33)

இன்று மிகவும் வெளியரங்கமாக "அதிகமாக தவறு செய்தவர்கள்" என்று ஒரு சிலரைக் குறித்து மக்கள் அறிந்திருந்தும், அவர்களை தங்களின் தலைவராக ஏற்று அடிமைகளைப் போல செயல்பட தயாராக இருக்கிறார்களென்றால், மக்கள் உண்மை, நேர்மைகளின் மேல் எந்த அளவிற்கு பிடிப்பு வைத்திருக்கின்றார்கள் என்பதை எளிதாகக் கண்டறிய முடிகிறது.

உண்மையானவர்கள் சிலருக்கு தடைக்கற்கள்

இரண்டாவதாக, நீதிமான்கள் மற்றவர்களால் காரணமின்றி பகைக்கப்படுவதற்கு காரணம், இவர்களுடைய நீதியான நடைமுறைகள் மற்றவர்களுக்கு ஒரு பெரிய பிரச்சனையாக இருப்பதால்தான். நேர்மை, நியாயங்களில் அக்கறையில்லாதவர்களின் பாதையில் நேர்மையானவர்கள் தடைக்கற்களைப் போல எண்ணப்படுகின்றார்கள்.

யோசேப்பின் சகோதரர்கள் நீதி, நேர்மைகளில் ஆர்வமில்லாதவர்கள், அவர்கள் பொய்மையும், புரட்டையும் வெறுக்காதவர்கள். அவர்களின் நடுவில் யோசேப்போ நீதிமானாக விளங்கினான். இவர்களின் தகாத விதமான செயல்பாடுகளைக் கண்டு அவன் மவுனமாயிருக்க முடியவில்லை. சகோதரர்களின் நடுவில் உண்மையான செயல்பாடுகள் ஏற்பட வேண்டும் என அவன்

விரும்பினான். அவனுடைய நேர்மையான வாழ்க்கை சகோதரர்களுக்கு தடைக்கற்காகத் தோன்றியது. எனவே அவன் அவனுடைய நீதியினிமித்தம் அவர்களால் துன்பப்படுத்தப்பட்டான்.

இதே விதமான போக்குகள்தான் உலகத்தில் எல்லா காலங்களிலும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. மாநில வருவாய்துறை அலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரி ஒருவர் லஞ்சம் வாங்குவதற்கு முற்றிலும் எதிரானவர். எந்த ஒரு வேலையாயினும் கிடப்பில் போட்டு வைக்காமல், உடனுக்குடன் செய்து முடிக்க வேண்டும் என்ற கொள்கையுடையவர்.

நேர்மையான அதிகாரி என்று அந்த அலுவலக வட்டாரத்தில் பலரால் மெச்சப்பட்ட அவரின் மேல் திடீரென பொய்யான குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு பல விதங்களில் தொல்லைகளுக்குட்படுத்தப் பட்டார். காரணம் என்ன? அவருடைய நேர்மை, அங்கே பணிபுரியும் பிறருக்கு பெரிய பிரச்சனையாக இருந்தது. இவருடைய நேர்மையான கொள்கைகளினால், மற்றவர்களுக்கு லஞ்சம் வாங்கி குவிக்க பல தடைகள் ஏற்பட்டன. எனவே அவரை அங்கிருந்து அகற்ற பொய்யான பழிகளை சுமத்தினார்கள். ஆம். ஒருவருடைய நேர்மையான வாழ்க்கை மற்றவர்களின் அநீதியான பிழைப்புகளுக்கு பெருந்தடைகளாக விளங்குவதால், அங்கே அவர்கள் உபத்திரவங்களைச் சந்திக்க நேரிடுகிறது.

ஆம். சராசரி உலக மனிதன் நேர்மையையும், வாய்மையையும் விரும்பாதவன். எனவே மற்றவர்களின் நேர்மையான அணுகுமறைகள் அவனுக்கு எரிச்சலூட்டுகின்றன. இன்று பெரிய தொழிலதிபர்களும், வியாபாரிகளும் ஒரு ஊழலற்ற, லஞ்சத்தை ஊக்குவிக்காத அரசாங்கத்தைவிட, பணத்தைப் பெற்றுக் கொண்டு தங்கள் காரியத்தை நிறைவேற்றிக் கொடுக்கின்ற ஒரு அரசாங்கத்தையே எதிர்பார்க்கின்றனர்.

ஒருமுறை ஒரு வியாபாரப் பிரமுகரிடம் பேசும் போது, அவர் ஊழலில் ஊறிப் போன ஒரு முதலமைச்சருடைய ஆட்சியை நல்ல ஆட்சி என்று மெச்சியதோடு, அந்த அளவிற்கு ஊழலுக்கு இடமளிக்காத இன்னொரு முதலமைச்சரின் ஆட்சியை மிக மோசமானது என்று வருணித்தார். அதற்கு அவர் சொன்ன நியாயம் என்னத் தெரியுமா? ஊழலை ஊக்குவிக்கும் முதலமைச்சரிடம் பணத்தை கொடுத்து

காரியங்களை நிறைவேற்ற முடிந்தது. ஆனால் மற்ற முதலமைச்சரிடம் போனால் அப்படி விஷயங்கள் நடப்பதில்லை. எளிதாக காரியங்களை சாதிக்க முடிவதில்லை, என்பதாகும்.

ஆம். நேர்மையற்ற சமுதாயத்தின் நடுவில் நேர்மையாளர்கள் மற்றவர்களால் தடைகளாகவே எண்ணப்படுவார்கள். இயேசுவின் காலத்துப் பரிசேயர்களும், மதத்தலைவர்களும் அவரை அதிகமாக எதிர்த்ததின் முக்கியக் காரணம் என்ன? இயேசு அவர்களுடைய தப்பிதமான போக்குகளில் பெருந்தடையாக விளங்கினார். இயேசுவின் போதனைகளும், விமர்சனங்களும் போலி மதத்தலைவர்களின் பொல்லாத வழிகளில் சில தடங்கல்களை ஏற்படுத்தின. எனவே அவரை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று முடிவு செய்யும் அளவிற்கு அவர்கள் கோபமடைந்தனர். நல்லவனுக்கு காலம் இல்லை என்று சிலர் சலிப்புடன் சொல்வதை நாம் பல முறை கேட்டுள்ளோம். ஆம். நல்லவன் வாழ்வதை மற்றவர்கள் விரும்புவதில்லை. அவனுடைய நல்ல செயல்பாடுகளை அவர்கள் மதிப்பில்லை. நீதி நேர்மையை நேசிக்கும் இயல்புகள் மனிதனிடம் இருந்தால், அவன் நல்லவனைக் கண்டு மெச்சுவான். அவனுடைய செயல்களை பாராட்டி மகிழ்வான். நீதி நேர்மை இல்லாத அவன் எப்படி நல்லவனை பாராட்டி, அவனுடைய நற்செயலை பாராட்ட முடியும்?

வெளிச்சம் வெளியரங்கமாக்கும்

மூன்றாவதாக தேவனுக்கு பயந்து அவருடைய உண்மைகளின் படி வாழ்கின்றவர்கள் இந்த உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கின்றார்கள். அவர்கள் வழிகாட்டும் வெளிச்சமாக மட்டுமல்ல. நல்லது கெட்டதை பாரபட்சமின்றி வெளியரங்கமாக்கிக் காண்பிக்கும் வெளிச்சமாகவும் இருக்கின்றார்கள். இருளில் மறைக்கப்பட்ட ஒவ்வொரு விஷயமும் அவர்களின் வெளிச்சத்தில் வெளியேத் தெரிய ஆரம்பிக்கின்றன.

ஆகாப் என்ற இஸ்ரவேல் ராஜாவின் காலத்தில் எலியா என்ற தீர்க்கத்தரிசி கர்த்தருடைய வெளிச்சமாக செயல்பட்டான். அவனுடைய வெளிச்சத்தில் ஆகாபின் அக்கிரமங்களும், அநியாயங்களும், அருவருப்புகளும் வெளிப்பட்டன. ஆகாபின் மோசமான உண்மை நிலைகளை எலியா தயக்கமில்லாமல் "பளிச்" என்று வெளிப்படுத்திக் கொண்டிருந்தான். எனவே எலியா ஆகாபிற்கு பெரும் பகைவனைப்

போல தென்பட்டான். அந்த நீதிமானைப் பார்த்து அந்த அநீதிக்கார அரசன் ஒரு நாள் *என் பகைஞனே, என்னைக் கண்டுபிடித்தாயோ"* என்றான். (1 இராஜா – 21:20)

ஆம். நாம் உண்மையிலேயே தேவனுடைய வார்த்தைகளை நேசித்து, அவருடைய வழிகளில் நடந்தால் நாம் இருளாக அல்ல, வெளிச்சமாக செயல்படுவோம். இருளின் தன்மை என்ன? உண்மைகளை வெளியேத் தெரியாமல் அது மறைக்கும். ஆனால் வெளிச்சமோ அதனை வெளியரங்கமாக்கும். எனவே நீதிமான் செயல்படுகின்ற இடங்களில் மற்றவர்களின் உண்மை நிலமைகள் வெளியேத் தெரிய ஆரம்பிக்கின்றன. ஏனென்றால் வெளிச்சத்திற்கு மற்றவர்களின் தவறுகளை மறைத்துக் கொள்ளும் தன்மை கிடையாது.

தாவீதின் காலத்தில் வாழ்ந்த நாத்தான் தீர்க்கத்தரிசி அவனுடைய முக்கியமான ஒரு நண்பன். அதே வேளையில் அவன் கர்த்தருடைய வெளிச்சமாகயிருந்தான். எனவே தாவீது பாவம் செய்த போது, நண்பன் என்றும் பாராமல், அவனுடைய அக்கிரமத்தை மறைக்க விரும்பாமல், அவனிடம் போய் *"நீயே அந்த அக்கிரமக்காரன்"* என்று நேரடியாகக் கூறினான். (11 சாமு – 12:7)

இன்று பல தேவ ஊழியர்கள் லஞ்சலாவண்யங்களில் ஊறிப்போன அரசியல் தலைவர்களையும், பதவியை தவறாக உபயோகித்து பெரும்பணம் பண்ணும் உயர் அதிகாரிகளையும், நேர்மை, நியாயங்களை கைகழுவிவிட்டு பெரும் பொருளீட்டும் வியாபார பெரும் புள்ளிகளையும், தங்களுக்கு சாதகமாயிருக்கின்ற ஒரே காரணத்திற்காக வானளாவ பாராட்டி புகழ்வார்கள். அநீதியாளர்களெல்லாம் அவர்களுக்கு முன்பாக பரிசுத்த பெருங்குடிகளாகக் காண்பிக்கப்படுவார்கள்.

காரணம் என்ன அவர்களிடம் சத்திய ஒளி இல்லை. உண்மையின் பாதையை நேசித்து அதில் அவர்கள் நடக்கவில்லை. எனவே மற்றவர்களின் தவறுகளை மறைக்கும் இருளாக இருக்கின்றார்களேயன்றி, உண்மை நிலையை வெளியரங்கமாக்கும் ஒளியாக இல்லை.

யோவான் ஸ்நானனுக்கு முன்பாக அன்றைய மதத்தலைவர்கள் வந்தபோது, அவன் அவர்களை "தேவனுடைய திருத்தூதர்களே வாருங்கள்" என்று வரவேற்கவில்லை. ஆன்மீகத்தின் உயர்மட்டத் தலைவர்களெல்லாம் என்னைப் பார்க்க வந்திருக்கின்றார்களே, என்ற

குஷியில் "இறைவனுக்கு இனியவர்களே" என்று வாழ்த்து கூறவில்லை. அவனுடைய பார்வையில் அவர்கள் விரியன் பாம்புக் குட்டிகளுக்கொத்த நிலையில் கேடானவர்களாக இருந்தார்கள். எனவே அவன் அவர்களைப் பார்த்து *"விரியன் பாம்புக் குட்டிகளே ! வருங்கோபத்துக்கு தப்பித்துக் கொள்ள உங்களுக்கு வகைகாட்டினவன் யார்"* என்று சீறினான். (மத் – 3:7) அவன் அந்த நாட்டு அரசனைப் பார்த்து "நீ செய்தது சரியல்ல" என்று கூறி கண்டித்தான். ஏனென்றால் அவன் வெளிச்சமாயிருந்தான். அந்த வெளிச்சம் யார் எவர் என்ற பேதமின்றி உண்மையை வெளியரங்கமாக்கியது. எனவே அவன் அரச குடும்பத்தின் பகைவனாக எண்ணப்பட்டு இன்னுயிரை இழந்தான். ஆம். தேவனுடைய நீதி நியாயங்களுக்கிசைந்து செயல்படுகிற யாவரும் வெளிச்சமாயிருப்பதால், இந்த உலகத்தில் அவர்கள் பகைக்கப்படுவது உறுதி. ஏனென்றால் தப்பு, தவறுகளை வெளிப்படுத்திக் காண்பிக்கும் இந்த வெளிச்சம், அனேகருக்கு எரிச்சலையூட்டுவது நிச்சயம்.

ஒத்துப் போக இயலாதவர்கள்

நான்காவதாக, நீதியின்படியான வாழ்க்கை இந்த உலகப் பிரகாரமான வாழ்க்கைக்கு முரண்பாடான ஒன்று. தேவபயமிக்கவர்களின் வாழ்க்கை நிலைகளோடு பொருந்திப் போக உலகநிலை மக்களால் இயலாது. அதுபோல உலகநிலை வாழ்க்கைப் போக்குகளோடு ஒத்துப் போக தேவ பயமிக்க மக்களால் இயலாது.

ஒரு மனிதன் தேவனுடைய வழிகளில் நடப்பதற்கு தன்னை ஒப்புக் கொடுத்து, தேவனுடைய பிள்ளை என்ற நிலையை அடையும் போது, அவன் இந்த உலகத்திற்கு அந்நியன் ஆகிவிடுகிறான். அதன் பின்னர் இந்த உலகம் அவனுக்கு அந்நிய தேசமாக மாறிவிடுகிறது. விண்ணுக்குரிய சுபாவ நிலைகளை மண்ணுக்குரியவர்களால் சகிக்க இயலாது. விண்ணுக்குரியவர்களின் தூய நிலைகளை தூய்மையற்ற நிலைகளிலேயே வாழ்ந்துப் பழகிப்போன மண்ணுக்குரியவர்களால் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. எனவே மண்ணுக்குரியவர்கள் விண்ணுக்குரியவர்களை வெறுக்கவும், விரோதிக்கவும் ஆரம்பிக்கின்றார்கள்.

எகிப்தில் வாழ்ந்த எபிரேய மக்கள் அந்த நாட்டுக்காக கடுமையாக உழைத்தவர்கள். ஆனாலும் அவர்கள் காலப்போக்கில் அதிகமாக வெறுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டார்கள். காரணம் என்னவென்றால்

அவர்கள் எகிப்தியர்கள் அல்ல. அவர்கள் பிற தேசத்தைச் சேர்ந்தவர்கள் அந்நியர்கள். எனவே அவர்களை அவர்கள் கொடுமைப்படுத்த ஆரம்பித்தனர்.

உண்மையில் இந்த பாவ பூமிக்கு பரிசுத்தவான்கள் அந்நியர்களே. அவர்கள் தங்கள் பரிசுத்த நிலைக்காக பாராட்டை அல்ல. பலவகை துன்பங்களையே எதிர்பார்க்க முடியும். ஏனென்றால் அந்நியர்கள் எப்போதுமே சுய தேசத்தாரால் வெறுக்கப்படுவது உண்மை.

ஒரு குடும்பத்தில் உள்ள வாலிபன் இளவயதிலேயே தப்பிதமான வாழ்க்கைப் பாதைகளில் சென்று குடித்து வெறித்து எல்லாராலும் இகழப்பட்டவன். அவனுடைய குடும்பத்தார் அவனுடைய ஒழுங்கற்ற வாழ்க்கையினிமித்தம் பெரிதும் துயரடைந்தனர். ஒருநாள் அந்த வாலிபன் கர்த்தரால் தொடப்பட்டு, பெரிய வாழ்க்கை மாற்றத்தைக் கண்டான். அவனுடைய கெட்ட பழக்கங்கள் யாவும் போய் தூய்மையான ஒரு வாழ்க்கை நிலைக்குள் வந்தான்.

ஆனால் என்ன பரிதாபம்! அவன் குடிப்பழக்கத்திலிருந்து விலகி நல்ல ஒரு உலக மகனாக மாற வேண்டும் என்றுதான் அந்த குடும்பத்தார் விரும்பியிருக்கின்றார்களேயன்றி, ஒரு நல்ல தேவ மனிதனாக மாறுவதை அவர்கள் விரும்பவில்லை. நாளடைவில் அவனுடைய பரிசுத்த வாழ்க்கை அவனுடைய குடும்பத்திலேயே அவன் ஆகாதவனாக எண்ணப்படுவதற்கு காரணமாகியது. "நான் மனம் போனபடி வாழ்ந்த காலத்தில் மற்றவர்கள் என்னை வெறுத்ததைவிட அதிகமாக மனந்திரும்பிய பின்புதான் வெறுக்கின்றார்கள்" என்று சொல்லி அவன் வருந்தினான்.

உண்மைதான். அதுதான் அங்கு நிகழும். உலகம் தன்னை தொந்தரவு செய்யாத ஒரு மனிதனை விரும்புகிறதேயன்றி, ஒரு பரிசுத்தவனை விரும்பவில்லை. ஒருவன் பரிசுத்தவான் என்ற நிலையை அடைந்ததும் அவன் இந்த உலகத்திற்கு உகந்தவனல்லாதவனாக மாறிவிடுவான். அவனை உலகம் வித்தியாசமான ஒரு நிலையில் வெறுக்க ஆரம்பித்துவிடும். உலகத்தின் போக்குகளுக்கு எதிராக அவனுடைய போக்குகள் இருப்பதால் உலகத்தின் கண்களுக்கு அவன் பிரியமானவனாக இருப்பதில்லை.

இயேசு தம்முடைய சீடர்களுக்கு இதனை முன்னறிவித்து திடப்படுத்தினார். உலகம் அவர்களை பகைக்கும் என்பதை அவர்கள் பகைக்கப்படுவதற்கு முன்னரே தெளிவாகச் சொல்லி தைரியமாக இருக்கும்படி கூறினார். *நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்ட படியினாலும், உலகம் உங்களை பகைக்கிறது.* என்று தெளிவாக விஷயங்களை கூறி வைத்தார். (யோவான் – 15:19) இதனைத்தான் பேதுரு பிற்காலத்தில் விசுவாசிகளுக்கு நினைப்பூட்டி எழுதினான். *நீங்கள் அந்நியர்களும், பரதேசிகளுமாயிருக்கிறீர்கள்* என்று கடிதங்களில் எழுதினான். (1 பேதுரு – 2:11). பவுல் அப்போஸ்தலனும், *நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது* என்று விசுவாசிகளுக்கு சொல்லி, இந்த உலகத்தில் நாம் அந்நியர்களே என்பதை விளங்கப்பண்னினான். (1பிலி – 3:20)

எப்போதுமே அந்நியர்கள் வெறுக்கப்படுவதும், ஒடுக்கப்படுவதும் இயற்கை. "இலங்கைக்கு தமிழர்கள் அந்நியர்களே" என்ற சிங்களவர்களின் உணர்வுதான் தமிழர்களை சிரமப்படுத்த அவர்களை ஏவியது. ஒரு சின்ன ஊரில் கூட பக்கத்து ஊர்க்காரன் ஒருவன் இருந்தால் "இவன் வெளியூர்க்காரன்" என்று சொல்லி வெறுப்பதைப் பார்க்க முடியும். ஒரு மாநிலத்தில் மற்றொரு மாநிலத்தவன் வாழ்ந்தால் அவனை "வெளி மாநிலத்தவன்" என்று சொல்லி வெறுக்கின்றார்கள். ஒரு நாட்டில் இன்னொரு நாட்டவன் வாழ்ந்தால் அவனை வெளிநாட்டுக்காரன்" என்று சொல்லி வெறுப்பார்கள். ஆம். அந்நியர்கள் வெறுப்புக்குள்ளாவது இயற்கையே.

அது போலவே உண்மையான கிறிஸ்தவர்கள் இந்த உலகத்தில் அந்நியர்களே. அவர்கள் வெறுக்கப்படுவதுவும், துன்புறுத்தப்படுவதும் இயற்கையே. ஆனால் எல்லா கிறிஸ்தவர்களும் உலகத்தால் வெறுக்கப்படுவதில்லை. எல்லா கிறிஸ்தவர்களும் துன்பங்களைக் காண நேரிடுவதில்லை. ஏனென்றால் ஒருவர் கிறிஸ்தவர் என்ற பெயரில் இருப்பதால் மட்டும் உலகத்திற்கு அவர் அந்நியர் ஆகிவிடுவதில்லை. அவர் உலகத்தால் வெறுக்கப்படுவதுமில்லை.

ஒருவர் எந்த அளவிற்கு கிறிஸ்துவைப் போல வாழ்வதற்கு தன்னை ஈடுபடுத்துகின்றாரோ, அந்த அளவிற்குதான் அவரிடம்

நீதியின் சாயலும், பரிசுத்தத்தின் வெளிச்சமும் வரும். அந்த அளவிற்குதான் உலகம் அவரை அந்நியராக அடையாளங் கண்டு, வெறுப்பையும், விரோதத்தையும் காண்பிக்கத் துவங்கும்.

அநேகர் தங்களை ஆவிக்குரியவர்கள் என்று அழைத்துக் கொண்டாலும், தங்களை உலக நிலைகளிலிருந்து பிரித்துக் கொள்வதில்லை. அவர்கள் உலகத்திற்கேற்றபடி தங்களை வளைத்து, நெளித்து செயல்படுவார்கள். எனவே உலகம் அவர்களை வெறுப்பதற்கான சூழ்நிலை வருவதில்லை. ஒருவர் உலகத்தால் அதிகமாக நேசிக்கப்படுவாரென்றால், அவரிடம் நீதியின் சாயலை உலகம் இன்னும் காணவில்லை என்பதே பொருள்.

இயேசுவை உலகம் வெறுத்தது. ஏனென்றால் அவர் உலகத்தோடு ஒத்து ஓடாமல் எதிராக ஓடினார். அவருடைய பேச்சு, செயல், வாழ்க்கை, கொள்கை, நோக்கம் யாவுமே உலகத்திற்கு இசைந்து நிற்காமல், முரண்பாடாக இருந்தது. எனவே அவர் மிகவும் எதிர்க்கப்பட்டார். பலருடைய கோபங்களுக்கும், எரிச்சல்களுக்கும் ஆளானார்.

பம்பாய் பட்டிணத்தில் தமிழர் ஒருவர் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு சென்று குடியேறினார். துவக்கத்திலிருந்தே அவர் தமிழர்களை விட, அங்கு வாழும் மாராட்டியர்களோடு தான் அதிக தொடர்பு வைத்துப் பழகினார். அவர் மாராட்டியர்களைப் போலத்தான் பேசுவார். யாரிடமும் தமிழில் பேசமாட்டார். ஒரு முறை அவர் தங்கியிருந்தப் பகுதியில் மராட்டியர்களுக்கும், தமிழர்களுக்கும் தகராறு ஏற்பட்டு எல்லா தமிழர்களின் வீடுகளும் உடைக்கப்பட்டன. ஆனால் அந்த தமிழ் பேசாத தமிழரின் வீட்டை யாரும் தாக்கவில்லை. காரணம் என்ன? அவர் மாராட்டியர்களோடு அதிகமாக பிணைந்து மராட்டியர் போலவே வாழ்ந்தார். எனவே யாரும் அவரை எதிர்க்க காரணம் ஏற்படவில்லை.

ஆம். நாம் உண்மையான சத்தியத்தின்படி வாழ்ந்து கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்தில் பெருகினால்தான், நாம் உலகத்தின் பார்வையில் வெறுப்புக்குரியவர்களாவோம். நாம் உலகப் பிரகார மக்களைப் போல எல்லா நிலைகளிலும் அவர்களுக்கேற்ப வாழும் போது நம்மிடம் உலகத்தின் சாயல்தான் தெரியும். நீதியினிமித்தம் துன்பப்படுகிற வேளைகள் நமக்கு வராது.

அதே நேரத்தில் நாம் கிறிஸ்தவர்களாயிருப்பதினாலோ, அல்லது கிறிஸ்தவ ஊழியர்களாயிருப்பதினாலோ நமக்கு நேரிடுகின்ற துன்பங்கள், பிறரால் வரும் உபத்திரவங்கள் யாவும் கிறிஸ்துவினிமித்தம் ஏற்பட்டது என்றோ அல்லது நீதியினிமித்தம் ஏற்பட்டது என்றோ கூறிவிட முடியாது. "நீதியினிமித்தம் துன்பப்படுதல்" என்றால் ஒரு மனிதன் தேவனுக்கு உகந்த வழிகளில் நடக்கிறதின் விளைவாக ஏற்பட்ட துன்பங்களை அனுபவித்தல் என்பதாகும்.

இந்தத் துன்பம் பாக்கியமானதல்ல

எரேமியா, யோவான் ஸ்நானன் போன்றோர் கர்த்தருடைய சத்தியத்திற்காக உறுதியாக நின்றதின் விளைவாக அவர்கள் ராஜாக்களாலும், மதத்தலைவர்களாலும் வெறுக்கப்பட்டு துன்பப்படுத்தப்பட்டார்கள். ஆனால் ஆன்மீக வட்டாரத்தில் இருப்பவர்களுக்கு வருகின்ற கஷ்டங்கள் யாவும் சத்தியத்திற்காக நின்றதின் விளைவாக ஏற்பட்டது என்று சொல்ல முடியாது.

யூதர்களின் வரலாற்றைப் பார்க்கும் போது அவர்கள் தங்களின் மதப்பக்திக்காகவும், மத வைராக்கியங்களுக்காகவும் பலமுறை கடுமையாக உபத்திரவப்படுத்தப்பட்டார்கள். ஆனாலும் உண்மையான மதபக்தியின் விளைவாக அது ஏற்படாமல், தவறான மதவெறியின் விளைவாகவே ஏற்பட்டது. மத வைராக்கியம் ஏற்படுத்திய வெறியின் விளைவாக அவர்கள் துன்பப்பட நேர்ந்ததேயன்றி, உண்மையான தேவனுடைய வழிகளில் நடந்ததின் விளைவாக ஏற்படவில்லை.

ஒரு கிராமத்தில் உள்ள கிறிஸ்தவர்களுக்கும், இந்துக்களுக்கு இடையே கசப்பு ஏற்பட்டு பெரிய பகையாக மாறியது. ஒருவரையொருவர் கோபமூட்டும் விதமாக இரண்டு கோஷ்டிகளும் செயல்பட்டு தங்களின் மதவெறிகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். இரு கோஷ்டிகளுமே ஒரு போதும் விட்டுக் கொடுக்கவில்லை. இறுதியில் பெரிய கோஷ்டி மோதல் ஏற்பட்டு பல கிறிஸ்தவர்கள் தாக்கப்பட்டு, பல கிறிஸ்தவர்களுடைய வீடுகள் தீ வைக்கப்பட்டன.

இங்கே கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்ட துன்பம் கர்த்தருடைய வழிகளில் நடந்ததின் விளைவாக ஏற்பட்டதல்ல. சாந்தகுணம், சமாதானம் செய்தல் போன்ற கிறிஸ்தவ நற்பண்புகளை வெளிப்படுத்தாமல் மற்றவர்களைப் போல கசப்பையும் வெறுப்பையும் கக்கிய அவர்களின் துன்பம் கிறிஸ்துவினிமித்தம் ஏற்பட்ட துன்பமல்ல.

பல கிறிஸ்தவ விசுவாசிகள் உண்மையான கிறிஸ்தவப் பண்புகளின்படி வாழ்ந்து சாட்சியாக வாழ்வதில்லை. இவர்களின் நற்பண்புகளற்ற வாழ்க்கையினிமித்தம் தாங்கள் பாடுபடுவதாக எடுத்துக் கொண்டு போலியான ஆறுதலை பெற்றுக் கொள்ள நாடுவார்கள்.

குறிப்பிட்ட ஒரு பாஸ்டர் பண விஷயங்களில் உண்மையில்லாதவர். பண ஆசையின் விளைவாக சத்தியத்திற்கு புறம்பாக செயல்படுவார். அவருடைய உண்மையின்மையின் விளைவாக அவருக்கு பிறரால் பல கஷ்டங்கள் வந்தது. அவரைக் குறித்து பலர் மோசமாகப் பேசினார்கள். அடிக்கடி அவருக்கு பிறரால் பிரச்சனைகள் ஏற்பட்டது. ஆனால் அவரோ தான் கிறிஸ்துவுக்காக சிலுவை சுமப்பதாகவும், தான் கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்வதால் உலகம் தன்னை துன்பப்படுத்துகிறது என்றும் சொல்லி தன்னை தேற்றிக் கொள்வார்.

ஆம். நீதியினிமித்தம் வாழ்கின்றவர்களுக்கு மட்டுமல்ல. அநீதியாக வாழ்கின்றவர்களுக்கும் பல துன்பங்கள் நேரிடும். ஆனால் அந்த துன்பம் அவர்களுக்கு பாக்கியமானது அல்ல. அவர்களுக்கு பரலோகத்தில் மிகுதியான பலன் ஒன்றும் இல்லை. எனவே நாம் பிறரால் துன்பங்களையோ, தொல்லைகளையோ சந்திக்க நேரிடும் போது, உண்மையில் அவைகள் நாம் கிறிஸ்துவின் பாதையில் செவ்வையாக நடந்ததின் விளைவாக வந்ததா அல்லது நம்முடைய தவறான அணுகுமுறைகளினாலும், செவ்வையற்ற நடத்தைகளினாலும் வந்ததா என்பதை கவனிக்கத் தவறக்கூடாது.

வேதநியதிகளின்படி வாழ்கின்றோம் என்ற நிச்சயம் இல்லாத சூழ்நிலையில் நாம் காண நேரிடும் உபத்திரவங்களை, கிறிஸ்துவினிமித்தம் வந்த துன்பங்களாக எண்ணுவதால், நமக்கு எந்த பிரயோஜனமும் வராது. நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும் போது, பொறுமையாய் சகித்தால் அதனால் என்ன கீர்த்தியுண்டு? என்று பேதுரு எழுதியதை வேதத்தில் பார்க்கின்றோம். (1 பேதுரு – 2:20)

உண்மையின் பாதையில் உபத்திரவம்

இந்நாட்களில் கிறிஸ்தவம் என்றால் செழிப்பான ஒரு வாழ்க்கைக்கான அழைப்பு என்ற நிலையிலேயே அநேகரால் புரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றது. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டால் பிரச்சனைகளிலிருந்து விடுபட்டு, வளமான ஒரு வாழ்க்கையைக் காணலாம் என்றே பெரும்பாலானவர்களால் எண்ணப்படுகிறது.

சுவிசேஷம் அறிவித்தல் என்பது பாவிகளை பரிசுத்தர்களாக்குவதற்காக தேவன் விடும் அழைப்பு என்ற நிலை மாறி துன்பப்படுகின்றவர்களை எல்லா செல்வங்களாலும் ஆசீர்வதிப்பதற்கான ஒரு தேவ அழைப்பு என்ற நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இன்று பெரும்பாலான சுவிசேஷகர்கள் உங்கள் பாவங்களிலிருந்து விடுதலை அடைந்திட இயேசுவிடம் வாருங்கள் என்று மக்களை அழைக்காமல் உங்கள் கஷ்டங்களிலிருந்து விடுதலை அடைந்து, சுகமான வாழ்க்கை காண கர்த்தரிடம் வாருங்கள் என்றே அழைக்கிறார்கள். ஏனென்றால் மக்கள் தங்கள் கஷ்டங்களை நினைத்துதான் வருந்திக் கொண்டிருக்கிறார்களேயன்றி, பாவங்களை நினைத்து அதற்காக வருந்திக் கொண்டிருக்கவில்லை. எனவே கஷ்டங்களை முன்னிலைப்படுத்தி மக்களை அழைத்தால்தான், அவர்கள் இயேசுவிடம் வருவார்கள் என்று சுவிசேஷகர்கள் எண்ணுகின்றனர்.

இன்று பெரும்பாலான கிறிஸ்தவ மக்கள் தாங்கள் சத்தியத்திற்காக சில சிரமங்களை சந்திக்க நேரிடலாம் என்ற விழிப்புணர்வுடன் இல்லை. தேவ பக்தியாய் வாழ விரும்புகின்றவர்களுக்கு உபத்திரவங்கள் வருவதற்கான வாய்ப்பு உண்டு என்ற உணர்வுகள் அவர்களிடம் இல்லை. அவர்கள் தேவபக்தியாய் வாழ்ந்தால் பொருளாதார ஆசீர்வாதங்கள் பெருகும் என்ற விசுவாச நிலையில் மட்டுமே வேரூன்றியிருக்கின்றார்கள். பரிசுத்தமான வாழ்க்கைப் பாதை பிரச்சனைகளைக் கொண்டு வருவதற்கான ஒரு பாதை தான் என்பதை அவர்கள் நினைக்கவில்லை. ஏனென்றால் அவர்கள் வளவாழ்விற்கான ஒரு சுவிசேஷத்தைத்தான் கேட்டு அவ்விதமான சிந்தனைகளோடேயே வளர்ந்து கொண்டிருக்கின்றார்கள். உண்மையின் பாதையிலே, கஷ்டங்களும், சோதனைகளும் வருகின்ற போது "கர்த்தர் ஏன் இதை அனுமதிக்கின்றார்" என்ற கேள்விதான் அவர்களுக்குள் எழுகின்றது.

இந்த *உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு* என்று இயேசு தம்முடைய சீடர்களுக்கு அறிவித்து அதற்கேற்ப தயாராயிருக்கும்படி அவர்களை ஆயத்தப்படுத்தினார். (யோவான் – 16:33) நாம் அநேகம் உபத்திரவங்கள் வழியாய் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க வேண்டும் என்று பவுல் அப்போஸ்தலன் கூறினான். (அப் – 14:22) ஆம். தேவனுடைய

ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கும்படி செல்லுகின்றவர்கள், அந்த பாதையில் பாடுகளையும், உபத்திரவங்களையும் சந்திக்க வேண்டிய தேவைகள் ஏற்படும் என்பதை இயேசுவை ஏற்றுக் கொள்கின்றவர்கள் அறிந்திருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினர்.

ஆனால் இன்றைய கிறிஸ்தவ போதனைகளும், பிரசங்கங்களும் வாதை உன் கூடாரத்தை அணுகாது, தீங்கு உன்னை தொடராது, இனி நீ தீங்கைக் காணாதிருப்பாய் என்ற அடிப்படையில் மட்டுமே உள்ளது. எனவேதான் இயேசுவை ஏற்றுக் கொண்டு விசுவாச வாழ்க்கைக்குள் வருகின்ற அனேகர், சோதனைகள் வர நேரிடும் போது சோர்ந்து போய் விசுவாசத்தை விட்டு விலகுகின்றனர். இன்று எத்தனையோ பக்தியான கிறிஸ்தவர்கள் தங்களுக்கு கஷ்டங்கள் வரும் போதும், தோல்விகள் தொடரும் போதும், "அக்கிரமக்காரனுக்கும், அநியாயம் செய்கின்றவர்களுக்கும் எல்லாம் நன்றாய் நடக்கின்றது. பக்தியாய் வாழ்கின்ற எனக்குதான் எங்கு போனாலும் ஏமாற்றம், கஷ்டம்" என்று முறு முறுத்து விசுவாச வாழ்க்கையில் விரக்தியடைந்து போகின்றார்கள். ஏனென்றால் பக்தியான வாழ்விற்கு நல்லவைகளே பதிலாக இருக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்கின்றனர். காரணம் என்ன? அவர்கள் அவ்விதமாகவே போதிக்கப்பட்டிருக்கின்றனர்.

சுவிசேஷம் அறிவிக்கும் போது மக்களைப் பார்த்து இயேசுவை ஏற்றுக் கொண்டு கஷ்டங்களையும் உபத்திரவங்களையும் அனுபவிக்க வாருங்கள் என்று அழைக்க முடியாது. அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு வாழ்க்கையை விட, ஆசீர்வாதமான ஒரு வாழ்க்கையை முன் வைத்துதான் சுவிசேஷம் அறிவிக்க முடியும். ஆனால் ஆசீர்வாதத்தின் பாதையில் கற்களும், முட்களும் உண்டு என்ற உண்மை சொல்லப்பட வேண்டும். தொடர்ந்து சத்தியத்தின் பாதையில் துன்பங்களும், உபத்திரவங்களும் வருவதற்கான வாய்ப்புகளைக் கூறி அதற்காக அவர்களை ஆயத்தம் செய்ய வேண்டியது அவசியம்.

இந்த கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கின்ற இந்த நாட்களில் இந்தியாவில் ஆங்காங்கே கிறிஸ்தவர்கள் மேல் உபத்திரவத்தின் காற்று லேசாக வீச ஆரம்பித்துள்ளதை உணர முடிகின்றது. கடந்த ஒன்றிரண்டு வருடங்களாக பல்வேறு பகுதிகளில் கிறிஸ்தவ ஊழியர்கள் கொல்லப்படுதல், ஆலயங்கள் உடைக்கப்படுதல், கிறிஸ்தவர்கள்

மிரட்டப்படுதல், ஊழியங்கள் தடுக்கப்படுதல்கள் போன்ற அராஜக காரியங்கள் தொடர்கதையாகிக் கொண்டேயிருக்கின்றன. நிலமைகளை உற்று கவனிக்கும் போது, இந்திய கிறிஸ்தவர்கள் உபத்திரவங்களின் பெருங்காற்றுகளை வரப்போகிற நாட்களில் அதிகமாக சந்திக்க வேண்டிய கட்டாயங்கள் பெருகியிருப்பதை உணர முடிகின்றது.

ஆனால் அப்படி ஒரு சூழ்நிலை வரும் போது இந்திய கிறிஸ்தவர்கள் அதனை சந்திப்பதற்கு எந்த அளவிற்கு ஆயத்தமாக யிருக்கின்றார்கள்? என்பது ஒரு பெரிய கேள்விக்குறியாக உள்ளது. ஏனென்றால் இன்று எங்கு நோக்கினாலும் அது சுவிசேஷ பிரசங்கமாயிருந்தாலும் சரி, சபைகளில் செய்யப்படும் விசுவாசிகளுக்கான பிரசங்கமாயிருந்தாலும் சரி பொருளாதார ஆசீர்வாதங்களைத்தான் அவைகள் பெரும்பாலும் அவர்கள் கிறிஸ்துவால் வரும் உலகப்பிரகார ஆசீர்வாத நிலைகளை மட்டுமே மக்களுக்கு சொல்லிக் கொண்டிருக்கின்றனர். அற்புதங்களும், அதிசயங்களும்தான் கிறிஸ்தவத்தின் முழுச்செய்தி போல் இன்று பிரசங்கிக்கப்பட்டு வருகின்றன.

இன்றும் உபத்திரவங்கள் வராமல் தேவன் தடுக்க வேண்டும் என்று ஜெபிக்கும்படிதான் விசுவாசிகள் ஊக்குவிக்கப் படுகின்றார்களேயன்றி, அவைகள் வந்தால் சந்திப்பதற்கு தேவையான ஆயத்தங்களோடிருக்கும்படியான ஊக்குவிப்புகள் இல்லை. சபை என்பது உபத்திரவங்கள் வராமல் தடுப்பதற்கான ஜெபக்கூட்டங்களை மட்டும் நடத்திக் கொண்டிராமல் கிறிஸ்துவின் பாதையில் உபத்திரவங்கள் புதிதான விஷயங்கள் அல்ல என்பதை விசுவாசிகளுக்கு உணர்த்தி. அவைகளை பொறுமையோடும், விசுவாசத்தோடும் சந்திப்பதற்கு தேவையான ஆயத்தப்படுத்தும் போதனைகளைக் கொடுக்க தீவிரம் காட்ட வேண்டும்.

ஒரு நாடு பிற நாட்டவர் படையெடுத்து வராமல் தடுப்பதற்கான முயற்சிகளை மட்டும் மேற்கொள்ளாமல், அப்படி படையெடுத்து வந்தால் அதனை தைரியமாக எதிர்கொள்ளும் ஆயத்தங்களையும் செய்ய வேண்டும். அது போன்ற ஆயத்த நிலைகள் சபைகளுக்கு மிகவும் அவசியமாக உள்ளது.

தெசலோனிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்கள் பல வித உபத்திரவங்களை சந்திக்க நேர்ந்த போது, பவுல் அப்போஸ்தலன் அவர்களுக்கு இப்படிப்பட்ட உபத்திரவங்களை *சகிக்க, நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோமென்று நீங்கள் அறிந்திருக்கின்றீர்களே,* என்று கடிதம் எழுதி நினைப்பூட்டினான். (1 தெச – 3:3) அப்படியானால் உபத்திரவங்கள் கிறிஸ்துவின் பாதையில் வரும் என்ற விஷயங்கள் அவர்களுக்கு ஏற்கெனவே நன்கு சொல்லப்பட்டிருக்கின்றன. எனவே தான் பவுல் அப்போஸ்தலன், *நமக்கு உபத்திரவம் வருமென்று, நாங்கள் உங்களிடத்திலிருந்த போது, உங்களுக்கு முன்னறிவித்தோம்* என்று எழுதுகிறான். (1 தெச – 3:4)

ஆம். அன்றைய சபை மேய்ப்பர்கள் விசுவாசிகளுக்கு ஆசீர்வாதங்களின் பக்கங்களை மட்டும் காண்பித்து அவர்களை பலவீன விசுவாசிகளாக மாற்றாமல் தேவனுடையப் பாதையில் வர நேரிடுகின்ற உபத்திரவங்களைக் குறித்து முன்னறிவித்து, அத்தகைய சூழ்நிலைகளை சந்திக்க தயாராயிருக்கத்தக்கதான ஆயத்த போதனைகளை அவர்களுக்கு அளித்தனர். எனவேதான் அவர்கள் சோதனைகளும், பாடுகளும் வந்த போதும், அதனைப் பார்த்து ஆச்சர்யப்படாமல், தங்களுக்கு அளிக்கப்பட்ட விசுவாச ஆயத்தங்களின் பின்பலத்தோடு தைரியமாக நின்றார்கள். இரத்த சாட்சிகளாக மரிக்க நேர்ந்த போதும் பின் வாங்காமல், விசுவாசத்தில் உறுதியாக நின்றார்கள். இன்று சபைகளுக்கு நடுவில் இவ்வித ஆயத்தங்கள்தான் உடனடி தேவைகளாக உள்ளன.

துன்பப்படுவதை அனுமதிப்பது ஏன்?

நீதியினிமித்தம் துன்பப்படுதல் என்றால், கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் துன்பப்படுதல் என்று அர்த்தம். ஏனென்றால் சகல நீதிகளின் மொத்த நிறைவுதான் இயேசு கிறிஸ்து. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் துன்பப்படுதல் என்றால், அவருடைய பெயரை நாம் உபயோகிப்பதால் வருகிற துன்பம் என்று மட்டும் எண்ணிவிடக் கூடாது. இயேசு கிறிஸ்து நமக்கு காட்டிய உயர்ந்த வாழ்க்கையை வாழ முன்வந்ததின் விளைவாக நாம் அடைய நேரிடுகிற துன்பமே கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் துன்பப்படுதல் ஆகும். அந்த உயர்ந்த வாழ்க்கையின் ஒரு பகுதிதான் அவருடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்துதல்.

கிறிஸ்து காட்டிய உயர்ந்த வாழ்க்கை இந்த உலகத்திற்கு உகந்ததல்ல. அது இந்த உலகத்திற்கு முரணான ஒன்று. அதனை இந்த உலகம் விரும்பி ஏற்க முடியாது. உலகத்தின் உணர்வுகளுக்கும், கொள்கைகளுக்கும் எதிரான அந்த வாழ்க்கையைப் பார்த்து உலகம் பகைக்கவே செய்யும். ஏனென்றால் அது உலகத்தை பாதிக்கும் ஒரு வாழ்க்கை. எனவே அது கோபத்தால் பொங்கியெழுந்து அவ்வித வாழ்க்கை வாழ்கின்றவர்களை துன்பப்படுத்துவது இயற்கை.

உன்னதமான, உயர்வான தெய்வீக நியாயங்களின்படி வாழ்கின்ற ஒருவருக்கு எதிராக உலகம் பாய்ந்து வந்து பல துன்பங்களைத் தரும்போது தேவன் அதைத் தடுக்காமல் இருப்பது ஏன்? அல்லது அதனை தடுப்பதற்கு தாமதிப்பது ஏன்? சத்தியத்தை சார்ந்து வாழ மனதாயிருக்கின்றவர்களுக்கு எதிராக எழும்பும் உலகத்தின் சக்திகளை தேவன் சிலகாலம் அனுமதிப்பது ஏன்?

வேதம் அதற்கும் பதில் சொல்கின்றது. சத்தியத்திற்காக வாழ்கின்றவர்கள் *துன்பப்பட வேண்டியது அவசியம்* என்று தேவன் நினைக்கின்றாராம். அழிந்து போகும் பொன் அக்கினியால் சோதிக்கப்பட அனுமதிக்கப்படுவது போல், அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்ற விசுவாசம் துன்பங்களினால் சோதிக்கப்பட வேண்டியது அவசியம் என்பதால் தேவன் அதனை அனுமதிக்கின்றார். (1 பேதுரு – 1:6,7)

தேவனுடைய நாமம் மகிமைப்படுவதற்கேதுவான சில பிரயோஜனங்கள் இல்லாமல், தேவன் துன்பங்களை அனுமதிக்க வாய்ப்பில்லை. உண்மையின்படி வாழ விரும்புகின்றவர்களுக்கு ஏற்படுகின்ற துன்பங்களால் ஏற்படும் நலமான விஷயங்களை இங்கு பார்ப்போம்.

துன்பத்திலும் சந்தோஷம்

உலகக் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது, ஒரு மனிதன் நீதி, நியாயங்களுக்கு உட்பட்டு வாழும் போது, அநியாயமாக துன்புறுத்தப்பட்டால் அது மிகுந்த வருத்தத்திற்குரிய விஷயமே. அது அந்த மனிதனின் மனநிலையில் மிகுந்த சோர்வையும், துக்கத்தையும் கொண்டுவரும். ஆனால் இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காக, ஒரு மனிதன் தூய்மையான ஒரு வாழ்க்கையை வாழும் போது, அதனால்

துன்பங்கள் வருகின்றதென்றல், அந்த துக்கங்கள் சில நோவுகளை ஏற்படுத்தினால் கூட, அங்கே அந்த மனிதன் தன் ஆத்துமாவில் மிகப்பெரிய ஒரு சந்தோஷத்தை அனுபவிக்கின்றான் என்பது உண்மை.

சுத்த மனசாட்சியோடு கிறிஸ்துவுக்காக சத்தியத்தைச் சார்ந்து வாழும் போது, ஏளனம், அவமானம், இழிவு, நஷ்டம், அநியாயம் போன்ற நோவுக்குரியவைகள் வருகிறதென்றால் அவன் இதயத்தில் உடைகின்றான் என்பது உண்மை. அந்த அநீதியை எண்ணி மனம் உடைந்து போய், கண்கள் கண்ணீரை சிந்தினாலும் கூட, அந்த உடைக்கப்பட்ட உள்ளத்தின் ஆழத்தில் இனம் புரியாத ஒரு தெய்வீக பரவச நிலையையும், ஆழ்ந்த உணர்வுகளில் ஒரு ஆழமான மகிழ்ச்சியையும் அவன் காண்கிறான் என்பது உண்மை. இது அவ்விதமான பாதையில் கடந்து செல்ல நேரிடுகின்றவர்களால் மட்டும் புரிந்துக் கொள்ள முடிகின்ற ஒரு இறை ரகசியம் ஆகும்.

"இந்த துன்பம், இந்த உபத்திரவம், இந்த அவமானம், என்னுடைய தவறுகளாலோ, தகாத வித வாழ்க்கையாலோ வந்ததல்ல. இவைகள் கிறிஸ்துவுக்காக நான் உண்மையின்படி வாழ வந்ததின் விளைவாக எனக்கு ஏற்பட்டவை. இந்தக் காயங்கள் இயேசுவுக்காக சுத்த மனசாட்சியோடு வாழ துணிந்ததற்காக உலகம் தந்த தண்டனை. ஆம். நான் சத்தியத்திற்காக நின்றபடியால் இந்த வேதனைகள் எனக்கு வந்திருக்கிறது" இவ்விதமாக அந்த மனிதன் தனக்குள் உணரும் போது, அவன் கஷ்டங்களுக்கு நடுவிலும் ஒரு விசேஷமான, உலகத்தால் புரிந்து கொள்ள இயலாத மனநிறைவையும், தெய்வீக ஆனந்தத்தையும் தனக்குள் காண்கின்றான்.

ஒருமுறை இயேசுவின் சீடர்களை யூத மதச்சங்கத்தினர் அநியாயமாக அடித்து, அவமானப்படுத்தி, உடைகளையும் கிழித்து, கண்டித்து அனுப்பிவைத்தனர். அவர்கள் அங்கே அடிக்கப் படுவதற்கேதுவாகவோ, அவமானப்படுவதற்கேதுவாகவோ எந்தத் தவறையும் செய்திருக்கவில்லை. அவர்கள் அடைந்த வேதனையும், அவமானமும் கிறிஸ்துவுக்காக உறுதியாக உண்மைகளைப் பேசியதின் விளைவாக ஏற்பட்டவை. உண்மைகளை உள்ளத்திற்குள்ளேயே அடக்கி வைத்துக் கொள்ளாமல், வெளிப்படுத்தியதற்காகவே அவர்கள் துன்பப்படுத்தப்பட்டனர். ஆனாலும் அவர்கள் அதனை மிகப்பெரிய அவமானமாக எண்ணி சோர்ந்து போகவில்லை.

மாறாக, இயேசுவின் நாமத்திற்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால் அவர்கள் சந்தோஷமாய் வெளியே வந்தார்கள். (அப் – 5:41) ஆம். கிறிஸ்துவுக்காக பாடுகளை அனுபவிப்பதிலும் அவமானங்களை சகிப்பதிலும் அவர்கள் விசேஷமான ஒரு மனதிருப்தியையும், மகிழ்ச்சியையும் அடைந்தார்கள்.

ஒரு முறை பாண்டிய மண்ணில் ஒரு யுத்தம் நடைபெற்ற போது, பாண்டிய மன்னனை குறி வைத்து எறியப்பட்ட ஒரு ஈட்டியை, தடுக்க முயற்சித்தான் அவனருகில் நின்ற போர்ச்சேவகன் ஒருவன். ஆனால் அங்கே ஈட்டி அவனுடைய மார்புக்குள் பாய்ந்தது. மார்பை துளைத்து நிற்கும் ஈட்டியைப் பிடித்துக் கொண்டே, அந்த வீரன் கம்பீரமாக சிரித்தானாம். வலியால் துடிக்க வேண்டிய அவன், உற்சாகமாக சிரித்த காட்சி எல்லாரையும் ஆச்சர்யப்படுத்தியது. அவனோ "என் மன்னனுடைய மார்பை துளைக்க வந்த ஈட்டியை என் மார்பில் ஏற்றுக் கொண்டது. எனக்கு எவ்வளவு பெரிய பாக்கியம். அதற்காக நான் சிரிக்காமல் அழுவேனோ" என்றானாம். வேதனையின் நடுவிலும்.

ஆம். இந்த உலகம் உண்மைகளைக் கண்டு வெகுண்டு கிறிஸ்துவைத்தான் தாக்க முற்படுகிறது. அந்த தாக்குதல்கள்தான் கிறிஸ்துவுக்காக நிற்பவன் மேல் வருகிறது. எனவே கிறிஸ்துவின் உண்மைக்காக வாழ்கின்றதால், வருகின்ற துன்பத்தைக் கண்டு அவன் மனதிற்குள் பூரிக்கின்றனேயன்றி, விரக்தியால் புலம்புவதில்லை. அன்பிற்குரிய தலைவனுக்காக துயரடைவதை பெருமையாக எண்ணும் தொண்டனைப் போல் தான் கிறிஸ்துவுக்காக பாடனுபவிப்பதினால் மனநிறைவடைந்து மகிழ்கின்றான்.

புடமிடப்படுதல்

அக்கினியில் ஒரு மரக்கட்டை விழுந்தால் கொஞ்ச நேரத்தில் அது எரிந்து சாம்பலாகிப் போகும். ஆனால் அதே அக்கினியில் தங்கம் விழுந்தால் அது அழிவதற்குப் பதிலாக, ஒரு புதிய தரத்தைப் பெறும். தங்கத்தின் தரம் உயர்வதற்காகத்தான் அது அக்கினியை கடக்க அனுமதிக்கின்றனர். அதுபோலவே உலக மனிதனை துன்பங்கள் அழிந்து போகச் செய்யும். ஆனால் உண்மைக்காக வாழ்கின்றவனையோ அது அழிக்காமல், அவனுடைய தரம் பெருகவே அது வழிவகுக்கும்.

ஆதித்திருச்சபை காலங்களில் பரிசுத்தத்தின் பாதையில் நடந்த சபையானது மிகுந்த உபத்திரவங்களைச் சந்திக்க நேர்ந்தது. ஆனாலும் சபை அதனால் அழியவில்லை. அதற்குப் பதிலாக அநேகர் நடுவில் அதனுடைய தரம் உயர்ந்து, மகிமையாய் பிரகாசிக்கவே காரணமானது. கிறிஸ்துவுக்காக உண்மையின் பாதையில் நடப்பது என்பது ஒரு மனிதன் சாதாரண நிலையிலிருந்து தங்கத்தின் நிலையை அடைந்து விட்டதற்கு அடையாளமாகும். ஆனாலும் அது புடமிடப்பட்டு அதனுடைய அழகு அநேகருடையக் கண்களுக்கு தெரியும் விதத்தில் தரமேற்றப் படவேண்டியது தேவனுடையப் பாதையில் தேவையாயிருக்கிறது. யோபு உபத்திரவங்களின் நடுவில் *"அவர் என்னை சோதித்த பின்பு நான் பொன்னாக விளங்குவேன்"* என்றான். (யோபு – 23:10) அது போலவே கிறிஸ்துவும் நம்மை உபத்திரவத்தின் பாதையில் நடக்க வைத்து பொன்னாக விளங்கச் செய்கின்றார்.

நீதி, நேர்மை, நியாயம், மன உண்மை, ஆகியவைகளை மனதார மதித்து, அதன் மூலம் தேவனை பிரியப்படுத்த விரும்புகின்ற மனிதன், அந்த பாதையில் தனக்கு கஷ்டங்களும், நஷ்டங்களும் நேரிட்டாலும் கூட மனஞ்சலித்து பின் வாங்காமல், புதிய தெய்வீக வைராக்கியத்தோடு அவைகளில் மேலும் வளரவே அவன் விரும்புவான். அத்தகைய மனிதன் மேல் விழுகின்ற அடிகளெல்லாம் அவனை அழகுபடுத்துமேயன்றி, அவனை அழித்துப் போடாது. உபத்திரவங்கள் அவனிடமிருந்த பல நற்பண்புகளை அகற்றுவதற்கு பதிலாக, புதிய பல மேன்மையான பண்புகளை உருவாக்கவே செய்யும். எனவேதான் *சோதனைகளை சகிக்கின்ற மனுஷன் பாக்கியவான்* என்று வேதம் சொல்லுகிறது. ஏனென்றால் அவனுடைய உத்தம நிலையை உயரப் பண்ணுவதற்கு அவை அவசியமாயிருக்கின்றது. (யாக் – 1:12)

தேவ நியாயங்களுக்கிசைந்து, உண்மை, நேர்மை நிலைகளில் சிறந்து விளங்கிய யோசேப்பிற்கு அதனால் பல உபத்திரவங்கள் வந்த போதிலும், அவைகள் அவனுடைய உத்தமத்தின் அழகை பல மடங்கு பெருகச் செய்ததேயன்றி, தாழ்ந்த சுபாவங்களை கடைபிடிக்கும்படி அவனை கட்டாயப்படுத்த முடியவில்லை. ஒவ்வொரு சோதனையும் மேலும், மேலும் அவன் சிறந்தவன் என்ற நிலையை அடையவே வழி ஏற்படுத்தியது.

தாவீதின் உண்மைக்கும், உத்தமத்திற்கும் உயிரை மதியாத விசுவாசத்திற்கும், சவுலிடமிருந்து கிடைத்த பரிசுகள் கொடுமையும், குரோதமுமே. சவுலுக்கு அவன் நன்மைகள் செய்ய, செய்ய சவுல் அவனுக்கு தீமைகளையே பதிலாகச் செய்தான். ஆனாலும் தாவீது அதற்காக தன்னுடைய குணநிலைகளில் குன்றிப் போய்விடவில்லை. அதற்கு பதிலாக அவன் உண்மை, நேர்மை, தாழ்மை, சாந்தம், தேவபக்தி ஆகிய விஷயங்களில் புடமிடப்பட்ட பொன்னாகவே பெருகிக் கொண்டிருந்தான்.

தேவ பலம் வெளிப்படுதல்

உலகத்தில் தங்களின் பலத்தையும், வலிமையையும் சார்ந்து பெருமையாகப் பேசிக் கொள்ளுகின்ற மனிதர்கள் உண்டு. ஆனால் யாரும் தங்களுடைய பலவீன நிலைகளைக் குறித்து வெளியே அறிவித்து அதனை பெருமையான விஷயங்களாக எண்ணுகின்றவர்கள் இருக்க முடியாது. ஆனால் மாபெரும் தேவ ஊழியனாகிய பவுல் தன்னிடமுள்ள பலவீன நிலைகளைக் குறித்து பெருமையாக எண்ணுகின்ற ஒரு மனிதனாக இருந்தான். அதுபோல உலகத்தில் யாருமே பிரச்சனைகளற்ற ஒரு சுகவாழ்வின் மேலேயே பிரியமாயிருப்பார்கள். ஆனால் பவுல் அப்போஸ்தலனோ சற்று வித்தியாசமானவன். தனக்கு நேரிடுகின்ற நிந்தைகள், நெருக்கங்கள், துன்பங்கள் இடுக்கண்கள் ஆகியவற்றின் மேல் அவன் மிகுந்த பிரியத்தை வைத்திருந்தான். (11 கொரி – 12:10) உண்மையிலேயே அவன் சற்று விசித்திரமான மனிதன்.

ஆனால் இந்த வித்தியாசமான ஒரு அணுகுமுறைக்கு காரணம் என்ன? ஒரு புறம் தன்னிடம் மிகுந்த பலவீனத்தை உணருகின்ற அந்த மனிதன், அடுத்த பக்கத்தில் தேவனுடைய மிகுந்த பலம் தன்னிடம் வந்து செயல்படுவதைக் கண்டான். ஒரு வேளை அவன் பலவீனத்திற்குப் பதிலாக சற்று பலமான நிலைகளிலிருந்திருந்தால், தேவனுடைய மகாபலம் தன்னிடம் செயல்படுவதை உணராமல் போயிருக்க முடியும். அவனுடைய பலவீனமே தேவனுடைய மாபெரும் வல்லமை தன்னிடம் வந்து செயல்பட காரணமாயிருந்ததால் அவன் அந்த பலவீன நிலமையை பெருமைக்குரிய விஷயமாக எடுத்துக் கொண்டான்.

நிந்தைகளும், துன்பங்களும், இடுக்கண்களும் விரும்பத்தக்க விஷயங்களாயிராவிட்டால் கூட, அவ்வித சூழ்நிலைகள் ஏற்பட்ட போது அவைகளை ஆச்சர்யகரமாக சந்திக்கும்படி தேவன் விசேஷ பலம்

அளித்தபடியினால் அவ்விதமான விஷயங்களை அவன் பெருமைக்குரிய விஷயங்காக எண்ணினான்.

நீதியினித்தம் துன்பப்படுகின்ற மனிதன் உண்மையில் பலவீனனாகி விட்ட ஒரு உணர்வை அடையாமல், தன்னிடம் புதிய ஒரு பலம் வந்திருப்பதையே உணர்ந்து உற்சாகப்படுகிறான். ஒரு முறை ஒரு வாலிப வயது ஊழியக்காரனை, இன்னொருவர் அநேகர் நடுவில் அவமானகரமாகப் பேசி முகத்தில் துப்பி, பிடித்து தள்ளிவிட்டார். தான் மிகவும் இழிவுபடுத்தப்பட்டதை அந்த ஊழியக்காரன் உணர்ந்த போதிலும் கூட, அமைதியாய் எதையும் திருப்பிச் செய்யாமல் மவுனமாக அங்கிருந்து போனார். அந்த ஊழியருக்குள் எழுந்த ஒரு ஆச்சர்யம் என்னவென்றால், அத்தனை அநாகரீகமாக நடந்து கொண்ட அந்த மனிதன் விஷயத்தில் இத்தனை பொறுமையாய் எப்படி தன்னால் இருக்க முடிந்தது என்பதாகும். தன்னிடத்தில் அந்த அளவிற்கு சகிக்கும் ஆற்றல் உண்டு என்று அதுவரை எண்ணியதில்லை.

மற்றவரின் அக்கிரமச் செயலுக்குப் பதிலாக எதையாவது செய்ய முடிந்த பலம் தனக்கிருந்தும், பொறுமையாய் இருக்கத்தக்கதாக ஒரு சாந்தத்தின் பலத்தை தனக்கு தந்தவர் இயேசு தானே என்ற உணர்வு அவருக்கு மிகுந்த மனநிறைவை அளித்தது. அங்கே தனக்கு ஏற்பட்ட நிந்தை, அவமானத்தை விட, அவைகளை பொறுமையாக சகித்துக் கொள்ளும்படி தேவன் தந்த ஆற்றல்தான் அவரை அதிகமாக பரவசப்படுத்தியது.

ஆம். கிறிஸ்துவின் பாதையில் நடந்ததின் விளைவாக துன்பங்களையும், இக்கட்டுகளையும் காண நேரிடுகின்றவன், அங்கே தன்னிடம் விசேஷமான ஒரு பலம் வந்து செயல்படுவதைக் கண்டு வித்தியாசமான ஒரு உற்சாகத்தை அடைகின்றான். இன்னல், இக்கட்டு இடையூறு, நிந்தை, அவமானம் எது வந்தாலும் அவைகளினால் கலவரமடைந்து, சோர்ந்து போவதற்கு பதிலாக, கிறிஸ்து தனக்கு எதையும் சகிக்கும் உள்ளாற்றலை தந்திருப்பதைக்கண்டு, அவன் ஆவியில் கெம்பீரிக்கின்றான்.

தாவீதை எப்படியாவது ஒழித்துக் கட்ட வேண்டும் என்று தீவிரமாக செயல்பட்டவன் சவுல். அவனை அனாதையாக்கி காடுகளில்

ஒரு கவுதாரியைப் போல அலைய வைத்தவன் அவன். ஆனால் சவுலின் அநீதியான செயல்களைக் கண்டு தாவீது மனவேதனை அடைந்த போதிலும் கூட, பழி வாங்கும் விதமாக எதையும் செய்யாமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். சுத்த மனசாட்சியுடன் செயல்பட்ட தனக்கு சவுல் இழைத்த அநீதிகளைக் கண்டு அவன் பொறுமையிழந்து போகவில்லை. சவுலைக் கொன்றுபோடும்படி தனக்கு கிடைத்த வாய்ப்புகளின் போது கூட அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு தேவனைப் பிரியப்படுத்தும் விதமாக செயல்பட்டான். ஆம். நீதியினிமித்தம் துன்பப்பட்ட அவன் தன்னுடைய பாடுகளின் போது பக்குவமாக நடந்து கொள்ளுகின்ற ஒரு மனபலத்தை தேவன் தந்திருந்ததையும் உணர்ந்தான். ஆம். நீதியின் பாதையில் வரும் துன்பங்கள் நம்மிடம் தேவன் மகிமையான ஒரு வல்லமையை வெளிப்படுத்திக் கொண்டிருப்பதை அறிந்து ஆவியில் களிகூரச் செய்கின்றது.

இந்த உலகம் ஒரு கன்னத்தில் அடிக்க வருகிறவனின் இரண்டு கன்னங்களையும் அடித்து காயப்படுத்தி தன்னை யார் என்று காண்பித்துக் கொள்ள விரும்புகிறது. ஆனால் ஆண்டவரோ, ஒரு கன்னத்தில் அடிக்கிறவனுக்கு மறு கன்னத்தையும் காண்பிக்கும் அளவிற்கு சகிப்புத் தன்மையை வெளிப்படுத்தி நம்மை யார் என்பதைக் காண்பிக்க கூறியுள்ளார். நம்முடைய உண்மையும், நேர்மையும் நிறைந்த வாழ்க்கைப் பாதைக்காக நாம் பகைக்கப்படும் போதும், சத்தியத்திற்காக பாடுபட நேரிடும் போதும், பொறுமை, தாழ்மை, சாந்தகுணம் ஆகியவற்றை வெளிப்படுத்தி, "நாங்கள் தேவனுக்குரியவர்கள்" என்பதை காண்பிப்பதே தேவனுக்கு பிரியமாக உள்ளது. அதுவே மிகப்பெரிய பலத்தின் வெளிப்பாடு என்பது தேவனுடையப் பார்வை.

ஒருவன் அநியாயமாக பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாக சகித்தால் அதுவே பிரீதியாயிருக்கும் என்று பேதுரு கூறுகின்றான். (1 பேதுரு – 2:19) உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக என்று தேவ மனிதனாகிய பவுல் பிலிப்பிய சபைக்கு எழுதியதை வேதத்தில் காண்கின்றோம். (பிலி – 4:5)

மற்றவர்களின் அக்கிரமமான அநீதியின் செயல்களுக்கு பதிலுக்கு பதில் செய்ய விரும்பாமல், பொறுத்துக் கொண்டும், சகித்துக் கொண்டும் செயல்படுவதின் வாயிலாகவே தேவன் தம்முடைய மகிமையை வெளிப்படுத்துகின்றார். அதற்காகவே தம்மை உண்மையாய் பின்பற்றுகின்றவர்களுக்கு பாடுகளின் நடுவிலும் மிகுந்த பலத்தை அருளி, அவர்களின் துன்பத்தில் கூட ஒரு ஆவிக்குரிய இன்பத்தை உணர வைக்கின்றார்.

நம்பிக்கையை பலப்படுத்துகிறது

ஊழியத்தின் துவக்க நிலையில் இருந்த ஒரு ஊழியர் ஒரு கால கட்டத்தில் பலவிதமான மனக்கஷ்டங்களை சந்திக்க நேர்ந்தது. அவருக்கெதிராக ஒரு சிலர் அவதூறான சில காரியங்களைப் பேசியதால், அவருக்கு மிகவும் ஆதரவாயிருந்த பலர் கூட அதனை உண்மையென நம்பி, அவர் மேல் வெறுப்பைக் காட்டத் துவங்கினார்கள். அவரிடம் வந்து பேசுகின்றவர்கள் (அ) தைரியப்படும் விதமாகவும், சோர்ந்து போகும் விதமாகவும் பேசி தளர்ந்து போகும் படி செய்வார்கள். தன்னை உற்சாகப்படுத்த ஒரு சிலரைக் கூடக் காணாமல் அவர் மிகவும் வருந்திய காலங்கள் உண்டு.

ஆனாலும் அந்த ஊழியர் தனக்குள் தளராத ஒரு நம்பிக்கையைக் கொண்டிருந்தார். மனக்கஷ்டங்கள் பல வந்த போதிலும் கூட கர்த்தர் தனக்காக ஒரு நல்ல பங்கை வைக்காதிருக்கவேமாட்டார் என்ற நம்பிக்கை அசைக்கப்படாத உறுதியைப் பெற்றிருந்தது. கர்த்தருடைய உண்மையின் பாதையில் தான் அடைய நேர்ந்த அநேக கஷ்டங்களும், தன்னை கர்த்தர் பல பாடுகளின் நடுவில் நடத்தி, புடமிட்ட அனுபவங்களும் ஒரு போதும் விருதாவாக போக முடியாது. தன்னை அநேக ஆண்டுகள் நெருக்கங்களின் நடுவில் நடத்தி பல அனுபவங்களை அடையச் செய்தது ஒரு பெரிய பிரயோஜனத்தை கொண்டு வராமல் இருக்க முடியாது. இது போன்ற சிந்தனைகள்தான் அந்த ஊழியருக்கு சோர்வுக்குரிய சூழ்நிலைகளிலும் வலிமையான ஒரு நம்பிக்கையைக் கொடுத்து நிலைநிறுத்தியது. கர்த்தரின் பாதையில் அவர் அன்று கண்ட துன்பங்கள் இன்று அவரை வல்லமையான ஊழியத்தில் கொண்டு வந்துள்ளது.

துன்பங்களும், உபத்திரவங்களும் ஒரு மனிதனிடம் ஏற்கெனவே உள்ள நம்பிக்கையையும் நலிவடையச் செய்யும் என்பதே உலகத்தின் சிந்தனை. ஆனால் உண்மையானவர்களின் வாழ்க்கையில் அது உண்மையல்ல. நீதிமான் தன்னுடைய நீதியான வாழ்க்கையின் விளைவாக உபத்திரவங்களைச் சந்திக்க நேரிடும் போது, அது அவனுடைய நம்பிக்கையை மேலும் வலிமையாக்குமேயன்றி, பலவீனப்படுத்தாது, உபத்திரவத்தின் பாதையில் அவனுடைய நம்பிக்கை உறுதிபடுத்தப்படும் உணர்வினை அவன் பெறுகின்றான். எனவே *உபத்திரவம் பரிட்சையையும், பரிட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறது* என்று வேதம் சொல்கின்றது. (ரோமர் – 5:3) எனவே தான் தேவனுடைய தாசர்கள் உபத்திரவங்களையும் ஒரு பெருமைக்குரிய விஷயமாக எடுத்துக் கொள்கின்றனர். (ரோமர் – 5:4) அதாவது உண்மையின் பாதையில் அவர்கள் அடைய நேரிடுகின்ற பாடுகளை மேன்மையான விஷயங்களாகக் காண்கின்றனர். ஏனென்றால் உபத்திரவங்கள் கர்த்தர் அவர்களுக்காக மிகப் பெரிய மேன்மைகளை வைத்திருப்பதைக் குறித்த நம்பிக்கைகளை பலப்படுத்துகின்றது.

கர்த்தருக்கு பயந்து அவருடையப் பாதையில் நடந்த தாவீது, அந்தப் பாதையில் அடைந்த உபத்திரவங்கள் கொஞ்சமல்ல. "உன் தேவன் எங்கே?" என்று அவனுடைய சத்துருக்கள் பரிகாசம் செய்யத்தக்க ஒரு பரிதாப நிலையில்தான் அவன் இருந்தான். ஆயினும் அவன் நம்பிக்கைளை அங்கே இழந்து போகவில்லை. அதற்குப் பதிலாக இந்த துன்பங்களுக்கும், வியாகுலங்களும் தேவன் ஒரு பெரிய பங்கை தனக்காக வைத்திருப்பார் என்ற நம்பிக்கையில் வளரவே அவனைத் தூண்டியது. எனவே தான் *என் ஆத்துமாவே நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு. அவர் சமுகத்து இரட்சிப்பினிமித்தம் நான் இன்னும் அவரை துதிப்பேன்* என்று அவன் தனக்குத்தானே ஆறுதல் கூறி நம்பிக்கையில் திடப்பட்டான். (சங் – 42:6)

மேலும் இந்த உலகத்தில் கர்த்தருடைய உண்மைகளின் மேல் சார்ந்து கொண்டு, கர்த்தருடைய நீதியை நிறைவேற்றுகின்றவர்களுக்கு விண்ணுலகில் தேவன் மேன்மையான மகிமையை வைத்திருக்கின்றார். நீதியினிமித்தம் துன்பப்படுகின்றவர்களை பாக்கியவான்கள் என்று சொன்ன இயேசு, பரலோகத்தில் அவர்களுடைய பலன் மிகுதியானது என்றும் கூறினார். (மத் – 5:12)

ஆனால் பெரும்பாலும் உலகத்திற்கு அப்பால் தேவன் தனக்காக வைத்திருக்கும் உயர் நிலைகளைக் குறித்த நம்பிக்கை மனிதனுக்கிருந்தாலும், அதனை மிக உறுதியாக நம்பி மகிழ்ச்சியை உணருகின்ற ஒரு அனுபவத்தில் சற்று பலவீனமாகவேயிருப்பான். ஆனால் கர்த்தருடைய பாதையில் அவன் அநீதியான, அக்கிரமமான உபத்திரவங்களைச் சந்திக்க நேரிடும் போது, அந்த நம்பிக்கையில் வளர ஆரம்பிக்கின்றான். உண்மையாகவே நீதியுள்ள கர்த்தர் தான் அனுபவிக்கும் பாடுகளுக்கு ஒரு பெரிய பரிசை நித்தியத்தில் தருவார் என்ற நம்பிக்கையில் அவன் புதுபலம் அடைகின்றான்.

எனவேதான் சத்தியத்தின் பாதையில் ஏராளமான பாடுகளை அனுபவிக்க நேர்ந்த பவுல் *இக்காலத்துப் பாடுகள், இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்* என்று பவுல் ரோமர்களுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகின்றான். (ரோமர் – 8:18)

பிற்காலத்தில் நல்ல போராட்டத்தைப் போராடி ஓட்டத்தை முடித்தேன் என்று மனநிறைவோடு எழுதிய பவுல் இதற்காக நீதியின் கிரீடம் தனக்கு வைக்கப்பட்டிருப்பதைக் குறித்தும், நீதியுள்ள நியாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதைத் தனக்குத் தந்தருள்வார் என்பதைக் குறித்தும் மிகுந்த நம்பிக்கையோடு எழுதுகின்றான். (11 தீமோ – 4:7,8)

ஆம். உண்மையின் பாதையில் நீதிமான் அனுபவிக்க நேரிடுகின்ற துன்பங்கள், விண்ணில் தனக்காக நிச்சயம் விசேஷ ஆசீர்வாதங்கள் வைக்கப்பட்டுள்ளன என்ற நம்பிக்கையை உறுதிபடுத்துகின்றன. அந்த நம்பிக்கையில் அவனை களிகூரும்படி உபத்திரவங்களை தேவன் உபயோகப்படுத்துகின்றார்.

பாடுகளுக்கு பங்காளிகள்

மகிமையில் கர்த்தரோடு நாம் பங்காளிகளாக விளங்க வேண்டுமானால், இவ்வுலகில் நாம் அவருடைய பாடுகளுக்கு பங்காளிகளாக வேண்டியது தேவனுடையப் பார்வையில் தேவையாகின்றது. இயேசு கிறிஸ்து தமக்கு முன்பாக வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்தார் என்று வேதம் சொல்கின்றது. (எபி – 12:2) மகிமையான ஒரு

சந்தோஷத்தை ஏற்கும் முன்பு, பாடுகளின் வேதனைகளையும் ஏற்க வேண்டிய ஒரு தேவை அங்கிருந்தது.

நாமும் பாடுகளின் பாதையைக் கடந்துதான், பரிசுத்த சந்தோஷத்திற்கு தகுதியாக முடியும் என்பது தேவவிதியாக இருக்கிறது. எனவே தான் பரிசுத்த பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, அவரோடேக்கூடப் பாடுகளை சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம் என்று எழுதுகிறான். (11 தீமோ – 2:12)

கர்த்தருடைய பாதையில் சத்தியத்தைச் சார்ந்து நடக்கின்ற மனிதன், தான் சந்திக்க நேரிடுகின்ற துன்பங்களின் மத்தியில், தனக்கு பெரிய கொடுமை ஏற்படுகிறது என்ற உணர்வினால் குன்றிப் போவதற்குப் பதிலாக, கர்த்தருடைய பாடுகளுக்கு தானும் ஒரு பங்காளியாக ஏற்படுத்தப்பட்டுள்ளேனே என்ற மனநிறைவினை அடைகின்றான். கர்த்தருடைய மகிமையில் பங்காளியாகப் போவதற்காக, இந்த உலகில் அவருடையப் பாடுகளில் பங்கேற்கும் பாக்கியம் தனக்கு தரப்பட்டுள்ளதே என்ற தெய்வீக சிந்தனை துன்பத்தின் நடுவிலும் மன உற்சாகத்தையும், நம்பிக்கையையும் கொடுக்கின்றது.

இன்று வளவாழ்வின் சுவிசேஷங்களால் மயக்கப்பட்ட மக்கள் பாடுகள் என்றாலே அதற்கும் கிறிஸ்தவத்திற்கும் சம்பந்தம் இல்லாத ஒன்றைப் போல எண்ணுகின்றனர். மண்ணிலும், விண்ணிலும் நாம் இயேசுவின் சந்தோஷத்தில் மட்டுமே பங்காளிகளாயிருக்க அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்று அவர்கள் எண்ணுகின்றனர். இயேசு சகல பாடுகளையும், நமக்காக ஏற்றுக் கொண்டு சிலுவையில் மரித்துவிட்டதால், இனி நமக்கு எந்த பாடும் இருக்கக் கூடாது என்று அவர்கள் விசுவாசிக்கின்றனர்.

ஆனால் இது வேதத்தை மையமாகக் கொண்ட விசுவாசம் அல்ல. சிலுவை சுமக்க வந்த இயேசு நாமும் சுமப்பதற்கென்று இந்த உலகத்தில் சிலுவைகள் உண்டு என்றும் அதனை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு தம்முடைய சந்தோஷத்தில் பங்கில்லை என்றும் கூறினார். (லுக் – 9:23) *நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் (தேவனுடைய சந்தோஷத்தில்) பிரவேசிக்க வேண்டுமென்று* பவுல் கூறியதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். (அப் – 14:22)

பாடுகள் இல்லாத ஒரு சுவிசேஷத்தை அறிவிப்பதின் பின்னால் நிச்சயம் சாத்தான்தான் இருக்க முடியும். ஏனென்றால் அந்த சுவிசேஷம் இயேசு கிறிஸ்துவும், அவருடைய அப்போஸ்தலரும் வெளிப்படுத்தி அறிவித்த சுவிசேஷத்திற்கு முற்றிலும் எதிராக உள்ளது. பாடுகளின் பாதைக்கு தங்களை ஆயத்தம் செய்து கொள்ளாத எவரும், பரிசுத்த பாதையில் வெற்றியாகத் தொடர முடியாது என்பது சாத்தானுக்குத் தெரியுமே. பாடுகளுக்கு தங்களை பங்காளியாக்க மனதில்லாத எவரும், பரம வாழ்விலும் பங்காளியாக முடியாது என்பதை சாத்தான் அறிந்து வைத்திருப்பதினால்தான், அவ்விதமான ஒரு தவறான சுவிசேஷத்தைக் காட்டி மக்களை வஞ்சிக்கின்றான்.

இப்படி கூறுவதால் பாடுகளை நாமாக விரும்பி அழைக்க வேண்டும் என்றோ, எப்போதும் பாடுகளின் பாதைதான் கிறிஸ்தவம் என்றோ அர்த்தம் அல்ல. ஆனால் இந்த சத்தியத்தின் பாதையில் பாடுகளும் துன்பங்களும் நேரிடுவது இயற்கை. அவைகளை நாம் ஏற்றுக் கொள்ளுகின்ற ஒரு ஆயத்த நிலையிலேயே எப்போதும் இருக்க வேண்டும். அப்போதுதான் தேவன் மறுமையில் நமக்காக ஆயத்தமாக வைத்துள்ள மகிமையின் சந்தோஷத்திற்கு நாம் பங்காளிகளாக முடியும்.

*****

ஆசிரியரின் பிற நூல்கள்

1. உதயம் வாழ்வில் தோன்றாதா?
2. புதிய ஒளியே வருக
3. பிரச்சனைகளை சந்திப்பது எப்படி?
4. ஆசீர்வாதத்தின் ஏழு பக்கங்கள்
5. அற்புதங்களைக் காண்பது எப்படி?
6. சோதனை அலைகளை மேற்கொள்ளுங்கள்
7. சகேயு ஏன் இயேசுவைத் தேடினான்?
8. துக்கம் சந்தோஷமாக மாறும்
9. பரதீசு என்றால் என்ன?
10. தேவன் அங்கீகரிக்கும் ஜெபம்
11. சிலுவையில் இயேசுவின் இதய ஓசைகள்
12. சிலுவையின் பாதையில் சில மனிதர்கள்
13. இனிய குடும்பமும் , இறைவனின் ஒழுங்கும்
14. உண்மையான ஆராதனை
15. வல்லமையாய் ஜெபிப்பது எப்படி?
16. வெற்றிகரமாக ஓடுங்கள்
17. துதிமலர்கள் ஆயிரம்
18. வெளிச்சம் வெளியரங்கமாக்கும்
19. நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்?
20. மகிழ்ச்சியின் பாதைகள்
21. நம்பிக்கையில் சந்தோஷமாயிருங்கள்
22. வழிகாட்டும் சிந்தனைகள்
23. பரிசுத்த வாழ்வின் பாதையில் ...
24. இறை ஆசியுடன் இனிய குடும்பம்

☆ ஜீவ நீரோடை தினசரி தியான நூல் (ஆண்டு புத்தகம்) Vol. I - II - III - IV

☆ எழுச்சி மலர் மாத இதழ்

மகிழ்ச்சியின் பாதைகள்

பணமும், பொருளும், படிப்பும், அந்தஸ்தும், பிரச்சனைகளற்ற சூழ்நிலையும் இருந்தால் மகிழ்ச்சியாய் வாழலாம் என்று மனிதன் நினைக்கின்றான். ஆனால் நாம் வாழும் உலகில் இந்த எண்ணம் தவறானது என்பதை எண்ணிலடங்கதோரின் வாழ்க்கைகள் தெளிவு படுத்துகின்றன.

மனிதனுடைய மனமகிழ்ச்சியை நிர்ணயிப்பது பணமோ, பொருளோ, தொந்தரவற்ற சூழ்நிலைகளே அல்ல. அவனுடைய குணநிலைகள்தான் அதனை நிர்ணயிக்கின்றன. இறை ஐக்கியங்கள் மூலமாக குணநிலைகள் சரிசெய்யப்படாதவரை மனித வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது நீர்க்குமிழிகளாகவும், வெறுங்கனவுகளாகவும் இருக்குமேயன்றி நிலையான நிஜங்களாக இராது. இந்த உண்மைகளைத்தான் இயேசு தம்முடைய சீடர்களுக்கு மலைப்பிரசங்கத்தின் பாக்கிய வசனங்கள் மூலமாக தெளிவாக விளக்கினார்.

இந்த புத்தகத்தைப் படித்தவர்கள் மகிழ்ச்சியின் ரகசியங்களை அறியாதவர்களாக இருக்க முடியாது.

ஆசிரியரை பற்றி... சகோ. சாம்சன் பால்

ஜீவ நீரோடை தினசரி தியானநூல், எழுச்சிமலர் மாதஇதழ் ஆகியவற்றின் வாயிலாக ஆயிரக்கணக்கானோருக்கு சத்தியத்தின் பாதையை மிகத் தெளிவாகவும், சரியாகவும் காண்பித்து வருகிறவர். இவருடைய எழுச்சியூட்டும் பிரசங்கங்களிலும், எழுத்துக்களிலும் ஆவியின் ஐக்கியமும், அனலும் அஸ்திபாரமான போதனைகளும் மிகுதியாக இருப்பதை அநேகர் உணர்ந்து கர்த்தரை துதிக்கின்றனர். பல்வேறு தலைப்புகளில் சிறந்த பல புத்தகங்களை வெளியிட்டுள்ளார்.